உ

# நாவலர் பெருமான்

யோகி ஶ்ரீ சுத்தானந்த பாரதியார்

ஓம்

சுத்தசக்தி

புது யுக நிலையம்
புதுச்சேரி

உ

# நாவலர் பெருமான்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

38301

புது யுக நிலயம்

புதுச்சேரி

உரிமை ஆசிரியருக்கே

முதற் பதிப்பு : மே, 1948

All Rights Reserved by the Author

விலை ரூபா : மூன்று

ஸ்ரீ அரவிந்தாஸ்ரம அச்சுக்கூடம் :: புதுச்சேரி

W. D. 98/48-1000

# பதிப்புரை

சிவத்திரு ஆறுமுக நாவலர் வரலாறு, எந்த உள்ளத்தையும் வீறு படுத்தும் சக்தி வாய்ந்தது; நாவலர் "தமிழ், சைவம்" என்றே உயிர்த்தார். இப் பெரியார் வரலாறும், திருமொழிகளும், அருட்பணித் திறனும் இந்நூலில் நன்கு விளங்கும். இந்நூலை எழுதி யுதவிய கவியோகி சுத்தானந்த பாரதியாரை உலகம் அறியும்; அவர் உள்ளம் நாவலர் உணர்ச்சிக் கனலால் துடிக்கிறது. அந்த உணர்ச்சிக் கனல்,ஒவ்வொரு தமிழர் உள்ளத்திலும் துடிக்க வேண்டும் என்றே சுவாமிகள் இந்நூலை நீண்ட ஆராய்ச்சி செய்து எழுதி யுதவினர். தமிழுலகம் இதை நன்ருகப் பயன் படுத்தி முன்னேறுக !

இந்நூலை அச்சிடப் பொருளுதவிய இலங்கை யன்பர்களுக்கு நன்றி; இந் நூல் விற்பனையிலிருந்து நந்தமிழகத்தில் தூய சன்மார்க்க ஒளி பரவ, சன்மார்க்க தீபம், அருளமுதம் முதலிய அரிய பதி நூல்கள் வெளிவரும்.இப் பதிபுண்ணியத்தில் எல்லாத் தமிழரும் பங்கு கொண்டு, எமது சீவ கைங்கரியத்தை மேன்மேலும் ஊக்க வேண்டும் என்று பரமபதியாகிய இறைவனை வணங்குகிறோம். ஓம் சிவம்.

12—5—1948<br>
30-சித்-சர்வதாரி<br>
புதுச்சேரி

புது யுக நிலையம்.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| | **நன்றியுரை** .. | 1 |
| | **நாவலர் வாழ்த்து** .. | 5 |
| 1. | ஐந்தாங் குரவர் .. | 7 |
| 2. | ஈழம் .. | 9 |
| 3. | யாழ்ப்பாணம் .. | 12 |
| 4. | யாழ்ப்பாண நல்லூர் | 15 |
| 5. | ஞானப்பிரகாசர் .. | 16 |
| 6. | கந்தர் .. | 19 |
| 7. | பிறந்த நாள் .. | 21 |
| 8. | கல்விப் பருவம் .. | 22 |
| 9. | சேனாதிராயர் .. | 23 |
| 10. | சரவணமுத்துப் புலவர் .. | 26 |
| 11. | பீற்றர் பர்சிவல் .. | 27 |
| 12. | கல்விக் கடல் .. | 28 |
| 13. | பாதிரிமார் .. | 30 |
| 14. | சைவ உணர்ச்சி .. | 33 |
| 15. | தைரியம் .. | 35 |
| 16. | மொழிபெயர்ப்பு .. | 36 |
| 17. | யாழ்ப்பாணச் சமய நிலை .. | 37 |
| 18. | சைவ பாடசாலை .. | 41 |
| 19. | கடமையைச் செய்தேன் .. | 42 |
| 20. | சொன்மாரி .. | 46 |
| 21. | தியாகம் ! .. | 48 |
| 22. | சைவ சமயிகளே ! .. | 51 |
| 23. | நாவலர் சொல்லம்புகள் .. | 56 |
| 24. | கந்தசாமி கோயில் .. | 60 |
| 25. | பணியின் பயன் .. | 68 |
| 26. | பயணம் .. | 70 |
| 27. | நாவலர் பட்டம் .. | 71 |
| 28. | சைவப்பிரகாச வித்தியாசாலை .. | 73 |
| 29. | வித்தியானு பாலன யந்திரசாலை .. | 77 |
| 30. | நாவலர் பதிப்பு .. | 81 |
| 31. | நாவலர்பால பாடம் .. | 82 |
| 32. | நான்காம்பாலபாடம் | 87 |
| 33. | பாதிரியே அறிந்துகொள் .. | 99 |
| 34. | யாருக்கும் அஞ்சேன் | 111 |
| 35. | சுப்பிர போதம் .. | 117 |
| 36. | சைவப்பிரகாசர் .. | 121 |
| 37. | தீக்ஷையும் பூஜையும் | 126 |
| 38. | நாவலர் கவி .. | 129 |
| 39. | நாவலர் தமிழிசை | 134 |
| 40. | நிகழ்ச்சிக் கதம்பம் | 137 |
| 41. | கவர்னருக்கு .. | 142 |
| 42. | நாவலர் கிளர்ச்சி .. | 148 |
| 43. | பொன்னம்பலம் ராமநாதன் .. | 153 |
| 44. | ஆலயப் பணி .. | 156 |
| 45. | காலம் அறியவில்லை | 158 |
| 46. | சந்நிதானத்தில் .. | 162 |
| 47. | திருக்கோவையார் .. | 164 |
| 48. | முதல் விக்கியாபனம் | 169 |
| 49. | தேவர் மரியாதை | 178 |
| 50. | மதுரையில் நாவலர் | 182 |
| 51. | மீனாட்சிசுந்தரம் பிள்ளையுடன் .. | 184 |
| 52. | சிதம்பரம் வித்தியாசாலை .. | 187 |
| 53. | திருப்பித் தந்தார் .. | 197 |
| 54. | சிவ சொத்து .. | 199 |
| 55. | தீட்சை அவசியம் .. | 200 |
| 56. | அருட்பா வழக்கு .. | 203 |
| 57. | சாவிற்கும் அஞ்சேன் | 209 |
| 58. | சென்னைப் பிரசங்கம் | 210 |
| 59. | பச்சையப்பர் கல்லூரிப் பிரசங்கம் | 215 |
| 60. | புறப்படுகிறார் .. | 219 |
| 61. | வாழ்க நாவலர் .. | 220 |
| 62. | வேலைச் சுழல் .. | 223 |
| 63. | இறுதி மொழிகள் .. | 226 |
| 64. | இறுதி நாள் .. | 226 |
| 65. | நாவலர் புகழ் மாலை | 228 |


உ

## நன்றியுரை

**பை**யற் பருவத்தில் ஒரு பாதிரியார், எனக்கு மத்தாய் சுவிசேஷம் அளித்து "தம்பீ, இது சத்திய வேதம் ; படி" என்றார் ; படித்தேன் ; நூல் என்னைக் கவர்ந்தது ; "தமிழில் இப்படித் தெளிவான நூல் உண்டா ? நமது சமயத்தையும் இவ்வளவு எளிதாக விளக்கியோர் உளரா?" என்று அறிவாளரை வினவினேன். "இஃதென்ன புதுமை; இதோ திருக்குறள்; இதோ நாவலர், சைவ வினாவிடை ; இதோ பால பாடம்" என்றொரு சைவப்பெரியார் உதவினார். நாவலர் நூல்களை ஆவலாகப் படித்தேன். நாவலர் என் உள்ளத்தைப் பற்றிக்கொண்டார் ; பிறகு நாவலர் வரலாற்றை அறிய விரும்பித் தேடினேன். பழம் புலவர் ஒருவரிடம் ஸ்ரீ கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய ஆறுமுக நாவலர் சரித்திரம் இருந்தது ; வாங்கிப் படித்தேன். இத்தகைய பெரியாரைப் பார்த்த புண்ணியர் உண்டா என்று தேடினேன். எனது தமிழ் ஆசிரியர் **தெய்வசிகாமணி ஐயர்** திருவாவடுதுறைச் சம்பந்தமுடையவர். அவர் தம் இளமையில் ஒரு தரம் அங்கே நாவலர் சொற்பொழியக் கேட்டதுண்டு ; அவர் எனக்கு நாவலரின் மாசற்ற சிவக் கோலத்தையும், செந்தமிழ் வாக்கையும், அறிவொழுக்கங்களையும் படம் பிடித்துக் காட்டினார். நாங்கள் பெரிய புராணம் படித்தபோதெல்லாம் நாவலர் பெருமையை வியப்போம்.

இன்னொரு பழம் புலவர், "ஆறுமுகமா அது சைவப் பயிரை வளர்க்க வந்த சொல்லாறு" என்பார்.

அந்தக்காலம் அருட்பா மருட்பா போர் நடந்தது-வாய்ப்போரே; என் செவியிலும் அது படுவதுண்டு. "இஃதென்ன விநோத வம்பு ?" என்று என் ஆசிரியரை ஒருநாள் கேட்டேன்."எல்லாம் நல்லதிற்கே ; நல்லூரார் பெயர் முழங்கத் தில்லையப்பன் செய்த

கூத்தே; ஒருவர் பாடினுர்; ஒருவர் பேசினுர்; எழுதினுர்; இருவர் பெருமையையும் உலகறிய வேண்டியே அவன் இவ் விளம்பரம் செய்கிறுன் " என்றுர். உண்மை ; முன்னே நாவலரை அறியாத வரும் இவ் விவாதம் எழுந்த பிறகு நன்கறிந்தனர்; அவர் நூல் களைக் கற்றனர். நாங்களெல்லாம் நாவலர் பாலபாடத்தைத்தான் படித்தோம். தமிழ்க் குருகுலத்தில் பிரமசாரிகள் படிக்கப் பாடப் புத்தகம் தேடினேம். " நாவலர் பால பாடத்தைவிட நயமான புத்தகம் உண்டா ? அதையே மாணவர் படிப்பது சிறந்தது " என்றுர் வ. வே. சு. ஐயர். அவருக்கு நாவலரிடம் பெருமதிப்பு உண்டு. தமிழர் நன்னூல், பெரியபுராணம், கந்த புராணம், திரு விளையாடற் புராணம் இவற்றின் அருமையை அறிந்தது நாவலர் பதிப்பினுலேதான்.

கீரிமலை முனிவர்முன், இராவணனது யாழை மீட்டிய நல்லி சைப் புலவனுல் யாழ்ப்பாணம் என்று பெயர் வந்ததென்பர் ; யாழின் கதை எப்படி யிருந்தாலும், யாழினும் இனிய தமிழ் யாழ்ப்பாணத் தமிழ். அத்தமிழ் எனக்கு இன்பமளிக்கும். நான் இருந்த இடங்களிலெல்லாம் இரண்டொரு யாழ்ப்பாணிகளும் எப் படியாவது வந்து சேருவார்கள். அவர்கள் பேசும்போதெல்லாம் " எங்கள் நாவலர் பெருமான் " பேச்சு வராமல் இராது. ஒரு முதியயாழ்ப்பாணப் புலவர் என்னுடன் தமிழாசிரியராயிருந்தார். அவரும் நானும் ஒவ்வொரு மாலையும் திருமுறை நூல்களைப் படிப்பதுண்டு ; இடையிடையே அவர் நாவலர் பெருமையையும் அவர் செய்த சிவாகம கைங்கரியங்களையும் பற்றி உருக்கமாகப் பேசுவார். அவரிடம் நாவலரைப் பற்றிப் பல அரிய விஷயங்களை நான் கேட்டிருக்கிறேன். எனது மாணவரா யிருந்த சில யாழ்ப் பாணர் உள்ளத்திலும் நாவலர் அன்பு பதிந்திருந்தது.

இத்தகைய பெரியாரைப் பற்றி விரிவாக அறிய வேண்டுமென் றிருந்தேன். 1938-ஆம் ஆண்டு நாவலர் மலர் வந்தது.அம்மலரில் எனது அன்பு மலரையும் கோத்தேன். அன்று முதல் நாவலர் வரலாற்றை எழுதித் தமிழருக் குதவ வேண்டும் என்று பேரு முனையில் என் உள்ளம் துடித்துக் கொண்டிருந்தது.



என் ஆர்வத்தை அன்புமணி க. இராமச்சந்திரனுருக்குத் தெரிவித்தேன். அவர் மிக்க ஊக்கமுடன் அங்குமிங்கும் தேடிப் பிடித்து, நாவலர் வரலாற்றிற்குப் போதிய கருவி நூல்களைச் சேர்த் துதவினுர். அவருக்கும் அவர் மூலம் நூல்களை உதவிய சிவநேசச் செல்வர்களுக்கும் எனது நன்றி என்றும் உரியது. என் கைக்கு வந்த முதன்மையான நூல்கள் :

1. ஆறுமுக நாவலர் சரித்திரம் (ஸ்ரீ கனகரத்தின உபாத்தியாயர்)
2. ஆறுமுக நாவலர் சரித்திரச் சுருக்கமும் தனிப்பாமாலையும் (ஸ்ரீ செல்லையா பிள்ளை)
3. ஆறுமுக நாவலர் சரித்திரம் (திரு. த. கைலாச பிள்ளை)
4. ஆறுமுக நாவலர் அவர்கள் சரித்திரக் காவியம் (சேற்றூர் அருணுசலக் கவிராயர்)
5. நாவலர் நினைவு மலர்
6. நல்லை வெண்பா (சேனுதிராய முதலியார்)
7. சைவ தூஷண பரிகாரம்
8. யாழ்ப்பாணச் சமய நிலை
9. கதிரை யாத்திரை விளக்கம்
10. இலங்கைச் சரித்திர பாட வாசகம்
11. நாவலர் கடிதங்கள், பாடல்கள், பிரபந்தத் திரட்டு
12. நாவலரைப் பற்றி அறிஞர் புகழுரைகள் ; பத்திரிகைக் குறிப்புகள்.

இவற்றுடன் நாவலர் நூல்களையும் ஆராய்ந்து, நிகழ்ச்சிகளை நிரல்பட வைத்து, இந்நூலை எழுதித் தமிழருக்கு அளிக்கிறேன். இதில் விளக்கி யுள்ள சைவநெறி, மனித மரபிற்கெல்லாம் இன் பப் பொதுநெறியாகும். இறைவன் அருளால் வந்த குருமாரெல் லாரும் என் வணக்கத்திற் குரியவர்களே; உண்மையான சைவத் தை விரும்புவது போலவே நான் உண்மையான கிறிஸ்துவத்தை யும் இஸ்லாமையும் விரும்புகிறேன். உண்மைக்கு மாறுனதை எவரும் ஏற்கமுடியாது. நாவலர் உண்மையை வெளிப்படையாகப் பேசிய உத்தமர். ஆதலால் அவர் உள்ளத்தின் மாசற்ற அன்பை

உலகம் சமரஸ நோக்கத்துடன் உணர்ந்து பயன் பெறுக. சின்னஞ் சிறுவர் முதல் மாபெரும் புலவர் வரையில் படிப்படியாகப் படிக்க நாவலர் இலக்கியப் பணி செய்து வைத்திருக்கிறார். சுந்தரர், தம்மை "அடியார்க்கும் அடியேன்" என்றார். நாவலர் சிறந்த சிவநேசச் செல்வர், திருவுடைத் தொண்டர்; அவர் வரலாற்றைக் கற்பதும் கேட்பதும் பதிபுண்ணிய மாகும்.

புண்ணிய சீலரான நாவலர் பெருமானை உலகம் அறிய இந் நூலை அச்சேற்றி வெளியிடப் பொருளுதவி செய்த அன்பருக்குச் சிவபெருமான் அருளுதவி செய்க! அப் பொருளைச் சேர்த்தனுப்பி, இந்நூல் வெளியீட்டில் கண்ணும் கருத்துமா யிருந்த இலங்கை மணி க. இராமச்சந்திரனுருக்கு நன்றி; இந்நூலைக் கற்பவர் கேட்பவர், விளக்கித் தொண்டு செய்பவர்—அனைவருக்கும் சிவ புண்ணியப் பயன் பொலிக! ஓம் நமச் சிவாய!

புதுயுக நிலையம்
புதுச்சேரி
12-5-1948

சுத்தானந்த பாரதி

# நாவலர் வாழ்த்து

கல்வியின் வரம்பு கண்டோன்; கடவுண்மாக் கலைகளெல்லாம்
வல்லவன்; பிரமசாரி, வானெனத் தமிழ் பொழிந்து,
செல்வமுந் திருவு மோங்கச் சிவநெறி செழிக்க வந்தோன்;
நல்லவர் போற்று நல்லூர் நாவலன் வாழ்க மாதோ!

தமிழினைப் புதுக்க வந்த தத்துவப் புலவன் என்கோ!
தமிழ்ப்பணி தனைம ணந்த தவமணிச் சைவன் என்கோ!
தமிழிசை பரவ வந்த தாரகக் குழலே என்கோ!
அமிழ்தினும் இனிய சொல்லான் அழகிய நாவ லோனே!

—சுத்தானந்த பாரதி

# நாவலர் பெருமை

நல்லை நகர் ஆறுமுக நாவலர் வந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே? சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்துபுரா ணுகமங்கள் எங்கேப்ர சங்கமெங்கே?
ஆத்தனறி வெங்கே அறை?

—புலவர். சி. வை. தாமோதரம் பிள்ளை

கருள் விரவு தலைக்கழிக்குங் கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவும்ஐந்தெழுத்தும்பொருளாகக் கொண்டுவப்போன்;
தெருள் விரவு சுத்தசைவ சித்தாந்தப் பெருஞ் செல்வன்;
அருள் விரவு பரவுபுகழ் ஆறுமுக நாவலனே.

—மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை

## நாவலர் குருபூசை

கார்த்திகைமா தத்துமகம் காசினிக்குச் சைவநிலை
சேர்த்திப் பரசமயம் சேதித்துச்—சீர்த்திமிக
மேவுதமிழ் தந்தகந்த வேள்நல்லூர் ஆறுமுக
நாவலர்வீ டுற்றதிரு நாள்.

பிறந்த நாள்: சாலியவாகன சகாப்தம் 1745, சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 5—ஆம் தேதி 18—12—1822.
சிவனடி சேர்ந்த நாள்: பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 21—ஆம் தேதி 5—12—1879.

உ
சிவமயம்

# நாவலர் பெருமான்

## 1. ஐந்தாங் குரவர்

சென்ற நூற்றுண்டு பல பெரியாரைக் கண்டது; அவருள் சமய தீபமாக விளங்கியோர் இருவர்: வடக்கே **தயானந்தர்** (1824-1883); தெற்கே **நாவலர்** (1822-1879). இருவரும் வந்திராவிடில், வேதாகமங்கள் வேருடன் மறைந்திருக்கும். தயானந்தர் தூய வேத நெறியை விளக்கினுர்; நாவலர் தூய சைவ நெறியைத் துலக்கினுர். இருவரும் பிரமசாரிகள்; ஆழ்ந்த ஆராய்ச்சியாளர்; காலத்தையும் ஞாலத்தையும் அறிந்து சிறந்தவர்கள்; உரமான பேச்சாளர்; அஞ்சா நெஞ்சுரங் கொண்டு போலி யொழுக்கங்களை உள்ளும் புறமும் கண்டித்தவர்கள். தயானந்தர் சத்யார்த்தப் பிரகாசம் எழுதினுர்; வேதத்திற்கு முன்னுரை தீட்டினுர். நாவலர் அரிய, பெரிய பலநூல்களை யாத்தளித்தார்; வேதவியாசர் போலப் பழஞ்செல்வங்களைத் தொகுத்தளித்தார். தயானந்தர் வேதக் கலை பரவ, ஆரிய சமாஜம் கண்டார். நாவலர் சைவ சமாஜம் கண்டார்.

ஆறுமுக நாவலர் செய்த சிவபுண்ணியம் ஒப்புயர்வற்றதாகும். அவர் வேதத்தையும் ஆதரித்தார்; ஆகமத்தையும் போற்றினுர். அரு, உரு, குரு, ஆகிய மூன்று தெய்வ விளக்கத்தையும் மதித்தார். சிவாகமத்திற்கு மாறுனதைக் கண்டித்தார்; முதன்மையாக அக் காலம் படர்ந்து வந்த போலிக் கிறிஸ்துவத்தையே அவர் தக்க ஆதாரங்காட்டி மறுத்தார். அவர் காட்டும் ஆதாரங்களை எதிரிகளும் மறுக்க முடியாது. நாவலர் பேச்சுடன் நிற்க

வில்லை ; செயலிலும் முனைந்தார். ஏராளமான கருவி நூல்களையும் சமய நூல்களையும் தாமே அச்சகம் நாட்டி வெளியிட்டார். பல பாடசாலைகள் கண்டு, மாணவருக்குக் கல்வி யளித்தார். நமது சமயத்தையும் புராணங்களையும் தூற்றிக் கேலிசெய்தவர் வாயை அடக்கினார். "அஞ்ஞானிகள், சாம்பலாண்டிகள், பேயை வணங்குவோர், கல்லைக் கட்டி யழுவோர்" என்று இந்தியரைத் தூற்றிய பாதிரிமாருக்குச் சரியான பாடம் கற்பித்தார். அன்னிய மோகத்தால் பிறமதம் புகுந்த நம்மவரைச் சிவநெறி தழுவச் செய்தார். தயானந்தர் சுத்தி சங்கடன் இயக்கம் தொடங்கு முன்பே, நாவலர் இங்கே சைவ சமாஜம் கூட்டி நம்மவரை ஒன்று சேர்த்தார். திருமுறை நூல்களுக்குப் புத்துயிர் தந்தார். வேதாகமச் சைவத்தின் பெருமை மாந்தர் மனத்திற் பதியச் செய்தார். அவர் சொல்லினிமையே பலரைச் சைவராக்கியது.

நாவலர் தமிழுக்கும், தமிழருக்கும், தமிழகத்திற்கும் செய்த தொண்டு அளப்பரிது. இனிய உரைநடை வகுத்த புலவர் அவரே. அவர் உள்ளம் " தமிழ், சைவம் " என்றே துடித்தது. அவர் பணத்தை மதிக்கவில்லை ; செல்வச் செருக்கைக் கெஞ்சவில்லை ; பட்டம் பதவிகளை வேண்டவில்லை ; அவர் தலைநிமிர்ந்து நடந்தார் ; சிவத்தையே மதித்தார். உண்மையை உண்மை என்றார் ; பொய்யைப் பொய் என்றார். தமிழின் பெருமையை நாட்டினார். சைவத்தின் மேன்மையை நடந்து காட்டினார். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் வந்திரா விட்டால், சைவசமயமே மறைந்திருக்கும்; அவர்களுக்குப் பின்வந்து சைவ சமயத்தைக் காத்தவர் நமது **நாவலர் பெருமானே.** ஆறுமுக நாவலர் என்பது போதாது ; அவர் நாவன்மை படைத்தவர் மட்டு மல்லர். அவரை ஆறுமுக **நாயனார்** என்பதே தகும். முன் வந்த நான்கு சமய குரவருக்குப் பிறகு இவரை **ஐந்தாங் குரவர்** என்பதே பொருந்தும். அக்காலம் ஒரு சர்வமத சங்கம் கூடியிருந்தால் சைவத்திற்குப் பிரதிநிதியாக நாவலரையே நாம் அனுப்பியிருப்போம். விவேகானந்தர் போல நாவீறுபடைத்த அருட்பெரியார் நாவலர். அவருக்கு முன்னும் ஒரு நாவலரில்லை; பின்னும்



இல்லை ; உலக மகான்களில் அவர் ஒருவர். அவர் ஊட்டிய உணர்ச்சி இன்றும் உள்ளத்திற் குள்ளம் சுழன்று பரவுகிறது ; அவர் காட்டிய வழி இன்னு மின்னும் விசாலித்து வருகிறது. அவர் நாட்டிய நிலையங்கள் ஒன்று பலவாகி அரிய பதிபுண்ணியம் செய்து வருகின்றன. அவர் அடிச்சுவடுகள் இன்னும் அழியாதிருக்கின்றன. அவற்றைப் பின்பற்றுவோம் ; அவர் வாழ்வின் அடிச்சுவடுகளைப் பற்றியே இப் பேனாவும் செல்கிறது. பின்னே வாருங்கள். ஈழ நாடு செல்வோம்.

## 2. ஈழம்

இப்போது நாமிருக்கும் தமிழகம் மிகச் சிறிது. பண்டைத் தமிழகம் ஒரு பெரிய கண்டம் ; **குமரி கண்டம்** ; அஃது இந்து சமுத்திரத்தில் பரந்து விரிந்திருந்தது. ஒருகாலம் அதைக் கடல் விழுங்கியது. அதன் துண்டுத்துணுக்குகளே இப்போது நாம் இந்து சமுத்திரத்திற் காணும் தீவுகளும் தீபகற்பங்களு மாகும்.

அவற்றுள் அழகும் வனப்பும் வாய்ந்து, தமிழகத்தின் தெற்கே தாமரை மொட்டுப்போல் விளங்குந் தீவு **ஈழம்**. ஈழத்தின் புகழ் வெகு நீளம். அதன் பெயர்களைக் கேட்டாலே ஈழத்தின் ஆழம் தெரியும். இந்திய சரித்திரம் முழுதையும் ஈழம் அளாவி நிற்கிறது. ஈழம் என்றால் பொன் ; ஈழம் இயற்கையின் பொற்கோயில்; இதைப் பொன்னிலங்கை என்றும் கூறுவர். இங்கிருந்த தொல்குடி மக்கள் **நாகர்**. நாகர், கலையிலும் நாகரிகத்திலும் சிறந்த தமிழர். அருச்சுனன் சித்தராங்கதை என்னும் நாகப் பெண்ணைக் கீரிமலையில் மணந்தான். முரஞ்சியூர் **முடிநாகராயர்** என்னும் புலவர், மதுரைச் சங்கத்தில் அங்கம் வகித்தார். நாகர் **எலு** என்ற ஒருவகைத் தமிழ் பேசினர் ; அதிலிருந்தே ஈழம் என்ற சொல் பிறந்த தென்பர்.

குமரி கண்டத்தில் ஓடிய பஃறுளியாற்றின் இடையே ஓர் தீவு எழுந்தது. ஆற்றிடைத் தீவிற்கு இலங்கை என்று பெயர் ; அத

னால் ஈழத்திற்கு **இலங்கை** என்று பெயர் வந்தது. அனுமார் தாண்டியதால் இதற்கு லங்கா, இலங்கை என்று வந்ததென்பது பிற்காலம் எழுந்த ஊகம். அனுமார் தாண்டு முன்பே இராமாயணக் கதையில், இலங்கையின் பெயர் வருகிறது. நாகரின் எளு, தமிழ், வடமொழி, பாளி எல்லாம் சேர்ந்த கதம்பமே **சிங்கள மொழி**. இத்தீவை **சிம்ஹளம்** என்று மகாபாரத நாட்களிற்கூட அழைத்தனர். சிங்கவாகு மகன் விஜயன் வருமுன்பே, நமது நாட்டிலிருந்த ஐம்பத்தாறுதேசங்களில் சிங்களம் ஒன்றா யிருந்தது. சிம்ஹளம் என்றால் கறுவப்பட்டை. இங்கே கறுவப்பட்டை மிகுதியா யிருந்ததால், இத்தீவு சிங்களம் ஆனது. தருமபுத்திரர் செய்த அரசவேள்வியில், சிங்கள மன்னன் நவமணிக் காணிக்கை யளித்தான். நமது நாட்டின் தலைசிறந்த இதிகாசம் இராமாயணம் ; திராய்க்கோட்டையைச் சுற்றி இலியாது கதை நிகழ்ந்தது போல், இலங்கையைச் சுற்றியே இராமாயணம் நிகழ்கிறது. ஆதலால் இலங்கை நமது நாட்டு இதிகாசங்களில் முதல் இடம் பெறுகிறது ; உலக வரலாற்றிலும் இலங்கைக்கு இடம் உண்டு. கிரேக்கர் இதைப் பதுமராகத் தீவு என்றனர். சீனர் இரத்தினத் தீவு என்றனர். கௌதம புத்தர் நித்திலத் தீவு என்றார். அசோகன் மகள் சங்கமித்திரை இங்கே போதிக்கிளை கொண்டுவந்து நட்டு, ஏராளமான பிக்ஷுக்களுடன் புத்த மதப் பிரசாரம் செய்தாள். இங்கே எழுந்த **மஹாவம்சம்** நமது இந்தியச் சரித்திரத்திற்கே பெரிய ஆதாரமா யிருக்கிறது. பௌத்தர் இதைத் தேவ லங்கா என்று போற்றினர். போர்த்துகீஸியர் இங்கே குடியேறிக் கொடி பறக்கவிட்டனர். அவர்கள் இதை **ஸெலாயோ** என்றனர். ஆங்கிலேயர் தமது கொடியை ஊன்றி முடிவில் இதை **ஸிலோன்** ஆக்கி விட்டனர். இவ்வாறு எளு என்றதிற் பிறந்த ஈழம் ஸிலோனா யிருக்கிறது. அன்று இராமர் கட்டிய அணையின் சிதைவுகள் இன்றும் உள்ளன; அந்தச் சேதுவை இன்று ஆதாம் பாலம் (Adam's Bridge) என்றழைக்கின்றனர். இலங்கையின் நடுவே சிவலிங்கம் போல் எழுந்த மலையை, சைவர் சிவனொளி பாதம் என்பர்; பௌத்தர் சமந்த கூடம் என்பர். ஆதாம் ஏவாள் ஈடனை விட்டதும் இங்கேதான் வந்தனர் என்பர் பிறர்.



இத் தீவில் உள்ள **கதிர்காம**த்தை அனைவரும் அறிவர். அங்கேதான் கார்த்திகேயன் படைவீடமைத்துக் கொண்டு, சூரபத்மாசுரனைக் கொன்றான். அங்கிருந்த வேடர் குல வள்ளியைத்தான் முருகன் காதல் மணம் புரிந்து, திருப்பரங்குன்றிற்கு வந்தான். முருகனை மாப்பிள்ளையாகக் கொண்ட இலங்கையின் பெருமைதான் என்னே! நீண்ட காலம் இந்தத் தீவைத் தமிழரே ஆண்டனர். சேர-சோழ-பாண்டியர் ஆகிய மூவேந்தரும், இங்கே ஆதிக்கம் பெற்றிருந்தனர். திரிகோணமலை நீண்ட காலம் தமிழர் துறைமுகமாகவும் கப்பல் தளமாகவும் விளங்கியது. இன்றும் அது, உலகில் முதன்மையான கப்பல் தளந்தான். மனு நீதி கண்ட சோழன் அங்கே கோயில் கட்டினான்; அவன் பேரன் குளக்கோட்டரசன் ஒரு சிவன் கோயில் கட்டினான். அநுராதாபுரத்தை ஏலேல சிங்கன் ஆண்டான். பாண்டி நாட்டு வன்னியர் இங்கே ஆதிக்கம் செலுத்தினர். கண்ணகி சிலை நாட்டிய சேரன்செங்குட்டுவனுக்கு இலங்கைக் கயவாகு நண்பன் ; இவனும் இலங்கையில் கண்ணகி வழிபாட்டைப் பரப்பினான். அல்லி அரசாணி கூட வட இலங்கையில் கொடி போட்டாள். சம்பந்தரும் சுந்தரரும், திரிகோணமலையிலும் மாதோட்டத்திலுமுள்ள சிவன் கோயிலுக்குப் பாடல்கள் அருளினர்.

**"வண்டு பண்செயு மாமலர்ப் பொழின் மஞ்ஞை**
**நடமிடும் மா தோட்டம்"**
**"வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்"**

என்னும் சுந்தரர் வாக்கு ஈழத்திற்குப் பொருந்தும். இலங்கையை இயற்கையின் மலைத்தோட்டம் என்பது மிகையாகாது. இலங்கை இராவணன் ஆண்ட பேரிலங்கையின் ஒரு பங்கு ; இராவணன் இந்தியாவின்அதிமனிதன் (Superman). அவன் ஒப்பற்றசிவயோகி, இசை வாணன். தேவாரங்கள் அவனைத் துதிக்கின்றன. இராவணன் தன் வீணையால் சிவன் மனத்தைக்கூடக் கவர்ந்தான். இராவணன் அசகாயசூரர்களைப் படைத்து, உலகை வென்று வீறு பெற்றான். ஒரு காமப் பிழையால் அவன் அழிந்தான். இலங்கையின் திருவும் செல்வமும் பல அன்னியரை மயக்கியது.

போர்த்துகீஸியர் வந்தனர்; உலாந்தாக்காரர் வந்தனர்; பிரெஞ் சுக்காரரும் வந்தனர் ; தமது மதத்தையும், வியாபாரத்தையும், கொடியையும் நாட்டினர் ; இவர்களை யெல்லாம் அமுக்கி விட்டு, ஆங்கிலேயர் ஈழத்தை ஆண்டனர். இன்று சுதந்தர இலங்கை தோன்றி விளங்குகிறது. இதற்குள் ஈழத் தமிழர் வாழ்க்கையில் வந்த மாறுதல்கள் மிகப்பல. தமிழர் மொழி, சமயம், நடை யுடை, பாவனைகள் எல்லாம் எப்படி யெப்படியோ மாறின. இம் மாற்றத்தின் உச்சநிலையைப் பெற்றது யாழ்ப்பாணம்; அதைத் திருத்த எழுந்ததும் யாழ்ப்பாணம். ஆதலால் நாம் யாழ்ப் பாணத்தைக் காண்போம்.

# 3. யாழ்ப்பாணம்

மதுரையில் ஒரு யாழ்ப்பாணன் இருந்தான். அவனது யாழிசை, கேட்டார் உள்ளத்தை உருக்கும்; என்றாலும் அவனது மனைவி உள்ளத்தை மட்டும் தொடுவதில்லை. "ஆமாம், வீணை மீட்டி என்ன சம்பாதித்துவிடப் போகிறீர்?" என்பாள் அந்த அம்மாள். "ஈழ மன்னர் பெரும் வள்ளல்; அவருக்கு யாழிசை ஊட்டிப் பரிசு பெறுவேன்" என்று புறப்பட்டான் பாணன். "நீர், வள நாடும் மழகளிறும் வாங்கிவரப் போகிறீராக்கும்" என்று மனைவி ஏளனமாகக் கேட்டுச் சிரித்தாள். பாணன் உணர்ச்சியுடன் கப்ப லேறி இலங்கை போய்ச் சேர்ந்தான். அங்கே சோழ மன்னன் மகள் வயிற்றிற் பிறந்த தமிழ் மன்னன் ஆண்டான் ; அவன் தமிழுக்கும் தமிழிசைக்கும் உருகும் வள்ளல். நமது யாழ்ப் பாணர், தமிழ்ச் சுவையும் இசை நயமும் பொருந்திய இனிய பாடல்களை யாழுடன் கூடிக் குழைந்து குரலிணைத்துப் பாடினார். உள்ளம் பொங்கிப் பூரித்தது. பாணனை மெச்சி "வேண்டியதைக் கேளும்" என்றார். கூசாது கேட்டான் பாணன். அரசர், ஒரு பெருநிலம் , சிவிகை, விருதுகள் எல்லாம் அளித்தார். பாணன் மனைவியும் வியந்து போற்றினாள். யாழ்ப்பாணனுக்குக் கிடைத்த நிலமே அவன் பெயரால் **யாழ்ப்பாணம்** ஆனது என்பர் ஒரு சாரார். பாணன் தனது நிலத்தைப் பண்படுத்தி ஆண்டு கொண்டிருந்தான். யாழால் எழுந்த யாழ்ப்பாணத்தின் தமிழே



யாழிசைபோல் இனிமையானது. யாழ்ப்பாணத்திற்குப் புண்ணிய புரம் என்றும் பெயருண்டு. இது நீண்டகாலம் தென்பாண்டியன் அனுப்பிய சிங்கை ஆரிய சக்கரவர்த்தி மரபால் ஆளப்பெற்றது. இது பல பெரியாரை உலகிற்கு அளித்துச் சிவபுண்ணியம் செய்த பெரும்பதி. இராமேசுரம், வேதாரண்யம், திருவண்ணாமலை, சிதம்பரம், மதுரை முதலிய சிவஸ்தலங்களில் யாழ்ப்பாணச் சைவர் ஏராளமான திருப்பணிகளைச்செய்திருக்கிறார்கள். இலங்கை யின் ஜோதிநிலையம் யாழ்ப்பாணம் ; அறிவிற்கும், திருவிற்கும், புலமைக்கும், நாகரிகத்திற்கும் பெயர் போனது யாழ்ப்பாணம். மணிமேகலையில் வரும், **மணி பல்லவம்** இங்கேயே உள்ளது. பெரும் புகழ்பெற்ற நாகபூஷணியம்மன் கோயிலுக்கு இருப்பிட மான நயினார் தீவே, பழைய நாகத்தீபமென புத்த சமயிகளும் இன்று ஆலயம் அமைத்துக் கொண்டாடுகிறார்கள். மணற்றிடல், வலிகாமம், நாகதீபம், காந்தர்வ புரி, வீணாகான புரம் என்று இதற்குப் பல காரணப் பெயர்கள் உண்டு.

யாழ்ப்பாணம் புகழ்பெற்ற பழந்தமிழரான நாகர்பதி; யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த பல அழகிய ஊர்கள் உண்டு; அவற்றுள் கீரி மலை தனுக்கோடியிலிருந்து முப்பதுமைல் உள்ளது. இங்கே நகுல முனிவர் தவம் புரிந்து சித்தி பெற்றார். நளன், அருச்சுனன், முசுகுந்தன் முதலியோரும் இங்குவந்து சிவதரிசனம் செய்தனர். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறந்தது கீரிமலை. இதை இன்றும் புண்ணிய நிலையமாக நம்மவர் கொண்டாடுகின் றனர். மாவிட்ட புரம், காங்கேயன் துறை, சம்புத்துறை (இங்கே தான் சங்கமித்திரை போதிக்கிளை நட்டாள்), திருவடிநிலை, மணி புரம், கந்தரோடை (புத்தர் வந்த இடம்), பருத்தித்துறை (இங்கே தான்போர்த்துகீஸியர் சமயப்பிரசாரம் தொடங்கினர்), வல்லிபுரம், சிங்கை நகர் முதலிய சரித்திரப்புகழ் பெற்ற ஊர்கள் உள்ளன. இவற்றிற்கெல்லாம் நடுநாயகமாக, சிகர ஜோதியாகத் திகழ்வது **நல்லூர்.**

யாழ்ப்பாணம் வீறுபடைத்த தமிழர் நிலம் ; அதற்குச் சொற் றிறனும் உண்டு, விற்றிறனும் உண்டு ; ஆதிமுதலே அஃது

அன்னியர் அட்டூழியங்களை எதிர்த்து வந்திருக்கிறது. போர்த்துகீஸியரோ, உலாந்தாக்காரரோ கிறிஸ்துவராக வலியுறுத்தும் போதெல்லாம் யாழ்ப்பாணம் எதிர்த்து மறுத்து வாதாடி யிருக்கிறது. 1560-ஆம் ஆண்டு பறங்கியர் படையை, யாழ்ப்பாணம் புறங்காட்டி ஓடச்செய்தது. சுமார் நூறாண்டுகள் பல தந்திரங்களால் போராடியே அன்னியர் யாழ்ப்பாணத்தைப் பிடிக்க முடிந்தது. 1795-ஆம் ஆண்டுதான் அங்கே ஆங்கிலக் கொடி ஆடத் தொடங்கியது. அன்றுமுதல் பொதுவாக இலங்கையிலும், சிறப்பாக யாழ்ப்பாணத்திலும், ஆங்கில நடையுடை பாவனைகளும் கிறிஸ்து மதமும் பரவத் தொடங்கின. தமிழையும் சைவத்தையும், பௌத்தமும், சிங்களமும், கிறிஸ்துவமும், ஆங்கிலமும், இஸ்லாமியமும், உருதுவும் சூழ்ந்துகொண்டன. சிங்களரும் தமிழரும் ஒற்றுமையாகவே யிருந்தனர். சைவரும் பௌத்தரும் கதிர்காமத்தில் வழிபடுகிறார்கள். எனினும், ஆளும் ஆங்கிலம் நாளடைவில் ஆதிக்கம் பெற்றுத் தமிழையும், தமிழர் சமயத்தையும் அரிக்கத் தொடங்கியது. இன்னும் சிலகாலம் நம்மவர் உறங்கி யிருந்தால், கந்தையா, நாகையா எல்லாரும் ஜானும், ஜோஸபுமாக மாறியிருப்பார்கள். நல்ல வேளையாகத் தமிழரைத் தட்டி யெழுப்ப எழுந்தது யாழ்ப்பாண நல்லூர். அன்றும் இன்றும் தமிழ்க் கொடியைத் தாங்கி நிற்பது யாழ்ப்பாணம்; யாழ்ப்பாணத் தமிழர் மற்றெவருக்கும் சளைக்கவில்லை ; எல்லாத் துறைகளிலும் அவர்கள் முந்தி நிற்கிறார்கள். முதன்மையாக நல்ல தமிழையும் சைவத்தையும் வளர்த்த பெருமை இன்றும் அவர்கட்கு உண்டு. யாழ்ப்பாணம் தமிழன்னைக்குத் தந்த மாணிக்கங்கள் பலர். அவருள் புலவர்மணி சேனாதிராயர், மகான் ஆறுமுக நாவலர், தமிழருக்கு அகராதி அளித்த சொற்கொண்டல், நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ் நூல்களைப் பிழையறப் பதிப்பித்து உதவிய புலவர் சி. வை. தாமோதரம் பிள்ளை, புலவர் தி. த. கனகசுந்தரம் பிள்ளை, திரு. அ. குமாரசுவாமிப் புலவர், தமிழர் வரலாற்றை எழுதிய கனகசபைப் பிள்ளை, வித்துவான் கணேச ஐயர், புலவர் ச. கந்தைய பிள்ளை, ஸ்ரீ. தி. சதாசிவ ஐயர், புலவர் கிங்ஸ்பரி, ஸர். பொன்னம்பலம் இராமநாதன், தமிழ்மணி விபுலானந்த



சுவாமிகள் முதலியோரை எந்தத் தமிழ் உள்ளமும் மறக்க முடியாது. இவர்கள் செய்த தமிழ்ப்பணி நமது இரத்தத்தில் ஊறிப் போயிருக்கிறது. யாழ்ப்பாணத்திற்கே புதிய ஒளியும் உணர்வும் அளித்த **நாவலர் பெருமானை** இந்நூலிற் சிறப்பிக்கிறோம். அவர் பிறந்த நல்லூருக்குச் செல்வோம்.

## 4. யாழ்ப்பாண நல்லூர்

நல்லூர், யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு மைல் உள்ளது. இது பழம்பதி, தனித்தமிழ் நாகரிகப் பண்ணை ; சரித்திரப் புகழும், சமயப் புகழும், இலக்கியப் புகழும் செறிந்தது. இன்றும் இங்கே பழந்தமிழ் மன்னர் மாளிகையும், கோயில்களும், தோட்டந் துறவுகளும் காண்கின்றன. அன்றும் இன்றும் இவ்வூர் சிறந்த புலவருக்கும், சைவமணிகளுக்கும் பெயர்பெற்றது. இரகுவம்சத்தைத் தமிழிற் பாடிய அரச கேசரிப் புலவர் இவ்வூரில் ஆண்ட பரராசசேகரி மன்னனுக்கு வித்துவானா யிருந்தார். இரண்டாண்டுகள் அரசகேசரியே அரசப் பிரதிநிதியாக நல்லூரை ஆட்சி செய்தார். இங்கே புகழ் பெற்ற கந்தசாமி கோயில் உள்ளது ; அதில் வடிவேலும், வள்ளி தெய்வானையும் வணங்கப் பெறும். இக் கோயிலுக்குப் பல திசையிலிருந்தும் அன்பர் வருவதுண்டு. இவ்வூரைச் சைவரும் பௌத்தரும் சேர்ந்து பாதுகாக்கின்றனர். சங்கபோதி புவனேசவாகுவே முதலில் நல்லூரையும் கந்தசாமி கோயிலையும் நிர்மாணித்தான். ஆறுமுக நாவலர் குடும்பம் இக் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்ததுண்டு. இங்கே விநாயகர் கோயிலும் வீரமாகாளி கோயிலும் உண்டு. வீரமாகாளி கோயிலில் வணங்கியே அக்காலத் தமிழ் வீரர் போர் முனைக்குச் செல்வது வழக்கம். இலங்கையின் மற்றைப் பாகங்களைப் போல இவ்வூரும் போர்த்துகீஸியர் அட்டூழியங்களால் இடிந்து தகர்ந்து சிதைந்தது. இதன் கோயில்களைப் பரசமயத்தார் இடித்தனர். கந்தசாமி கோயிலுக்கும் கடப்பாரை வைத்தனர். கோயில் உருக்களைக் குளத்தில் புதைத்து, நகைநட்டுக்களை எடுத்துக்கொண்டு கோயில் பண்டாரம் மட்டக்களப்புக்கு ஓடிவிட்டான்.

நல்லூரார் அன்னியரை விரட்டி யடிக்கக் கிளர்ச்சிசெய்தனர். வீதிராயன், புவிராச பண்டாரம் போன்ற வீரர் அதற்காக உயிரைக் கொடுத்தனர். பிறர் என்ன கேடு செய்தும், நல்லூரின் மனம் கெடவில்லை ; அதில் தமிழ் உணர்ச்சியும் சைவப்பற்றும் துடித்துக்கொண்டே யிருந்தன. கந்தசாமி கோயில் புதிதாக எழுந்தது; வழக்கம்போல் அதில் கந்தபுராணம் முழங்கியது.

நல்லூரின் அறநிலையங்கள் காலத்தைவென்று நிலவுகின்றன; நல்லூர் அமைப்பும் வனப்பும் மிக்க அழகானவை. குளம் தோப்புக்களைச் சூழ்ந்து அதன் தெருக்கள் வகுக்கப் பெற்றுள்ளன ; எங்கே திரும்பினாலும் பச்சழகு ; நீர்வளம், பூம்பொழில் ; கோயில், சத்திரம், மடம், பாடசாலை, பள்ளிக்கூடம், தமிழ் முழக்கம் ! இந்த ஊரில் சென்ற நானூறு ஆண்டுகளாக ஒரு தமிழ்ச் சங்கம் நடக்கிறது. அது யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராச கேசரியின் தம்பியும், திருக்கோவலூரில் தமிழ் கற்ற புலவருமான **ஜகராஜசேகர**னால் நாட்டப்பெற்றது ; அவனுக்குச் சோழபாண்டிய தொண்டை மண்டலப் புலவர் வந்து துணை செய்தனர். இச் சங்கத்திலேதான் அரசகேசரியின் இரகுவம்சம் அரங்கேறிப் புகழ் பெற்றது. இத்தகைய நல்லூரில் நன்மைக்கெல்லாம் வித்தான நமது **நாவலர்** தோன்றினார்.

சைவஜோதி எழுந்த குடும்பப் பரம்பரையை அறிவோம்.

## 5. ஞானப்பிரகாசர்

**சேனாதிராயர்** பெரும்புலவர்; அவர் தாம் செய்த நல்லை வெண்பாவில், " பூங்குயில்கள் எங்கும் பொழில் நல்லை, அன்னம் வழங்கும் அணிநல்லை, நன்னூல் கலை விளங்கு நல்லூர், செந்தமிழே போலுந் திருநல்லை, தமிழ்முனிநேர் நல்லூர், நல்லோர்வாழ் தூநல்லை, நலம் இயல்பார் வாழ்வுகூர் நல்லை " என்றெல்லாம் தமது பழம்பதியைச் சிறப்பிக்கிறார். இத்தகைய சிறப்புக்களுடன் " **சிவந்தழைக்க வாழுந் திருநல்லூர்** " என்பதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். தமிழ், சைவவொழுக்கம் இரண்டும்



யாழ்ப்பாணநல்லூருக்கு மூளையும் உள்ளமும் போலும் ; இரண்டிற்கும் அபாயம் வரும்போது, அவ்வூரார் தம் உயிரைக்கொடுத்தும் காக்கத் தயங்கார்; ஆபத்து அலையலையாக வந்து மோதியது. இந்தியாவில் நுழைந்த பறங்கிக்காரர், இலங்கையிலும் புகுந்தனர். பறங்கிப்பாதிரிமார் நம்மையெல்லாம் அஞ்ஞானிகள் என்று கருதினர் ; நமது பழக்க வழக்கங்களை யெல்லாம் தூற்றினர். சட்டை தொப்பி ஊன் மது நாகரிகமே நாகரிகம் என்று காட்டினர். " கோயிலுக்குப் போகாதே ; சிவா, முருகா என்னாதே ; உருவை வணங்காதே; வா எங்கள் சர்ச்சுக்கு ; எங்கள் சிலுவை-ஏசுவையும், மேரியையும் தொழு ; திருவாசகத்தை மூடிவை ; எங்கள் உபதேசத்தைக் கேள் ; மாறு மதம் ; கட்டிக்கொள் தோலை ; எங்கள் மொழி பயில் ; எங்களுக்கே தொண்டுசெய்" என்று நம்மவரை வற்புறுத்தினர். ஆசை காட்டினர். பணந் தந்தனர். தமது நோக்கத்திற் கேற்ற சிறிது கல்வி தந்தனர். மதம் மாறினவருக்கு வேலை தந்தனர். வயிற்றிற்கு அடிமையான மனிதர் இந்த மாய மொழிகளில் மயங்கிக் கிறிஸ்துவ ராயினர். சிலர் அங்கே கிறிஸ்துவராயும் இங்கே சைவராயும் நடித்தனர் ; சிலர் வீட்டில் விபூதி பூசி, வெளியே வெறுநெற்றியு மானார்கள்; சிலர் பகலில் பைபிளையும், இரவில் திருவாசகத்தையும் படித்தனர். சிலர் நாவில் ஏசுவையும், நெஞ்சில் சிவனையும் வைத்தனர். சிலர் இரண்டுங் கெட்டு, வயிற்றை நிரப்பும் வழியைப் பற்றினர். சிலர் உதட்டில் சிரிப்பும் உள்ளே எரிப்பும் கொண்டனர். சிலர் சட்டை, தொப்பி நாகரிகத்தில் மயங்கி, நம்மை இகழ்பவருக்குப் பின்பாட்டுப் பாடினர். இந்தமாதிரி அடிமைப்படைகளைக் கொண்டு அன்னியர் ஆதிக்கம் பெற்றே, பிறகு தமது கொடுமையைக் காட்டத் தொடங்கினர். சிவாலயங்கள் தரைமட்ட மாயின. அவற்றின் கல், மரங்களைக் கொண்டு சர்ச்சுக்கள் எழுந்தன. பலாத்கார மத மாற்றம் பலமானது. "நீறு பூசக்கூடாது; இலைபோட்டுச் சாப்பிடக் கூடாது ; பீங்கான் தட்டில் சாப்பிடுவதே நாகரிகம்".....என்றெல்லாம் அன்னியர் கொடுமை நமது வீடுகளிலும் திருவிளையாடல் புரியத் தொடங்கியது. காரியம் இம்மட்டுடன் நிற்கவில்லை. ஈ, எறும்பை நசுக்கக்கூடக் கூசும் சைவர்களிடம் " துரை சாப்பிட

வேண்டும், கொண்டா வீட்டுக்கொரு ஆடு,கோழி...பசு" என்று கிட்டி போட்டனர் போர்த்துகீஸியர். பசுப்போன்ற சைவர் என்ன செய்வார்கள் ? காமதேனுவைக் கடும்புலியிடம் தரும் கல்நெஞ் சரும் உண்டோ ? சிலர் இருந்தனர்—வயிற்றை நிரப்பி வாழும் பேதையர், அஞ்சி வாழும் அவலங்கொண்டோர் சிலர் முறை வைத்துக் கொலைகாரனுக்குக் கோதானம் செய்தனர். பலர்"என் செய்வோம், என் செய்வோம்" என்று ஏங்கித் துடித்தனர். நமது நிலத்தில் வந்த அன்னியர் வாயை அடக்க யாரும் இல்லை ; எமகந்திரிபில் திரியும் அகராதிப் புலவர் " நமக்கேன் வம்பு ?" என்று எட்டைத் துளைத்துக்கொண் டிருந்தனர். சிலர் " இந்தப் பாபம் செய்வதைவிட இந்த ஊரைவிட்டுப் போவதே மேல்"என்று கிளம்பினர். அப்படிச் செல்வதும் எளிதன்று; அடி எடுத்து வைக் கும்போது போர்த்துகீஸியன் கண்டுகொண்டால் காலைமுறித்துவிடு வான் ; கண்ணைப் பெயர்த்துவிடுவான்; துரை சினந்தால் தூக்கு மேடைதான், சிலுவைதான் ! கொடுமை ! கொடுமை ! ஒரு பெரி யார் எப்படியோ இக் கொடுமையைத் தப்பிவிட்டார்.

அவரே **ஞானப்பிரகாச சுவாமிகள்.** அவர் உள்ளும் புறமும் சைவர் ; யாழ்ப்பாண நல்லூரைச் சேர்ந்த திருநெல்வேலியில் அனைவராலும் மதிக்கப்பெற்றவர் ; சாது. அவரையும் பறங்கியர் விடவில்லை. "ஐயா, நாளை உமது முறை, ஒரு கொழுத்த பசுவைக் கொண்டாரும், எங்கள் துரை சாப்பிட" என்று கட்டளையிட்டனர். மறுநாள் குறித்த நேரத்தில் பசு வரவில்லை. "அடே நமது ஆணையை மீறினன்; கொண்டா அந்தச் சைவனை" என்று துரை கனகோபத்துடன் தனது புலிகளை அனுப்பினர். புலிகள் வீட்டைத் துருவின ; காட்டைத் துருவின ; ஆளைக் காணோம். பசுவைப் பறங் கிக்காரனுக்குத் தந்து, இந்த ஊரில் வாழ்வதைவிட வடக்கே போவதே நலம் என்று முதனாளிரவே ஞானப்பிரகாசர் தப்பி ஓடித் தனுக்கோடி சென்று, அங்கிருந்து சிதம்பரம் வந்து சேர்ந் தார். அங்கே சிவகங்கையில் குளித்து, மிளகும் நீரும் உண்டு,ஒரு மண்டலம் சிவகாமி சந்நிதியில் விரதமிருந்து, நாடும் சமயமும் படும் பாட்டை நடராஜப் பெருமானிடம் முறையிட்டுக் கண்ணீர்



வடித்தார். பிறகு, வடக்கே தலயாத்திரை செய்துகொண்டு வங்க நாட்டிற்கு வந்தார். அங்கே ஓர் ஊரில் ஒரு துறவி,மாணவருக்கு வடமொழி இலக்கண இலக்கியங்களையும் ஞான நூல்களையும் புகட்டி வந்தார். நமது ஞானப்பிரகாசர் தள்ளியிருந்து கேட்டுவந் தார். ஒருநாள் ஆசிரியர், மாணவரைச் சோதித்தார் ; பயனில்லை; பிறகு, ஒதுங்கியிருந்து கேட்டுவரும் தமிழ்த் துறவியைக் கேட்டார். இவர் தாம் கேட்ட பாடங்களைத் தெளிவாகச் சொன்னர். பிராம ணத் துறவி மிக்க மகிழ்ச்சிகொண்டு, இவருக்கு முறையாக வட மொழியும் ஞான நூல்களும் புகட்டினர். கற்பன கற்ற பிறகு, ஆசிரியர், "இனி நீர் தமிழகம் சென்று ஞானப்பணி செய்யும்" என்று பணித்தார். ஞானப்பிரகாசர் தெற்கே வந்து திருவண்ணு மலையில் தங்கினர். "**அண்ணுமலை தொழுவார் வினை வழுவா வணம் அறுமே**" என்ற சம்பந்தர் வாக்கு அவரை அங்கே இழுத் தது. அங்கே ஆதீனம் மடத்திலேயே காஷாயம் பூண்டு சைவ சித் தாந்த ஆராய்ச்சி செய்தார். பிறகு தில்லைக்கு வந்து நடராஜனை உபாசித்து வடமொழியிலுள்ள பௌஷ்கரத்திற்கும், சிவஞான போதத்திற்கும் விரிவுரை எழுதினர். சிவஞான சித்தியாருக்கு ஒரு விளக்கம் எழுதினர். வடமொழியில் சிவயோக சாரம், சித் தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரஸாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோக ரத்தினம், சிவாகமாதி மகான்மிய சங்கிர கம் முதலிய நூல்களைச் செய்தார். தாம் எழுதிய ஏடுகளை யெல் லாம் திருவண்ணுமலை ஆதீனத்திற்குக் காணிக்கையாய் அளித் தார். சிதம்பரத்தில் ஒரு பெரிய குளந் தொட்டார் ; அதுவே **ஞானப்பிரகாசர் குளம்** என்று இன்றும் வழங்குகிறது. இம் முனிவர் சிவாகம உபதேசமும், சிதம்பர தரிசனமும் செய்வதி லேயே ஈடுபட்டு, நடராஜா திருவடியில் இறுதி சேர்ந்தார். இவர் ஆவி, "சைவத்தைக் காக்கும் ஆன்மா எங்கே? " என்று தேடித் திரிந்தது.

## 6. கந்தர்

ஞானப்பிரகாசர் மரபு, வழிவழியாக நல்லூரில் செழித்து வந்தது. போர்த்துகீஸியர் போய் உலாந்தாக்காரர்கள் ஆட்சி

வேரூன்றிக் கிளை பரவியது. அதில் கிறிஸ்து சமயம் தந்திரமாகத் தளிர்விட்டுச் செழித்தது. பலர் பஞ்சத்திற்கு ஆண்டியானார்கள். தமிழும் சைவமும் தத்தளித்தன. உதவி ? இதோ ! ஞானப்பிரகாசர், பாண்டிமழவர் குடியைச் சேர்ந்த கார்காத்த வேளாளர். அவரை நான் நாலாம் வருணம் என்று சொல்லமாட்டேன்; பிறவியால் சாதி பாராட்டுவது என் கொள்கை யன்று ; ஆதலால் அவரை இயல்பால் அந்தணர் என்றே கூறுகிறேன். அதே மாதிரி நாவலரையும் அந்தணருள் அந்தணர் என்கிறேன். ஞானப்பிரகாசர் மரபினர் கற்றறிஞர்; நல்ல நிலையி லிருந்தவர்; அவருள் **இலங்கை காவல முதலியார்** என்பவர் ஒருவர் ; முதலியார் என்பது இலங்கை அரசினர் தரும் அதிகாரப் பட்டம். இம் முதலியார் நல்ல மருத்துவர் ; தமிழ்ப் புலவர் ; நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தார். அவர் புதல்வர் பரமானந்தர், அரசவூழியர் ; சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர்; இவரும் மருத்துவப் புலவர். உலாந்தா அரசனுக்கு வந்த கொடிய நோயைத் தீர்த்துப் பரிசு பெற்றவர் ; தமிழ்ப் புலவர். இவருக்குக் கந்தர்,இலங்கையர் என்ற இரு புதல்வர் இருந்தனர். **கந்தப் பிள்ளை,** உலாந்தரிடம் ஆராய்ச்சி வேலை பார்த்தவர் ; வைத்திய நிபுணர் ; சில வைத்திய நூல்களை வசனத்தில் எழுதியவர் ; தமிழ்ப் புலவர்; நாடகாசிரியர். இவர் பல நாடகங்களும் எழுதினர். இவருக்குச் செடி நூலும் தெரியும் ; தோட்டம் போட்டு நல்ல மூலிகைகளும் மலர் காய் கனிகளும் விளைப்பதில் இவர் இன்பங் கொண்டார். கந்தப்பிள்ளை சிவபக்தர் ; இவர் மனைவி சிவகாமி அம்மையார் கற்புள்ள சிவநேசச்செல்வி. இருவரும் நல்லூர் முருகனைத் தினம் வழிபட்டு வந்தனர். இவர்களுக்கு எட்டு மக்கள் பிறந்தனர் ; ஐந்து ஆண், மூன்று பெண். ஆண் மக்களில் நால்வர் ஆங்கிலம் கற்று, ஆங்கிலேயரிடம் அனுவல் பார்த்தனர். அவருள் தியாகராசரும் தம்புவும் கல்வி சிறந்த கனவான்கள். பரமானந்தர் என்பார் தமிழ்ப் புலவர், கவி; இவர் கந்தரைப் பற்றிப் பாடியிருக்கிறார். ஆறுவது பிள்ளையே நமது வணக்கத்திற்குரிய ஆறுமுக நாவலர்.

# 7. பிறந்த நாள்

நாவலர் பிறந்த நாள், தமிழுலகின் நன்னாளாகும். சாலியவாகன சகாப்தம் கஎசஉ, சித்திரபானு வருடம் மார்கழி மாதம் ஐந்தாம் தேதி; புதன்கிழமை இரவு பத்துமணி, அவிட்ட நட்சத்திரம், பூர்வ பட்ச பஞ்சமி, வச்சிர யோகம், பாலவ கரணம், சிங்க லக்கினம்—இதுவே கிரகநிலை. 18—12—1822; இதுவே நாவலர் பிறந்த ஆங்கிலத் தேதி.

| | | | |
|---|---|---|---|
| | சனி | வி | |
| சந் | உதய லக்கினக் கிரக நிலை | | கே |
| ரா | | | ல |
| செ, சுக், சூ—பு | | | |

நாவலரின் சாதகம் விவேகானந்தரின் சாதகத்தைப் பெரும்பாலும் ஒத்திருக்கிறது.

நாவலர் சாதகத்தில், சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய், ராகு ஆகிய ஐந்தும் இலக்கினத்தின் கீழ்ப் பகுதியிலும், சந்திரன் சனி வியாழன் கேது இந்நான்கும் மேற் பகுதியிலும் அமைந்து உயர்ந்த சிந்தனைத் திறனையும் வினைத்திட்பத்தையும் குறிக்கின்

றன. அப்படியே விவேகானந்தர் சாதகத்திலும் காண்கிறது.இருவர் சாதகத்திலும் சூரியன், சுக்கிரன், புதன் ஆகிய மூன்றும் ஒரே வீட்டில் உள்ளன.இருவர் சாதகத்திலும் அக்கினிக்கோளான செவ்வாய், அக்கினி ராசியில் நிற்கிறது ; இது அஞ்சா நெஞ்சுரத்தையும் உண்மையை வெளிப்படையாகச் சொல்லும்திண்மையையும், வீர தீர பராக்கிரமத்தையும் உணர்த்தும். இருவருக்கும் ஒன்பதாவது தர்ம ஸ்தானத்தில் சனி இருக்கிறது. இதனுல் வாழ்க்கை யோகநிலை பெறும். பிறநாடுகளில் தருமப் பிரசாரம் செய்வார்கள்.எதிரிகள் பகைப்பார்கள்;அவர்களை அடக்கி இவர்கள் வெற்றி பெறுவார்கள். பத்தாம் வீட்டில் வியாழன் இருப்பதால், இளம் வயதிலேயே கல்வி கேள்விகளில் முதிர்ந்து, குரு பீடம் வகித்தனர். வியாழ தசையிலேதான் இப்பெரியார்கள் தீவிரமான தொண்டு செய்து முடித்தனர். இராமலிங்க சுவாமிகள் 5—10—1823ல் பிறந்தார், நாவலருக்கு ஒரு வயது இளையவர். மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை 6—4—1815ல் பிறந்தார், நாவலரைவிட எழு வயது மூத்தவர்; தயானந்த ஸரஸ்வதியைவிட (1824-1883) இரண்டு வயது மூத்தவர். தயானந்தர் 59 ஆண்டுகள் வாழ்ந்தார் ; நாவலர் 57 ஆண்டுகள் வாழ்ந்தார். 1875-ல் தயானந்தர் ஆரிய ஸமாஜம் கண்டார்; 1848-ல், நாவலர் சைவ ஸமாஜம் தொடங்கினுர். இருவரும் உண்மைக்காகவே பலிதான மானுர்கள்.

நாவலர் மூன்றுவயதிலேயே இளந்தமிழ் பேசத்தொடங்கினுர். சிவன், கந்தன் என்ற திருநாமங்கள் இவருக்கு மிகப் பிரியமாயிருந்தன. அந்த வயதிலேயே பதிப் பாடல்களைக் கேட்பதிலும் கந்தபுராணம் படிக்கும் இடங்களில் அடக்கமாக அமர்ந்திருப்பதிலும் இவருக்கு விருப்பம். விளையும் பயிர் முளையிலே தெரியும் ; காயிலே தெரியும் கனி; குழந்தை ஆறுமுகம் ஒவ்வொருநாளும் பெரியனுக வளர்ந்தான்.

## 8. கல்விப் பருவம்

வயது ஐந்து; தந்தை கந்தப்பிள்ளை தமது அருமை ஆறுமுகத்திற்குத் தமிழ்க் கல்வி தொடங்கினுர் ; எழுத்து வந்ததும், நல்லூரில் பள்ளிக்கூடம் வைத்திருந்த **சுப்பிரமணியப் பிள்ளை**யிடம் பிள்ளை படித்தான். ஆறுமுகம் தாய்ப்பால் போலத் தமிழ்ப்பால் பருகினுன். சுப்பிரமணிய உபாத்தியாயர் ஆறுமுகத்திற்கு வாக்குண்டாம், மூதுரை, நன்னெறி முதலிய நீதி நூல்களும் நிகண்டு முதலிய கருவி நூல்களும் புகட்டினுர். ஆறுமுகம் படிக்கும் பருவத்திலேயே பிற மாணுக்கருக்குப் பாடம் சொல்லத் தொடங்கினுன். பாடங்களைத் தான் வருந்திக் கற்றுக்கொண்டு, மந்தமான மாணவருக்குத் தெளிவாக விளக்கினுன். கருத்தற்ற மாணவரைத் தனியே அழைத்துச் சென்று "தம்பீ, கல்வியே மனிதனுக்குக் கண், படிப்பில்லாதவனை உலகம் மதியாது ; நாம் நன்ருகப் படித்து முன்னேற வேண்டும்" என்று புத்தி சொல்லுவான். அசட்டு வாதம் செய்வோருக்குச் சரியான பதில் சொல்லி, வாயை அடைப்பான். ஆறுமுகம் மண்டை பெருத்து உடல் மெலிந்தவன். "இந்தப் பாணுத்தலையன் மூளை என்னெல்லாம் பேசுகிறது" என்று கண்டவர் வியப்பர். தந்தையின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஆனுல் மகானின் அற்புதப் புலமையைக் காணுமுன் அவருக்கு அழைப்பு வந்துவிட்டது. ஆராய்ச்சி கந்தப்பிள்ளை ஆனித் திருமஞ்சனத்தின்போது, ஒரு நாடகம் பாடிக்கொண் டிருந்தார். எழுத்தாணி பிடித்தபடியே "சிவா, கந்தா" என்ருர் ; அனுயாசமாகச் சிவ பதம் சேர்ந்தார். மகன் ஆறுமுகம், தந்தை தொடங்கிய நாடகத்தை முடித்தான். அப்போது அவனுக்கு வயது ஒன்பதே. ஊன் தந்தையை இழந்த ஆறுமுகம், உயிர்த் தந்தையான சிவபெருமானிடமே அன்பு வைத்தான். மூத்த தமையனுரான தியாகராச பிள்ளை, தம்பியின் அறிவு நுட்பத்தை வியந்து, அவனது கல்வியில் கருத்தூன்றினுர். தக்க புலவரைக் கொண்டு தமிழ்க் கல்வி புகட்டினுர். வேலாயுத முதலியாரிடம் சில நூல்களைக் கற்றபின், **சேனுதிராயர்** என்னும் பெரும் புலவரிடம் ஆறுமுகம் படித்தான்.



## 9. சேனுதிராயர்

**யா**ழ்ப்பாணத்தின் புலவர் சிங்கம் சேனுதிராயர் ; இவர் நல்லூருக்கு அருகில் உள்ள **இருபாலை** என்னும் ஊரில் பிறந்

தவர். இவர் தந்தை நெல்லைநாத முதலியாரும் பெரும்புலவர்; ஏகசந்தக்கிராகி ; ஒருதரம் கேட்ட கவியை அப்படியே ஒப்பிக்கும் திறமை வாய்ந்தவர். பிள்ளையும் அவ்வாறே ஏகசந்தக்கிராகியா யிருந்தார். இவர் இருமொழிப் புலவரான கனகசபாபதி யோகி யிடம் முறையாகப் பாடங்கேட்டார் ; நன்னூலை நாற்பதே நாளில் முடித்தார். பிறகு, பல இலக்கியங்களையும் சைவசமய நூல்களை யும் கற்றார் ; கல்வித்திறமையும் பெற்றார். தமிழுடன் போர்த்து கீஸ், டட்ச், ஆங்கில மொழிகளினும் தேர்ச்சி பெற்றார். கல்வியும் சைவவொழுக்கமும் நிரம்பிய இப் புலவர், யாழ்ப்பாண நீதிமன் றத்தில் துவிபாஷியாக இருந்துகொண்டு, வக்கீலுக்குப் படித்து வழக்கறிஞரானார். அத்தொழிலில் இவர் பெரும் புகழ் பெற்றார். இறுதியில் நீதிபதியாகவும் இருந்தார். இவரது நீதியுரைக்கு அர சாங்கத்தாரும் பொதுஜனங்களும் மிக்க மரியாதை வைத்திருந் தனர். இவர் பஞ்சாயத்து மன்றத் தலைவராகவும் இருந்தார்.

இவ்வாறு இவர் பெரிய உத்தியோகம் செய்தபோதும் தமிழைக் கை விடவில்லை. ஓய்வு நேரங்களில் தாமும் தமிழ் வளர்த்தார்; தமிழார்வங் கொண்ட மாணவருக்கும் அன்புடன் பாடஞ்சொல்லி வந்தார். கல்வியும், செல்வமும் தழைத்த இவர், நன்மாணவ ருக்கு உண்டியும் உறையுளும் அளித்துப் பாடஞ்சொன்ன பரிவு வியக்கத்தக்கது. படித்தவர்களும், சந்தேகந் தெளிய இவரிடமே வருவார்கள். கல்வியில் இவர் ஒப்புயர்வற்று விளங்கினார். சைவ சமய தத்துவங்களை இவர் தெளிவாக விளக்கிவந்தார். இவரிடம் கற்றவர் பெரும்புலவ ரானார்கள். சரவணமுத்துப் புலவர், சம்பந் தப் புலவர், ஆறுமுக நாவலர், கார்த்திகேய ஐயர், பீதாம்பரப் புலவர், அம்பலவாண பண்டிதர், நாகநாத பண்டிதர் முதலி யோர் இவர் மாணவர்களே. இவர், கோயில் திருப்பணிகளிலும் கருத்தை நாட்டினார். முதன்மையாக நல்லூர் கந்தசாமி கோயி லில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அதில் இவரே கந்த புரா ணம் படிக்கத் தொடங்கி, அவ்வழக்கம் பழக்கமாகச் செய்தார். இவர் நல்லூர் கந்தர்மேல் பாடிய பாடல்கள் மிகப் புகழ் பெற் றவை : **நல்லை வெண்பா. நல்லைத் திரிபந்தாதி, நல்லைக் குறவஞ்சி, நல்லைக் கலிவெண்பா, ஊஞ்சற் பஞ்சமம்** முதலியன.



அக்காலம் அமெரிக்க மிஷினரிகள் தொகுத்த அகராதிக் குழுவில் இவரே தலைமை வகித்துத் தமிழில் நல்ல அகராதி உண்டாக்கி னார். வீரமா முனிவர் தொகுத்த அகராதிக்குப் பிறகு இதுவே நல்ல அகராதி என்பர். இவர் அகராதியே பிற்காலம் பலரால் விரித்தும் பெருக்கியும் வெளியிடப் பெற்றது. அக்காலம் அச்சு நூல்கள் அருமை. ஏடு வைத்திருப்பவர் எளிதில் தரமாட்டார் கள். சிலர் தந்திரமாக ஏடுகளை வாங்கிப் பிரதி செய்துகொண்டு மூலத்தில் மாற்றம் செய்து தருவதும் உண்டு. சில ஏட்டுப் புலவ ருக்குத் தமது அறிவைப் பிறருக்குப் புகட்டவே மனம் வராது ; சில சுயநலப் புலவர்கள் ஏடுகளைத் தத்தமது கட்டையுடன் வைத்து எரித்துவிடச் சொல்வார்களே யொழியப் பிறருக்குத் தர மாட்டார்கள். இப்படிப்பட்ட புலவர்காலத்தில், சேனாதிராயர் பழந் தமிழ் நூல்களை ஏட்டுப்பிரதி செய்து சேர்த்து வைத்தார். எல்லா ருக்கும் படிக்கத் தந்தார். இவர் ஏடுகள் மாணவருக்குப் பெரும் பயனாயின. அவற்றிற் சில இலண்டன் புத்தகசாலைக்கும் சென் றன; இவர் ஏடுகளே நமது நாவலர் ஆராய்ச்சிக்கும் பயனாயின. சேனாதிராயர், ஒரு செல்வியை மணந்து, இராமலிங்கம் என்னும் மகனையும், பருவதவர்த்தனி என்னும் மகளையும் பெற்றார்; இரு வரும் கல்வி கேள்விகளில் வல்லவர். இருவரும் கற்று நல்ல புகழ் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தனர். இருவரும் பிற்காலம் நாவலர் பணிகளுக்கு அருந்துணை செய்தனர்.

சேனாதிராயரை " ஞானாதி ராசர் " என்று யாழ்ப்பாணம் போற் றும். இப்புலவர் இறந்ததாகக் கேட்ட நீதிபதி கதிரைவேற் பிள் ளையின் தந்தை குமாரசாமி முதலியார், உடனே இச் செய்யுளைப் பாடினார் :

**நானா திராவிடமும் நன்னிலக்க ணாறுறச்செய்**
**சேனாதி ராயனையோ செத்ததென்றீர்—வானாதி**
**பொன்னிலத்து முண்மை புகனூல் உரைப்பதற்காய்**
**இந்நிலத்தை விட்டெடுத்த தே !**

இத்தகைய சேனாதிராய முதலியார் ஆறுமுகம் பிள்ளையின் புலமையைத் தூண்டினார்.

# 10. சரவணமுத்துப் புலவர்

**வ**ண்ணார்ப்பண்ணை மனப்புலி முதலியார் சரவணமுத்துப் புலவர் அக்கால அறிஞரில் ஒருவர் ; நன்னூற் கருப்பை, வேதாந்த சுயஞ்ஜோதி முதலிய நூல்கள் இயற்றியவர். நமது ஆறுமுகர் இனி அவரிடம் முறையாக இலக்கண இலக்கியங்களைக் கற்றார். ஆறுமுகத்திற்கு வயிற்றுப் பசி பெரிதன்று, அறிவுப் பசியே அடங்காப் பசி; ஐந்து மணிக்கே எழுந்து, காலைக் கடன்களை முடித்து, துவைத்துக் குளித்து, கந்தசாமி கோயில் புகுந்து சிவ முருகனைத் தரிசித்து, தோத்திரஞ் செய்து, திருமுருகாற்றுப்படை பாராயணஞ் செய்து, ஏட்டை எடுத்துக் கொண்டு ஆறுமுகனார், ஆசிரியரிடம் செல்வார் ; மதியம் வீட்டிற்கு வருவார் ; உணவு தயாரா யிருக்கவேண்டும்; இன்றேல் மீண்டும் படிக்கப் போய்விடுவார் ; இரவிலேதான் அவர் இருந்து மெதுவாக உண்பார். உண்ணும்போதும் படித்ததை நினைத்துக்கொள்வார். ஆசிரியர் சொல்வதைக் கருத்துடன் கேட்டு மனத்திற் பதித்துத் தனியே சிந்திப்பார். பிற மாணவருக்கும் புகட்டுவார். ஆசிரியருக்குப் பாடஞ் சொல்லத் தோதில்லையானால், தனி வீட்டுத் திண்ணைகளிலோ தோப்புக்களிலோ அமர்ந்து, தாமே நன்னூல்களைப் படிப்பார். ஒரு கவியை ஒரு தரம் படித்தாலும் கேட்டாலும் போதும் ; அதன் பொருளை அலசிப் பிழிந்து ஆராய்வார். அவருக்கு மனப் பாடம் செய்வது மிக்க எளிது; நினைப்புத் திறமை அற்புதம். அக்காலம் புலவர் எளிதிற் பாடஞ்சொல்ல மாட்டார்கள். சொன்னாலும் தாமறிந்த புலவர் வரலாறுகளையும் தனிப்பாடல்களையுமே மிகையாகச் சொல்லுவார்கள். கருவி நூல்களையும் சிறந்த இலக்கியங்களையும் பாடஞ்சொல்பவர் அரிது. சரவணமுத்துப் புலவர் இலக்கணமும் சில பிரபந்தங்களும் பாடஞ்சொல்லித் தமிழ்ச் சுவையேற்றினார். ஆறுமுகத்தின் கலைப் பசிக்கு இது போதாது. அக்காலம் கோயில்களிலும் செல்வர் வீடுகளிலும் தக்க புலவர் கந்த புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரார் புராணம் முதலியவற்றைப் படித்து விரிவுரை கூறுவதுண்டு. மைத்துனர் விசுவநாத முதலியார், மயில்வாகனர் நியாயதுரந்தரர். அவருடன்



ஆறுமுகம் புராணங் கேட்கச் செல்வதுண்டு. பிறர் காதால் கேட்பார்கள் ; ஆறுமுகம் கருத்தாற் கேட்டு விரிவுரையை ஆராய்வான் ; பிழைகள் இருந்தால் திருத்துவான் ; ஐயமிருந்தால் கேட்டுத்தெளிவான். இத்தகைய மேதாவிக்குத்தமையன்மார்கள், காலத்திற்கேற்ற ஆங்கிலமும் கற்பிக்கக் கருதினர்.

# 11. பீற்றர் பர்சிவல்

**அ**க்காலம் பாதிரிமார் ஆங்கிலப் பள்ளிக்கூடம் வைத்திருந்தனர். அவருள் பீற்றர் பர்ஸிவல் (Peter Percival) ஒருவர். இவர் நீண்டகாலம் யாழ்ப்பாணத்தில் பாதிரியா யிருந்தவர் ; உண்மையான கிறிஸ்து பக்தர் ; தமது சமயத் தொண்டிற்காகவே இவர் தமிழ் பயிலத் தொடங்கினார். ஆனால் தமிழின் சுவை அவரைக் கவர்ந்து விட்டது. அவர் தமிழ் மொழியை ஆழ்ந்து கற்கத் தொடங்கினார். கல்வித் துறையில் இவர் அரிய பணி செய்தார் ; பல ஆங்கில—தமிழ்க் கலாசாலைகளை நிலைநாட்டிக் காலத்திற்கேற்ற அறிவுடன், கிறிஸ்து சமயத்தையும் பரப்பினார். இவர் நாட்டிய ஆங்கிலக் கலாசாலையில் நமது ஆறுமுகமும் பன்னிரண்டாம் வயதில் சேர்ந்து ஆங்கிலம் பயின்றார். மாணவனாக வந்த ஆறுமுகம் ஆசிரியருக்கே குருவானார் ; பள்ளிப் பாடங்களை இவர் கருத்துடன் பயின்று முதன்மை பெற்றார். நான்காண்டுகளில் ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி பெற்றார். இவரது அரிய அறிவாற்றல்களைக் கண்டு, பாதிரியார் கீழ் வகுப்புக்களுக்கு ஆங்கிலமும் மேல்வகுப்புக்களுக்குத் தமிழும் கற்பிக்கச்செய்தார். அப்போது ஆறுமுகம் பதினாறு வயதுள்ள வாலியர். ஆங்கிலத்திலும் தமிழிலும் இவருக்கு நிகரில்லை ; மொழிபெயர்ப்பிலும் நிகரில்லை யென்று இவர் புகழ் பெற்றார். பார்ஸிவல் துரைக்கு இவரே தமிழாசிரியராகவும் அமர்ந்தார். இவர் உதவியாலேதான் அவர் பைபிளையும் தமிழாக்கினார். ஆறுமுகம் பிள்ளை பைபிளை ஆராயச் சந்தர்ப்பம் வாய்த்தது. இப் பகுதியில் இறங்குமுன் நம் ஆறுமுக முனிஷி கல்வி செழித்த வகையைக் காண்போம்.

# 12. கல்விக் கடல்

நம் ஆறுமுகனுருக்குப் பள்ளிக் கல்வி ஒருபொருட்டன்று. அவர் தாமாகக் கற்ற கல்வி மிக விரிந்தது. கல்விதான் மனிதனை ஆளாக்குவது ; கல்வி எல்லை யற்றது. அறிவும் தொழிலும் செறிந்த கல்வி, கற்கக் கற்க மனிதனை உயர்த்தும். நமது நாட்டில் முப்பத்திரண்டு வித்தைகளும் அறுபத்துநான்கு கலைகளும் வழங்கின. இவற்றைத் தமிழர் இயல், இசை, நாடகம் என்று வகுத்தனர். இவற்றைக் கற்றவர் புலவ ராவார். புலமையில் இருவகையுண்டு; இயற்புலமை, செயற்புலமை. இயற் புலமை முற்பிறப்புகளில் கற்றறிந்த பயனுலும், அருளாலும், பிறவிக்குணத்தாலும், மரபாலும் வரும் ; செயற் புலமை, கற்றறிவினுல் வரும்.

நாவலர் இயற்புலமையும் செயற்புலமையும் உடையார்; இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றிலும் வல்லவர். ஒன்பது வயதிலேயே தந்தை எழுதி விட்ட **நாடகத்தை** இவர் எழுதி முடித்தார். பிற்காலம் இவர் முருகன் மேல் சில பாடல்கள் இயற்றினுர். நல்லிசைப் புலவர் பாடும்போது நாவலர் மனமுருகிக் கேட்பார் ; தேவாரம், திருவாசகம் ஆகிய பதிப்பாடல்களைக் கேட்டுப் பரவசராவார். அவருக்கு இசைச்செவியுண்டு. இவையனைத்தினும், கருவி நூல்களையும் சமய நூல்களையும் அவர் விரிவாக ஆராய்ந்தார். அவர் பிறரிடம் கற்றது சிறிது ; தாமே கற்றதே மிகப் பெரிது. இருபத்துமூன்று வயதிற்குள் அவர், ஒரு மனிதன் அறிய வேண்டிய கல்வியறிவெல்லாம் முயன்று பெற்றுர். இவர் இவ்வளவு நூல்களை யாரிடம் கற்றுர் என்று பலர் வியக்கும்படி யிருந்தது அவரது கல்வி. நாவலர் இளமை முதலே முருகனிடம் அன்பு பூண்டவர் ; கந்த புராணத்தையும், திருமுருகாற்றுப்படையையும் பாராயணம் செய்தவர்; சிவபக்த சீலர்; தட்சிணு மூர்த்தி சந்நிதியில் அமர்ந்து, அவர் பஞ்சாட்சரி ஜபமும், கந்தர் முன் அமர்ந்து சடாட்சரமும் ஜபிப்ப துண்டு.

இந்த மந்திரநியமத்திற்கேற்ற ஒழுக்கமும் அவரிடம்இருந்தது. அவர் பெண்ணின்பத்தைப் புண்ணெனை வெறுத்தார். பணத்



தாசையைப் பாசமென ஒழித்தார். இசை வசைகளை இருவிகார மனத்தின் அலைகள் என நீத்தார் ; இறைவனையே அவர் சரணடைந்தார். "சிவா, முருகா" என்றே அவர் ஆவி கூவியது. இச்சாதனங்களால் அவர் உள்ளெழுச்சியும், மனஒருமையும், தெள்ளறிவும் பெற்றுர். இதனுல் ஒருதரம் கேட்டதும் படித்ததும் அவர் உள்ளத்தில் ஆழ்ந்தது. சேனுதிராயரைப் போலவே அவரும் ஏகசந்தக்கிராகி யானுர். இத்தெளிந்த ஒருமையுள்ளமே அவாது பேரறிவின் இரகசியமாகும். இதனுல் பிறர் பத்தாண்டு வருந்திக் கற்பதை இவர் ஓராண்டில் எளிதாகக் கற்றுர். அவர் மற்றைப் புலவர்போலக் கற்றுக் கவி பாடி வாதமிட்டுச் செல்லவில்லை ; கல்வியறிவால் தமிழுக்கும், சைவருக்கும் காலநிலையைக் கருதிச் செய்ய வேண்டிய பணி தமக்கு இருப்பதாக நாவலர் நினைத்தார். இதற்காகத் தம்மைத் தயார்செய்துகொள்ளவே அவர் உயர்ந்த இலக்கியங்களைப் பயின்றுர். அவர் கல்வியின் இரண்டாவது இரகசியம் இதுவே. பர்ஸிவல் பாதிரிக்கு அவரைப் பண்டிதராக்கியதும் பரமன் செயலே! அதனுலேதான் அவர் கால நிலையையும், அதற்கேற்ற பணியையும், அதற்காகத் தம்மைத் தயாரித்துக் கொள்ளும் வகையையும் அறிந்தார்.

வெளிப்பகட்டில்லாமல் அவர் அடங்கியிருந்து கற்பன கற்றுர். அவர் கற்ற நூல்களைத் தமிழர் அறிக :—

நன்னூல், தொல்காப்பியம், யாப்பருங்கலம், தண்டியலங்காரம், சூளாமணி நிகண்டு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, இறையனுரகப்பொருள், திருக்குறள், காஞ்சிபுராணம், திருக்கோவையார், சிலப்பதிகாரம், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், சிவஞானபோதம், மெய்கண்ட சாத்திரம் இவற்றைப் படித்தார்.

பிறகு கிரந்த எழுத்துக் கற்று, சப்தம் நிகண்டுகளைப் படித்து, சமுஸ்கிருதத்தில் சுமாரான அறிவுண்டானதும், அம் மொழியில் உள்ள வேதாகம நூல்களைக் கற்றுர். அவற்றுள் முதன்மையானவை: அரதத்தாசாரியார், அப்பைய தீட்சிதர், சிவாக்ரயோகி, அகோர சிவாசாரியார், சோமசம்பு சிவாசாரியார் முதலியோர்

இயற்றிய சமய நூல்கள், சிவதருமோத்திரம், சேது புராணம், மனுஸ்மிருதி, நீதி சாரம், சங்கற்ப நிராகரணம், சிவதத்துவ விவேகம், ஸூத ஸம்ஹிதை, வாயு சங்கிதை, கூர்ம புராணம், இரகு வம்சம், பிரம கீதை, இரத்தினத்திரயம், காலோத்திரம், சிவானந்தலஹரி, ஸௌந்தரியலஹரி, சிவபுஜங்கம், சிவரகசியம், ஸ்காந்த புராணம், சிதம்பர புராணம், வேதாரண்ய புராணம் முதலிய பல நூல்களை அவர் ஆராய்ந்தே பேசினர், எழுதினர். வேதாகம ஆராய்ச்சியால் "வேதம் பொது; ஆகமம் சிறப்பு" என்பதை அவர் கண்டார். இருபது வயதுமுதல் முப்பத்திரண்டு வயது வரை, அவர் தாமே நூலாராய்ச்சி செய்து, சிறந்த தமிழறிஞரும் சைவ சாத்திரப் புலவரு மானர்.

## 13. பாதிரிமார்

**பை**பிள் மொழிபெயர்ப்பில் துணை செய்த ஆறுமுகனரைப் பர்ஸிவல் துரை நன்ருக அறிந்துகொண்டார். தெளிந்த அறிவு, ஆழ்ந்த ஆராய்ச்சி, ஒப்புயர்வற்ற தமிழ்ப் படிப்பு, ஆங்கிலத்தில் நல்ல அறிவு, மொழிபெயர்ப்பில் தேர்ச்சி, இவற்றுடன் மனேதைரியம், சிறந்த ஒழுக்கம், உரிய காலத்தில் உரிய பணிசெய்தல், எடுத்த விஷயங்களைத் தெளிவாகப் பேசுதல் முதலிய குணங்களைப் பாதிரிமார் கண்டு, இவரை நன்கு மதித்தனர். நாளடைவில் இவரைத் தமது " குரு " என்று போற்றி வணங்கினர். பாதிரி உறவாலும் பைபிள் படிப்பாலும், ஆறுமுகனருக்குப் புதிய உணர்ச்சி வந்தது. அவர் கண் திறந்தது.

நமது நாட்டில் பாதிரிமார்களின் தொண்டுகளைக் கண்டால் யாரும் வியப்பார்கள். அவர்கள் நமது நாட்டுச் சமய உணர்ச்சி, கலாசாரம், நாகரிகம் முதலியவற்றை மாற்றிவிடுகிருர்கள் என்பது உண்மை. அதன் காரணம், நமது கலாசாரத்தை நம்மவர் காவாமையே யாகும். தங்கள் கடமையை எப்படிச் செய்கிருர்கள் என்று பார்த்தால், பாதிரிகளை நாம் வியப்போம். அவர்கள் எப்படியோ வெண்ணுட்டுச் செல்வரிடம் தமது சிலுவைத்தொண்டிற்காக ஏராளமான பணம் வசூலித்து விடுகிருர்கள். உலகெங்கும்



பைபிள் சங்கம் உள்ளது. ஏசுநாதர் எளியவாழ்வு வாழ்ந்து சிலுவையில் இரத்தஞ் சிந்தி மறைந்தார். அவர் பெயரால் இன்று உலகெங்கும் நடக்கும் காரியங்களைக் கண்டால், அவரே திடுக்கிட்டு வியப்பார். வானரசுக்காகத் தன்னையே பலி கொடுத்த ஏசுநாதர், இன்று கிறிஸ்து நாடுகள், அணுக் குண்டும் விஷப்புகையும் வீசிப் போர் செய்யும் பயங்கரத்தைக் கண்டால் அலறிப் போவார். கிறிஸ்து பைபிள் எழுதவில்லை; தன் பெயரால் மதம், சர்ச்சு, சாதி எதுவும் எழுப்ப வில்லை. அவர் யூதராகப் பிறந்து யூதராகவே இறந்தார். யூதாஸ் அவரைக் காட்டிக்கொடுத்தான். பீடர் அவரை மறுத்தான். மற்றச் சீடர்கள் அனைவரும் அவரைக் கைதுசெய்தபோதே ஒளிந்தோடிப் போனர்கள். மாக்தெலினு என்ற பெண்ணே சிலுவைக் காட்சி முதல் பாறைப்பொந்தில் புதைக்கு மட்டும் அருகேயிருந்தாள். ஏசுநாதர் மூன்று நாட்கழித்து எழுந்து, விண்ணேறிய காட்சியையும் அவளே கண்டாள். ஏசுநாதர் மறுபடியும் வருவார் என்று அவள் நம்பினுள். பீடர் கூட நம்பவில்லை. சீடர் வட கலீலியில் மறைந்து திரிந்தனர். அக் காலம் ரோமக் கொடுங்கோல் நடந்தது ; யூதர் ரோமர்களின் அடிமைகளா யிருந்தனர். " சிலுவை, ஏசு " என்று மூச்சுவிட்டால் கொலை தான். ஆதலால் எல்லாம் " கப்சுப் " என்றிருந்தன. பல்லாண்டுகளுக்குப் பிறகே பீடருக்குத் தன் குருநாதர் நினைவு வந்தது. அவன் வீட்டில் அடிக்கடி ஏசுநாதர் தங்கிய துண்டு ; அவனுடன் பால், ஜேம்ஸ், ஸ்டீபன்ஸன், பில்லிப் முதலிய அன்பரும் சேர்ந்து ஏசுநாதரின் அருமை பெருமைகளைப் பாராட்டினர். குருவை நினைக்க நினைக்க அவர்கள் உள்ளத்தில் பக்தி அதிகரித்தது. இவர்கள், நம்பிக்கையுள்ளவர்களுக்கு ஏசுநாதரின் புனித வாழ்வைப் பற்றிச் சொல்லி வந்தார்கள். சில ஊர்களில் ஸினகாக் (Synagogue) என்னும் யூதமந்திரங்களில் தொழுகை நடத்தினர்கள். வெகுகாலம் சினகாகிலேதான் கிறிஸ்துவின் வரலாறு உபதேசங்களைப் பற்றிப் பேசினர். இதனல் வைதிக யூதரும் ரோமரும் பகைகொண்டு கிறிஸ்து பக்தரைச் சித்திரவதை செய்தனர். சிலரைக் கல்லெடுத்தெறிந்து கொன்றனர். சிலரைத் துண்டு செய்து சிங்கத்திற்குப் போட்டனர். இப்படிச் சித்திரவதைப்பட்டே அன்பர் கிறிஸ்துவின் பெயரை நிலை

நாட்டினர். மார்க், மத்தாய், யோவான், லூக்கா ஆகிய நால்வரும் ஏசுநாதர் வரலாற்றையும் உபதேசங்களையும் தாம் அறிந்தவாறே எழுதினர். இவர் எழுதியதே கிரேக்கில் வந்தது ; அதிலிருந்து லத்தீனானது ; இலத்தீன் பைபிளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த **டிண்டால்,** நாடு கடத்தப் பெற்று, சிறையுண்டு இறந்தான். **பால், பீடர்** இருவரும் தர்மபலி யானார்கள் ; அவர்கள் எலும்பின்மேல் ரோமன் சர்ச் எழுந்தது ; அதிலிருந்தே ஐரோப்பாவில் கிறிஸ்து மதம் பரவியது. கிறிஸ்துவருக்கு நித்தியம் எமகண்டந்தான். அவர்களை நீரோ (Nero) உயிரோடு வைத்தெரித்தான். இன்னொருவன் படுகொலை செய்தான். எப்படியோ தியாகத்தீயில் மூழ்கிக் கிறிஸ்து மதம் ஐரோப்பா அமெரிக்க நாடுகளில் பரவிவிட்டது; 19, 20-ஆம் நூற்றாண்டுகளிலேதான் கிறிஸ்துமதம் உலகமத மானது. அதன் காரணம் பாதிரிமாரின் பரோபகாரமே.

பாதிரிமார் எங்கே சென்றாலும், அந்தந்த இடத்திற்குத் தக்க நடையுடை பாவனை காட்டிச் சுதேசிகளின் மொழியைக் கற்று, அவர்களுடன் அன்பாகப் பேசித் தமது காரியத்தைச் சாதித்தனர். பாதிரிமார் இந்தியா, சீனா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளில் செய்துள்ள காரியங்கள் ஒரு பெரிய புராணமாகும். நமது தமிழகத்தில் பாதிரிமார் செய்த காரியங்கள் தமிழர் வரலாற்றுடனேயே ஐக்கியமாய் விட்டன. நமது அரசியல் வாழ்வும் சமுதாய வாழ்வும் சீர்கெட்டு, கல்வி தொழிலறிவும் மழுங்கிய காலத்தில், பாதிரிமார் எளிதாகப் புகுந்து, தமது காரியத்தைச் சாதித்தனர். வீரமாமுனிவர் (பிஷி) தமிழ் நன்றாகக் கற்று, **தேம்பாவணி** எழுதி, அதன் மூலம் ஆயிரக் கணக்கான தமிழரை மதம் மாற்றினர். நோபிலி பாதிரி அசல் வைதிகப்பிராமணர் போல் வேடம் போட்டு, தமிழிலும் ஆரியத்திலும் பேசி, சங்கராச்சாரியர் போல் பல்லக்கில் சிஷ்யர்களுடன் ஊர்ஊராகச் சென்று, ஏராளமான பேர்களை மதம்மாற்றினர். ஜேவியர் (Xavier) என்பவர் கலாசாலைகள் நாட்டிச் சமயப் பணி செய்தார். தூத்துக்குடி, பாளையங்கோட்டை, மதுரை, பசுமலை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சை, வேலூர், சென்னை முதலிய எல்லா முக்கியப் பட்டணங்களிலும், கிராமங்களிலும் பாதிரிமார்கள் செய்துள்ள ஆக்கவேலை



களைக் கண்டால் யாரும் வியப்பார்கள். பாதிரிமார், முதலில் ஆஸ்பத்திரி, பிறகு பள்ளிக்கூடம், பிறகு தொழிற்சாலை, அதன்பிறகு பிரசங்கம், பிறகு சர்ச்சு, பிறகு மடங்கள், பிறகு கிறிஸ்துவத் தொண்டர்படை, பிறகு மதமாற்றுவேலைகள் செய்கிறார்கள். இவர்கள் முன்னே சென்று தமது வேலையில் வெற்றி பெறும்போது வெள்ளைக்கார பீரங்கிகளும் தொடர்கின்றன ; அதன்பின் வெள்ளைக் கொடியும் வந்து நமது நாட்டில் ஊன்றி ஆடுகிறது. கல்வி எப்படியோ அப்படியே மனித வாழ்வும் ஆகும். நமது நாட்டிற்குரிய ஆசார விவகார ஐதீகங்களையும், தாய்மொழிகளையும், வேர் பறித்தெறிந்து அன்னிய பாஷையும், நடையுடை பாவனைகளும் மத விவகாரங்களும் வந்து சூழ்ந்தால், நமது சொந்தநாட்டு நாகரிகமே பாழாகிறது ; நாம் அதுவுமன்றி இதுவுமின்றிக் கெடுகிறோம். புதிய மோகத்தால் நமது பழநலத்தை இகழ்கிறோம். சமுதாயம் உருக்குலைகிறது. இது பாதி அது பாதியாய் நமது வாழ்வே நிறைவின்றி அரைகுறை யாகிறது. இஃது எல்லாருக்கும் தெரிந்ததே. தெரிந்தும் நாம் உறங்கினோம் ; உறங்குகிறோம். நாமும் என் அந்தப் பாதிரிமார்கள் போலக் கிளம்பி நமது சைவசமயத்தைப் பரப்பலாகாது ? இந்தக் கேள்வி, சென்ற நூற்றாண்டில் ஒரே ஒருவருக்குத்தான் உதித்தது. அவரே நம் **ஆறுமுகனார்.**

## 14. சைவ உணர்ச்சி

பர்ஸிவல் பாதிரி ஆறுமுகப் புலவரை நன்கு மதித்தார் ; புலவரின் மதிநுட்பம், ஒழுக்கம், சுயநலமற்ற தியாகவுணர்ச்சி, தூய வாழ்வு, மும்மொழித் திறம் ஆகியவை அவர் உள்ளத்திற் பதிந்தன. பைபிள் மொழிபெயர்க்க மட்டுமன்று; பேசிப்பழகவும், இந்துமத தத்துவங்களை அறியவும், பழந்தமிழ் நூல்களைப் பயிலவும் இவரைப் போன்ற ஆசிரியர் வேறு யாரும் இல்லை என்பதைப் பாதிரியார் உணர்ந்தார். வேதனம் பெறும் பண்டிதராகக் கருதாமல், பரம குருவாக அவரை மதித்துப் பணிவுடன் போற்றினர். பாதிரியார் அவரைக் கண்டதும் "குருப்யோ நம:" என்று வணங்கினர் ; சபைகளில் நாவலர் வந்தால் "மம குரு" என்று

எழுந்து நின்று மரியாதை செய்து, குரு அமர்ந்த பிறகு, தாம் அமர்ந்தார். இவ்வளவு நெருங்கிப் பழகி, வேறு புலவரானால், பாதிரியார் மெல்ல மதமாற்று வேலை தொடங்கியிருப்பார். நான் கூட ஒரு மிஷன் கலாசாலையிலிருந்து பைபிள் ஆராய்ந்தபோது, மதம் மாறச் சம்மதித்தேன். பாதிரிகளின் கல்விப் பணிகளும் பொதுநலங்களும் என்னை அப்படி வசீகரித்தன. பிறகு—ஒரு துறவி என்னைத் தடுத்தாட்கொண்டு சைவசமயத்தின் மாண்பை விளக்கினார். ஆறுமுகப் புலவர் மனவுறுதிகொண்டவர். கிறிஸ்துவப் பாதிரியிடம் போகுமுன் திருவாசகம் ஓதுவார் ; கந்த புராணம் படிப்பார், திருமுருகாற்றுப் படையைப் பாராயணஞ் செய்வார். நெற்றி நிரம்பத் திருநீறு பூசி, உருத்திராட்சமணி பூண்டு சிவக்கோலத்துடனேதான் செல்வார். மற்றவர்கள் இப்படிச் செய்தால் 'அஞ்ஞானி, சாம்பலாண்டி' என்று சிலர் கேலி செய்வதுண்டு. ஆறுமுகப் புலவரிடம் மூச்சுவிட முடியாது.

பர்ஸிவலுடன் மொழிபெயர்க்கும் பொழுதே புலவர் பைபிளை ஆழ்ந்து ஆராய்ந்தார். பழைய புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு வரியும் அவருக்கு நன்றாகத் தெரியும். பைபிளை அறிய அறியத் திருக்குறள், திருவாசகம், தேவாரம் முதலிய நூல்களின் அருமை பெருமை அவருக்கு நன்றாகத் தெரிந்தது. நமது அருள் நூல்களை அறியாமலே நம்மவர் பிறமதம் புகுந்து பாழாகிறார்கள் என்ற உணர்ச்சி பிறந்தது. பாதிரியாருடன் பழகப் பழக "இவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதுபோல் நாம் நமது சமயத்தைப் பரப்ப வேண்டும்" என்ற ஆர்வம் பிறந்தது.

கிறிஸ்துவர் இத்தனை பேர்களை மதமாற்றுவதின் இரகசியம் அவருக்குப் புலனானது. கிறிஸ்து நூல்கள் தெளிவான வசனத்தில் உள்ளன; நமது நூல்கள் கடினமான செய்யுளா யுள்ளன; அவற்றையும் நமது சமய சாத்திர புராண நூல்களையும் எல்லாரும் அறியும் இளந்தமிழில் எழுதினால் அனைவரும் அறிந்து பயன் பெறுவர். கிறிஸ்துவர் கல்வி கற்பிக்கத் தொடங்கி, ஜனங்களை வசீகரித்துப் பிறகு தமது சமயத்தைப் புகட்டுகிறார்கள். நமது சைவசமயம் பரவ வேண்டுமானால், முதலில் தக்க பாடசாலை



களை ஊர்தோறும் நிலைநாட்டி, எண்ணெழுத்துடன் சமய ஞானமும் புகட்டவேண்டும். அப்பாடசாலையிற் பயின்று தேர்ச்சி பெற்றவர்களுக்கு சைவசாத்திரங்களையும் போதனாமுறைகளையும்பயிற்றி, அவர்களைப் பாதிரிமார் போல் மக்களிடையே அனுப்பி, சமயப்பிரசாரம் செய்ய வேண்டும். ஊர்தோறும் கிறிஸ்து மத போதகர்கள் பாமரஜனங்களுக்குப் பிரசங்கம் செய்வது போலவே, சைவ சமய போதகரும் செய்து, ஜனங்களை வசப்படுத்த வேண்டும். கிறிஸ்துவர்கள் சர்ச்சுக்களில் தொழுகை நடத்துவதுபோல, நம்மவர் திருக்கோயில்களில் திருமுறை நூல்களை ஓத வேண்டும். கிறிஸ்துவர்கள் சுவிசேஷ கீதங்கள் பாடுவதுபோல், இந்துக்களும் இன்னிசைக் கருவிகளுடன் பதிப் பாடல்களை முழக்க வேண்டும். அவர்கள் பொதுக் கல்விக்கும் சமயக் கல்விக்கும் வேண்டிய நூல்களை அழகாக அச்சிட்டு எளிதாகப் பரப்புகிறார்கள். நாமும் நமது தமிழ் நூல்களை அச்சிட்டுப் பலர் படித்துப் பயன்பெறப் பரப்ப வேண்டும். பாதிரிமார் நமது சமயத்திலுள்ள குணதோஷங்களைச் சொல்லுகிறார்கள்; அவர்களுக்குத் தகுந்தபடி பதிற் சொல்லி அவர்கள் சமயத்தின் இயல்பையும் நமது சமயப்பெருமையையும் ஒப்பிட்டு ஜனங்களுக்குச் சைவவுணர்ச்சி பெருகும்படி சொல்ல வேண்டும். நம்மவர் இனி உறங்கக்கூடாது ; கிறிஸ்துவப் பாதிரிமார்கள் போல, கற்றறிந்த சைவப்பாதிரிகள் எழுந்து சமயப் பிரசாரம் செய்ய வேண்டும். இன்றேல் இப்போதுள்ள சிறிது மதவுணர்ச்சியும் போய்விடும்.

இதுதான் இருபத்துமூன்றாவது வயதில் நாவலர் உள்ளத்தில் எழுந்த சைவவுணர்ச்சி. இவ்வுணர்ச்சிக் கொடியில் பூத்துக் கனிந்த சிவ கைங்கரியங்களே இனி அவரது வாழ்க்கை யாகும்.

## 15. தைரியம்

புலவரின் உள்ளக்கிளர்ச்சியைப் பாதிரியாரும் அறிவார். பர்ஸிவல் உண்மையை மதிப்பவர் ; போலிகளை வெறுப்பவர். பணத்திற்கோ, பெண்ணுக்கோ, பதவிக்கோ ஆசைப்பட்டுக் கிறிஸ்துவரான பலரை அவர் அறிவார். சம்பளத்திற்காக மதம் மாறிய

வர்களை அவர் பஞ்சாட்சரக் கிறிஸ்துவர் என்பார். —ச-ம்-ப-ள-ம் என்பது ஐந்தெழுத்து, பஞ்சாட்சரம். அவர் தமது புலவரை உண்மைச் சைவர், பணத்தாசை யில்லாதவர் என்றறிந்து மதித்தார். புலவர் கிறிஸ்து மதத்தின் குறைகளையும் சைவ மதத்தின் சிறப்பையும் பலருக்கு விளக்குவதும் பாதிரியாருக்குத் தெரியும்; அதையும் தடைசெய்யவில்லை. ஏன்? வேலைக்கு அமரும்போதே "ஐயா, எங்கள் ஆசாரப்படியே நடப்பேன்; பர சமயத்தைக் கண்டித்து எங்கள் சைவ சமயத்தையே போற்றுவேன். இது சம்மதமானால் உங்கள் ஆசிரியரா யிருப்பேன்" என்றார் புலவர். பாதிரியார் சம்மதித்தார். புலவரிடம் பாதிரியாருக்கு மதிப்பு அதிகரிக்க மற்றொரு சம்பவம் நடந்தது.

## 16. மொழிபெயர்ப்பு

பைபிள் மொழிபெயர்ப்பு இனிது முடிந்தது. பைபிள் சங்கம் அதை அச்சிட வற்புறுத்தியது. அதற்காகவே பார்ஸிவல் பாதிரியார் ஆறுமுகப் புலவருடன் சென்னைக்குச் சென்றார். மொழிபெயர்ப்பு புலவர் நடைதான். இதற்குள் சென்னையிலிருந்த கிறிஸ்துவ சங்கமும் பைபிளை மொழிபெயர்த்தது. சென்னைக்காரர் "எங்கள் மொழிபெயர்ப்புத்தான் சிறந்தது; யாழ்ப்பாணக்காரருக்கு நல்ல தமிழே வராது; அவர்கள் செய்த மொழிபெயர்ப்பை ஒப்போம்" என்றனர். பாதிரிக்குப் பயம் பிடித்தது. "புலவரே, நாம் இவ்வளவு சிரமப்பட்டுச்செய்தமொழிபெயர்ப்பை இவர்கள் இப்படி எள்ளித் தள்ளுபடி செய்கிறார்களே; நமது யாழ்ப்பாணத் தமிழ் மட்டமா?" என்று பாதிரியார் வருந்தினார். "நமது மொழிபெயர்ப்பில் ஒரு பிழையும் இல்லை; குற்றம் காட்டினால் நாம் சமாதானம் சொல்லுவோம்" என்று தைரியஞ் சொன்னார் புலவர். சென்னைக்காரர் "தக்க புலவர்களைக்கொண்டு இரண்டு மொழிபெயர்ப்புகளையும் சோதித்தே ஒப்புவோம்" என்றனர்; "சம்மதம்" என்றார் நமது புலவர் சிங்கம். "இது பிசகு என்றால் நமது முயற்சி வீணாகுமே; நூலைவிரைவில் அச்சேற்றிச்செல்ல வந்தேன். இப்படித் தடை நேர்ந்ததே" என்று பாதிரி கவலைப்பட்டார். "தடையைத் தகர்த்தெறிவோம்; யாழ்ப்பாணத் தமிழ் சென்னைத் தமிழுக்குக் குறைந்த தன்று எனக் காட்டுவோம். தைரியமா யிரும்" என்று புலவர் பாதிரியைத் தேற்றினார்.

அக்காலம் சென்னையில் பல புலவர்கள் விளங்கினார்கள். அப்புலவர்கள் **கல்விச் சங்கம்** கண்டு தமிழறிவை வளர்த்தார்கள். அவருள், தாண்டவராய முதலியார், மதுரை கந்தசாமிப்புலவர், இராமானுசக் கவிராயர், விசாகப் பெருமாளையர், மழவை மகாலிங்க ஐயர் முதலியோர் முதன்மையானவர்கள். இவருள்மழவை மகாலிங்க ஐயர், மதுரைக் கடுத்த மழவராயனேந்தல் கிராமத்திற் பிறந்தவர்; ஆங்கிலம் படித்தவர்; அத்துடன் விசாகப் பெருமாளையரிடமும், சரவணப்பெருமாளையரிடமும் முறையாகத் தமிழ் நூல்களைக் கற்றுப் புலமை பெற்றவர்; நிமிஷ கவி; புலவர் நண்பர். சென்னைக்கு வந்த புலவர், இவரை அவசியம் பார்ப்பதுண்டு. அவர் ஆறுமுகப் புலவரைக் கண்டுபேசி அறிந்து மதித்தார்; வித்துவான்கள் பைபிளைப்-பார்வையிட அவரையே வேண்டினார்கள். மகாலிங்க ஐயர் சென்னை மொழிபெயர்ப்பையும், யாழ்ப்பாணம் மொழிபெயர்ப்பையும் மூலத்துடன் வைத்து ஒப்பு நோக்கினார். முடிவில் "பார்ஸிவல் பாதிரியார் மொழிபெயர்ப்பே சிறந்தது, அப்பழுக்கற்றது. யாழ்ப்பாணத்தில் இப்படிப் பட்ட தமிழ் வழங்குவதைப் பற்றி வியந்தேன்" என்றார். இதைக் கேட்டதும் பார்ஸிவல் மனங் குளிர்ந்தது. பைபிள் அச்சாகி வெளிவந்தது. இருவரும் ஊருக்கு வந்தனர். பாதிரியாருக்குத் தமது புலவரிடம் இருந்த மதிப்பு அதிகரித்தது. சென்னைப் புலவர் ஆறுமுகப்புலவரின் அறிவாற்றல் ஒழுக்கங்களைப் போற்றி மதித்தனர். இப் புலவர் உறவால் நமது புலவர் பெருமானுக்குப் புதிய உணர்ச்சி உண்டானது. இப்போது அவர் பார்ஸிவல் ஆங்கிலக் கலாசாலையில், தக்க சம்பளம் பெற்றுத் தமிழாசிரியராக வேலை பார்த்தார்.

## 17. யாழ்ப்பாணச் சமய நிலை

கிறிஸ்துவரின் பைபிள் பிரசாரமும் சமயவூக்கமும் ஆறுமுகனார் கண்ணைத் திறந்தன. தமது யாழ்ப்பாண நிலையை அவர்

சுற்றி நோக்கினர். " **யாழ்ப்பாணச் சமய நிலை** " என்றொரு நூலில் அவர் தாம் கண்டதை வெளிப்படையாகச்சொல்லுகிறார். அந்நூலின் கருத்துரையை இங்கே தருகிறேன்: "இங்கே வரும் பாதிரிமார், நமது வேதாகமங்களைக் குருட்டு வழி என்றும் சிவன் முருகன் முதலிய தெய்வங்களைப் பேய்களென்றும், நம்மவரை அஞ்ஞானிகள் என்றும் தூற்றுகிறார்கள் ; புத்தகம் போட்டுக் கூலிப் பிரசாரகர் மூலம் ஊர்ஊராகப் பரப்புகிறார்கள். ஆனால் இப் புத்தகங்களை யாரும் படிப்பதில்லை; சரக்கு மடிக்கவே உபயோகிக்கின்றனர். பிரசாரகர்களும் சிலருக்குத் தந்து மீதியைக் கல்லைக் கட்டிக் கிணற்றில் ஆழ்த்திவிட்டு, எல்லாம் கொடுத்துவிட்டோம் என்கிறார்கள். இம் முறை சரியான பலனைத் தரவில்லை ; எனெனில் பொதுஜனங்களுக்கு எழுத்தறிவு குறைவு. ஆதலால் பாதிரிமார், பள்ளிக்கூடங்கள் வைத்துப் பிழைப்பிற்கு வேண்டிய ஆங்கிலம் புகட்டி, அத்துடன் பைபிளையும் நுழைத்தனர். மாணவர் மூளையை மயக்கினர். அறியாத்தனத்தால் மாணவர் பலர் மதம் மாறிப் பிறகு மனம் வருந்தினர். மதம் மாறினவர் நிலை பரிதாபமானது ; சிலர் தமது செயலை வருந்தித் திருந்த முயல்கின்றனர். சிலர் நம்பாமல் நாத்திகம் பேசுகிறார்கள். ஆடை, உணவு படிப்பு, வேலை, சம்பளம் இவையே பலரை மதம்மாறச் செய்தன. அழகான பெண்களையும், பணக்காரிகளையும் மணந்துகொள்ளச் சிலர் மதம் மாறினர். உத்தியோகம் பெற்று வயிறு வளர்க்கப் பலர் கிறிஸ்துவரானார்கள். இப்படிப் பஞ்சத்திற்கு ஆண்டிகளான கிறிஸ்துவர், பாதிரிகளுக்கு எதிரே பணிவர்; சர்ச்சில் கண் மூடிக் கருத்தரைத் தொழுவர். கிறிஸ்துவருடன் உண்பர். எல்லாம் வெளிப் பகட்டே. உள்ளே " ஐயே, நம் அருமைச் சைவத்தை இழந்துவிட்டோமே " என்று மனச்சாட்சி குத்திக் கொண்டிருக்கும். இவர்கள் சிவன் கோயிலில் பூசை திருவிழாவிற்குத் திரவியங்கள் அனுப்புவார்கள் ; பெண்டு பிள்ளைகளைப் புராணம் கேட்க அனுப்புவார்கள். தாங்களும் மறைமுகமாகச் சிவதரிசனம் செய்வார்கள். வீட்டில் நோய் வந்தால் குருக்களுக்கு இரகசியமாகப் பணம் தந்து சிவபூசை பரிகாரம் செய்யச்சொல்லுவார்கள். இறந்தவர் பிணங்களைப் பாதிரிமார் அடக்கம் செய்த பிறகு, போலிக் கிறிஸ்துவர் சைவக்குருக்களைக்கொண்டு கருமாதி செய்விப்பார்கள். சிலர் பாதிரி முறையில் சர்ச்சில் விவாகத்தை நடத்தி மோதிரம் மாற்றிவிட்டு, வீட்டில் மறுபடியும் புரோகிதரைக் கொண்டு சைவ முறையில் சடங்கு நடத்துவார்கள். சிலர் சம்பளம் உயரப் பல விநோதமான சாகசஞ் செய்வார்கள். ஒருநாள் ஒரு தந்தை உடைந்த சோற்றுச்சட்டியைத் தூக்கிக்கொண்டு, ஒரு பாதிரியிடம் ஓடிவந்து "ஐயா, என் மகன் இப்படிச் செய்தான்; இதுதான் நீர் அவனுக்குச் செய்த பழக்கமா ?" என்று முறையிட்டார். பாதிரியார் மகனை (கிறிஸ்துவன்) விசாரித்தார். " நான், பரலோகத்திலிருக்கும் பரமபிதாவையே நம்புவேன்; அஞ்ஞானியான எந்தை எங்கள் வளைவிலிருக்கிற வைரவன் என்ற பிசாசுக்கு இச் சோற்றைப் படைத்தார் ; எனக்குக் கோபம் வந்தது. " பிசாசை நம்பாதே, எங்கள் பரமபிதாவையே நம்பு " என்றேன். தந்தை கேட்கவில்லை. பானையை எற்றிவிட்டேன். சோறு பிசாசுக்குப் பயனாகாமல் போனது " என்றான். பாதிரி தகப்பனாரை " அஞ்ஞானியே, அஞ்ஞானியே; போ வெளியே" என்று விரட்டினார். அவர் மகனைத் தட்டிக்கொடுத்து " நல்ல காரியம் செய்தாய் ; நீயே சரியான கிறிஸ்து பக்தன்; உனக்குப் பத்து ரூபா சம்பளம் உயர்த்தியுள்ளோம்" என்றார். பையன் வீட்டுக்கு வந்தான். தகப்பனார், "நல்ல தந்திரம் செய்தோம்; இரண்டணச் சோற்றால் பத்து ரூபா சம்பள உயர்வு" என்றார். இப்படிப் பலர், வீட்டில் பேசிவைத்துப் பாசாங்குசெய்து பணமடிப்பதும் உண்டு. பலர், வீட்டில் விபூதி பூசுவர் ; வெளியே அழித்துச் செல்வர். சிலர் பாதிரியைப் பார்க்கப் போகும்போது மட்டும் சூனிய நெற்றியோடு செல்வர். ஒரு நாள் ஒரு சைவக்கிறிஸ்துவர், வீட்டில் பூசிய விபூதியை அழிக்க மறந்து பாதிரியாரிடம் சென்றார். அவர் "ஹ, உன் நெற்றியில் என்ன ?" என்று சினந்தார். "ஐயரே, வழியில் மூன்று அஞ்ஞானிகள் என்னைக் கட்டிப் பிடித்தார்கள். ஒரு சைத்தான் பிடித்த அஞ்ஞானி எனது நெற்றியில் பலாத்காரமாகச் சாம்பல் பட்டை அடித்து, " அடே இதை உன் பாதிரிக்குக் காட்டு " என்றான். சைத்தான் வேலையை ஐயருக்குக் காட்டவே வந்தேன்" என்று சொல்லி விபூதியை அழித்தான். ஐயரும் மகிழ்ந்தார். உத்தியோகமும் நிலைத்

தது. ஒருவன் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்குப்போவதைப் பாதிரி பார்த்துவிடுகிறார். "பிசாசைக் கும்பிடப் போனதேன் ?" என்று கண்டிக்கிறார். "ஐயா, சைத்தான் என்னை வஞ்சித்துச் சாம்பல் பூசிக் கந்தசாமி கோயிலுக்குப் போகச் செய்தது; ஐயர் பரிசுத்த ஆவியை நோக்கிச் செபம் செய்து சைத்தானை ஓட்ட வேண்டும்" என்கிறான். பாதிரி உடனே ஜெபம் பண்ணுகிறார்.

இந்த மாதிரி ஆஷாடபூதி நாடகங்கள் தினம் நடக்கும். பாதிரிகளுக்கும் தெரியும் ; என்றாலும் உண்மையை வெளியிடமாட்டார்கள். மேன்மேலும் பாதிரிமார்கள் அடிக்கடி தமது நாடுகளுக்குச் சென்று தாம் இலங்கை, இந்திய நாடுகளிற் செய்யும் மகத்தான சேவைகளையும் அங்கே அஞ்ஞானிகளின் இருள் நிலைகளையும் வருணித்து ஏராளமான பொருள் தண்டி வருகின்றனர். இங்கே அவர்கள்பாடு வேட்டைதான். கொழுத்த சம்பளம், படிச்செலவு, சௌகரியங்கள் எல்லாம் தடபுடலாயிருக்கும். ஞாயிற்றுக்கிழமைப் பிரசங்கம் செய்துவிட்டால் பிறகு, கிராமங்களுக்குச் சென்று அஞ்ஞானிகளைப் பிடித்து மோட்சம் தரும் வேலைதான். இவர்கள் ஆசை காட்டி மதம் மாற்றும் பேர்வழிகளே ; இவர்கள் "கிறிஸ்துவுக்கு எங்கும் வெற்றி" யென்றே மேலதிகாரிகளுக்கு எழுதுவார்கள். இவர்களும் கூலிக்கு வேலைசெய்பவர்களே. நமது குருக்கள்மார்களும் போலிகளைக் கண்டிக்க மாட்டார்கள். அவர்களாலேதான் வரும்படி! யாழ்ப்பாணக் கிறிஸ்துவப் பள்ளிக் கூடங்களில் விபூதி திருமண் இட்டு வந்தால் தண்டனை. இந்துக் கோயில்களுக்குப் போனால் தண்டனை. பைபிள் கட்டாயப் பாடம்—பள்ளித் திருவிளையாடல்கள் பல. பொய்வழக்குப் பேசுதல், பொய்ப் பிரமாணம் பண்ணுதல், பொய்ப் பத்திரம் படைத்தல், சாராயங் குடித்தல், ஊனுண்ணல், வரம்புமுறை கடந்து கலியாணஞ் செய்தல் ; கடவுளில்லை, ஆன்மா இல்லை, மோட்சம் இல்லையென்று வாதித்தல், பாம்புக்குத் தலைகாட்டி மீனுக்கு வால்காட்டும் மலங்கு போல் சைவருக்குச் சைவராகவும், கிறிஸ்துவருக்குக் கிறிஸ்துவராயும் நடித்தல் முதலிய இப்பெருங் கொடுந்தீமைகள் எல்லாம் இவ்வியாழ்ப்பாணத்திலே தலைப்பட் டோங்குகின்றன.



நிரீச்வர வாதமும் போலிச் சமய நடையும் தலைப்பட்டுள்ளன. முன்னே யாழ்ப்பாணத்தில் இராக்கள்ளர் தொகை அதிகம்; இப்போது பகற்கள்ளர் தொகை மிகப் பெருகிவிட்டது. இராக் கள்ளருக்குத் தப்புவது எளிது ! பகற் கள்ளருக்குத் தப்புவது அரிது! அரிது ! ஒருவர் தாமே பணந்தந்து கந்தபுராணம்படிப்பிக்கிறார். நல்ல கட்டத்தில் தந்திரமாக விளக்கை உடைத்து, புராணத்தைப் பிய்த்தெறிந்து, பெரியாரை அடித்து ரகளைபண்ணி, ஒன்றுந் தெரியாத சாதுபோல் நழுவுகிறார். ஒருவர் வெள்ளைக்காரரை மகிழ்விக்கச் சாராயங் குடித்துக் கோயிலில் நுழைகிறார். ஒருவர் சிலரெதிரே சைவர்; வேறுசிலரெதிரே கிறிஸ்துவர். ஒருவர் சிலநாள் கிறிஸ்துவர், சிலநாள் நிரீசுவரவாதி, சிலநாள் சைவ சமயி. ஒருவனே யாழ்ப்பாணத்திலிருக்கும்போது கிறிஸ்து சமயி, இந்தியாவுக்குப் போனபோது, அங்கே சைவசமயி.

இந்தமாதிரியே சீர்கெட்டிருந்த அக்காலத்தைத் திருத்த வந்த தீர்க்கதரிசியே நாவலர். இனி அவர் செய்த அருட்பணிகளைக் காண்போம்.

## 18. சைவ பாடசாலை

1845-ஆம் ஆண்டு (விசு வருஷம் தை மாதம்) முதல், நாவலர் மாணவர்களைச் சேர்த்துத் தமிழும் சைவமும் புகட்டத் தொடங்கினார். கல்வியால் கண் திறந்து, நம்மவரைத் தமது சமயமுணரச் செய்தார் ; காலையிலும் இரவிலும் எவ்விதமான கைமாறும் கருதாமல், கருத்துடன் கற்பித்தார். அவரிடம் அப்படிக் கற்ற மாணவர், உயர்ந்த நிலைக்கு வந்து, அவருக்குக் கைதந் துதவினர். அவருட் சிலரை அறிவோம் : (1) **சதாசிவம் பிள்ளை,** முதல் மாணவர் ; சபாபதி பிள்ளையின் புதல்வர். இவர் நைட்டிகப் பிரமசாரி ; அரிய கல்விமான். நாவலரிடம் மிகப் பற்றுதலுள்ளவர்; அவருடன் எப்போதும் இருந்து, நாவலர் நூற்பதிப்புகளுக்கும் சமயப் பிரசாரத்திற்கும் பேருதவி செய்தார். நாவலர் சிதம்பரத்தில் நாட்டிய சைவப்பிரகாச வித்தியாசாலையில் அரிய தொண்டு செய்தார். நாவலருக்குப் பிறகும்

முப்பதாண்டுகள் அவ்வித்தியாசாலையை நடத்தி, சாதாரண வருடம் ஐப்பசி மாதம் எட்டாந்தேதி சிவபதமடைந்தார். (2) **நடராச ஐயர்.** மெய் கண்டசாத்திர விற்பன்னர்; வாதுளம், பௌஷ்கரம், முதலிய ஆகம நூல்களைக் கற்றவர்; பல மாணவருக்குச் சித்தாந்த நூல்களைப் பயிற்றியவர். யோகப் பயிற்சி செய்தவர். இவர் சோபகிருது வருடம் மார்கழி மாதம் சிவனடிசேர்ந்தார். (3) **ஆறுமுகம் பிள்ளை,** திருமுறை நூல்களில் பெரும் புலவர். இவர் திருவண்ணுமலை ஆதீனத் தம்பிரானுகி சித்தாந்தவித்தகரானுர். பெரியபுராணத்திற்கு உரைசெய்தார். (4) **பொன்னம்பலம் பிள்ளை,** கல்வியிற் சிறந்தவர். புராணங்களுக்கும் காவியங்களுக்கும் விரிவுரை கூறுவதில் வல்லவர். இவர் சமயப்பிரசாரத்திலும் பாடஞ் சொல்லுவதிலுமே ஆயுளைச் செலவிட்டார். சுவாமிநாதையர், விசுவனுத ஐயர், கந்தசாமி பிள்ளை, ஆறுமுகம் செட்டியார், உரையாசிரியர் ம. கதிரைவேற் பிள்ளை, பண்டிதர் கனகசபாபதி ஐயர், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் சபாபதி நாவலர், யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியராயிருந்த வைத்திலிங்கம் பிள்ளை முதலிய பல அறிஞர் ஆறுமுகப் புலவரிடம் பாடங் கேட்டுச் சிறப்புற்றனர்; பாடம் கேட்டவர், கேட்கக் கேட்க இன்னும் கேட்க விரும்பினர். நன்னூல் நிகண்டு முதல் பெரியபுராணம் சிவஞானபோதம் வரையில், முறையாகப் பாடம் நடந்தன. அவற்றுடன் பிற சமயங்களுக்குச் சரியானபடி ஈடுகொடுத்துச் சைவசமயத்தை நிலைநாட்டச் சைவசமய போதகரையும் நாவலர் தயாரித்தார். கற்ற மாணவரைக் கொண்டு, கல்வியைப் பரப்பினர். இதனுல் சிலர் கற்றது பலருக்குப் பயனுனது. இந்த அறிவுப்பணியால் பலர் கண்விழித் தெழுந்து, தமது சமய மாண்பை யறிந்தனர்; முன்போல் பிறமத வலையில் விழாது தப்பினர். இப்படிச் சிறிதாகத் தொடங்கிய பாடசாலை சைவப்பிரகாச வித்தியாலயமாக வளர்ந்தது.

## 19. கடமையைச் செய்தேன்

ஆறுமுகனுர் சொல்லுக்குப் பெருமதிப்பு உண்டானது. கிறிஸ்து மதச் சார்பில் பேசி அரட்டை யடிக்கும் வாய்களை அவர்



அடக்கினுர். மதி மயங்கிப் பிற சமயம் புகப்போகும் மாந்தரைத் தக்க ஆதாரங்களுடன் உண்மையை விளக்கிச் சைவசமயத்திற்குத் திருப்பினுர். அதனுல் கிறிஸ்துவரின் பகைக்கும் ஆளானுர். இங்கோர் உதாரணம் காண்போம்: **மு. தில்லைநாத பிள்ளை** நமது புலவருடன் கற்றவர்; அவரது நண்பர் சு. சின்னப்ப பிள்ளை. இவ்விருவரும் பாதிரிமார் உபதேசத்தில் மதிமயங்கி, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதாகப் பர்ஸிவல் ஐயருக்கு வாக்களித்தனர். நாளும் குறித்தாயிற்று. அறிந்தார் புலவர். அவ்விருவரையும் தனியே அழைத்துச் சென்று சைவசமயத்தின் மாண்பையும், தேவார திருவாசகங்களின் அருமை பெருமைகளையுஞ் சொல்லி, அப்பரின் திருவாக்குகளை எடுத்துக் காட்டி, "சைவ சமயமே சமயம்; அதைவிட்டுப் பிறமதம் புகுதல் அறிவாகாது" என்று வற்புறுத்தினுர். இருவர் மனமும் மாறியது. குறித்த நாளில் இருவரும் ஞானஸ்நானம் பெறவில்லை; அன்று திருநீறணிந்து, கந்தசாமி கோயிலுக்குச் சென்றனர்.

மறுநாள் பர்ஸிவல் இருவரையும் அழைத்தார். "நீங்கள் என்னிடம் வாக்களித்தபடி ஞானஸ்நானம்பெற ஏன் வரவில்லை" என்று வினவினுர். இருவரும் "ஐயரே, எங்களுக்கு உமது சமயக்கொள்கையில் சந்தேகமிருக்கிறது. கொஞ்ச காலம் ஆராய்ந்து, மனந்தெளிந்த பிறகு பார்ப்போம் என்றிருந்தோம்" என்றுர்கள். "சரி உங்கள் சந்தேகத்தைத் தீர்த்துக்கொண்டு விரைவில் வாருங்கள்" என்றுர் பாதிரியார். தில்லைநாத பிள்ளை பர்ஸிவல் பள்ளிக்கூட உபாத்தியாயர். சின்னப்ப பிள்ளை கிறிஸ்துவரானுல், உபாத்தியாயர் வேலை கிடைக்கும். இன்றேல் இருவருக்கும் வேலை போய்விடும். இருவரும் அஞ்சவில்லை. ஆறுமுகனுர் காட்டிய வழியிலேயே ஒழுகினர். இதை யறிந்த குண்டுணிகள் பர்ஸிவல் ஐயரிடம் கோள் சொல்லிவிட்டனர்: "ஐயா பாதிரியாரே, இந்த ஆறுமுகனுர் உமது காரியத்தைக் கெடுக்கிறுர். அவர் கிறிஸ்து மத விரோதி. அவரைச் சும்மா விட்டால் இந்த யாழ்ப்பாணத்தில் கிறிஸ்து சமயமே போய்விடும்" என்றனர். பாதிரியார் மனம் கொதித்தது. மறுநாள் ஆறுமுகனுர் வழக்கப்படியே பாடஞ் சொல்ல வந்தார். பாதிரி முகம் சிவந்தது.

**பாதிரி** : புலவரே, சென்ற ஞாயிற்றுக்கிழமை தில்லைநாத பிள்ளையும் சின்னப்ப பிள்ளையும் நம்மிடம் ஞானஸ்நானம் பெற வருவதாக வாக்களித்தனர். அவர்கள் வராமல் நீர்தாமே தடுத்தீர். ஏன் ?

**புலவர்** : ஐய, நான் சைவன் ; என் சமயம் உமது சமயத்தினும் தாழ்ந்ததில்லை. அவர்களும் சைவர்கள் ; எங்கள் சைவ வுண்மையை அவர்களுக்குப் புகட்டினேன் ; அதுவே எனது கடமை.

**பாதிரி** : தாங்கள் எம்மிடம் சம்பளம் பெற்று உத்தியோகத்திலிருந்து கொண்டே இப்படிச் செய்வது முறையா ?

**புலவர்** : ஐய, நான் பணத்திற்கு அடிமை யல்லேன்; உத்தியோகத்திற்கும் அடிமை யல்லேன். எனது சமயவொழுக்கத்தைக் காக்கவும், அதைப் பிறருக்குச் சொல்லவும் எனக்கு உரிமையுண்டு. அவ்வுரிமையை விடமாட்டேன். நான் உமக்கு ஆசிரியரா யிருப்பது பிடிக்கவில்லையானால், இப்பொழுதே நீங்கிவிடுகிறேன்.

இவ்வாறு சொல்லி, புலவர் தலைப்பாகையை வைத்துக் கொண்டு திரும்பிச் செல்லத் தொடங்கினார்.

**பாதிரி** : இதற்காகத் தாங்கள் விலகக்கூடாது ; உண்மையை அறியும் பொருட்டே கேட்டேன். பரவாயில்லை.....

பார்ஸிவல் கிறிஸ்து மதத்தைப் பரப்பவே வெஸ்லியன் சர்ச் மிஷினரியாக வந்தார். தமது புலவர் அதற்கு எதிர் செய்வதை அறிவார். எனினும் இப் புலவரின் அருமை பெருமைகளையும் அறிவார். இவருக்கிணையாக வேறொருவரைக் காண்பது அரிது என்று நினைத்தே மறுபடியும் ஆதரித்தார். இதைக் கண்டு ஓலமிட்ட மற்றப் பாதிரிகளுக்கு, “இவரைப் போன்ற நேர்மையான சைவரைக் காண்பது அரிது. இத்தகைய அறிஞரை எப்படியாவது நம்மிடம் வைத்திருக்க வேண்டும்” என்று வலியுறுத்தினார். புலவரும் தமது கொள்கை மாறாமல் வேலை பார்த்தார். தில்லைநாத பிள்ளை மதம் மாறாததால் உபாத்தியாயர் வேலைபோய்விட்டது. சின்னப்பருக்கும் அவ்வேலை கிடைக்கவில்லை. இருவருக்கும்



ஆறுமுகனார் “**சிவனுண்டு பயமில்லை**” என்று தைரியஞ்சொன்னார். தில்லைநாதரைத் தமது பள்ளிக்கூடத்திலேயே ஆசிரியராக்கினார். சின்னப்ப பிள்ளை வியாபாரத்தில் ஈடுபட்டு, கொழும்பில் மோர்க்கன் என்ற ஸிவில் உத்தியோகஸ்தர் நட்பைப் பெற்று, கொழும்பு சுப்ரீம் கோர்ட்டில் (உயர்நீதிமன்றம்) நியாய துரந்தரரா யிருந்தார். புலவர் உபதேசங்களைக் கேட்டு **சுந்தரப்பிள்ளை** என்பவரும் மதம் மாறாமல் சைவத்திலேயே நின்று தொண்டு செய்தார். இப்படி அக் காலம் செய்ய மிகத் துணிவு வேண்டும். இச் செயலால் புலவருக்குப் பாதிரிமார் பகையும், மதம் மாறிய கிறிஸ்துவர் பகையும் சூழ்ந்தன. சென்னை சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்ற விசுவநாத பிள்ளை ஆறுமுகனாரை மறுத்து எதிர்பேசி எழுதினார். புலவர் சரியான மறுப்பெழுதி சைவ சமயமே பெரிது, இனிது என்று விளக்கினார். பிள்ளை திருந்தி, சிதம்பரம் சென்று பிழை வருந்தி, சிவனைத் தூஷித்த நாவைப் பொன்னூசியால் சுட்டுக்கொண்டு தீவிரமான சைவரானார் ; புலவருக்குச் சீடரானார்.

சைவத்திற்கு எதிராக யார் பேசினாலும் புலவர் சரியானவிடை கூறி எதிரியின் வாயை அடக்குவார். பெரிய புராணத்தில் அவருக்குப் பெருங்காதல். நாயன்மார் வாழ்க்கையைப் பின்பற்றியே அவர் சிவத்தொண்டு பரப்பினார். யாராவது நாயன்மாரை இகழ்ந்தால் பொறுக்கமாட்டார். ஒருநாள் மூத்தண்ணா தியாகராசர் விளையாட்டிற்கு “பெரிய புராணம் எல்லாம் கட்டுக்கதை” என்றதைத் தம்பி கேட்டார். உடனே இவர் உள்ளத்தில் எரிபத்த நாயனார் புகுந்துவிட்டார். “எமது சிவத்தொண்டர்கதையைஇகழ்ந்தவரை வெட்டினாலென்ன?” என்று கத்தியைத் தூக்கிவிட்டார். அண்ணா “பக்” கென்று சிரித்து “ஆறுமுகம், விளையாட்டிற்குச் சொன்னேன்” என்று உள்ளே சென்றார். “விளையாட்டிற்கா ? என்ன குற்றம் செய்தீர் ?” என்று தம்பி மீண்டும் பாய்ந்தார். பக்கத்திலிருந்த பேர் அவரைப் பிடித்து நிறுத்திச் சமாதானம் செய்தனர். அப்படியிருந்தும் தம்பி அண்ணனுடன் பேச்சைவிட்டார். பிற்காலம் தியாகராசர் நோயாகி இறக்கும்போது, “தம்பீ,

வா ! நான் எதும் குற்றம் செய்திருந்தால் பொறுத்துக்கொள் ” என்றார். தம்பியும் அவர் நெற்றியில் திருநீறிட்டு, தாம் கொணர்ந்த கங்கை நீரை வாயில் விட்டுத் திருவாசகம் ஓதி, சிவநாமத்துடன் அவர் உயிர் பிரியக் கண்டார். மனவுறுதி என்றால் நாவலரே !

## 20. சொன்மாரி

அடுத்த பணி தொடங்குகிறது. மாணவருக்குப் பாடம் சொல்லுவதில் நமது புலவருக்கிணை அவரே ; அவர் இலக்கணம் சொல்வதுகூட இலக்கியமா யிருக்கும். மாசு மறு வற்ற எளிய இனிய தமிழில் அவர் பேசக் கேட்பதே இன்பம். பேச்சில் வீராவேசத்துடன், நகைச்சுவையும் ததும்பும். “ ஏ, ஆரை ” என்று அடிக்கடி சொல்வார். “எங்கள் சமயத்தைக் காக்காமல் வாளா யிருப்போமோ ? ஏ-ஆரை ஏமாற்றுகிறீர்; நாங்கள் விழித்திருக்கிறோம் ” என்பார். மாணவர் அறிவிற் பெருகிவருவது மகிழ்ச்சிதான். எனினும் சில மாணவருக்குப் போதிப்பதுடன் தன் கடன் நிற்கவில்லை என்பதைப் புலவர் உணர்ந்தார். சுற்றிலும் நாடு படும் பாட்டைக் கண்டு மனம் நைந்தார்.

31-12-1847; வெள்ளிக்கிழமை, சுவாதி நட்சத்திரம் ; அன்று தமிழர் கூட்டத்திற்கே நன்னாள். அன்று முதல் நமது புலவர் பெருமான், சைவசமயப் பிரசாரம் செய்யத் தொடங்கினார். சிவன் கோயில்களில் பிரசங்க மண்டபம் இருக்கவேண்டும்; அங்கே சமய தத்துவங்களையும் ஒழுக்கங்களையும் பற்றித் தக்கார் சொற்பொழிய வேண்டும்.அதனால் பொதுஜனங்களுக்கு நன்மையாகும் என்பது நாவலர் கருத்து. இக்கருத்து உள்ளூர் கந்தர் கோயிலில் நிறைவேறவில்லை. வண்ணார்பண்ணை வைத்திலிங்கச் செட்டியார் கட்டிய வைத்தீசுரங்கோயில் வசந்த மண்டபத்தில் நமது புலவர் பிரசங்கமாரி பொழியத் தொடங்கினார். பிறகு, வெள்ளிக்கிழமை தோறும் இரவில் அவர் பிரசங்கம் நடந்தது. நல்லூர் ஐயர் புதல்வர் கார்த்திகேசையரும் உதவியா யிருந்து சொற்பொழிவாற்றினார். சதாசிவப் பிள்ளையும் தில்லைநாதப் பிள்ளையும் பிரசங்கம் தொடர்ந்து நடக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வந்தார்கள்.



ஏராளமான சனங்கள் கேட்டுப் புதிய உணர்ச்சி பெற்றார்கள். புலவர் பரசமயக் கோளரியாகி இடிமுழக்கம் செய்தார். அதனால் கிறிஸ்துவர் பகையும், சுயநலப் போலிகள் பகையும் அவரைச் சூழ்ந்துகொண்டன. சிங்கம் எதற்கும் அஞ்சவில்லை. உள்ளூர் கந்தர்கோயிலின் ஊழல்களைப் பச்சையாகப் பேசினார், எழுதினார் ; கோயில் சீர்திருத்தத்திற்காக வெகுபாடு பட்டார். பாதிரிமாரின் மதமாற்றுத் தந்திரங்களைப் பலமாகக் கண்டித்தார். நம்மவர் உறக்கத்தை எழுப்பப் பலமான சூடு கொடுத்தார். சைவ சமயம், சைவத்தின் மேன்மை, சைவவொழுக்கம், சமய சின்னங்களின் அவசியம், கடவுள் வாழ்த்து, கடவுள் நம்பிக்கை, உருத்திராக்ஷ தாரணம், சிவ பக்தி, சிவ தீக்ஷை, சிவலிங்கோபாசனை, சிவ தருமம், அறஞ்செயல், நன்றியறிதல், பிச்சையிட்டுண்ணல், இகபர சுகம், கல்வி, பசுக்காத்தல், அறிவை வளர்த்தல், சன்மார்க்கம், பிரபஞ்ச மாயை, கொல்லா நெறி, புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை, வியபிசாரமின்மை, கோயில்புகல் முதலிய விஷயங்களைப் பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் அழகாகவும் பேசினார் புலவர். அவர் பேசிய விஷயங்கள் அவர் தொகுத்த பால பாடங்களிலும், சைவவினாவிடைகளிலும் உள்ளன. அவர் பிரசங்கம் ஜனங்களை எவ்வளவோ திருத்தியது. முதன்மையாக ஜனங்களுக்குப் போலிக் கிறிஸ்துவரின் ஊழல்களைக் காட்டியது; சைவத்தின் மேன்மையை உணர்த்தியது. பரசமயிகள்கூட அவர்பிரசங்கத்தை மறைவா யிருந்து கேட்டுச் சென்றனர். எங்கே? நேராகப் பார்ஸிவல் பாதிரியிடம். எதற்கு ? கோளேற்றவே. “ பாதிரியாரே, உம்மிடம் சம்பளத்திற்கு வேலை செய்கிறாரே, அந்த ஆறுமுகனார் செய்தி வரவரக் கெட்டுபோனது. இதுகாறும் இப்படிப் பேச்சை நாங்கள் கேட்டதில்லை. கிறிஸ்து சமயத்தை இவ்வளவு பலமாக யாரும் தாக்கியதில்லை. இவரை மிதமாக விட்டால் யாழ்ப்பாணம் சிவமயமாகும். பிறகு கிறிஸ்துவர்பாடு திண்டாட்டந்தான். இந்தப் பண்டிதர் நம்மை முன்னேற விடமாட்டார். நாம் இங்கே வந்த வேலை நடக்காது ” என்று பலமாகக் கூச்சலிட்டனர் பாதிரிமார். “ இவரை இனி ஆசிரியராக வைத்திருப்பது அபாயம் ; சீட்டுக் கொடுத்தனுப்பும் ” என்றனர் மற்றோர். பார்ஸிவல் நெடுநேரம்

சிந்தித்தார்; விசனித்தார்; சினங் கொண்டார்; புலவரைத் தனியே அழைத்தார்.

—ஐய், தாங்கள் வெள்ளி தோறும் சிவன்கோயிலில் சைவப்பிர சங்கம் பண்ணுகிறீராமே.

—ஆம். எங்கள் சமயத்தைப் பற்றிப் பேச எமக்கு உரிமை யுண்டு.

—இடையே நமது கிறிஸ்து சமயத்திற்கு மாறுகப் பேசுகிறீராமே.

—நியாயமாகவே பேசுகிறேன்.

—அஃதென்ன ?

—அஃதே எமது கடமை. எமது கடமையை நிறைவேற்றுவதில் தடையுண்டா ? சொல்லுங்கள் உடனே.

பாதிரி முகத்தில் ஈயாடவில்லை. கடுமையாகப் பேசினுல் உடனே வேலையைவிட்டுப் போய்விடுவார்; இப்படிப்பட்டவர் கிடைப்பதரிது என்பதைப் பார்ஸிவல் அறிவார். பார்ஸிவல் அத்துடன் அந்தப் பேச்சை நிறுத்தினுர். புகார் செய்த பாதிரிமாரிடம், " இப்புலவர் பேரறிஞர்; அஞ்சா நெஞ்சுரங்கொண்டவர்; தமது கடமை யுணர்ந்த திறமையாளர்; இவரைச் சம்பளங்கொடுத்தாவது நம்மிடம் வைத்திருப்பது நலம். இவர் காரியத்தில் நாம் தலையிடுதல் சரியன்று; நாம் நமது சமயக்கடனைச் செய்வதுபோல் அவர் தமது கடனைச் செய்கிருர்" என்று சமாதானம் சொன்னுர். எனினும் புகார் செய்தவர்களுக்குச் சமாதானம் ஆகவில்லை. புலவரை அச்சிலும் மேடையிலும் நேரிலும் எதிர்த்துத் தாக்கி வந்தனர். நம்மவருள்ளும் சைவநெறி தவறியவர்கள் இவரைக் கண்டபடி தூற்றினர். உலகே எதிர்த்தாலும் புலவர் தமது கடமையைச் செய்தே தீர்ப்பார்.

## 21. தியாகம் !

புலவர் உள்ளம் சைவப்பிரசாரத்திலேயே பதிந்து போனது; வீட்டாருக்கு இவ்வளவு பிடிக்கவில்லை; " ஆள் போக்கு ஒருமாதிரியா யிருக்கிறதே; ஒரு கால்கட்டுக் கட்டிக் குடும்பச் சக்கரத்தில் சிக்க வைத்தால், இவர் அடங்கிப்போவார்" என்று



நினைத்தனர். வாலிபக்காளை, நல்ல அறிவாளி, செயலாளி. இவருக்குப் பெண் கொடுக்கப் பலர் முன்வந்தனர். " நம் ஆறுமுகம் மணம் புரிந்து குழந்தை குட்டிகளுடன் வாழவேண்டும்" என்று உறவினர் பாசம் துடித்தது. தமையன்மார், "தம்பீ, நல்ல பெண் பார்த்திருக்கிறோம். நீ மணம் புரிந்துகொள்ளவேண்டும்" என்றனர்; மன்ருடினர். தமது குலகுருவான வேதக்குட்டிக் குருக்களைக் கொண்டு வற்புறுத்தச் சொன்னுர்கள். " **இந்த ஒரு பேச்சு மாத்திரம் என்னிடம் பேச வேண்டாம்**" என்று புலவர் குருக்களிடம் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். ஆறுமுகர் ஆயுள்முழுதும் முறையான பிரமசரியம் காத்தார்; கனவில்கூடப் பெண் நினைப்பில்லாமல், காமத்தையெல்லாம் சிவகாம மாக்கினுர். வயதிற்குரிய ஆசாபாசங்களை யெல்லாம் சைவநேசமாக்கினுர். ஒரு நொடிகூட மனம் புறஞ்செல்லாமல், உடல், உயிர், எல்லாம் தமிழுக்கும், தமிழருக்கும், சிவத்திற்கும், சைவத்திற்குமே மஹாத்தியாகம் செய்தார்.

நாளடைவில், பாதிரியிடம் சம்பளம் வாங்கிக்கொண்டுஅலுவல் பார்ப்பதே தம் கொள்கைக்கு முரண யிருந்தது. தாம் கிறிஸ்து சமயத்தையே எதிர்த்துக்கொண்டு, ஒரு கிறிஸ்துவரின் சம்பளத்தைப் பெறுவது அவருக்குச் சம்மத மில்லை. "உனது நாட்டில் அன்னியப் பாதிரிகள் வந்து தம் சமயத்திற்குச் செய்யும் பணியைப் பார்! உன்னவரையும் பார்; நீயும் தமிழருக்கும் சைவத்திற்கும் இத்தகைய பணி செய்; அதற்கே நீ பிறந்தாய் "என்று மனச்சாட்சி சுட்டிக் காட்டியது. பாதிரிமார் பள்ளிக்கூடத்தில் சைவப்பிள்ளைகள் படிக்க இடர்ப்பட்டனர். கல்வியே உயிர் நிலை. இதை நாவலர் உணர்ந்து மூன்று உறுதிகளைப் பூண்டார்:(1)தமிழர் சிவநெறி பயில வித்தியாசாலைகள் நாட்டுதல்; (2) ஓர்அச்சுப் பொறி வைத்து நல்ல நூல்களை அச்சிட்டு வழங்குதல்; (3) சைவ சமயப் பிரசாரகரைத் தயாரித்தல். கீலக வருஷம் ஆவணி மாதம் ஐந்தாந் தேதியிலேயே ஒரு வித்தியாலயம் ஸ்தாபித்தார்; முன்னே இவரிடம் பாடங்கேட்டவர்கள் இப்போது இந்த வித்தியாலயத்தில் ஆசிரியரா யிருந்து உதவினர். இவ் வித்தியாலயம் எழு மாதங்கள் வைத்தீசுரன் கோயிலுக்கு எதிரேயுள்ள

வீட்டில் நடந்தது ; மாணவருக்குச் சம்பளம் கிடையாது. இவரும் அதினின்று எவ்வித வருவாயையும் எதிர்பார்க்கவில்லை. ஆசிரியர்களுக்கு மட்டும் எப்படியோ சம்பளம் தந்தார்; பணக்காரரைக் கெஞ்சவில்லை ; சந்தாக் கேட்கவில்லை. பிடியரிசி தண்டினார் ; " தமிழுக்காக, சைவத்திற்காக அரிசி களையும்போது ஒரு பிடி போடுங்கள்" என்றார். அதை விற்றுப் பள்ளிக்கூடத்தைச் சில காலம் நடத்தினார் ; பிறகு, அது கட்டிவரவில்லை ; உபாத்தியாயர் சிலர் "சரியான வருவாயில்லை" யென்று நீங்கினர். கொள்கையறிந்த இரண்டு மூன்று சிவ நேசரே தங்கினர். எப்படியாவது தாமே தனித்தாவது வித்தியாசாலையை நடத்தத் தீர்மானித்தார் புலவர். பாதிரிக்குச் செலவிடும் நேரத்தையும் தமது மாணவருக்கே செலவிட உறுதிகொண்டார். 1848ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாதிரியிடம் சென்று " ஐயரே, நான் **என் சமயத்திற்கும் தாய்மொழிக்குமே** நாளெல்லாம் பாடுபட உறுதி பூண்டிருப்பதால், இனித் தங்களுக்குப் பாடம் சொல்ல இயலாமைக்கு வருந்துகிறேன் " என்று வேலையை நீத்தார். பர்ஸிவல் துரை அரை மனதுடன் விடைகொடுத்தார். புலவர் வீட்டிற்கு வந்தார். " விடுதலை" என்றார். இனி என் வேலை சிவகைங்கரியமே என மகிழ்ந்தார். உறவினர் இகழ்ந்தனர், வருந்தினர். அண்ணன்மார் " நீ என்ன புத்தியீனஞ் செய்துகொண்டாய் ; இந்தச் சம்பளம் இனி நீ எங்கே பெறுவாய் ? ஊரில் உனக்கென்ன மதிப்பிருக்கும்? " என்று கடிந்து கண்டித்தனர். "நான் உங்களிடம் வந்து பொருளுதவி செய்யும்படி கேளாதிருக்கக் கண்டுகொள்ளுங்கள்" என்று தம்பி அவர்கள் வாயை அடக்கினார். அவர்களுக்கு 'மனைவி, மக்கள், வீடு, வாசல், சொத்து, சுகம்' என்ற கவலை உண்டு ; தூய பிரமசாரியான புலவருக்கு என்ன கவலை? இருபத்தாறு வயதுக் காளை ; அன்றுமுதல் வீட்டைக்கூட மறந்து, தமது ஜீவன விரதமான சைவத்தொண்டிலேயே ஈடுபட்டார். பர்ஸிவல் பாதிரியும் மிஷினரி வேலையை விட்டு, சென்னை சென்று மாகாணக் கல்லூரியில் தமிழ்ப்புலமை நடாத்தினார். நாவலரை எங்கே கண்டாலும் அவர் " மம குரு:" என்று வணங்கி அன்பும் நன்றியும் செலுத்தினார். அவர் சென்றபிறகு கிறிஸ்துவர் எதிர்ப்பும் அதிகரித்தது;



புலவர் வீறும் மனவுறுதியும் அதனால் வளர்ந்தன. செல்வரைக் கெஞ்ச வில்லை ; வலியரை வணங்க வில்லை ; பரம்பொருளான சிவனை நம்பி, சைவசீலம் பூண்டு, தமது கடமையைச் செய்துவந்தார். புலவர்மணி இகழ்ச்சி புகழ்ச்சிகளைப் பாராட்டாமல், பகைவர் கிளர்ச்சியால் தளர்ச்சி யடையாமல் கருமமே கண்ணுயினார். பிராமணர், பிரபுக்கள், குருக்கள், உறவினர், நண்பர், பகைவர் யாராயிருந்தாலும் சரி; வேதாகம நெறி தப்பி, பக்தி யின்றி, அனுசாரமாக நடப்பவர்களை ஒளிவுமறைவின்றி நமது சைவப்பிரகாசர் கண்டித்தார். அவர்கள் திருந்த வேண்டும் என்ற கருணையால் இவர் சொல்லும் சொற்களை அறியாமல், எதிரிகள் பொருமை கொண்டு இவரை எள்ளிச்சினந்து பல இடையூறுகள் செய்தனர். எவையும் இவர் உறுதியைத் தளர்த்தவில்லை. சிவனருளை நம்பிய அடியார்க்கு எவனிடர் என்ன செய்யும் ? இனி அவர் எதிலும் கட்டுப்பட்டவ ரில்லை. "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம் " என்று அவர் உள்ளம் துள்ளியது. வித்தியாசாலை மாணவருக்குக் கருத்துடன் பாடஞ்சொன்னார். வெள்ளிக்கிழமைப் பிரசங்கங்களில் சைவர்களுக்கு நல்ல புத்திமதி கூறினார்.

## 22. சைவ சமயிகளே !

நாவலர் சைவசமயிகளுக்குச் சொன்ன உபதேசங்கள் " **யாழ்ப் பாணச் சமய நிலை** " என்ற நூலில் உள்ளன ; குறிப்பானவற்றை இங்கே காண்போம் ; அவரது வீரவுணர்வும் வித்தகத் தமிழும், அன்பார்வமும் ஒவ்வொரு வரியிலும் காணும். அவற்றிலேயே கோயில் சீர்திருத்தமும் காணலாம் :—

" **யாழ்ப்பாணத்திலுள்ள** சைவசமயிகளே ! உங்களிடத்துள்ள அன்பு மிகுதியினாலேயே நான் சொல்பவைகளைக் கேளுங்கள்: நீங்கள் சிவதீட்சை பெற்றும் என்னை ? விபூதி ருத்திராட்ச தாரணம், பஞ்சாட்சர செபம், சிவாலய தரிசனம் இவைகளை நியமமாகச் செய்தும் என்னை ? அந்தியேட்டி சிரார்த்த முதலியவைகளைச் செய்தும் என்னை ? வருஷந்தோறும் கந்தபுராணம் கேட்டும் என்னை ? சிதம்பராலய தருமத்தின் பொருட்டு அளவுகடந்த

ஆஸ்திகளைக் கொடுத்தும் என்னை ? வருஷத்திற்கு இரண்டு தரம் சிதம்பர யாத்திரை செய்தும் என்னை ? சேது முதலிய புண்ணிய தீர்த்தங்களிலே ஸ்நானஞ் செய்தும் என்னை ? ஊர்தோறுங் கோயில் கட்டுவித்துப் பூசை திருவிழாக்கள் செய்வித்தும் என்னை? சிவராத்திரி, கந்தசட்டி, கார்த்திகை, சுக்கிரவார முதலிய விரதங்களினுலும் அங்கப்பிரதக்ஷணத்தினுலும் உடம்பை வருத்தியும் என்னை? நீங்கள் உங்கள் சமயக்கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும் ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும், சிவபெருமானை வழிபடும் முறைமையையும், அதனுலே வரும் முத்தியின் இலக்கணங்களையும், கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகின்றீர்க ளில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கின்றீர்க ளில்லை. உங்கள் கோயில்களிலே சிவபக்தியை வளர்த்தற்கு ஏதுவாகிய வேதபாராயணம், தேவார திருவாசக பாராயணம், சைவசமயப் பிரசங்கம் முதலிய நற்கருமங்களைச் செய்விக்கின்றீர்க ளில்லை. காமம், கோபம், சண்டை, உயிர்க்கொலை முதலிய பெருந்தீமைகளை வளர்த்தற்கு ஏதுவாகிய பொதுப்பெண்களுடைய நடன சங்கீதம், வாண விளையாட்டு முதலிய துர்க்கருமங்களிலே உங்கள் பெரும்பொருளைப் பெருமகிழ்வுடன் செலவு செய்கின்றீர்கள். உங்கள் கோயிற் பந்தல்களிலே நிருவாணமாயும் காமவளர்ச்சிக்கு ஏதுவாயும் உள்ள சித்திரங்கள் எழுதப்பட்ட காகிதங்களை ஒட்டுவிக்கிறீர்கள். கோயிற் சுவர்களிலே அப்படிப்பட்ட சித்திரங்களை எழுதுவிக்கிறீர்கள். கேட்கத்தகாத சிற்றின்பப் பாட்டுகளைப் படிப்பிக்கின்றீர்கள். இது பற்றி விளையும் பெருங்கேடுகளையும், இது பற்றி அன்னிய தேசத்தாராலும் அன்னிய சமயத்தாராலும் உங்களுக்குக் கிடைக்கும் எல்லை கடந்த அவமதிப்பையும், இன்னும் நீங்கள் எட்டுணையேனுஞ் சிந்திக்கின்றீர்க ளில்லை. நீங்கள், பாதிரிமாரும் அவர்களைச் சார்ந்த கிறிஸ்துவர்களுஞ் செய்யும் பெருங்கொடுஞ் சிவதூஷணங்களை அஞ்சாது கேட்கின்றீர்கள். பாதிரிமார்கள் உங்களை வஞ்சிக்கும்படி உங்கள் வீடுகளுக்கு அனுப்புகிற பெண்களுடைய மையல்வலையில்



கொழும்பு தமிழ்ச் சங்
நூலகம்

நீங்கள் அகப்பட்டு, அவர்கள் செய்யுஞ் சிவதூஷணங்களைக் கேட்டு, அவர்களுக்கு உங்கள் பொருளை வாரி வாரி இறைக்கின்றீர்கள். உங்கள் கைப்பொருளையே இறுத்து, உங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதி அழித்துவிட்டுப்போய்ச் சிவதூஷண புத்தகங்களைப் படிக்கவும் சமயாசாரத்தையுஞ் சாதியாசாரத்தையும் இழக்கவும் பண்ணுகிறீர்கள். நீங்கள் இப்படிச் செய்வீர்களாயின், நீங்கள் செய்பவைகளென மேற்சொல்லப்பட்ட சிவபுண்ணியங்களினுல் யாதொரு பயனும் உண்டாகாதே !

சைவசமயிகளே ! கிறிஸ்து சமய குருமாராகிய பாதிரிமார்கள் தங்கள் பாஷையையும் அதற்கு மூலபாஷைகளையும் இலக்கண இலக்கிய கணித தருக்க பூகோள ககோளாதிகளையும் தங்கள் சமய நூல்களையும் படித்துத் தேர்ந்து பரிட்சையிற் சித்திபெற்று நெடுந்தூரத்தினின்றும் இங்கு வந்து, நம்முடைய தேச பாஷைகளையும் நீதிநூல்களையுஞ் சமய நூல்களையுஞ் சிறிதாயினும் படித்துப் பிரசங்கிக்கின்ருர்களே ! உங்கள் சமய குருமாருள்ளே சிலரொழிய, மற்றவர்கள் அந்தியேட்டிப் பட்டோலை தானும், இன்னுஞ் சொல்லின் அந்தியேட்டி யென்னும் பெயர்தானும், பிழையற எழுத அறியார்களே ! கெட்டி கெட்டி ! சிவாகமத்தில் ஒரு சுலோகமாயினுந் தேவார திருவாசகங்களில் ஒரு பாட்டாயினும் அறியாத, திருவள்ளுவரில் ஒரு குறளாயினும் அறியாத மனிதப் பதர்களுஞ் சைவ சமய குருமாராம் !

உங்கள் சைவ சமய குருமாருக்கு என்ன வேலை ? நீங்கள் வருந்திச் சம்பாதித்துக் கொடுக்கக் கொடுக்க, அவர்கள் எளிதில் வாங்கி உண்டுடுத்திக்கொண்டு வெட்கஞ் சிறிது மில்லாமல், மர்ப்பிள்ளை மாடுகள் போலத் திரிகின்ருர்களே! சைவசாத்திர முதலியவற்றைப் படித்தற்கு வேண்டிய நேரம் அவர்களுக்கு இருக்கின்றதே ; அப்படி யிருக்க, படியாமல் அவர்கள் வீண் பொழுது போக்குகின்ருர்களே. இனியாயினும் படிக்கும்பொருட்டு நீங்கள் தயைகூர்ந்து அவர்களுக்கு நல்ல புத்தி சொல்ல மாட்டீர்களா ? அவர்கள், தங்களுக்குப் படிக்கச் சக்தியில்லையானுல், படித்தவர்கள், பல சைவ சாத்திரப் பொருள்களைத் திரட்டிச் சிறுவரும் எளி

தில் அறியும்படி செய்கிற பிரசங்கங்களைக் கேட்கும் பொருட்டாயினும் நீங்கள் அவர்களுக்குப் புத்தி சொல்ல லாகாதா ?

சைவசமயிகளே ! உங்கள் கோயில்களிலே பொதுமகளிருடைய நடன சங்கீதம் வாண விளையாட்டு முதலியவைகளை ஒழித்துவிடுங்கள். நிருவாணமாயும் காமத்தை வளர்த்தற்கு எதுவாகிய—எதுவாயுமுள்ள-பிரதிமைகளையும் படங்களையும் அமைப்பியாதொழியுங்கள். கோயில்களிலே சைவப் பிரசங்கம், வேத பாராயணம், தேவார திருவாசக பாராயண முதலியவைகளைச் செய்வியுங்கள். உங்கள் குடும்பத்தோடு நியமமாகப் போய்ச் சைவப் பிரசங்கங்கள் கேளுங்கள். இலமா யுள்ள கோயில்களைப் புதுக்குவியுங்கள். ஒன்றுக்கொன்று சமீபத்தினதாகப் பல கோயில்களைக் கட்டுவியாதொழியுங்கள். நித்திய பூசைக்கு முதற் பொருள் சேருமுன், கோயில் கட்டுவிக்கத் தொடங்காதொழியுங்கள். நித்திய பூசைக்குப் பொருள் இல்லாத கோயில்களிலே இடம்ப நிமித்தந் திருவிழாவைத் தொடங்காது, நித்திய பூசையைக் கிரமமாக நடத்துவியுங்கள். சைவசமயத்துக்கு முழுதும் விரோதமான மதுபானம் மாமிச போசன முதலிய தீமைகள் தலைப்படா வண்ணம் விலக்குங்கள். நீங்கள் வியர்வை யொழுகப் பலவித முயற்சிகளினால் வருந்திச் சம்பாதித்த பொருளைக் கூத்து முதலிய வேடிக்கைகளிலும், பொய் வழக்குகளிலுஞ் செலவு செய்து, பழிபாவங்களைத் தேடிக்கொள்ளாது, இம்மை மறுமைகளுக்கு உபயோகமாகிய கல்வி விருத்தியிலே செலவு செய்து புகழ் புண்ணியங்களைத் தேடிக்கொள்ளுங்கள். கல்வியறி வொழுக்கங்களினாற் சிறப்புற்ற மேலோர்களையே உங்களுக்குக் குருமாராக ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கல்வியறிவில்லாதவர்களையும் நல்லொழுக்க மில்லாதவர்களையுங் குருமாரெனக் கொள்ளாது தள்ளிவிடுங்கள். உங்கள் குருமரபினருள்ளே கல்வியறிவில்லாதவர்களுக்கு அன்ன வஸ்திரங் கொடுக்க வேண்டாமென்று நாம் சொல்லவில்லை. அவர்களைத் திருநந்தனவனம் வைத்தல், புஷ்பமெடுத்துத் திருமாலை கட்டித் திருக்கோயிலுக்குக் கொடுத்தல், திருமெழுக்கிடுதல், திருவீதியிற் புல்லைச் செதுக்குதல் முதலிய திருத்தொண்டுகளைச்

38301



செய்யப் பண்ணி, அவர்களுக்கு அன்ன வஸ்திரங் கொடுங்கள். அவரவர் தகுதிக்கேற்ற வேலை கொடுத்து, அவரவரைப் போஷிப்பதே நீதி. பரமசற்குருவாகிய திருஞானசம்பந்த நாயனார் பதினாறுயிரந் திருக்கூட்டத்தோடு சிவாலயங்களெங்குந் தாளந் தட்டித் தேவாரமோதி யருளினமையைப் பெரியபுராணத்தால் அறிந்திருந்தும், தாங்கள் சுவாமி உற்சவங் கொண்டருளும் பொழுது தாளந்தட்டித் தேவாரமோதக் கூசுகின்ற பெரும்பாவிகளை, சைவ குருமாரெனக் கொண்டு வழிபடாமலும், காணிக்கை கொடாமலும் வெறுத்து ஓட்டிவிடுங்கள். ஆலயப் பிரதிட்டை முதலிய கிரியைகளைச் சிவாகமத்தில் வல்ல பெரியோர்கள் பலரை யிருத்திக் கொண்டு அவர்களோடு கலந்து ஆலோசித்து, மந்திரக் கிரியா பாவனைகள் வழுவா வண்ணம் நடத்துவியுங்கள்.

சைவசமயிகளே! பாதிரிமார்களும் அவர்களைச் சார்ந்த கிறிஸ்துவர்களுஞ் செய்யும் சிவதூஷணங்களைக் கேளாதொழியுங்கள். உங்கள் பிள்ளைகளை அவர்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதி யழித்து விட்டுப் போய்ச் சிவதூஷண புத்தகங்கள் படித்தற்கு அனுப்பாதொழியுங்கள். ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் தாபித்து உங்களுக்குள்ளே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களைக் கொண்டு அவைகளை நடத்துவியுங்கள். உங்கள் பிள்ளைகளை அப்பள்ளிக்கூடங்களிலேயே லௌகிக நூல்களையும் நீதி நூல்களையும் சைவசமய நூல்களையும் படிப்பியுங்கள். சாதாரணக் கல்வி விசாரணைத் தலைமைத் துரைக்கு விண்ணப்பம் எழுதிக் கவர்ண்மெண்டாரிடத்திலே பொருளுதவி பெற்று, லௌகிக நூற்கல்வியை விருத்தி செய்யுங்கள். அதற்குப் பாதிரிமார் இடையூறு செய்யின் நீங்களெல்லாந் திரண்டு கொழும்புக் கவர்ண்மெண்டாருக்கொரு விண்ணப்பம் எழுதிக்கொள்ளுங்கள். அதற்குக் கொழும்புக் கவர்ண்மெண்டார் பராமுகர்களா யிருப்பின், இங்கிலாந்துக் கவர்ண்மெண்டாருக்கு விண்ணப்பம் எழுதிக் கொள்ளுங்கள்.

சைவசமயிகளே ! இன்னும் ஒன்று சொல்லி முடிப்போம். தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ் விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்த

மூர்த்தி நாயனார் திருப்பதிகம் ஒன்றிருக்கிறது ; மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்குத்திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகம் ஒன்றுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகம் ஒன்றும் இருக்கின்றன. இத்திருக்கேதீச்சரம் இவ் வடமாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதிசமீபத்தில் இருக்கின்ற மா தோட்டத்தினுள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக்கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே ! நீங்கள் இந்த மகாஸ்தலத்தைச் சிறிதும் நினையாததென்னையோ! இவ் விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந் தொகைப் பொருள் சேர்ந்து விடும்! இதை நீங்கள் எல்லாருஞ் சேர்ந்து சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின், அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்."

## 23. நாவலர் சொல்லம்புகள்

நாவலர் நெஞ்சுரம் படைத்தவர் ; தயானந்தரைப் போலவே, அதே வேகத்துடன் இவர் புறச்சமயங்களைக் கண்டித்ததுடன், சைவசமயத்திற் படிந்த ஊழல்களையும் பலமாகக் கண்டித்தார். வேதாகம நெறிக்கு மாறான பழக்கவழக்கங்களை யெல்லாம் அவர் நகைச்சுவை ததும்பச் சீறிப்புடைத்தார். முதன்மையாகக் கோயிலிற் படிந்த குறைகளை அவர் பச்சைப்படியாகப் பேசினார், எழுதினார். நல்லூர் கந்தசாமி கோயிலைப்பற்றி அவர் எழுதிய உணர்ச்சிக் கட்டுரைகள் புகழ் பெற்றவை. ஆங்கில இலக்கியத்தில் வாரன் ஹேஸ்டிங்ஸைக் கண்டித்துப் பாராள் மன்றத்தில் **(Parliment)** பேசிய எட்மண்ட் பர்கின் **(Edmund Burke)** வீறுபெற்ற நடையே நாவலர் தமிழிற் காண்கிறது. ஆங்கிலத்தில் கண்டனம் **( Satire )** என்பதற்குத் தமிழில் ஓர் உதாரணம் வேண்டுமானால் கந்தசாமி கோயில் கட்டுரைகளைப் பார்க்கலாம். தாம் கண்ட ஊழல்களைப் பொருத்தமான நிகழ்ச்சிகளைக் கொண்டு அசைக்க முடியாத நியாயத்துடன், உண்மையினின்றும் பிறழாத கோவையுடனும் அவர் வர்ணிக்கும் பொழுது, நமது புலவர் சட்டத்



தொழில் புரிந்தால் எவ்வளவு செல்வாக்குப் பெற்றிருப்பார் என்று தோன்றுகிறது! கோயிலதிகாரிகளுக்கும், போலி வைதிகர்களுக்கும், கந்தமடப் பிரபுவிற்கும் அவர் கொடுக்கும் சொற்சவுக்கை வியக்காம லிருக்க முடியாது :

கந்தமடப் பிரபுவே, "சைவப்பிரகாசர் தமது சுற்றத்தார்களை முன்னர் திருத்தியன்றோ பின்னர் பரார்த்த காரியங்களிற்றலையிட வேண்டும்" என்றாய். சைவப்பிரகாசர், தமது சுற்றத்தாரிற் சிலர் தமது போதனைக்கு அமைந்து நடவாமையினாலே, தாம் பிறருக்குப் போதிக்கலாகாது என்பாயாயின், ஒரு வைத்தியர், தமது சுற்றத்தாருட் சிலர், தாங் கொடுக்கும் மருந்தையுண்டு, வியாதியைப் போக்கிக் கொள்ளாமையினாலேயே, தாம் பிறருக்கு வைத்தியஞ் செய்யலாகாது என்பாய் போலும் ! ஓர் உபாத்தியாயர் தமது சுற்றத்துப் பிள்ளைகள் சிலர் தமக்கமைந்து கல்வி கற்றுக்கொள்ளாமையினாலே, தாம் பிறப்பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கலாகாது என்பாய் போலும். ஒரு சமய போதகர், தமது சுற்றத்தாருட் சிலர் நிரீசுவர வாதிகளாய் இருத்தலினாலே, தாம் தமது சமயத்தைப் பிறருக்குப் போதிக்கலாகாது என்பாய் போலும் !"

* * *

**" கந்தமடப் பிரபுவே,**
**''வில்லேருழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்லே ருழவர் பகை.''**

* * *

" தேசாபிமானியே, சைவப்பிரகாசர் வேலாயுத தூஷணஞ் செய்ததாக எங்கே கண்டாய் ? அவர் பதிப்பித்த கந்தபுராணத்தின் இறுதியில், வேலும் மயிலுந் துணை என்பது நீ காணவில்லையோ ? சைவப்பிரகாசர், வேலாயுதம் கந்தசுவாமி கைப்படைக்கலம் ; அவரேவல் செய்யும்அடிமை என்பது பொய்யோ ? அந்த அடிமை கந்தனுக்குமா ? அடிமைக்குப் பக்கத்தில் வள்ளி தெய்வானையை வைத்து வணங்கலாமா ? வள்ளி தெய்வானையர் கந்தன் மனைவியரோ ? வேலின் மனைவியரோ? வேலை வணங்குங் கோயில் கந்தர் கோயிலாவது எப்படி ?"

"தேசாபிமானியே, இங்கிலீசு மலிந்த தற்காலத்திலே, இரண்டு பாலை மரக்குற்றி என்று பொருள்படுகின்ற " Two logs of iron wood " என்பதற்கு, இரண்டு இருப்பு மரப் பூட்டு என்று கீழ்க் கோர்ட்டிலே மொழிபெயர்த்து நகையாடப்பட்ட ஒருவர், தமது உத்தியோகத்தினின்றும் தள்ளப்பட்டாரோ ? மேற்கோர்ட்டிலே உயர்ந்த உத்தியோகம் பெற்றுச் செருக்கி நெளித்துத் திரிகிறாரே! இப்படிப் பட்ட மூடசிகாமணியினால் எத்தனை பேருடைய எத்தனை வழக்குகள் எவ்வளவு மோசம் போயிருக்குமோ ? இதை விசாரிப் பார் இல்லையே. அப்படியாகவும், தமிழ் விருத்தி கைம்மாறு கருதாது செய்யுஞ் சுவாதீனபதியாகிய சைவப்பிரகாசரைத் தள்ளு கின்றவர் யாரோ ? வைக்கின்றவர் யாரோ ? இலங்கையரே என் கறுவுகிறீர் ?"

* * *

" பெருமான் "என்பது குருவுக்குந், தலைவனுக்கும், மூத்தோனுக்கும் பெயர் என்பது நீ காணவில்லையோ ? சைவப்பிரகாசரை "பெருமான்" என்று எழுதிய ஆவரங்காற் றம்பிமேலே பாய்கிற நீ, " புலவலிர் உயர்ந்தொளிர் நலமலி பெருமான் " என்று அவரைப் பாடிய சோழதேசத்துப் புலவர்மேலே பாயாததேனோ?"

* * *

" தேசாபிமானியே, வியாதியினாலே பீடிக்கப்பட்டுச் சாவக்கிடந் தானொருவன் ; தன்னைக் கடவுளது திருக்கருணையை முன்னிட்டு மருந்து தந்து காத்த வைத்தியனுடைய கருணையைப் பாராட்டி, "முதலாவது கடவுளாலே ; இரண்டாவது இவ் வைத்தியனாலே வியாதி தீர்ந்துய்ந்தேன்" எனத் துதிப்பதும் அது கேட்டவர், அவன் செய்நன்றி யறிதலைப் பாராட்டுவதும், நீ கேட்டறியாயோ? சைவசமய குரவர் நால்வரது திருவருள் வழிபட்டு, அவருடைய மகிமையையுந் தேவார திருவாசகப் பொருளையும் உணர்த்தி நம்மவர் பரசமயப் படுகுழியில் வீழாதுய்வித்த, குரவரது கருணையைப் பாராட்டி, அவரை ஐந்தாங் குரவர் எனத் துதிப்பது சிவப் ரீதிகரமெனவும், மெய்யறிவுடையோரெல்லாரும் அவரது செய்



நன்றி யறிதலைப் பாராட்டுவா ரெனவுந் தெளிந்து கொள்ள மாட்டாத நினதறியாமைக்கு யாது செய்யலாம் !

* * *

குரு பூசைக் கிரமம் மகேசுர பூசைக் கிரமந்தான் நீ அறியாய். சிராத்தக் கிரமந்தானும் அறியாயோ ? அல்லது நீ சிராத்த சந் தேகியோ? வச்சிரகுலிசந் தொடுக்குமாறு உனக்குத் துணைநின்ற பார்ப்பானாயினும் உனக்குச் சிராத்தக் கிரமம் அறிவித்தானில்லை யோ ? எந்தக் கோயிலிற் கலியாணப்படியிலே குத்துவிளக்குகள் வந்திருக்கின்றன என்று பார்ப்பான் ; எந்த வீடுகளிலே சருகை யுருமால் புடவை முதலியன அகப்படும் என்று பார்ப்பான்; எவ ரிடத்திலே வாங்கிய கொப்புவாளியை அவர் மறந்து விடுவார் என்று பார்ப்பான் ; சிராத்தவிதியா பார்ப்பான்! செல்வப் பரிகாரி யார் ஏவல்வழி செல்லப் பார்ப்பான் ; சிவபிரானால் வழிசெல்லவா பார்ப்பான் ?

* * *

நீ என்ன சமயி ? சைவனா ? கிறிஸ்தவனா ? சைவனானால் சிவ தூஷணப் பத்திரிகைகளைப் பாராட்ட மாட்டாய். சிவ சித்தாந்தப் பண்டிதரை, சைவசமய போதகரை, சிவனடியாரைத் தூஷித்து எழுதத் துணியாய். கிறிஸ்துவனாயின் சைவசமயத்திலும் கந்த சாமி வேலாயுதத்திலும் பற்றுடையவன் போல நடித்துக் காட்டாய்.

* * *

" கந்தமடப் பிரபுவே, சைவப்பிரகாசர் பலராலும் பகைக்கப் பட்டார் என்று பத்திரிகை தோறுந் துள்ளுகிறாய். உன் கண்டனப் பத்திரிகை, சிவன் எல்லாரினும் மிகுந்த காம முடையவரென் றும் பேசுகிறது ; சைவதூஷகர்களான பாதிரிமார்களைப் பாராட்டு கிறது. உன் சம்பாஷணப் பத்திரிகை சிவலிங்கம் எனப்படுவது சிவனுடைய அழுகி விழுந்த மற்றப்படியான் என்று வாய்கூசாது இகழ்ந்து, கிறிஸ்து சமயமே மெய்ச்சமயம் என்று துதிக்கின்றது. சிவன் கோயிற் பணமும் கந்தசாமி கோயிற் பணமும் இப் பத்திரி

கைகளுக்குத்தானு உபயோகிக்கப்பட்டன ? சிவதூஷணம் செய்த நீதானு " மகாத்மி "?"

போதும் ; இந்தமாதிரி நம் புலவர், ஆட்களைப் பூதக்கண்ணுடி வைத்து உள்ளும் புறமும் பார்த்துச் சரியானபடி சொறசவுக்குத் தந்தார். குற்றத்தைக் கண்டிப்பதில் அவர் நக்கீரர் போல்வார் ; சிவநிந்தகரை அவர் சினப்பார்; ஆனுல் அவர் சினமும் ஒரு கரு ணேயே ; எதிரியைத் திருத்தி நல்வழிப்படுத்தவே அவர், குண முள்ள—சினமொழிகளைக் கையாண்டார். பகைவர்களைச் சிறிதும் அஞ்சாது, நடந்த உண்மையை நடந்தபடி சொல்லுந் துணிவில் நாவலருக்கு இணை யில்லை.

## 24. கந்தசாமி கோயில்

**ஆ**றுமுகப் புலவரின் சீறுமுகம் முதலில் கந்தசாமி கோயிலை நோக்கித் திரும்பியது. தான் பிறந்த நல்லூரில் புகழ் பெற்றது கந்தசாமி கோயில். அங்கே சிவாகமத்திற்கு விரோத மான பல காரியங்கள் நடப்பதைக் கண்ட நமது சைவப்பிரகாசர் மனங் கொதித்தது. அத்தகைய கோயிலில் அவர் நுழைய மறுத்துவிட்டார். சிறப்பாக அக்கோயிலையும் பொதுவாக நமது ஆலயங்களையும் பற்றி அவர் எழுதியிருக்கும் கண்டனங்களை எல் லாரும் படிக்கவேண்டும். சீர்திருத்த மென்றுல் கோயிலதிகாரி கள் புலி போலச் சீறினர். நாவலர் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில், பிரசங்கங்களூடு கந்தசாமி கோயில் ஊழல்களையும் அள்ளி வீசுவார்.

அக்காலம் கோயில் தர்மகர்த்தா **கந்தைய மாப்பாணர்** என்ப வர் ; அவர் படாடோபப் பேர்வழி ; கொழுத்த செல்வர் ; செல் வாக்குடையவர். சால்வை, சரிகை வேஷ்டி, வைரக்கடுக்கன், மூக் குக்கண்ணுடி துலங்க செல்ல வண்டியில் வருவார் பிரபு; நெற் றியில் திருநீறும் சந்தனப் பொட்டும் மிளிரும் ; வாய் வெற்றி லைக்காவி படிந்திருக்கும்; செல்வநகை குலுங்கும்; காலில் சோடு போட்டு, கையில் வெள்ளித்தடி பிடித்து அவர் கனஜோராக நடப் பார். அக்காலப் பணக்காரர், சுபகருமங்களுக்குத் தாசிகளை வரவ



ழைப்பது வழக்கம். தாசி வைத்திருப்பது அக்காலச் செல்வருக் குத் தனிப்பெருமையா யிருந்தது. கந்தைய மாப்பாணர் அந்த விஷயத்தில் அளவுகடந்த உற்சாகி. இரவையெல்லாம் வண்ணார் பண்ணை வைப்பாட்டி வீட்டில் இந்திரபோகமாகக் கழித்துவிட்டுக் காலையில் பிரபு பெட்டி வண்டியில் வருவார். அப்போது தான் நாவலர்பெருமான் தமது வீட்டுத் திண்ணையிலிருந்து பல்விளக் கிக்கொண்டிருப்பார். மாப்பாணரின் முகக்களையையும் பார்ப்பார். " மாப்பாணரே இன்னும் சபலமா ?" என்று பச்சையாகக் கேட்டு விபசாரத்தைக் கண்டிப்பார் ; மாப்பாணர் எதிர் பேச முடியாமல் " சரி; புத்தி " என்று கும்பிடு போட்டுச் செல்வார். மறுபடியும் கால் வழக்கம்போல் வண்ணார்பண்ணைக்கே இழுக்கும். இதனுல் கந்தசாமி கோயிலில் தாசிக்கூட்டம் வலுத்தது ; அதன் விளைவு விபரீதமானது. நாவலர் பலமாகக் கண்டித்தார். மாப்பாணருக்கு அவமானமா யிருந்தது.

ஒருநாள் நம் புலவரை நயமாக வெல்லலாம் என்று மாப்பா ணர் அணுகி, " தங்கள் சித்தப்படியே சீர்திருத்தம் செய்வோம். தாங்கள் ஒருமுறை வந்து அங்கே கந்த புராணம் படிக்க வேண் டும் " என்று வேண்டினுர். நாவலர் இணங்கி வந்து கந்தபுரா ணம், தெய்வயானை திருமணப் படலம் படித்தார். புராண விரி வுரையுடன் குமாரதாந்திர விதிகளையும் கோயில் சீர்திருத்தத்தை யும் பற்றிச் சரமாரியாகச் சொற்பொழிந்தார். கேட்டார் மனம் உணர்ச்சிபெற்றது. உடனே கோயிலைச் சீர்திருத்தியமைக்க உடன் பட்டனர் ; திருப்பணிக்காக ரூபா ஆறுயிரம் வசூலானது. நாவ லர் கருவூரிலிருந்து கருங்கல் வரவழைத்துக் கொடுத்தார். ஆனுல் சிலபோலிகள் புகுந்து காரியத்தைக் கெடுத்து விட்டனர். மீண்டும் தாசி லீலைகள் வலுத்தன. நாவலர், நிறுத்திய உயிர்ப் பலி மீண்டும் நடந்தது ; அவர் மனம் புண்ணுக வேண்டியே ஆட்டை வெட்டினர். முருகன் சிலை செய்து, நாட்டவேண்டும் என் றுர் நாவலர் ; பழையபடி வேலையே நட்டு வழிபட்டனர் கோயி லதிகாரிகள். அன்று முதல் நாவலர் கந்தசாமி கோயிலில் அடி யெடுத்து வைப்பதில்லை ; ஆனுல் அதன் ஊழல்கள் திருந்தப் பேசினுர், எழுதித் தள்ளினுர்.

நாவலர் எழுதிய கந்தசாமி கோயில் சீர்திருத்தக் கட்டுரைகளிற் சில நூலாக வந்துள்ளன. அவற்றுள் நல்லூர் கந்தசுவாமி கோயில், மித்யாவாத நிரசனம், கந்தமடப் பிரபுவுக்கு, தேசாபிமானிக்கு என்ற மூன்று கட்டுரைகள் முதன்மையானவை. நாவலரின் விறுவிறுப்பான சொல்லணியும், அனுபவப் பொருளும், எதிரியின் நெஞ்சை ஊடுருவிப் பாயும் உணர்ச்சி வேகமும், அவனைத் தலைகுனிய வைக்கும் நகைச்சுவையும் கந்தசாமி கோயில் கட்டுரைகளிற் காணும். சில பகுதிகளை இங்கே காண்போம்:

“ **யா**ழ்ப்பாணத்துச் சைவசமயிகளே ! இப் பத்திரிகையை நன்றாக வாசித்துப் பாருங்கள் ; உங்கள் யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்ததைக் கொண்டு ஒவ்வாததைத் தள்ளுங்கள்.

1. நீங்கள் கந்தபுராணத்தைப் புண்ணிய நூலாகப் போற்றுகிறீர்கள் ; வேதம் சிவாகமம் இரண்டும் முதனூல்கள் ; கந்தபுராணம் வழிநூல். கந்தனே சிவனுருச் செய்து வழிபட்டதாக இப் புராணம் சொல்லுகிறது.தேவர்கள் கந்தசாமியைக் குமார தாந்திராகமப்படி வழிபட்டனர். கந்தபூசை செய்பவர் சிவாகமத்தையும் குமார தந்திரத்தையும் போற்ற வேண்டுமே. நீங்கள் இரண்டிற்கும் மாறாகவே நடக்கிறீர்கள்.

2. ஒரு கோயிலுக்கு மூன்று இலிங்கங்கள் வேண்டும். 1.தூல லிங்கம், கோயில் தூபி ; 2. சூக்கும லிங்கம், மூல மூர்த்தி ; 3. பத்திர லிங்கம், பலிபீடம். இவையில்லாத கோயில் கோயிலாகாதே. கந்தசாமி கோயிலில் வேலையே வழிபடுகிறார்கள் ; அதற்கும் அட்டபந்தமில்லை. மூல மூர்த்தி யில்லாத கோயில் கோயிலாகாது ; மூல மூர்த்தி அசலமானது ; உற்சவ மூர்த்தி சலமூர்த்தி. பெயர் கந்தசாமி கோயில் ; இங்கிருக்கிற மூர்த்தி கந்தசுவாமியா? கந்தசுவாமிக்கு வடிவம் வேலாயுதமா ? அஃது அவர் படைக்கலம் ; அவர் ஏவல் செய்யும் அடிமை. தலைவனை விட்டு அடிமையை வழிபடலாமா ? வள்ளி—தெய்வானையர் முருகன் மனைவியர் ; அவர்களை வேலின் இருபுறத்திலும் வைத்து வழிபடலாமா ? நாயகன் மனைவியை, அவனுடைய அடியனுக்கு மனைவியாக நிறுத்தி வழிபடுவது அந் நாயகனுக்கு உவப்பாகுமா ?



சுப்பிரமணியப் பிரதிட்டையை வேலாயுதத்திற்கு வழங்கலாமா ? கர்ப்பக்கிருகத்திலுள்ள வேலாயுதத்தோடு இப்போதுமற்றுமொரு வெள்ளி வேலாயுதம் செய்ததென்னை? கந்தர் உருவைச் செய்து கொடுத்தும் தாபிக்க மறுத்ததென்னையோ? சண்டேசர் இல்லாத பூசை பூசையாமோ ? இங்கே சண்டேசுரர் பொருட்டும் ஒரு சிறு வேலாயுதமே தாபிக்கப் பட்டிருக்கிறது.

3. சமயதீக்ஷை பெற்றவர்களே, ஆலயப் பிரதிட்டை, பூசை, திருவிழாச் செய்ய அதிகாரிகள். சிவதீக்ஷையும் குகதீக்ஷையும்பெற்றவர்களே கந்தபூசை செய்யவேண்டும் ; அதற்கு மாறாகத் தீக்ஷை பெறாத பிராமணரையும் கரிக்கோடு போட்டு அனுமாரை வணங்கும் மாத்துவரையும் இங்கே பூசை செய்ய விடலாமா ? கேட்டால், “ ஆதி வழக்கப்படியே நடப்போம் ” என்கிறீர்கள். ஆதியில் இக்கோயில், பிராமணோத்தமரும் சிங்கை ஆரிய சக்கரவர்த்திக்கு முதன் மந்திரியுமா யிருந்த புவனேசுரவாகுவினாலே தாபிக்கப்பட்டது ; அக் கோயிலில் மூர்த்தி, பூசை, திருவிழா எல்லாம் சிவாகமப்படி சிவ—குக தீக்ஷை பெற்றவர் நடத்தினர். அந்தக் கோயிலைப் போர்த்துகீஸியர் இடித்துத் தள்ளினர். இப்போதுள்ள கோயில் சைவத்தை வெளிப்பட அனுட்டிக்கமுடியாத உலாந்தாக்காரர் காலத்தில், அவர் கச்சேரி சிறாப்பும், கல்வியறிவில்லாதவருமான இரகுநாத மாப்பணராலே மனம்போனபடி தாபிக்கப்பட்டது. முன் கோயிலுக்கும் இதற்கும் சம்பந்தமேயில்லை. இக்கோயில் வழக்கமே ஆதிவழக்கம்; அதன்படியே இக்கோயில் நடக்கவேண்டும். இங்கே புவனேசுரவாகுவின் பெயரை மட்டும் முதலிற் சொல்லிக்கொண்டு, எதிரிடையாக நடப்பது என் ? ஆகம விதியை அவமதிப்பது கடவுளையே அவமதிப்பதாகும்.

சிவ தீட்சை பெறாத அசைவப் பிராமணரும், பில்லிசூனியம் செய்வோரும், ஆடு கோழிகளைக் கொன்று பேயோட்டப் புகுவோரும், சங்கரசாதிப் பிள்ளைகளுக்குப் பூணூல் போட்டுப் பிரமகாயத்திரி உபதேசம் செய்துவிடுவோரு மாகிய இராமேசுரம் பிராமணரைக்கொண்டு கும்பபூசையும் அபிஷேகமும் செய்விப்பது தகுதி

யா ? ஒரு ருத்திராபிஷேகத்திற்குப் பன்னிரண்டு ரூபா கொடுக்கிறீர்கள் ; அந்தத் தொகையிற் பாதிதானுஞ் செலவழிக்கப்படவில்லை யென்று நீங்களே பேசிக்கொண்டு திரிகிறீர்கள் !

4. கோயிற் பிரசாதத்தை, முன்பு பரிசாரகப் பிராமணரிடத்திற் கொடுத்தனுப்பி வந்தார்கள் ; இப்பொழுது மதுமாமிச பட்சணஞ் செய்யும் கைக்கோளச் சிறுவர்களிடத்தே கொடுத்தனுப்புவதும், அச் சிறுவர்கள் கொண்டு போம்பொழுது, தெருவிலே சிறிது எடுத்து எச்சில் பண்ணிப் புசிப்பதும், சில பிரபுக்கள் வீட்டுவாயில் சேர்ந்த பொழுது மாத்திரம் பரிசாரகப் பிராமணர் வாங்கிக் கொண்டுபோய் உள்ளேகொடுப்பதும், எச்சிற்றும்பாளங்கள் பின்பு கோயில் மடப்பள்ளியுள்ளே சேர்க்கப்படுவதும் பலரும் அறிவார்கள். இந்தப் பிரசாதம் புசித்தவர்கள் "என்னை யொழிய யாழ்ப்பாணத்திலே சாதிமான் இருக்கிறனு ? நான் அவரிடத்திலே போசனஞ் செய்வேனு ? இவரிடத்திலே போசனஞ் செய்வேனு ?" என்று தனித்தனியே அகங்கரித்துப் பேசும் பேச்சு பறையருக்குஞ் சிரிப்பை விளைவிக்கின்றது !

5. இங்கே சுவாமிக்குச் சந்தனம் இழைப்பவர்கள், மது மாமிச பட்சணஞ் செய்பவர்களாய், ஸ்நானஞ் செய்யாதவர்களாய், ஒரு பொழுதுந் தோயாத அழுக்கு வேட்டி தரித்தவர்களாய் உள்ள சங்கர சாதியார்க ளன்றோ ?

6. இங்கே அருச்சனைக்கு எடுத்த வில்வம் ஒழிய ஒழிய, அருச்சனை செய்த நிர்மாலியத்தையே எடுத்தெடுத்து அருச்சனை பண்ணுவதையும், கர்ப்பூரம் அவித்தவித்து ஏற்றுவதையும் நீங்கள் காணவில்லையா ?

7. இங்கே பூசகர் சிலர் சலமோசனஞ் செய்துவிட்டுக் கைகால்களுங் கழுவாது உள்ளே போய்த் தீபாராதனை செய்கிறார் ; நைவேத்தியமில்லாமல் பலிபீடத்தில் தாமரைப்பூவைக்கவிழ்க்கிறார். அதைக் காகம் கௌவி வெட்க முறுகிறது ஒருவர், அபிஷேகத்திற்கு வைத்த பஞ்சாமிருதத்தையும் இளநீரையும் திரையைப் போட்டுவிட்டுச் சாப்பிடுகிறார் ; பாலைத் திருடிச் செல்லுகிறார் ; அல்லது அதில் வேலைத் தோய்த்தெடுக்கிறார்.



8. சுவாமி எழுந்தருளும் தேரின் உருளையிலே ஆடுவெட்டுவது வைரவருக்குப் பிரியம் என்று இக்கோயிலார் வெட்டுவிக்கிறார்கள். கொடுமை !

தரிசனத்திற்கு வந்த பிறர் மனைவியரோடும், தாசிகளோடும் கோயிலுக்குள்ளே வியபசாரஞ் செய்துவிட்டுச் சுவாமிக்குக் குடை பிடிப்பதும், வாகனக்கொம்பு பிடிப்பதும், தங்கள் தாசிகள் பிரசவித்த காலத்திலும் இராப்பகல் அங்கே கிடந்துவிட்டுக் கோயிலிற் புகுவதும், சுவாமிக்கு அபிஷேகத்தின் பொருட்டுக் கொண்டு வரும் பால் முதலியவைகளைத் தங்களுக்குந் தங்கள் தாசிகளுக்கும் உபயோகப்படுத்துவதும் பிறவுமாகிய பெருங்கொடும் பாவங்களிலே தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் கேடு விளையாதாம்! ஓகோ, ஆடுவெட்டாதொழிதலாகிய புண்ணியத்திலே தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் கேடுவிளையுமாம்! எத்தனையோ ஆயிரம் பேர்கள் ஏற்றிய பிரம்மாண்டப் புகைக் கப்பல்கள் பலிகொடாது சமுத்திரத்திலே நெடுந்தூரம் ஓடி இடையூறு ஒரு சிறிதும் அடையாது திரும்புகின்றனவாம். திருவாரூர், திருவிடைமருதூர் முதலிய தலங்களில் உள்ள மகாரதங்கள் பலிகொடாதொழியவும் ஓடி நிலைக்கு வருகின்றனவாம். இவ்வியாழ்ப்பாணத்திலுள்ள இவ்வொரு சிறுதேர் பலிகொடாதொழியின் ஓடி நிலைக்கு வராதாம் !

9. கோயிலிலே பூசை திருவிழா முதலியவைகளில் வேதமும் தேவார முதலிய அருட்பாவுந் தவறாமல் ஓதப்படல்வேண்டும் என்பது சாத்திர சம்மதம். இக்கோயிலார் மதுமாமிச பட்சணம், வியபிசாரம் முதலிய தீயொழுக்கங்களை உடையவர்களாய், நித்தியாசௌசிகளாய் உள்ள பொதுப்பெண்களைத் தேவ தாசிகள் என நியோகித்துக் கோயிற்றிரவியங்களை அவர்களுக்கு உபயோகித்துக் காமம்,கோபம், பொறாமை, மதுபானம், கலகம், சண்டை, வழக்கு, மேகவியாதி, சந்ததி நாசம், வறுமை முதலிய தீமைகளையே வளர்க்கிறார்கள்.

10. இங்கே ஆடவர்கள் கூட்டத்தினுள்ளே பெண்களும், பெண்கள் கூட்டத்தினுள்ளே ஆடவர்களும் புகுந்து நெருங்குதலும்

சந்நிதானத்திலே ஆடவர்கள் எல்லாருக்கும் முந்திப் பெண்கள் வந்து நிற்றலும், இக்கோயிலாளர்கள் அப்பெண்களை விலக்கும் போது அவர்கள் மார்பில் கைபோட்டுத் தள்ளியும், கேட்கத் தகாத மிக இழிவாகிய துர்வார்த்தைகளைப் பேசியும் விலக்குதலும், இவைகளெல்லாவற்றையும் நேரே கண்டும் கேட்டும் அறிந்த ஆடவர்களுந் தங்கள் வீட்டுப் பெண்டிர்களை இக் கோயிலுக்கு அனுப்புதலும் பெருங்கேடு, பெருங்கேடு ! பெண்கள் கோயிலுக்கு இன்ன பிரகாரம் இன்ன சமயத்திலே போதல் வேண்டும் என்னும் நியமம் இல்லையாயின் யாது நடக்கும் ?

**11.** கோயில் தருமத்திற்காகப் பணந்தண்டி ஒன்றும் செய்யவில்லை ! இக்கோயிலதிகாரிகள் பண்டு தொட்டு இன்று வரையும் இங்கே காவடிக்காரர்க ளிடத்தில் வாங்கிய பணம் எங்கே ? மாவிளக்கிடுவோர்களிடத்தில் வாங்கிய பணம் எங்கே ? திருப்பணிக்கென்று வாங்கிய பணம் எங்கே ? உற்சவத்திற்கென்று வாங்கியதில் மிச்சப் பணம் எங்கே ? அபிஷேகப் பணங்கள் எங்கே ? இக்கோயிலதிகாரிகள் தாங்களாகக் கோயிலுக்கு நிலம் ஏதாவது வாங்கியிருக்கிறார்களா ? திருவாபரணம், திருப்பணி ஏதாவது செய்திருக்கிறார்களா ? அர்ச்சகரின் அர்ச்சனைப் பணத்தைக்கூட அபகரிக்கிறார்களே. கோயிற் பணத்தொகை முழுதும் கோயிலதிகாரிகள் சம்பளமாய் விடுகிறது. கோயிலுக்கென்று ஊரிலே பனைமரங்கள் தறிப்பித்துத் தாம்—தம்முடைய தாசிவீட்டு வேலைக்குச் சேர்ப்பிக்கிறாராம் ! இக்கோயில் யாருடையது ? இக்கோயிலதிகாரிகளுடையதா ? சனங்களுடையதா ? இக்கோயில், சைவ சமயிகள் எனப்படுவோர்கள் எல்லாருக்கும் உரிய பொதுத்தானமாகும். இதைக் கோயிலதிகாரி உங்களுடைய பேடிமையினாலே தமக்கே உரிய வர்த்தகசாலை யாக்கிக்கொண்டார். தேவபக்தி வளர வேண்டிய சுத்த ஸ்தானத்தை இக்கோயிலதிகாரி அசுத்தமான காம சாலையும் போர்க்களமும் ஆக்கிவிட்டார்.

**12.** பாதிரிமார்கள் தங்கள் " நற்கொடை " என்னும் பத்திரிகையிலே "கந்தசுவாமி கோயிற்றிருவிழா" எனப் பெயர்கொண்ட ஏழாஞ் சஞ்சிகையிலே, " சண்டை, சலஞ்சாதித்தல், தாசி, சதுர், சங்கீதம், பரஸ்திரீகூட்டம், வாத்திய முழக்கம், வாணவிளையாட்டு வேடிக்கைகள் யாவுந் திருவிழாவில் உண்டு ; அவை கந்தருக்கும் காமுகர்க்கும் வாய்ப்பு " என்று பேசுகிறார்கள். இக் கோயிலுக்குப் போகிறவர்களுள்ளே பெரும்பான்மையோர்கள், காளாஞ்சி யுபசாரம் பெற விரும்பியும், பொதுப்பெண்களையும், அழகினையுடைய பிறர் மனைவியரையும் பார்த்து மோகிக்க விரும்பியும், சிநேகிதர்களோடு கூடி, வெற்றிலை பாக்குத் தின்று புகையிலைச் சுருட்டுப் பிடித்துக் கஞ்சா லேகியம் உட்கொண்டு, சிற்றின்ப வார்த்தைகள் பேசிக் களிக்க விரும்பியும், தங்கள் கற்பைப் பாதுகாக்க விரும்பாது, ஆடவர்கள் கூட்டத்தை நெருங்கி உள்ளே நுழைந்து, தங்கள் தங்கள் ஆடையாபரணங்களைக் காட்டவிரும்பியும் போகிறார்கள். ஆடவர்களுள்ளும் பெண்களுள்ளும் சிலர் புண்ணியத்தை விரும்பியே கோயிலுக்குப் போனவிடத்தும் குளிக்கப் போய்ச் சேறுபூசிக்கொள்பவர்கள் போல் பாவங்களையே சம்பாதித்துக்கொண்டு திரும்புகிறார்கள் ஐயையோ !



**13.** கந்தசாமிக் கோயிலதிகாரிகளே, வசந்த மண்டபத்தின் எதிரே பரத்தையர் நடன சங்கீதங்களுக்கு ஐந்தாறு நாழிகை நேரம் மிக்க உவப்போடு கொடுக்கும் நீங்கள், ஓதுவார்கள், சாரங்கி வாசிக்கவும் தேவாரம் ஓதவும் தொடங்கியவுடனேதானே பொறாமைகொண்ட பரத்தையர் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு இடர் விளைத்தீர்கள் !

**14.** நீங்கள் ஸ்ரீமுக வருஷம் தேர்த்திருவிழாவிற்கு ஆடுவெட்டுவதில்லை யென்று நமக்கு உறுதிமொழி சொல்லி அவ்வருஷத்தில் ஆட்டுக்கொலையை நீக்கிவிட்டீர்கள். நாம் இருபத்து நான்கு நாளும் நியமமெனக்கொண்டு தொடங்குவித்த தேவார பாராயணத்திலே பொறாமை கொண்ட உங்கள் தாசிகள், " நாங்கள் பணஞ் செலவிட்டு நெடுங்காலம் பிரயாசைப் பட்டுக் கற்ற நடன சங்கீதங்களைக் கோயிலல்லாமல் வேறெங்கே காட்டுவோம்? நாங்கள் பெரும் பணத்தொகை கொடுத்து வாங்கிய ஆடையாபரணங்களைக் கோயிலல்லாமல் வேறெங்கே காட்டுவோம் ? இனி எப்படி ஆடவர்களை மோகித்துப் பிடித்துப் பணம் பறிப்போம் ?" என்று உங்க

ளெதிரே செய்த முறையீட்டினாலே மயங்கி இனி ஆடு வெட்டி
னால் நாம் கோயிலுக்கு வரோம் எனவும், நாம் வரா தொழிந்
தால் தேவார பாராயணம் நடவாது எனவும் ஆலோசித்துக்
கொண்டு, தேவார பாராயணம் நடக்காவண்ணஞ் செய்து, தாசி
களைப் பிரீதிப்படுத்தி விட்டீர்களே !

15. யாழ்ப்பாணத்துச் சைவசமயிகளே ! நாம் இப் பத்திரிகை
எழுதியது குற்றம் என்று சிலர் பேசுகிறார்கள். அவர்கள் இப் பத்
திரிகையிலே கண்டிக்கப்பட்ட செய்கைகள் இல்லையென்று சாதித்
துப் பிறகன்றோ நம் மீது குற்ற மேற்ற வேண்டும் ! இனி இப்பத்
திரிகை வெளியிட்ட பின், நம் மேல் தொடுக்கப்படும் தூஷணைக்
கூட்டங்களினாலே அங்கே அவர்கள் காலம் பெரிதும் கொள்ளை
கொள்ளப்படும். அதனாலே நமக்கு விளையுங் கேடு ஒரு சிறிதும்
இல்லை.

இங்ஙனம்,
உங்கள் நல்வாழ்வை யதார்த்தமாகவே விரும்பி
எதிர்பார்க்கும்,

—சைவப்பிரகாசர்
வண்ணார் பண்ணை

யரூசலெம் கோயில் பாரகர் அழி செயல்களைக் கண்டித்த
ஏசுநாதரும் இப்படியே பேசினார்.

இந்தச் சாட்டையடி வீணாகவில்லை. கோயிலதிகாரிகளை நாவலர்
சும்மா விடவில்லை. வண்ணார்பண்ணையில் கூட்டங் கூட்டி வழக்குந்
தொடுத்தார் ; நாவலர் செய்த கிளர்ச்சி அவருக்குப் பிறகு பலித்
தது. கோயிலதிகாரிகள் அவ்வப்போது பொதுமக்களுக்குக் கணக்
குக் காட்ட வேண்டும் என்று கோர்ட்டில் உத்தரவானது. இன்று
கந்தசாமி கோயில் திருப்பணி நடந்து, புதுமை பெற்று விளங்கு
கிறது.

# 25. பணியின் பயன்

இவ்வாறு நமது புலவர்மணி நாக்கால் செய்த சமயத்
தொண்டு நல்ல பலனையே அதிகமாகத் தந்தது; அவரைக் கடுமை
யாகத் தாக்கிய பகைவர் கூட அதை ஒப்புவர்.



நாவலர் பிரசங்கத்தைக் கூட்டங்கூட்டமாக மக்கள்வந்து கேட்ட
னர்; அறியாமை யொழிந்தனர் ; சைவநெறி யறிந்தனர். பலர்,
கள் ஊன் உண்பதை ஒழித்துத் தூய சைவவுண வுண்டனர்.
நாத்திகரும் சிவபக்தி செய்தனர். கந்தபுராணம், பெரிய புரா
ணங்களை ஓதினர். விபூதி ருத்ராக்ஷம் தரித்தனர். சிவாலய தரிச
னஞ் செய்தனர். கோயில் சந்நிதியில் மனமடங்கி வணங்கினர் ;
பதிப்பாடல்களைப் பாடினர் ; விரதங் காத்தனர் ; பஞ்சாட்சரி ஜபித்
தனர். வாய்திறந்து சிவநாமம் சொல்லக் கூசியவர்கள் தேவாரத்
துடன் சிவகோஷம் செய்தனர். சிவாகமங்களை மூடக் கொள்கை
யென்று ஏசியவர்கள், பெரிய புராணத்தையும் கந்த புராணத்
தையும் படித்தும் கேட்டும் பரவச மானார்கள். இந்துக்களை அஞ்
ஞானிகள் என்ற பாதிரிமாருக்குத் தங்கள் மெஞ்ஞானத்தை
விளக்கினார்கள். ஆங்கில மோகத்தாலும், பர சமய மயக்காலும்
சைவதூஷணம் செய்து நடத்தை கெட்ட நாத்திகரும் சிவநிந்
தையைவிட்டு ஆஸ்திக ரானார்கள். உருத் தொழுகையை, காட்டு
மிராண்டி வேலை என்று தூற்றியோர், கோயில் மூர்த்தியை
விழுந்து விழுந்து கும்பிட்டனர். சட்டை தலைப்பாகையோடு
முன்பு மதிப்பாக ஒரு கும்பிடு போட்டு “ சிவனே என் காரியம்
பலித்தால் உன்னை நம்புவேன் ” என்றவர், இப்போதெல்லாம்
“ எல்லாம் சிவன் செயல் ” என்பதை நம்பி, மேல்வேட்டியை
இடுப்பில் கட்டிக்கொண்டு, பயபக்தியுடன் சிவனை வணங்கினர்.
பிழைப்பிற்குக் கற்ற ஆங்கிலப் படிப்பில் பிடிப்புண்டு நமதருள்
நூல்களை அலட்சியம் செய்தவர்களும் நாவலர் விரிவுரை, சொற்
பொழிவுகளை வணக்கமுடன் வந்து கேட்டனர். “ உடலே உறுதி,
கண்டதே காட்சி ” என்ற சாருவாக சிரோன்மணிகளும் உடலின்
நிலையாமையை உணர்ந்து சீவனுள்ளபோதே சிவ்நேசச்செல்வந்
தேடினர். இவ்வாறு சமயச் சீர்திருத்தங்கள் நடந்தன.

நாவலர் வாக்கைக் கேட்டவர் வாழ்வே புதுமை பெற்றுப் புனித
மானது. கருமிகள் தருமவான்க ளானார்கள்; காமிகள் சிவகாமிக
ளானார்கள் ; தாசி லோலர் விபசாரத்தை விட்டொழித்தனர்.
பெண் பித்தர் ஒரு மனைவியுடன் இல்லறமாகிய நல்லறம் பூண்

டொழுகினர். துன்மார்க்கிகள் சன்மார்க்கிக ளானார்கள். பொய்யர் மெய்யரானார். பசுக்களைத் துன்புறுத்தியவர்கள் அன்புடன் பரிந்து பசுக்களைப் பேணினர். காலத்தை வீணாக்கியவர்கள் இப்போது கல்வி வளர்ச்சியிற் செலவிட்டனர். நாவலர் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து சிலர் முறையாகத் தமிழும் சைவமுங் கற்கத் தொடங்கினர்.

சைவப்பிரகாசர் எங்கே யிருந்தாலும் வெள்ளிக்கிழமைப் பிரசங்கம் தவறியதில்லை. உயர்ந்த பீடத்தில் அவரை அமர்த்தி மரியாதை செய்து, அன்பர் பிரசங்கம் கேட்டு வந்தனர். இவர் கையால் திருநீறு வாங்கி இட்டுப் பலர் புனித ரானார்கள். இவரால் பலர் ஐந்தெழுத்தின் பெருமையை அறிந்து ஓதினர். இவ்வளவு அரிய பெரிய காரியங்களைத் தூண்டிய சொற்கொண்டலான இப் பெரியார் புகழ் இலங்கையைத் தாண்டி வட தேசங்களிற் பரவியது வியப்பன்று. இவரை வரவேற்று மரியாதை செய்ய நமது மன்னரும், மடாதிபதிகளும், புலவரும் ஆவலாக எதிர்பார்த்திருந்தனர். சென்ற விடமெல்லாம் அவருக்குத் திருக்கோயில்களில் முதல் மரியாதை கிடைத்தது.

## 26. பயணம்

**மேடை**, அச்சு இரண்டைக் கொண்டேதான் பாதிரிமார் தமது மதத்திற்கு உத்வேக மளித்தனர். நமது சைவப்பிரகாசருக்குச் சென்றவிடங்க ளெல்லாம் மேடைதான். பாதிரியாரைப் போல் அச்சகம் வைத்துப் பதிநூல்களையும், கருவி நூல்களையும், காலத்திற்கேற்ற சாத்திரங்களையும், பாடநூல்களையும் திருத்தமாக அச்சிட்டுதவினால், காலநிலைக்கேற்ற துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டால், தமிழர் பயன்பெறுவார்கள். அதற்கு ஓர் அச்சுப்பொறி வேண்டும் என்று நினைத்தெழுந்தார் சைவப்பிரகாசர். நன்மாணாக்கரிடம் பள்ளிக்கூடத்தை ஒப்பிவித்தார். அன்பர் சதாசிவப் பிள்ளையை உடனழைத்துக்கொண்டு, சௌமிய வருஷம் ஆடி மாதம் (1849, ஜூலை) சென்னைக்குப் பயணமானார். அக் காலம் வேதாரண்யம் வழியே செல்வதுண்டு. நாவலர் வேதாரண்யத்



தில் அடிவைத்ததும் “வருக, வருக! திருநெறிச் சைவந் தழைக்க வந்த பெருஞ்சொற் புலவர் வருக” என்று போற்றி, கோயிலதிகாரிகளும் சிவநேசர்களும் வரவேற்றுக் கட்டியம், விருது, மேளதாளத்துடன் கோயிலுக்கு அழைத்துச்சென்று மரியாதை செய்தனர். தேவார திருவாசகங்கள் இனிமையாக முழங்கின. திருமறைக்காடருக்குச் சிறப்பாக அபிஷேக நிவேதனங்கள் நடந்தன. சனங்கள் நாவலர் வாக்கைப் பருக ஆவலானார்கள். சைவப்பிரகாசர் சிவாகமத்தின் சிறப்பைப் பற்றி ஓர் அரிய சொற்பொழிவாற்றினார். மறுநாள் நமது புலவர் அங்கிருந்து பயணமாகித் திருவாவடுதுறைக்குச் சென்றார்.

## 27. நாவலர் பட்டம்

**அ**க்காலமே தமிழ்நாடு புதியவிழிப்படைந்தது ; தமிழின் மறுமலர்ச்சி அப்போதே தொடங்கியது. அரிய பெரிய புலவர் மணிகள் தமிழ்நாடெங்கும் எழுந்து விளங்கினர். சிவகங்கை, இராமனாதபுரம், ஊற்றுமலை, எட்டயபுரம் முதலிய சமஸ்தானத் தலைவர்கள் பெரும் புலவரா யிருந்து, புலவர்களை ஆதரித்தனர். திருச்சி, தஞ்சை ஜில்லாச் செல்வர், தமிழ்ப் புலவர்களைப் போற்றினர். தமிழிசையும் கவிதையும் அக்காலம் உச்சநிலையிலிருந்தன. மஹாவைத்திநாத ஐயர், சின்ன வைத்தா, பெரிய வைத்தா, கவிகுஞ்சரி, கோபால கிருஷ்ண பாரதியார், கனம் கிருஷ்ணையர், தியாகராஜ ஐயர் போன்ற இசைப்புலவர் அக்காலத்தை அலங்கரித்தனர். சிலேடைப்புலி பிச்சுவையர், தெய்வசிகாமணிப் புலவர், வேதநாயகம் பிள்ளை முதலிய புலவர்மணிகள் அக்காலம் விளங்கினர். அனைவரினும் தலைசிறந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அக்காலத்திலேதான் செந்தமிழ்க் கவிமாரி பொழிந்தார். இராமனாதபுரத்தில் முத்துராமலிங்க சேதுபதியும், பாஸ்கர சேதுபதியும், பொன்னுசாமித் தேவரும் தமிழ் வளர்த்தனர்.

அக்காலம் திருவாவடுதுறை ஆதீனம் சைவவொளியும் தமிழ் மணமும் பரப்பியது. புலவர்களுக்கெல்லாம் அது தாயகம் போன்றிருந்தது. அங்கே விளங்கிய பண்டார சந்நிதிகள் அம்பலவாண தேசிகர். அவர் பெரும்புலவர்; முத்தமிழ் வித்தகர்; அவருக்குக்

கீழே சின்னப்பட்டத்தில் இருந்த மேலரகம் சுப்பிரமணிய தேசிகர் செந்தமிழ்க் கற்பகம் ; புலவர் பெருமை யுணர்ந்து மரியாதை செய்யும் புண்ணியர். மீனாட்சிசுந்தரம் பிள்ளையை மகாவித்து வான் பட்டமீந்து திருவாவடுதுறையில் வைத்து ஆதரிக்கச் செய்த வள்ளல் இவரே.

ஆறுமுகப் புலவர் திருவாவடுதுறைக்கு வந்ததும், தேசிகர் முக மலர்ந்து நல்வரவு கூறிப் பண்டாரசந்நிதிகளுக்கு அறிமுகப்படுத் தினர். சந்நிதானம் கண்டதுமே, புலவரின் அறிவாற்றல்களை அறிந்துகொண்டது. புலவரும் முறைப்படி வணங்கித் திருமுன் னர் அமர்ந்தார். இலக்கண இலக்கியங்களிலும், சித்தாந்த சாத் திரங்களிலும் பல கேள்விகள் கேட்டு நமது புலவரின் அறிவாழத் தைச் சந்நிதானம் அறிந்துகொண்டதும், சைவசித்தாந்தத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்யும்படி வேண்டிக் கொண்டது. சுபநாளில் ஆதீன வித்வான்களும், பிற புலவர்களும், அன்பர்களும் கூடிய சபையில் நம் புலவர்மணி தேவாரத்தையும் மெய்கண்ட நூல் களையுங் கொண்டு "பதி,பசு, பாச விளக்கம்" என்ற அரிய சொற் பொழிவாற்றினர். அவரது தூய செந்தமிழும், எளிய இனிய நடையும், பொருட்செறிவும், உள்ளக் கிளர்ச்சியும், சிவ பக்தியும், ஆகமஞானமும், சைவாவேசமுங் கண்ட சபை அப்படியே வியந்து சித்திரப்பாவையானது. இப்படிப்பட்ட பிரசங்கத்தை முன் கேட்ட தில்லை யென்று ஒவ்வோர் உள்ளமும் பேசிற்று. நமச்சிவாய தேசிகரும், சிவஞான முனிவரும், கச்சியப்பரும் விள்ங்கிய அந்த ஆதீனம் இச்சொற்பொழிவால் பெருமைபெற்றது. அம்பலவாண தேசிகரும் சுப்பிரமணிய தேசிகரும் வித்துவான்களுடன் கலந்து கொண்டு நம் புலவர்மணியின் நாவன்மையைப் போற்றி "**நாவலர்**" என்று பொருத்த மானதொரு பட்ட மளித்தனர். ஆதீன முறைப்படியே பல சிறப்புக்களுடன் பட்டம் சூட்டப் பெற்றது. அன்றுமுதல் ஆறுமுகம் பிள்ளை "**ஆறுமுக நாவலர்**" ஆனர். தமிழகத்தில் எத்தனையோ நாவலர் இருந்தும், நாவலர் எனில் ஆறுமுக நாவலரையே குறிப்பதாயிற்று. உள்ளது ஒரே இரவி ; ஒரே மதி; அதே போல ஒரே நாவலரே ! ஆறுமுக நாவலர் திரு



வாவடுதுறையில் சிலநாட்கள் இருந்து அங்கிருந்த பழைய ஏடுகளை ஆராய்ந்து கொண்டு சென்னைக்குச் சென்றார்.

சென்னையில் சூடாமணி நிகண்டு, சௌந்தரிய லஹரி ஆகிய இரண்டு நூல்களையும் திருத்தம் செய்தெழுதி அச்சிட்டார். தமக் கென ஓர் அச்சுப் பொறியை வாங்கிக் கப்பலில் ஏற்றிப் புறப்பட் டார். வழியில் திருவண்ணாமலை ஆதீனம் சின்னப்பட்டம் அருணா சல தேசிகர் நாவலரை வரவேற்று அளவளாவினர். தம்முடன் இருக்கும்படி வேண்டினர். நாவலர் சிலநாட்கள் தங்கி அங்கே சைவசமயப் பிரசங்கம் செய்தார். "இன்னும் இன்னும்" என்று ஜனங்கள் அவர் வாக்கமுதைப் பருகினர். நாவலர், தாம் ஊரில் செய்ய நிற்கும் பணிகளை நினைத்து, தேசிகரிடம் உத்தரவுபெற்றுப் புறப்பட்டார். இனி நேரே வண்ணார் பண்ணைதான்.

## 28. சைவப்பிரகாச வித்தியாசாலை

நமது நாட்டின் பெருங் குறை கல்வி யில்லாமை; அதிலும் அக் காலம் முறையான பள்ளிக்கூடங்க ளின்றி நமது நாட்டுச் செல்வர் மடமையிருளில் தவித்தனர். அங்குமிங்கும் பாதிரிமார் பள்ளிக்கூடம் வைத்துச் சமயப் பிரசாரமும் செய்தனர். அவர் களைப் போல, சமயவுணர்ச்சி புகட்டும் சைவப் பள்ளிக்கூடங்கள் கண்டு அறிவை நிறைவாக, எளிதாக, இனிமாக வழங்க நாவ லர் உள்ளந் துடித்தது. தாம் முன்பே, எளிய முறையில் நடத்தி வந்த வகுப்பைப் பெரிய பள்ளிக்கூட மாக்கினர் நாவலர். யாழ்ப் பாணம் வந்ததுமே (சௌமிய வருஷம் ஐப்பசி மாதம்) வண் ணார்பண்ணையி லுள்ள ஒரு நிலத்தின்பால் நாவலர் நோக்கம் சென்றது. அதற்கு உடையவரான ஆறுமுகச் செட்டியார், நாவலர் கருத்தறிந்து "இந்நிலம் தங்களுக்கே" என்று **தருமசாசன** மாகத் தந்தார். நாவலர் நன்றியுடன் ஏற்று, சிவபூசையுடன் கால்நாட்டி, அதில் பள்ளிக்கூடம் எழுப்பினர். சேனாதிராயர் வீட்டா ரும் இன்னும் சில நண்பரும் கட்டிடத்திற்கு வேண்டிய மரம், ஓலை, ஓடு முதலிய சாமான்களை உதவினர். ஓராண்டில் கட்டிட வேலை முடிந்துவிட்டது. சாதாரண வருஷம் தை மாதம் (1850

ஜனவரி) நாவலர் தமது சைவப்பிரகாச வித்தியாசாலையை நாட்டினர். அவ்வித்தியாலயத்தின் இராசிச் சக்கரம் அடியிற் காண்க.

| | | | |
|---|---|---|---|
| கேது சந் | | | |
| சனி | இராசி | | புத குரு |
| | | | சூரி சு-செ |
| | லக் | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | சூரி | சனி |
| | அம்சம் | | சுக் கேது |
| ராகு புதன் | | | |
| லக் ச-கு | | செவ் | |



நல்ல வேளையிலே வித்தியாலயம் தொடங்கியது ; இன்றும் அது நல்ல வேலை செய்துவருகிறது. நாவலர் பள்ளிக்கூடம் என்றால் எல்லாருக்குந் தெரியும். சென்னையிலிருந்து கொண்டுவந்த அச்சகம் வித்தியானுபாலனயந்திரசாலையாகி அங்கே வேலை செய்தது. வைத்தீசுரன் கோயிலுக்குத் தெற்கே ஒரு மடம் உண்டு. அதிலே தான் அச்சகம் நடந்தது. நாவலர் பணக்கார ரல்லர் ; பணத்திற் காகவும் வாழ்ந்தவ ரல்லர் ; தனக்கெனச் சேர்த்தவரு மல்லர் ; இறுதி மட்டும் அவரை வறுமை சோதித்தது. அவருக்குத் தக்க செல்வர் கைகொடுத்திருந்தால், இன்னும் பெரிய காரியங்களைச் சாதித்திருப்பார். அவரைப் பகைத்துத் தூற்றி நகைத்தவர் பலர்.

நாவலர் தமது சைவப்பிரகாச வித்தியாசாலையை வெகுகஷ்டப் பட்டே நடத்தினர் ; ஆனல் சிவனருளால் அவ்வப்போது துணை கிடைத்தது. தமது மாணவரான சதாசிவப் பிள்ளைமுதலியோரை உபாத்தியாய ராக்கித் தாமும் சொல்லித் தந்ததால், ஆசிரியர் செலவு சிறிது எளிதானது. மாணவரிடம் ஒன்று மெதிர்பாராமல், கல்வியை இனமாக அளித்த முதல் புண்ணிய புருஷர் நமது நாவலரே. மாணவருக்குப் புத்தகங்கள்கூட அவரே அளித்தார். பள்ளிக்கூடச் செலவிற்கு என்று அவர் முதலில் பிடியரிசி தண்டினர். பிறகு ஒரு வர்த்தகசாலையை வாங்கி நடத்தி அதில் வரும் லாபத்தால் பள்ளிக்கூடம் நடத்த முயன்றார் ; ஆனல் கையில் பணமில்லை ; யாரைக் கேட்பது ? சுந்தரருக்குப் பொன்னளித்த சிவபெருமானைத் தவிர வேறு யாரையும் கேட்கமாட்டார் நாவலர். அன்று பூசையிலிருக்கையில், நாவலர் "எந்தையே சிவபெருமானே, உனது திருத்தொண்டு பரவி உன் புகழ் விளங்கவே இக்கைங்கரியம் தொடங்கினேன். எனக்குப் பெரிய சிந்தனைகளைத் தந்து, அவற்றை நிறைவேற்ற வழிசெய்யாதிருப்பது நன்றோ ? உன்னைத் தவிர வேறு யார் எனக்கு உறுதுணை ? என் குறை தீர்க்க வேண்டும்" என்று கண்ணீர் விட்டு உருகினர்; அச் சமயம் அவர் உள்ளிருந்து ஒரு விருத்தம் புறப்பட்டது. அதில் அவர் பட்ட இடர்கள் உணர்ச்சி ததும்ப விளங்கும்.

மணிகொண்ட கடல்புடைகொள் இந்நாட்டில் உன் சமய
வர்த்தனமி லாமை நோக்கி,
மகிமைபெறு நின்புகழ் விளக்குவான் கருதி, இம்
மைப்பொருட் பேறெ ழித்தே,

கனிகொண்ட வித்தியா சாலைதா பித்திவ்வூர்க்
கயவர்செயும் இடர்கள் கண்டும்,
கல்லூரி யதைநடாத் தப்பொருட் டுணைசெயக்
கருதுவோ ரின்மை கண்டும்,

அணிகொண்ட சாலைய தொழிப்பினஃதுனே யிகழும்
அந்நிய மதத்தர் சாலை
யாமென நினைந்தெனெஞ் சற்பகற் றுயருறல்
அறிந்து மொரு சிறிதும் அருளாத்

திணிகொண்ட நெஞ்சவினி நின்முன்யான் உயிர்விடுதல்
திண்ணநீ யறியாததோ !
சிறியேன தன்பிலர்ச் சனைகொள்அழ கியதிருச்
சிற்றம்பலத் தெந்தையே !

உயிரைக்கூட விட்டுவிடுவேன் என்று பாடும்படியான நிலைமை வந்ததென்றால் நாவலர் எவ்வளவு வருந்தியிருக்க வேண்டும் ! அடியார் முறையை அரன் கேட்டான் போலும். அன்றே நானூறு ரூபா வந்தது—கொழும்பு வள்ளலான இ. கன்னித்தம்பி முதலியார் அனுப்பியது. அதுவே நாவலர் பணிக்கு முதல் ; அதைக் கொண்டே அவர் வர்த்தகசாலையை வாங்கினார். அதில் வந்த லாபத்தால் வித்தியாசாலையையும் அச்சுக்கூடத்தையும் நடத்தினார். தமிழுல கெங்குமே சைவப்பிரகாச வித்தியாசாலைகள் நாட்டிச் சைவவொளி பரப்ப நாவலர் விரும்பினார். அவர் நாட்டம் முதலிற் சிதம்பரத்தைக் குறி வைத்தது ; அங்கே அவர் செய்த கல்விப் பணியைக் காணுமுன் அதற்கு அடிப்படையாக அவர் செய்த நூற்பணியைக் காண்போம்.

# 29. வித்யானுபாலன யந்திரசாலை

தற்கால நாகரிகத்தின் விசை அச்சுப்பொறியில் இருக்கிறது. அதுதான் உலகில் எண்ணங்களைப் பரப்புகிறது ; மாந்தர் மனத்தை இயக்கி உருவாக்குகிறது. மானிப்பாயில் பாதிரிகள் அச்சகம் வைத்து, உதய தாரகை என்னும் கிறிஸ்துவப் பத்திரிகை, துண்டுப் பிரசுரங்கள், நூல்கள் எல்லாம் வெளியிட்டனர். சைவத்திற்கும் அத்தகைய தொண்டு பரவவே நாவலர் வண்ணார் பண்ணையில் **வித்யானுபாலன அச்சகம்** நாட்டித் தமது கடமையைத் தொடங்கினார். அக்காலம் மின்சாரம் பரவ வில்லை ; நாவலரின் ஒப்பற்ற ஆர்வமும் ஊக்கமுமே மின்சார வேகத்தில் சிவசிந்தனைகளை அச்சகத்தினால் பரப்பின. டாக்டர் சாமிநாதையர் பழைய ஓலைகளைத் தேடிச்சென்று சங்கத் தமிழுக்கு உயிரளித்தார் ; நாவலர் செய்த காரியம் அரிய பெரிய தொண்டாகும். அவர் பழைய இலக்கண இலக்கியங்களை ஏட்டுப்பிரதிகளாற் சோதித்துச்செப்பனிட்டார்; குறள், நன்னூல், தொல்காப்பியம் நிகண்டு முதலிய கருவிநூல்களை அவரே நமக்குத் தந்தார். அதனினும் அவர் நாட்டிற்கு உயிரான சைவ நூல்களை நன்றாகச் செப்பனிட்டு அழகாக அச்சிட்டளித்தார். இவ்வழியில் அவருக்கிணை அவரே. படிக்கப் புத்தகமில்லாமல் தமிழர் அக்காலம் ஏடு தேடிப் பட்டபாடு சொல்லமுடியாது ; “ இந்தாருங்கள் ; படியுங்கள் ” என்று உலகறிவையும் பதியறிவையும் அள்ளியள்ளி அருவிபோலப் பொழிந்தவர் ஆறுமுக நாவலர். கல்வி தொடங்கும் சிறுவர் முதல், பெரும் புலவர் வரையில், எல்லாருக்கும் பயனாகும் நூல்களை அவர் எழுதி இலக்கிய உலகிலேயே முதன்மை பெற்றார். அரிச்சுவடி எண்சுவடி முதல், தொல்காப்பியம் பெரிய புராணம் வரையில், நாவலர் நமக்குத் தந்திருக்கிறார். நூல் வெளியீட்டில் அவருக்கிருந்த அளவற்ற ஆர்வத்தையும் கவனத்தையும் நேரே கண்டவர் ஒருவர் இவ்வாறு சொல்லக் கேட்டிருக்கிறேன்: நாவலர் பெருமான் பகலெல்லாம் ஏடுங் கையுமா யிருந்தார் ; எப்போதும் ஏட்டுப் பிரதிகளைச் சுத்தமாக எழுதி எழுதிக் குவித்துக் கொண்டிருந்தார். அவருக்குக் கைலாச பிள்ளை, சதாசிவ பிள்ளை போன்ற சிலர்

பிரதி செய்ய உதவுவதுண்டு. ஒவ்வொரு பிரதியையும் நாவலர் ஒன்றுக்கு ஐந்து தடவை பார்த்து, ஒரு புள்ளிகூடப் பிசகாமல் திருத்தியே அச்சிற்கனுப்புவார். அவர் அச்சகத்தில் ஒரு கண்ணும் பள்ளிக்கூடத்தில் ஒரு கண்ணுமா யிருந்தார். அச்சுக் கோப்பாளரைப் பின்னாலிருந்தே கவனிப்பார்; அவர்கள் வல்லினத்திற்கு மெல்லினம் கோத்தால் உடனே கண்டுபிடிப்பார். "தம்பீ, சிறிது இலக்கணம் தெரிந்துகொள் ; இஃது இன்னபடி யிருக்க வேண்டும்" என்று சொல்லித்தருவார். அவன் மறுபடி அந்தப்பிழையைச் செய்யமாட்டான். நாவலர் தாமே முன்னே வந்து அச்சுக்கூடத்தைத் திறந்து, சுத்தம் செய்யச் சொல்லுவார். மூலைமுடுக்குகளிலும் ஓர் அழுக்கோ காகிதக் குப்பையோ மைத்துணியோ கிடந்தால் அவற்றைக் குப்பைக்கூடையிற் போடுவார். வேலையாட்களைச் சிவ சிந்தனையிலிருந்து ஐந்தெழுத்தோதித் திருநீறிட்டுக்கொண்டு வேலை தொடங்கச் செய்வார். நூலைத் தொடங்கும்போது பிள்ளையார்சுழி போட்டு, கணபதி துணை, பரமபதி துணை, சிவமயம், திருச்சிற்றம்பலம் ஆகிய கடவுள் வணக்கத்தைப் போட்டே தொடங்கச் செய்வார். பகலில் நூல்களைச் செப்பனிட்டு எழுதித் தருவார் ; இரவில் அச்சுத்தாட்களைத் திருத்துவார். எல்லாத் தாட்களையும் திருத்தி மறுநாள் கோக்க வேண்டியதை ஒழுங்காக வைத்துக் கடமை தீர்ந்த பிறகுதான் அவர் தலை சாய்ப்பார். வேலை அதிகமானால் நல்லூரை மறந்துவிடுவார்; அச்சகத்திலேயே வேலை செய்வார். அச்சகம் இருந்த மடத்திலேயே அவர் பெரும்பாலும் தங்கினார். அச்சுத்தாளில் ஒரு பிழை யிருப்பதாகக் கனவு கண்டாலும் திடுக்கிட்டெழுந்து அப்பிழையைத் திருத்துவார். தாம் எழுதும் ஒவ்வொரு மொழியும் சுருதி யுக்தி அனுபவங்களுக்குப் பொருத்தமா என்பதைக் கூர்ந்து கவனித்தார். பழைய நூல் ஆதார மில்லாமல் ஒரு வரிகூடச் சேர்க்கத் துணியமாட்டார். உதாரணம் சொல்லுகிறேன். ஒருசமயம் அச்சில் ஒரு சந்தேகம் வந்தது. பார்க்க வேண்டிய நூல் நல்லூரி லிருந்தது ; நாவலர் அன்றிரவே நல்லூர் சென்று நூலைப் பார்த்து ஐயந்தீர்ந்து திரும்பினாராம். இவருக்கு ரோஜா மலரில் வெகு பிரியம். ரோஜா, **ஜபா** என்ற பெயரால் நமது நாட்டில் வழங்கி



யது. நாவலர் தினம் அம்மலரைச் சிவனுக்கு அருச்சித்தார் ; எனினும் பூஜை யிலக்கணத்தில், புட்ப விதியில் காணாமையால் தமது இரண்டாம் பாலபாடத்தில் உள்ள பூசைமலர்களில் ரோஜாவின் பெயரை நீக்கிவிட்டார். ஒருமுறை போசன விதியை அவர் சொல்ல, அவரது தமையனார் புதல்வரான த. கைலாசம் பிள்ளை எழுதி வந்தார். அப்போது நாவலர் "பரிகா முத்திரையைச் செய்து" என்றார் ; இது பரிகார முத்திரையா யிருக்கலாமோ ? என்று மறுத்தார் பிள்ளை. "ஹா அப்படியா" என்று பதறிப்போய் நாவலர் சைவசமயநெறி உரையை உடனே பார்வையிட்டு, அதில் **பரிகாரமுத்திரை** என்றே யிருந்தது கண்டபின்பே ஆறுதலடைந்தார். அக்காலத்தில் கற்றவர்கூட வழக்கமான சிலபிழைகள் விடுவதுண்டு. உதாரணம் :

| பிழை | திருத்தம் |
|---|---|
| **கொத்தமல்லி** | **கொத்துமல்லி** |
| **அருணம்** | **அரிணம்** |
| **கற்பூரம்** | **கர்ப்பூரம்** |
| **குங்கிலியம்** | **குங்குலியம்** |
| **கத்திரி** | **கத்தரி** |
| **துடை** | **தொடை** |
| **உத்தராயனம்** | **உத்தராயணம்** |
| **தொண்டமண்டலம்** | **தொண்டைமண்டலம்** |
| **சுழிமுனை** | **சுழுமுனை** |
| **சொற்பனம்** | **சொப்பனம்** |
| **ஞாதுரு** | **ஞாதிரு** |
| **கேழ்க்க** | **கேட்க** |
| **சரிதை** | **சரியை** |
| **பிராரத்துவம்** | **பிராரத்தம்** |
| **நூற்கேட்டல்** | **நூல் கேட்டல்** |
| **அத்தமானம்** | **அத்தமனம்** |
| **வெதிப்பு** | **வெதுப்பு** |

இந்தமாதிரிப் பிழைகளை நாவலர் பலமாகக் கண்டித்தார். அவர் நூல்களில் இலக்கணப் பொருத்தம் சரியா யிருக்கும். படிப்பதற்கு எளிதாக, புள்ளிகள் கணக்கா யிருக்கும்; விளங்கிக்கொள்ள எளிதாகப் பதங்கள் தெளிவாகப் பிரிந்திருக்கும். அவர் வதவதவென்று பாடபேதங்களைப் போட்டுப் படிப்பவரை மயங்கவைக்க மாட்டார். சரியான பாடத்தைச் சரியான ஆதாரத்துடன் அறிந்து உறுதியாக ஒன்றைச் சொல்வார்; அதுவே பொருத்தமா யிருக்கும். பெரியார் சொல்லின் ஆதாரமில்லாமல் அவர் ஒரு வரிகூட எழுதமாட்டார். நாவலர் பதிப்பே திருத்தப் பதிப்பு என்பதைப் புலவர் அறிவர். நாவலர் ஒன்றை அச்சிட்டாரென்றால், அதைவிட நன்றாக வேறொருவர் அச்சிட முடியாது; அதிற் பிறர் கை வைக்க இடமிராது. உதாரணமாக, சென்னை வீராசாமிச் செட்டியார் மாணவர் இராசகோபால பிள்ளை வில்லிபுத்தூரார் பாரதத்தை, கண்டபடி திருத்தி அச்சிட்டு வந்தார். தாமோதரம் பிள்ளை மூலம் அறிந்த நாவலர், பாரதத்தைத் தாமே திருத்தமாக அச்சிட்டார்; அப் பதிப்பையே புலவர் ஒப்பினர். ஆதீனங்களும், திருமடங்களும், தமிழ் வேந்தரும் நமது நாவலரை வரவேற்றுப் பழைய சுவடிகளைப் பார்வையிட்டுச் சுத்தமாகப் பதிப்பிக்கச் செய்தனர். நாவலர் நூல் என்றாலே அறிவாளர் ஆவலாகப் படிப்பர்.

நாவலர் வண்ணார்பண்ணை அச்சகத்திற் சில நூல்களை வெளியிட்டார்; வேலை பெருகிவிட்டது; சில நூல்களைச் சென்னையில் அச்சிட்டார்; அப்படியும் வேலை பெருகியது; சிறிய அச்சகம் போதவில்லை. கிறிஸ்துமதக் கண்டன நூல்களைச் சரமாரியாக வெளியிட்டதால் இவர் அச்சகத்தையே அழித்துவிட வேண்டுமென்று சிலர் பலமாகக் கிளர்ச்சி செய்தனர். பலிக்க வில்லை. பிறகு சைவத்தையும் நாவலரையும் மேடையினும் அச்சினும் தாக்கினர். தம்மவரும் ஆதரிக்கவில்லை; தம்மவர் அநீதிகளையும் நாவலர் துண்டுப் பிரசுரங்களாற் கண்டித்தார். இடர்கள் மலிந்தன. நாவலர் சென்னைக்குப் புறப்பட்டார். அங்கே சில நண்பர் துணை செய்தனர்; பெரிய அச்சகம் எழுந்தது. அதுவே



இப்போது சென்னைப்பட்டணத்தி லுள்ள வித்தியானு பாலன யந்திரசாலை. இவ்வாறு அச்சகம் வைத்து நாவலர் தமிழுலகிற்குத் தந்த நூல்களை மொத்தமாகக் காணுங்கள். பிறகு சில நூல்களின் சிறப்பைக் காணலாம்.

## 30. நாவலர் பதிப்பு

நாவலர் தமது இருபத்தொன்பதாம் வயது முதல் நூல்கள் வெளியிடத் தொடங்கி, இருபத்தாறுண்டுகள் தமிழுலகிற்கு இலக்கியப் பணி செய்தார். அவர் நூல்கள் முதலில் வண்ணார் பண்ணையி னின்றும் பிறகு சென்னையினின்றும் வெளிவந்தன.

### நாவலர் நூல்கள்

யாழ்ப்பாணம் வெளியீடுகள் :

சூடாமணி நிகண்டுரை, சௌந்தரிய லகரி யுரை, முதற் பால பாடம், இரண்டாம் பால பாடம், நான்காம் பால பாடம், பெரிய புராண வசனம், நன்னூல் விருத்தி யுரை, திருமுருகாற்றுப்படை யுரை, திருச்செந்திநீரோட்டக யமக வந்தாதி உரை, சிவாலய தரிசன விதி, சைவ தூஷண பரிகாரம், சுப்பிர போதம்.

சென்னை வெளியீடுகள் :

சேது புராணம், பிரயோக விவேக உரை, தருக்க சங்கிரகம், உபமான சங்கிரகம், இரத்தினச் சுருக்கம், இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, கந்தபுராணம், பதினொராந் திருமுறை, நால்வர் நான்மணி மாலை, கோயிற் புராண வுரை, சைவ சமய நெறி யுரை, தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையருரை, குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, ஏரெழுபது, திருக்கை வழக்கம், புட்ப விதி, மறைசை யந்தாதி, கோயிற் புராண மூலம், திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி, சிதம்பர மும்மணிக்

கோவை, உபநிடத வுரை, பட்டினத்துப் பிள்ளையார் பாடல், அருணகிரிநாதர் வகுப்பு, சைவ வினு விடை முதற் புத்தகம், மருதூ ரந்தாதி யுரை, திருச்செந்தூர் அகவல், விநாயக கவசம், சிவ கவசம், சக்தி கவசம், திருவள்ளுவர் பரிமே லழகர் உரை, திருச்சிற்றம்பலக் கோவை யுரை, இலக்கணச் சுருக்கம், சைவ வினு விடை இரண்டாம் புத்தகம், சிதம்பர மான்மியம், கந்த புராண வசனம் (அசுர காண்டம் வரையில்), அனுட்டான விதி முதற் புத்தகம், மேற்படி இரண்டாம் புத்தகம், குரு வாக்கியம், சிவஞான போதச் சிற்றுரை, யாழ்ப்பாணச் சமய நிலை, இலக்கண வினு விடை 2-ம் புத்தகம், இலங்கைப் பூமி சாத்திரம், நன்னூற் காண்டிகையுரை, பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம்.

அச்சிற் பதிப்பிக்கும் பொருட்டு எழுதி முடிந்தவைகள் :

சிவராத்திரி புராணம், அநுட்டான விதி மூன்றும் புத்தகம், சிவ பூசா விதி, சிரார்த்த விதி, போசன விதி, நன்னூல் விருத்தி யுரை இரண்டாம் பாகம், நைடத வுரை, குரு சிஷ்ய கிரமம், பூசைக்கிடம் பண்ணும் விதி, தருப்பண விதி.

இந்நூல்களை, மாதகல் ஸ்ரீ சு. ஏரம்ப ஐயர் தம் பெயரால் அச்சிடுவித்தனர்.

எழுதத் தொடங்கியவைகள்

தேவாரம், அகராதி (தமிழ்), அகராதி (இங்கிலீஷ்—தமிழ்), தருக்க பரிபாஷை, இரகு வம்சம், உபதேச காண்டம், இலக்கண வினுவிடை முதற் புத்தகம், சமஸ்கிருத வியாகரண சாரம்.

## 31. நாவலர் பால பாடம்

இன்று மாணவரே நாளை மகாஜனம். ஒவ்வொரு நாடும் மாண வரைப் பயிற்றுவதிற் கண்ணுங் கருத்துமா யிருக்கிறது ; அவர்களுக் கேற்ற பாடபுத்தகங்களைத் தயாரிப்பதில் அதிகமான கவனம் செலுத்துகிறது. ஏனெனில், சிறுவர் மனதையும் வாழ் வையும் பண்படுத்துவது பாட புத்தகம்.



தமிழருக்கு நல்ல பாட புத்தகங்களைத் தந்தவருள் நாவலர், தாமோதரம் பிள்ளை, நமச்சிவாய முதலியார், அனவரதவிநாயகம் பிள்ளை ஆகிய நால்வரைக் குறிக்கலாம். இவருள் தலைசிறந்தவர் நாவலரே. அவரே முதன்முதல் சிறுவருக்குப் பாட புத்தகம் முறைவகுத்து எழுதி வழிகாட்டினர். நாவலர் பாலபாடம் தமிழி லக்கியத்தில் அசைக்கமுடியாத புகழ்பெற்றுவிட்டது. அதற்கிணை யான பாடநூல் இன்னும் உண்டாகவில்லை. தமிழ் உள்ளமட்டும் அது தமிழர் வாழ்விற்கே இன்றியமையாத் துணையாக விளங்கும்; அது தமிழறிவுடன், உலகறிவும் சமயஞானமும் தரும்.

இப்போது நான்கு பால பாடங்கள் வழங்குகின்றன. புத்தகம் க, உ, ச ஆறுமுக நாவலரே எழுதித் தமது வித்தியானு பாலன யந்திரசாலையில் வெளியிட்டவை. மூன்றும் பாலபாடம் ஆறுமுக நாவலரின் உண்மை மாணவரும் சிதம்பரம் சைவப்பிரகாச வித் தியாசாலைத் தருமபரிபாலகருமான பொன்னம்பலப்பிள்ளை யவர் கள், நாவலர் பார்வையில் எழுதி அச்சிட்டது. இவை நான்கும் ஆடை, சோறு, தண்ணீர், காற்றுப் போன்று மாணவருக் கின்றி யமையாத சாதனங்களா யிருக்கின்றன. பிறசமயத்தார் எழுதிய நூல்கள் நமது மாணவரிடையே விளைத்த தீமையை இவை மாற் றின. பாலபாடங்கள் 1872-மே மாதம் வெளிவந்தன ; அவை தமிழ் நாட்டில் ஒரு புரட்சியை உண்டாக்கின. பண்டித பாமரர் பள்ளிப்பிள்ளைகள் அனைவரும் அவற்றைக் கொண்டாடி ஆவலா கப் படித்தார்கள். பத்திரிகைகள் அவற்றை வானளாவப் புகழ்ந் தன. அக்காலம் சென்னையில் நேட்டிவ் பப்ளிக் ஒப்பினியன் ( Native Public Opinion ) என்ற பத்திரிகை பிரபலமா யிருந் தது. அது பால பாட விமர்சனத்துடன், நாவலர் தமிழுக்கும் சைவத்திற்கும் செய்த பணிகளைப் புகழ்ந்தது; அப் புகழுரை இலங்காபிமானி பத்திரிகையினும் வந்தது; அதன் கருத்தாவது:

" அந்தக் காலத்தில் மதுரைப் பாண்டியர் ஆட்சியில் அரும் பெரும் புலவர்கள் சங்கம் வகித்துத் தமிழ் வளர்த்தனர்; பிறகு தமிழ் முதலிய இந்திய மொழிகள் தாழ்வுற் றழியத் தொடங் கின; தமிழை வீறுபடுத்தி முன்னேற்ற இன்று தக்க புலவர்கள்

தோன்றியிருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரியது. ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளை, ஆறுமுக நாவலர் இருவரையுமே இங்கே குறிக்கிருேம். மீனுட்சிசுந்தரம் பிள்ளை மாபெருங் கவிஞர் ; கணக்கற்ற காவிய நூல்களைப் பாடிய புலவர் . ஆறுமுக நாவலர் தலைசிறந்த உரை நடைப் புலவர் ; உரை நடையில் அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர் ; நாம் அறிந்தவரையில் அவரே சிறந்த பேச்சாளர்; புலமை நிரம்பியவர். இப்போது சீர்கெட்டிருக்கும் தமிழை உயர்த்த அவர் பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிருர். அந்நூல்கள் விலை மலிவு ; பயன் அதிகம் உள்ளவை. அவர் தமது பால பாடங்களை நமக்கு அனுப்பியிருக்கிருர். இத்தகைய புலவர் மணிகள் எழுதிய நூலின் மாண்பு சொல்லாமலே விளங்கும். சென்னைப் பாடக்குழுவார் வெளியிட்ட நூல்களைவிட இவை பன்மடங்கு சீரியன. இவற்றைப் பள்ளிக்கூடங்களில் பாடம் வைக்கப் பலமாகச் சிபார்சு செய்கிருேம். நடையிலும் உடையிலும் நாவலர் நூல்களுக்கு வேறெதையும் ஒப்பிட முடியாது. முதல் இரண்டு பால பாடங்களை ஒவ்வொரு தமிழ்ப் பள்ளிக்கூடத்திலும் அவசியம் கற்பிக்கவேண்டும். மூன்ரும் புத்தகம் மிகச் சிறந்தது. உயர் வகுப்புகளுக்கு மிகவும் பொருத்தமானது. இந்த மூன்ரும் பால பாடம் (இப்போது நான்காம் பாலபாடமாக வழங்குகிறது.) நாவலர் பால பாடத்தால் நமது நாட்டிற்குரிய பழக்க ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் பிறநாட்டார் அறிய முடியும். இவ்வாறே இப்பெரியாரின் நூல்களைப் பாடம் வைத்து அவரை இன்னும் அரிய நூல்கள் எழுத ஊக்குவோமாக!"

இனி நூலினுட் புகுந்து பார்ப்போம்.

முதற் பாலபாடம் தமிழ் நெடுங்கணக்குடன் தொடங்குகிறது. உயிரெழுத்து, உயிர்மெய் யெழுத்துக்களைப் பழக்குகிறது. பிறகு ஓரெழுத்துச் சொற்களிலிருந்து ஐந்தெழுத்துச் சொற்கள் வரையில் சொல்லி எளிய நடையில் சொற்ருெடர்களைத் தொடங்குகிறது. கஅ—ம் பாடத்திலிருந்து, " கடவுளை வணங்கு, குருவை வழிபடு, புண்ணியம் செய், உண்மை பேசு, கோபம் பொல்லாது, பொருமை ஆகாது, உயிர்களைக் கொல்லாதே " என்று அரிய



நீதிகளைப் படிக்கிருேம். படிப்புடன் மாணவன் ஒழுக்கமும் திருந்துகிறது. பிறகு சாதாரண வாழ்க்கையைப் பற்றிய பாடங்கள் மாணவன் செயலுடன் கற்கும்படியாக அமைந்துள்ளன."விசிறி கொண்டுவந்து சற்றே வீசு" என்று படிக்கும்போதே பையன் செய்கையிற் காட்டலாம். " பணத்தினும் பார்க்கப் பெரியது நல்ல பெயர் ; மனிதருக்கு மேலாகிய ஆபரணம் அறிவு ;"என்றுபடிக்கும்போது மாணவன் உள்ளம் உயர்கிறது. பணச் செலாவணி, தண்ணீர்ப்பந்தல், பால்குடித்தல், சமைத்தல், காலம், பருவம், நாட்கடன், கற்றல், குளித்தல், உணவுமுறை, மாணவர்ஒழுக்கம், வாசிக்கும் முறை, உயிரிரக்கம், பெரியாரை வணங்கல், திசைகள், காற்றுகள், வாடை, தென்றல், கொண்டல், கோடை இவற்றின் வேறுபாடுகள்.....முதலிய உலக விஷயங்களை எளிய தொடர்களாகக் கற்பிக்கிறது. பிறகு ஆசிரியருக்கும் மாணவருக்கும் ஒரு சம்பாஷணை நடக்கிறது. சச-ஆம் பாடம் நம் இந்திய தேசத்தைப் பற்றியும் சரு-ஆம் பாடம் கடவுளைப் பற்றியும் தெளிவாகச் சொல்லுகிறது. பிறகு இனிய உரைநடையில் காலை மாலை செய்யும் கடவுள் வணக்கத்தைப் புகட்டுகிறது.

இவ்வாறு எழுத்து, சொல், சொற்ருெடர் அறிவைப் புகட்டி முடிவில் தமிழ் எண்கள், **1938** வரையில், பிறகு கூட்டல் வாய்ப்பாடு, பெருக்கல் வாய்ப்பாட்டுடன் நூல் முடிகிறது. கண் போன்ற எண்ணும் எழுத்தையும் இப்பாலபாடம் இனியமுறையில் புகட்டுகிறது. இவ்வளவையும் படித்த பையன், எடுத்த புத்தகத்தைப் படிக்கமுடியும். உடனே இரண்டாம் பாலபாடம் தொடங்குகிறது.

இரண்டாம் பாலபாடத்தில் எல்லா மதங்களுக்கும் பொதுவான நீதிவாக்கியங்கள் காண்கின்றன. அவை மாணவருக்கு நல்லொழுக்கந் தரும். இவற்றை வசனத் திருக்குறள் என்னலாம் ; "கோட் கேட்பவன் இல்லையாயின், கோட்சொல்பவனும் இல்லை ; நீ பிறர்க்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யுமுன், அது உன்னுல் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்துகொள்." இவை போன்ற நீதிகள் இளைஞருக்குச் சஞ்ஜீவி போலுதவும்.

சும்மா நீதியே புகட்டிக் கொண்டிருந்தால் வகுப்பில் மந்தந் தட்டலாம்; மாணவர் சிரிக்க வேண்டும்; நகைச் சுவையுடன் உயர்ந்த கருத்துக்களும் மாணவருக்குப் பிடிபடவேண்டும். இதற்காகவே நாவலர் உக சிறுகதைகளைச் சொல்லுகிருர். அத்தனையும் அற்புதமான ஹாஸ்யச் சித்திரங்கள். சிறுவர் பெரியார் அனைவரும் படித்து மகிழும் கதைகள் அவை :—

**சந்யாசி :** ஐயோ எப்போது கரை யேறுவாய் ?

**செம்படவன் :** பறி நிரம்பினுல் கரை யேறுவேன்.

"குப்புறத் தள்ளிப் புரட்டி உதைத்தால், "என் மீசையிலே மண் ஒட்டவில்லை" என்ருன்.

—சீஷா பாடம் நுழைந்ததா ?

—எல்லாம் நுழைந்தது ; வால் மாத்திரந்தான் நுழையவில்லை.

—இராமாயணம் எப்படி யிருந்தது ?

—ஓர் ஆட்சுமை யிருந்தது.

—உடம்பிலே இறகு பிடுங்கிவரச் சொன்னுன்.

—அவன் ஆமை என்று நினைத்தான் போலும்

—பால் எப்படி யிருக்கும் ? வெள்ளையாய். வெள்ளை எப்படியிருக்கும் ? கொக்குப் போல. கொக்கு எப்படி யிருக்கும் ? குருடன் தடவிப் பார்த்து, "ஐயோ இந்த முரட்டுப்பால் குழந்தை வாயில் நுழைந்தால் சாவாமல் பிழைக்குமா ?" என்ருனும்.

—கடவுள் இருக்குமிடஞ் சொன்னுல் ஒரு மாம்பழம் தருவேன்.

—கடவுள் இல்லாத இடஞ்சொன்னுல் இரண்டு மாம்பழந் தருவேன்.

இந்தமாதிரி நகைச்சுவையை அள்ளி வீசினுல், மாணவர் எவ்வளவு உற்சாகமா யிருப்பார்கள்!

இதன்பிறகு விஷயம் நிரம்பிய பாடங்கள் வருகின்றன : பூமி, மிருகம், காற்று, தேசங்கள், மாடு, பட்சி, தாவரம், வஸ்திரம், யானை, உலோகங்கள், வேளாண்மை, வியாபாரம், மெய்மை, ஒரு கதை—இவற்றுடன் வசனப் பகுதி முடிகிறது. அதன் பிறகு நாமெல்லாரும் அறிந்துகொள்ள வேண்டிய பஞ்சாங்க விஷயங்கள், யுகம் ச, வருஷம் சூ0, அயனம் உ, ருது சு, மாதம் கஉ, வாரம் எ, பட்சம் உ, திதி கரு, நட்சத்திரம் உஎ, யோகம் உஎ, கரணம், இராசி, இராசி மாசம், கிரகம், திக்கு, திக்குப் பாலகர், பருவங்களின் விவரங்கள் வருகின்றன. பிறகு, தாயன்பு புகட்டும் பாடம் வருகின்றது. அதன் பிறகு ஈசுரத் தியானம், அவசிய கருமம், சௌசம், தந்த சுத்தி, பாடம் படித்தல், ஸ்நானம், ஈசுர வந்தனம், போசனம், பள்ளிக்கூடம் போதல், இரவிற் செய்யும் கருமம், பெரியோரை வழிபடுதல் முதலிய ஆசார அனுட்டானங்களை எளிய நடையில் தெளிவாகப் புகட்டுகிருர் நாவலர். அதன் பிறகு ஔவை அருளிய சிறந்த நீதி நூல்களான ஆத்திசூடி கொன்றைவேந்தன் இரண்டையும் தெளிவான உரையுடன் கற்பிக்கிருர். அதன் பிறகு கடிதம் எழுதும் முறையைக் காட்டுகிருர். பிறகு பெருக்கல் வாய்ப்பாடு, எண்மானம், பின்ன எண்கள், பொன்னிலக்கம் இவை வருகின்றன. மாணவன் எண்ணெமுத்தில் உறுதியான அறிவுபெற்று, மூன்ரும் பாலபாடம் படிக்கத் தயாராகிருன். மூன்ரும் பால பாடம் பயனுள்ள சசு பாடங்களும், மாணிக்கவாசகர் சரித்திரமுங் கொண்டது. இந்தியா, இலங்கை, உலோகங்கள், காகிதம், காலம், சரீர சௌக்கியம், செல்வம், தாவரம், தென்னை, புத்தகம், பெண் கல்வி, மழை, பருவம், முயற்சி, வீடு, வேளாண்மை முதலிய பயனுள்ள பாடங்களுடன் நித்திய கருமம், கடவுளுதவி, சகோதர சகோதரி உறவு, சிநேகம், நன்மாணுக்கன் முதலிய நீதிப் பாடங்களையும் புகட்டுகிறது. முடிவில், நீதிவெண்பா உரையுடன் உள்ளது. இதைப் படித்த மாணவன் தமிழையும் தன் சமயத்தையும் ஆழ்ந்தறிய விரும்புகிருன். அவனுக்கு நான்காம் பால பாடம் அமுதமா யிருக்கும்.



## 32. நான்காம் பால பாடம்

**நா**ன்காம் பால பாடத்தை மாணவரின் வேதம் என்னலாம். அதில் ஔவையின் வாக்குண்டாம், நல்வழி, சிவப்பிரகாச சுவாமிகளின் நன்னெறி இம்மூன்றும் எண்சுவடியும் இரண்டாம் பகுதி. முதற் பகுதியில் சைவ ஒழுக்கங்களையும் அறநெறி

வாழ்வையும் போற்றும் அரிய பாடங்கள் உள்ளன. அவற்றைக் கற்றுப் பிரசங்கம் செய்யலாம். கடவுள், கடவுள் வழிபாடு, ஆன்மா, கல்வி, கற்பு, நான்கு ஆசிரமங்கள், தமிழ், தருமம், தானம், தேவாலய தரிசனம், நல்லொழுக்கம், பசுக் காத்தல், புராண படனம், வருணம், வேதாதி நாமாவளி முதலிய பாடங்கள் மாணவர் அறிவைத் தூண்டும். கள், களவு, ஊன், கொலை கோபம், சூது, பொய் இவற்றைத் தவிர்க்க நாவலர் பாடங்கள் வகுத்திருக்கிறார். நான்காம் பால பாடம் படித்தவர்க்கு வேதாகம ஒழுக்கம் உண்டாகும் ; இறை, உயிர், உலகு, ஆகிய முப்பொருளுண்மையும் புலப்படும். இந்நூலை ஒவ்வொருவரும் பன்முறை படிக்கவேண்டும். உதாரணத்திற்காக ஒரு பாடம் இங்குத் தருவேன் :

## பாடம் 32. ஆசிரமம்

பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என நால்வகை ஆச்சிரமத்தார் உண்டு.

### பிரமசாரி

பிரமசாரியானவன் உபநயனஞ் செய்யப்பெற்று ஆசாரியாரிடத்திலிருந்து ஓதுதலும் விரதங்காத்தலுமாகிய ஒழுக்கத்தையுடையவன். பிரமசாரி சகல நற்குண நற்செய்கைகளோடுங்கூடி, ஆசாரியாரை விதிப்படி வழிபட்டுக்கொண்டே வேத முதலியவைகளை ஓதல் வேண்டும். வேத மோதும்போது ஆசாரியாரை வணங்கி, வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் கைகளைக் கட்டிக்கொண்டு ஓதல்வேண்டும். சுக்கிலபட்சத்தில் வேதங்களையும், கிருஷ்ணபட்சத்தில் வேதாகமங்களையும் ஓதல்வேண்டும். அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, பிரதமை, அயனம், விஷு முதலிய விலக்கப்பட்ட தினங்களிலும் சந்தியா காலங்களிலும் வேதாகமங்களை ஓதலாகாது. வேதாங்கம், புராணம், தரும நூல் முதலியவைகளை அமாவாசை பௌர்ணிமைகளினன்றி மற்ற எந்நாட்களிலும் ஓதலாம். சந்தியா வந்தன முதலிய கருமங்களுக்கு உரியவைகளையும் நித்திய பாராயணத்துக்கு உரியவைகளையும் எந்நாளும் ஓதலாம். பிரமசாரி, சந்தனம், பூமாலை, தாம்பூலம் முதலிய போக்கியப் பொருள்களை அநுபவிக்கலாகாது. பெண்கள் சமீபத்தில் இருத்தலும், அவர்களோடு கலந்து பேசுதலும், கீதங் கேட்டலும், கூத்துப் பார்த்தலும் ஆகாவாம்.



பிரமசாரிகள், பௌதிகப் பிரமசாரி யெனவும் நைட்டிகப்பிரமசாரி யெனவும் இருவகையர். பாலிய வயசு தொடங்கிக் கன்னிகா கலியாண காலம் வரையும் விரத நியமித்துத் துறவியாய் இருப்பவன் பௌதிகப் பிரமசாரி. மரணாந்தம் விரதம் நியமித்துத் துறவியாய் இருப்பவன் நைட்டிகப் பிரமசாரி.

பௌதிகப் பிரமசாரி, ஆசாரியரிடத்தில் ஓதற்பாலன வாகிய வேத முதலியவைகளை அருத்தஞானம் வருமளவும் ஓதியபின்பு, அவருக்குத் தட்சிணை கொடுத்து, அவரநுமதி பெற்று, சமாவர்த்தமெனும் விரதத்தை நிறைவேற்றி, விவாகஞ் செய்து கொள்ளல் வேண்டும். வேதமுதலிய நூல்களைக் கற்றானாயினும் அவைகளின் பொருளை அறியாதவன் சும்மா கத்துகின்ற காகத்துக்குச் சமமாவான்.

நைட்டிகப் பிரமசாரி பெண்களுடைய பெயரையுஞ்சொல்லாமல், அவர்கள் வடிவத்தையும் நினையாமல், இந்திரிய நிக்கிரகஞ் செய்து கொண்டிருத்தல் வேண்டும். அவன், போகத்தின் கண்ணே கருத்துற்றானாயின், ஆசாரியரிடத்திற் சென்று உண்மையை விண்ணப்பஞ் செய்து, ஆகமத்தில் விதித்த விதிப்படியே அவர் சந்நிதியிலே நைட்டிகவிரதத்தை இறக்கி, ஸ்நானஞ்செய்து அவரிடத்தே வெள்ளை வஸ்திரம் இரண்டு பெற்று, பிராயசித்தஞ் செய்து முடித்து, அவரநுமதி பெற்றுக்கொண்டு விவாகஞ் செய்துகொள்ளல் வேண்டும். இப்படிச் செய்யிற் குற்றம் இல்லை. இப்படி விரதத்தை இறக்காது, நைட்டிகப் பிரமசாரியாகவே யிருந்துகொண்டு பெண்களுடன் கூடுவானாயின், தன் சரீரத்தில் வளர்ந்த உரோமம் எத்தனை உண்டோ அத்தனை வருஷம் மிகக் கொடிய ரௌரவ முதலிய நரகங்களிற் கிடந்து அழுந்துவான். சுக சன்னி, நீரிழிவு, கயம், பெருவியாதி முதலிய நோய்களால் வருந்துவன். இவனுக்குப் பரிகாரம் ஒரு நூலிலும் இல்லை.

## கிருகஸ்தன்

கிருகஸ்தனானவன் விதிப்படி ஒரு பெண்ணை விவாகஞ்செய்து கொண்டு, தரும நெறியாலே பொருள் சம்பாதித்து, இல்லறத்தை நடத்துவோன். விவாகஞ் செய்யப்படும் கன்னிகை தன் வருணத்திற் பிறந்தவளாயும், தன் கோத்திரத்திற் பிறவாதவளாயும், மகள், தங்கை, என்கிற முறையிற் சேராதவளாயும், தனக்கு இளையவளாயும் முன்னொருவராலும் விவாகஞ் செய்யப்படாதவளாயும், மேன்மையும் நல்லொழுக்கமும் உள்ள குலத்திற் பிறந்தவளாயும், அவலட்சண மில்லாதவளாயும் இருத்தல் வேண்டும். பெரும்பாலும் மலடாகுங் குலத்திலும், பெண்ணே பெறுங் குலத்திலும், பெருவியாதி, குட்டம், கயம் முதலிய வியாதியுள்ள குலத்திலும் பிறந்தவளை விவாகஞ் செய்யலாகாது.

கன்னிகையைக் கொடுப்பவரும், குலமில்லாதவனுக்கும், நல்லொழுக்கம் இல்லாதவனுக்கும், தீராப் பிணியனுக்கும், அவலட்சண முள்ளவனுக்கும், அங்கஹீனனுக்கும், வீரியமில்லாதவனுக்கும் கொடுக்க லாகாது. கன்னிகையைப் பொருள் வாங்கிக் கொண்டு கொடுத்தவர் நரகத்தை யடைவர். வதுவும் வரனுமாகிய இருவருடைய சம்மதியையும் அறிந்து விவாகம் நடத்துதலே தகுதி. (வது—மணமகள் ; வரன்—மணமகன்).

ஒரு தாய் வயிற்றிற் பிறந்த இரண்டு பிள்ளைகளுக்கு ஒரு நாளிலேனும், ஒரு மாசத்திலேனும், ஒரு வருஷத்திலேனும், செளளம், உபநயனம், விவாகம் செய்யலாகாது. தமயன் விவாகஞ் செய்யாதிருப்பத் தம்பி விவாகஞ் செய்துகொள்ள லாகாது. தமையன் ஊமையாய்ச் செவிடனாய் இருந்தாலும், துறவு பூண்டாலும், தூரதேசத்திற் சென்று அறியப்படா திருந்தாலும் தம்பி விவாகஞ் செய்துகொள்ளலாம்.

பெண்ணானவள் தன் கணவனுக்கும் மாமன் மாமி முதலானவர்களுக்கும் அடங்கி, அன்போடு உபசாரஞ் செய்துகொண்டு, இல்லறத்தை நன்றாக நடத்தல் வேண்டும். கணவனும், மாமன், மாமி முதலானவர்களும், அந்தப் பெண்ணுக்குச் சிறிதாயினுந் துன்பஞ் செய்யாது, தங்களுடைய வளத்துக்கேற்றபடி போசனம், ஆடை, ஆபரண முதலியவைகளினாலே அவளைச் சந்தோஷப் படுத்திக்கொண்டு வரல் வேண்டும். எந்தக் குடியிலே ஒரு பெண், தன் கணவன், கணவனுடன் பிறந்தார், மாமன், மாமி முதலானவர்களாலே துன்பம் அடைதலினாலேனும், ஆதரிக்கப்படாமையினாலேனும், மனம் நொந்து கண்ணீர் விடுவாளோ, அந்தக்குடி அக்கினி பற்றி எரிந்தாற் போல அழிந்து விடும். பெண்ணை, அவள் பிதா மாதா சகோதரர்கள் முதலானவர்களும், கலியாண காலத்திலும் மற்றைக் காலங்களிலும் ஆடை ஆபரண முதலியவைகளினாலே சந்தோஷப்படுத்தல் வேண்டும்.



எந்தக் குலத்திலே மனைவியினுடைய பணிவிடை முதலியவற்றினாலே கணவன் பர தாரத்தை நினையாமலும், கணவனுடைய அன்பு முதலியவற்றினாலே மனைவி பர புருஷனை நினையாமலும் ஒருவரோ டொருவர் மிக ஒற்றுமையுடையராய் இருக்கின்றாரோ, அந்தக் குலம் தழைத்தோங்கும். கணவன் தன் மனைவியை விரும்பா தொழிந்தால், அவள் பர புருஷனை இச்சித்தல் கூடும் ; அதனால் அக்குலம் தாழ்ந்துவிடும். கணவனானவன் தன் காரியத்தின் பொருட்டுத் தேசாந்தரம் போகும்போது, தான் போய் வருமளவும் மனைவியினுடைய சீவனத்துக்கு வேண்டும் பொருள் கொடுத்துவிட்டுப் போதல் வேண்டும்; அப்படிச் செய்யா தொழியின், அவள் மேன்மை யுடையவ ளாயினும் சீவனத்தின் பொருட்டு இழிவான காரியஞ் செய்தல் கூடும்.

கணவன் தன் மனையாள் கருப்பவதியானால், தானம் வாங்கல், கோயில் வீடு கட்டுவித்தல், திருவிழா முதலிய கிரியைகளைச் செய்தல், பிதா மாதாக்களுக் கன்றி மற்றவர்களுக்கு அசுபக்கிரியை செய்தல், தீர்த்த யாத்திரை செய்தல், சமுத்திர ஸ்நானஞ் செய்தல், பரான்னம் புசித்தல், வபனஞ் செய்துகொள்ளல் என்னும் இவைகள் ஆகாவாம்.

பிறன் மனையாளையும், விதவையையும், வேசையையும் விரும்பாதவனும், தன் மனையாளையும் விதிக்கப்பட்ட நாட்களிலன்றி விலக்கப்பட்ட நாட்களிலே கூடாதவனும் உள்ளவன், கிருகத்

தனே யாயினும், விவேகிகளாலே பிரமசாரியாகவே மதிக்கப்படுவன். அவன் இம்மையிலே அரோக சரீரமும் தீர்க்காயுசு முடையவனாய், சற்புத்திரரைப் பெற்று, பகைவர்களும் திக்கு நோக்கி வணங்க வாழ்ந்திருந்து, மறுமையிலே நற்கதி யடைவான். தன் மனைவியை விடுத்துப் பிறன் மனைவியினிடத்திலாயினும், வேசையிடத்தாயினும் போனவனும், தன் மனைவிமேல் அன்புவைத்து அவளைப் போசனம் ஆடை ஆபரண முதலியவைகளால் ஆதரியாமல், அவளுக்குத் துன்பஞ் செய்தவனும், தன் மனைவி கொண்டு வந்த சீதனப்பொருளை அழித்தவனும் அளவில்லாத காலம் நரகங்களிலே கிடந்தழுந்துவர் ; பிறவிதோறும் பிரமேகம், கிரந்தி, அரையாப்பு, நீரடைப்பு, கிரகணி, அண்ட வாயு, குன்மம், சூலை, பிளவை, கயம், மகாசுவாசம், ஈளை, மகோதரம் முதலிய எண்ணில்லாத வியாதிகளினாலே வருந்துவர்.

கிருகத்தன் நாடோறும் பஞ்ச மகாயக்ஞங்களைச் செய்தல்வேண்டும். பஞ்ச மகாயக்ஞங்களாவன: பிரம்ம யக்ஞம், பிதிர் யக்ஞம், தேவ யக்ஞம், பூத யக்ஞம்,மானிட யக்ஞம் என்பவைகளாகும். அவைகளுள்ளே பிரம யக்ஞமாவது வேதமோதுதல் ; பிதிர் யக்ஞமாவது பிதிர் தர்ப்பணம் ; தேவ யக்ஞமாவது தேவர்களுக்கு அக்கினியில் ஓமஞ் செய்தல்; பூத யக்ஞமாவது பூதங்களுக்குப் பலியன்னமிடுதல் ; மானுட யக்ஞமாவது அதிதிகளுக்கு அன்னங் கொடுத்தல்.

இல்வாழ்வானே மற்ற எல்லா ஆச்சிரமவாசிகளுக்கும் ஆதாரமானவன். ஆதலால், தரும நிலையும், உலக நிலையும் இல்லறத்திற்றானே உண்டாகின்றன. இல்வாழ்வான், தன் வீட்டுக்கு அதிதிகள் வந்தால், எதிர்கொண்டு இன்சொற்களைச் சொல்லி அழைத்துவந்து காலலம்பத் தண்ணீர் கொடுத்து, ஆசனத்திருத்தி, அன்போடு அன்னமிட்டு, அவர் போகும்போது அவர் பின் சென்று வழி விடல் வேண்டும். அதிதி வாராதொழிந்தால், நித்தியகருமம் முடிந்தபின் தெருவிலே ஒரு பசுக்கறக்கும்நேரம் அதிதியை எதிர்பார்த்துக்கொண்டு நிற்றல் வேண்டும்.



பிரமசாரியாயினும் சந்நியாசியாயினும் பிக்ஷைக்கு வந்தால், விரைந்தெதிர்கொண்டு, நல்வார்த்தை சொல்லுதல் கால் கழுவுதல் முதலிய உபசாரங்களைச் செய்து, மூன்று கவளத்திற்குக் குறையாமல் பிக்ஷை யிட்டு, கையிலே ஜலம் விடவேண்டும். சிநேகர் பந்துக்கள் வந்தால், அவர்களையும் உபசரித்துப் புசிப்பித்தல் வேண்டும். புதிதாக வீட்டுக்கு வந்த மருமகளையும், சிறுபெண்களையும் வீட்டிலுள்ள வியாதியாளர்களையும், கருப்பந் தரித்த பெண்களையும், சிறுவரையும், மூப்புடைய பிதா மாதா முதலியோர்களையும் முன்னே புசிப்பித்தல் வேண்டும்.

ஸ்நானஞ் செய்யாமல் உண்கின்றவன் மலத்தை உண்கின்றான். செபஞ் செய்யாமல் உண்கின்றவன் இரத்தத்தையும் மூத்திரத்தையும் உண்கின்றான். பூசை செய்யாமல் உண்கின்றவன் புழுவையும் பிணத்தையும் உண்கின்றான். பாலர் முதலாயினோர்க்கு முன்னுண்பவன் மிருகமலத்தை உண்கின்றான். அதிதிகளுக்குக் கொடாது உண்கின்றவன் விஷத்தை உண்கின்றான். இப்பாவிகள் எல்லாரையும் யம தூதர்கள் நரகத்தில் வீழ்த்தி, இவர்களுடைய நாக்குகளிலே அக்கினியிற் காய்ச்சிய இருப்பாணிகளை அறைந்து, இவர்கள் பதைபதைத்து அலறும்படி இவர்களுடைய உடம்பு முழுதினும் பஞ்சலோகங்களையும் உருக்கி வார்ப்பார்கள்.

இல்வாழ்வான், நாடோறும் போசனம் செய்தபின்பு பின்பகலிலே பெரியோர்கள் புராணங்களைப் படித்துப் பொருள் சொல்லத் தன் சுற்றத்தாரோடு விதிப்படி மனமகிழ்ந்து கேட்டல் வேண்டும். அஸ்தமன காலத்திலே சந்தியா வந்தனம் முடித்துத் தேவாலயத்தை அடைந்து, கடவுளை வலஞ்செய்து வணங்கித் தோத்திரஞ் செய்துகொண்டு, வீட்டை அடைந்து, அதிதிகளோடும் சுற்றத்தாரோடும் போசனஞ் செய்து சயனித்தல் வேண்டும்.

தன் பிதாமாதாக்கள் இறந்த மாதமும் திதியும், வருஷந்தோறும் வரும்பொழுது, விசுவாசத்தோடு விதிப்படி சிராத்தஞ் செய்தல் வேண்டும். புரட்டாதி மாசத்திலே கிருஷ்ணபக்ஷத்திலே மகாளய சிராத்தஞ் செய்தல் வேண்டும். அமாவாசை, சூரியகிரகணம்,

சந்திர கிரகணம், விதிபாத யோகம். உத்தராயணம், தக்ஷிணாயனம், சித்திரை விஷுவம், மாசப்பிறப்பு, வைகாசி மாதத்துச் சுக்கில பக்ஷத்துத் திருதியை, கார்த்திகை மாசத்துச் சுக்கில பக்ஷ நவமி, புரட்டாதி மாசத்துக் கிருஷ்ணபக்ஷத் திரயோதசி, மாசி மாசத்து அமாவாசை என்னும் இத் தினங்களிலே, புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணிப் பிதிர் தர்ப்பணஞ்செய்து அதிதிகளோடும் சுற்றத்தாரோடும் போசனம் பண்ணி விரத நியமத்தோடிருத்தல் வேண்டும்.

கிருகஸ்தன் இப்படி இல்லறத்தை விதிப்படி நடாத்தி மூப்பு வரும்போது வானப்பிராஸ்தாச்சிரமத்திலே பிரவேசிக்கலாம்.

## வானப்பிரஸ்தன்

**வா**னப்பிரஸ்தானுவான் தன் மனைவியைப் புத்திரனிடத்தில் விட்டாயினும், தன்னோடு கூட்டிக் கொண்டாயினும், வனத்திற் சென்று தவஞ் செய்வோன். அவன் சடையும், தாடியும், மீசையும், நகமும் வளர்த்துக்கொண்டும், மரவுரி, மான்றோல் முதலியவைகளை உடுத்துக்கொண்டும், தழைகளினுலேசெய்யப்பட்ட குடிசைகளிலே வாசஞ் செய்தல் வேண்டும். ஊரில் உண்ணத் தக்க உணவுகளை விட்டு, காட்டிலுள்ள கனி கிழங்கு முதலியவைகளையே உண்ணல் வேண்டும். அவை கிடையாதொழியின், மற்றை வானப்பிரஸ்தரிடத்திலேனும் வன வாசஞ் செய்யும் கிருகஸ்தரிடத்திலேனும் பிக்ஷை யேற்று உண்ணலாம். அவர்களும் இல்லாத போது, ஊரிற் போய் எட்டுக் கவள அன்னம் வாங்கிப் புசிக்கலாம்.

முப்பொழுதினும் ஸ்நானஞ்செய்து அக்கினி காரியஞ் செய்தல் வேண்டும். தான் உண்ணும் உணவினுலே பூதபலியையும் அதிதி பூசை, பிக்ஷயிடல் இவைகளையும் செய்யலாம். வெய்யிற் காலத்திலே நெருப்புக்குச் சமீபத்திலும், மழைக்காலத்திலே தண்ணீரிலும், பனிக்காலத்திலே வெளியிலும் இருந்துகொண்டு தவஞ் செய்தல் வேண்டும்.

வேத சிரசுகளாகிய உபநிஷத்துக்களையே பாராயணஞ் செய்தல் வேண்டும். வானப்பிரஸ்தனுக்குப் புணர்ச்சி கூடாது.



இப்படி வானப்பிரஸ்தாச்சிரமத்தில் இருந்து, மிகுந்த வைராக்கியம் அடைந்தபோது, சந்நியாசாச்சிரமத்திலே பிரவேசித்தல் வேண்டும்.

## சந்நியாசி

**சந்நியாசி** யானவன் எல்லாப் பற்றுகளையும் முற்றத் துறந்தவன். சந்நியாசி காஷாய வஸ்திரமே யன்றி வேறு வஸ்திரந் தரிக்கலாகாது. அவனுக்குத் தண்ட கமண்டலங்களும் இருத்தல் வேண்டும். பிதா, மாதா, பெண்டிர், பிள்ளை முதலாயினேரிடத்தும் பொருண் முதலானவைகளிடத்தும் பற்றில்லாதவனே காஷாயந் தரித்தல் வேண்டும் ; பற்றுள்ளவன் காஷாயந் தரித்தால் ரௌரவ நரகத்திலே கிடந்தழுந்துவான். இல்லறத்தில் வழுவினுல், அவ் வழு, பிராயச்சித்தத்தால் நீங்கும். துறவறத்தில் வழுவினுல், அவ் வழு, அவனை நரகத்திற் செலுத்துவதன்றிப் பிராயச்சித்தத்தினுலே நீங்காது. துறவறத்தின் வழுவுதல் மலைச் சிகரத்தினின்று தவறி விழுதல் போலும்.

சந்நியாசி சற்குருவை வழிபட்டு, ஞானசாத்திரங்களை ஓதி அவற்றின் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து, நிட்டை கூடல் வேண்டும். தன்னை அடைந்த பரிபக்குவர்களுக்கு அவைகளை ஓதுவித்து அவைகளின் பொருளைப் போதித்தல் வேண்டும்.

சந்நியாசி ஒருவரையும் பகைக்க லாகாது. அநித்தியமாயும் உரோகத்துக்கு இருப்பிடமாயும் உள்ள சரீரத்தின் பொருட்டு ஒருவரோடும் கோபிக்கலாகாது. தம்மவரென்றும் பிறரென்றும் விருப்பும் வெறுப்பும் வைக்கலாகாது. எல்லா உயிர்க ளிடத்தும் கருணை யுடையவனுய் இருத்தல்வேண்டும். நடக்கும்போது தரையிலே யாதொரு ஜந்துவும் இல்லாதிருக்கப் பார்த்து அடிவைத்தல் வேண்டும். தண்ணீரை நன்ருக வஸ்திரத்தினுலே வடித்துச் சுத்திசெய்து குடித்தல்வேண்டும். தன்னை ஒருவன் வைதாலும், அடித்தாலும், மற்றை எவ்வகைத் துன்பஞ் செய்தாலும் அவன் மேல் வெறுப்புக்கொள்ளாமல், இனிய வார்த்தைகளையே பேசல் வேண்டும். தனக்குப் பிறர் செய்யும் அவமானத்தை அமிர்தமாக

வும், வழிபாட்டை விஷமாகவும் கொள்ளல் வேண்டும். வெய்யில் காற்று முதலானவைகளுக்கும், சரீரத்தில் வரும் துன்பங்களுக்கும் சிறிதும் அஞ்சாமல் அவைகளைச் சகித்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் இருத்தல் வேண்டும். உயிரோ டிருத்தலையும் இறத்தலையும் சமமாகவே எண்ணல் வேண்டும்.

சந்நியாசி தாம்பூலம், சந்தனம், பூமாலை,ஆபரணம் முதலிய போக்கியப் பொருள்களை அநுபவித்தலும், கீதங்கேட்டலும், கூத்துப் பார்த்தலும், பெண்களை இச்சித்தலும், அவர்களோடு பேசுதலும், அவர்கள் கூட்டத்திற் போதலும், கோயிலதிகாரஞ் செய்தலும், அரசர் வாயிலிற் செல்லலும், கழுத்தின் மேலன்றிக் கழுத்தின் கீழே க்ஷௌரஞ் செய்துகொள்ளலும், காஷாய வஸ்திரத்தை முழங்கால்களின் மேலன்றி முழங்கால்களின் கீழே தொங்கும்படி உடுத்தலும் ஆகாவாம்.

சந்நியாசி வலக்கையிலே பிக்ஷா பாத்திரத்தையும், இடக்கையிலே தண்டத்தையும் தரித்துக்கொண்டு,நற்குடிப் பிறப்பும், நல்லறிவும், நல்லொழுக்கமும், ஈசுரபத்தியுமுடைய கிருகஸ்தர் வீட்டிலே மௌனத்தோடு போய், பிக்ஷை வாங்கி, ஒருபொழுது உண்ணல் வேண்டும். தரித்திரரிடத்தே செல்ல லாகாது. பிக்ஷையின் பொருட்டு யாரையேனும் நெருக்கலாகாது. பிக்ஷைக்குப் போனால், முற்றத்திலே தன்னிரண்டு கண்களையும் வலக்காற் பெருவிரலில் வைத்துக்கொண்டு நின்று, பிக்ஷை யேற்றல் வேண்டும். பிக்ஷையின் பொருட்டு ஒரு பசுக் கறக்கும் நேரம்மட்டும் நிற்க வேண்டும். அவ்வளவும் பிக்ஷை வராதொழியின்,மற்றை வீட்டுக்குச் செல்லல் வேண்டும் ; செல்லும்பொழுது, பிக்ஷையிடக் கொண்டுவந்தவர் அழைக்கின், அவ்விடத்திற்றானே நின்று கொண்டு வாங்கல் வேண்டும்; திரும்பிப் போய் வாங்கலாகாது. பிக்ஷை கிடைத்தபோது சந்தோஷித்தலும், கிடையாதபோது துக்கித்தலும் ஆகாவாம். விஷயங்களால் இழுக்கப்படுகின்ற இந்திரியங்களை, அற்பபோசனத்தினாலும், ஏகாந்தத்தில் வசித்தலினாலும், நல்வழியிற் றிருப்பல் வேண்டும். குறி சொல்லல், வைத்தியம், சோதிடம், மந்திர வாதம் முதலியவைகளினாலே பிக்ஷை சம்பாதிக்கலாகாது.



பிக்ஷை சாந்தானிக பிக்ஷையும், கண பிக்ஷையும், மாதுகரி பிக்ஷையும், அயாசித பிக்ஷையுமென நான்கு வகைப்படும். ஆசாரியர் முதலாயினோர், பத்தர்களாயினும், சீடர்களாயினும் அன்பினோடு தாமே தரும், மடம் விளைநிலம் முதலியவைகளைச் சந்தான பரம்பரையாக அநுபவிக்கும்படி வாங்குவது சாந்தானிக பிக்ஷை. இல்வாழ்வாருடைய தெருவிலே புறப்பட்டு வீடு தோறும் அரிசி வாங்குவது கண பிக்ஷை. வண்டானது ஒரு பூவிலிருந்து அதனை வாதியாமல் பல பூக்களிலுஞ் சென்று சிறுகச் சிறுகத் தேனைக் கிரகித்தல் போல, விரத்தனானவன் ஒருவரை வாதியாமல் பலரிடத்துஞ் சென்று சிறுகச் சிறுக அன்னம் வாங்குவது மாதுகரி பிக்ஷை. தனக்கென்று காசையும் பணத்தையும் தானியத்தையும் தீண்டாதவனுக்கே இந்த மாதுகரி பிக்ஷை பண்ணுதல் தகும். மத்தியான மாதற்கு முன்னே மாதுகரி பிக்ஷைக்குப் புறப்படலாகாது. விரத்தியின் முதிர்ச்சியினாலே நமக்குள்ள பிராரத்தத்தை நாம் எங்கே இருப்பினும் கடவுள் புசிப்பிப்பர் என்று துணிந்து, இருந்தவிடத்திலேதானே ஒருவன் தானாகக் கொண்டு வந்து தந்ததை வாங்கிப் புசிப்பது அயாசித பிக்ஷை.

ஈசுர நிந்தகர், குரு நிந்தகர், வேத நிந்தகர், ஆகம நிந்தகர், தேவத்திரவியங் கவர்வோர், சமயாசாரமில்லாதவர்,கொலைஞர், கள்வர், கள்ளுண்போர், புலாலுண்போர், பிறர் மனை நயப்போர், பொய்ச்சான்று சொல்வோர், பொய்வழக்குப் பேசுவோர், கன்னிகையை விற்போர், இழிந்த வருணத்தார் முதலாயினோரிடத்துப் பிக்ஷை வாங்கலாகாது. இவர்களுடைய அன்னத்தைப் புசித்தவர்களுக்கு ஒருபோதும் சித்த சுத்தி பிறவாது. அதனால் அவர்கள் மேன்மேலும் பாவங்களையே செய்து நரகத் துன்பத்தை அனுபவிப்பார்கள். அழுக்குப் புடவை யுடுத்தவள், கருப்பிணி, வெள்ளாட்டி, நற்குணமில்லாதவள், எண்ணெ யிட்டுக்கொண்டவள், தாம்பூலந் தின்றவள், கணவனுக்கு முன்னுண்பவள், அருவருப்பானவள், உறுப்புக் குறைந்தவள், கருங்குட்ட முதலிய நோய்களை யுடையவள், விதிப்படி சௌச முதலியவைகள் செய்யாதவள், சனனமரணசௌச முடையவள் முதலி

யோர்கள் இடும் அன்னம் வாங்க லாகாது. தீக்ஷை யில்லாதவ ருடைய அன்னம், தீக்ஷை யுடையவர் புசிக்கலாகாது.

சந்நியாச வேடந்தரித்துக்கொண்டு மண், பொன், பெண்களில் இச்சை வைப்பவர்களும், கோயிலதிகாரஞ் செய்யப் புகுந்து தேவத் திரவியங்களை உபயோகிப்பவர்களும் பதித ராவார்கள். அவர்கள் இருபத்தெட்டுக் கோடி நரகங்களிலும் கற்ப காலங் கிடந்து அழுந்துவார்கள். அவர்கள் அநுபவிக்கும் நரகத்துன்பங் களைச் சொல்லி முடியாது. அவர்கள் எண்ணில்லாத தரம் மலப் புழுவாய்ப் பிறந்து பிறந்து, மலத்தை உண்டு இறப்பார்கள். இப் பிறவியினும், மேல்வரும் பிறவிகளினும் சுகசன்னி, பிரமேகம், கிரந்தி, பகந்தரம், அரையாப்பு, நீரடைப்பு, கிரகணி, நீரிழிவு, மூலரோகம், பிளவை, பெருவியாதி, குட்டம், கயம், மகாசுவா சம், குன்மம் முதலிய எண்ணில்லாத வியாதிகளினாலே வருந்து வார்கள். அப் பதிதர்களை வணங்குதலும், அவர்களோடு கூடுத லும், அவர்களோடு பந்தியி லிருந்து புசித்தலும், அவர்களைத் தீண்டலும், பிறவும் பெரும் பாதகங்களாம். ஆதலினாலே நரகத் துன்பத்துக்கும் பிறவித் துன்பத்துக்கும் அஞ்சினவர்கள், அப் பதி தர்களைக் கண்டால், தூரத்திலே நீங்கிவிடக் கடவர்கள்.

பிரமசரிய முதலிய நான்காச்சிரமங்களும் கிருகஸ்தாச்சிரமத் தினாலேயே நிலைபெறுகின்றன. சாத்திர விதிப்படியே அதனதன் கருமங்களை நடத்திவந்தால், இந்த நான்காச்சிரமங்களும் தனித் தனியே மோட்சத்தைக் கொடுக்க வல்லனவாம். நான்காச்சிரமிக ளுள்ளும், வேதாகமங்களில் விதித்தபடி ஒழுங்காக ஒழுகும் கிரு கஸ்தன் மற்றை மூன்றாச்சிரமிகளையும் பிக்ஷை கொடுத்துப் பாது காத்தலினாலே உயர்ந்தவ னென்று சொல்லப்படுகிறான். நதியும் நதமும் சமுத்திரத்தைச் சேர்தல்போலவே, பிரமசாரியும், வானப் பிரஸ்தனும், சந்நியாசியும் கிருகஸ்தனையே பிக்ஷையின் பொருட் டுச் சேர்கின்றார்கள். (நதி யென்பது கிழக்கு முகமாக ஓடும் ஆறு; நத மென்பது மேற்கு முகமாக ஓடும் ஆறு).

தேவர் கடனை யக்ஞத்தினாலும், முனிவர் கடனை வேதாத்திய யனத்தினாலும், பிதிர் கடனைப் புத்திரரைப்பெறுதலினாலும் தீர்த்



துக்கொண்டே சந்நியாசத்திற் பிரவேசித்தல் வேண்டும். பிரமச் சரியத்திலிருந்து கிருகஸ்தாச்சிரமத்தையும், அதிலிருந்து வானப் பிரஸ்தாச்சிரமத்தையும், அதிலிருந்து சந்நியாசாச்சிரமத்தையும் அடைவதே தகுதி. ஆயினும், கிருகஸ்தாச்சிரமத்திற்கு உரிய சத்தி யில்லாதவரும், பிரபஞ்சத்தில் மிக்க வைராக்கிய முடைய வரும், விரும்பியபோது சந்நியாசம் பெறலாம்.

சந்நியாசம் பெற்றவர், குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளு தல்போலக் கூடாவொழுக்கம் பூண்டு பழி பாவங்களையடையாமல், தங்கள் காலமெல்லாம் செபம், தியானம், பூசை, ஞானநூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்பவைகளிலேயே போக்கல் வேண்டும். இவை செய்யாதவ ருடைய சந்நியாச வேடம் சிறிதும் பயன்படாது.

திருமந்திரம்

**வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்**
**வேட நெறிநிற்போர் வேடமெய் வேடமே**
**வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்**
**வேட நெறிசெய்தால் வீடது வாகுமே.**

திருவள்ளுவர்

**வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சம்**
**தானறி குற்றப் படின்.**

மேற்சொல்லியவை யெல்லாம் மனு, வள்ளுவர் ஆதிய முனி வர் சம்மதமாம்.

## 33. பாதிரியே அறிந்துகொள்

நாவலரின் **சைவதூஷண பரிகாரம்** உலகின் கண்டன நூல்க ளில் சிறந்த தொன்று; நியாய வரம்பும் தருக்க நீதியுங் கொண்டு, நாவலர் பெருமான் அதில் பாதிரிகளுக்கும் உணர்ச்சி வரும்படி, நம்மவர் விழித்தெழுந்து அவர்கள் வாயை யடக்கும் படி சைவத்தின் பெருமையை நிலைநாட்டி யிருக்கிறார். விவிலிய

ஆதாரங் காட்டி, அவர் செய்யும் விவாதம் அற்புதமானது. இந் நூல் அக்காலத்தில் நாடெங்கும் ஒரு புரட்சியை உண்டு பண்ணியது ; இதன் எதிரொலி இங்கிலாந்திற்குக்கூட எட்டியது. வெஸ்லியன் மெதாடிஸ்டு ஆண்டறிக்கையில்உள்ள இந்நூலின் குறிப்பு பிறகு வரும். இந்நூல் பிரமாதீச வருஷம் தைப் பூசத்தில் வெளியிடப்பெற்றது. ஆசிரியர் **சைவப்பிரகாச சமாஜீயர்** என்ற புனை பெயர் வைத்து நூலை வெளியிட்டார். இதன் கருத்துரையறிவோம் :—

## சைவ தூஷண பரிகார சாரம்

### சிவமயம்

### கடவுள் வணக்கம்

**சீர்பூத்த கருவிநூலுணர்ச்சி தேங்கச்**
**சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்**
**பார்பூத்த புறச்சமய விருள்கணீங்கப்**
**பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்**
**பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்**
**பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த**
**வார்பூத்த அறிவிச்சை தொழிலென் றேது**
**மதம்பூத்த விநாயகன்றுள் வணங்கி வாழ்வாம் !**

" புண்ணிய பூமியான பரதகண்டத்தின் தென்தமிழ் நாட்டுச் சைவ சமயிகளே ! சர்வ வியாபியான பரமசிவன்,ஆன்மாக்கள்மேல் கருணைபூத்து சுருதியை அருளினுர்; அது, வேதம் ஆகமம் ஆகிய இரண்டு வியாபகமா யிருக்கும். வேதம், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு ; அதில் கர்ம காண்டம் அற்ப சுருதி ; ஞானகாண்டம் பிரபலச்ருதியாகும்; இவை 32 உபநிஷத்துக்கள். சைவம் முதலிய புராணங்களும் ஸ்மிருதிகளும் வேதத்திற்கு வழிநூல்; கற்பசூத்திரம் முதலியன சார்புநூல். ஆகமங்கள் இருபத்தெட்டு ; இவற்றிற்கு இருபத்தைந்து வழிநூலுண்டு; இவை மந்திரம், தந்திரம், சித்தாந்தம் எனப்படும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என ஆகமம் நான்கு பாதங்களை



யுடையது; சரியை சமயாசாரத்தையும்; கிரியை சந்தி, ஜபம், ஓமம், பூஜை, ஆசாரியாபிஷேகம் முதலியவற்றையும் ; யோகம், பிராணுயாமாதி சிவயோக சாதனங்களையும் ; ஞானம், பசு, பதி, பாச லட்சணங்களையும் விளக்கும். இவை சமுஸ்கிருத மூலத்தில் உள்ளன. தேவார திருவாசகங்களும் மெய்கண்ட சாத்திரங்களும் தமிழருக்குள்ள ஆகம விளக்க நூல்களாகும்.

நமது பரதகண்ட மகான்கள் எல்லாச் சமயங்களினும் சிறந்ததென்று சைவசமயத்தை அனுஷ்டித்தனர் ; நாமும் அதையே சற்சமயமாக ஏற்கிறேம்.

இப்படி யிருக்க இங்கிலாந்து அமெரிக்கா தேசங்களிலுள்ள பாதிரிமார்கள்,"இந்தியர் அஞ்ஞானிகள், சமயக்கிரமம் தெரியாதவர்கள், நாங்கள் அவர்களைத் திருத்துகிறேம் " என்று பெரும் பொருள் வசூலித்து வந்து, இங்கே முத்தி பரசீவ பந்த லட்சணமும், முத்தி சாதனத்தையும் உள்ளபடி விளக்காத கிறிஸ்து மதத்தைப் பரப்ப முயன்று திரிந்தார்கள். இங்குள்ளவர்கள் முதலில் செவிசாய்க்கவில்லை. பிறகு இங்கிலீஷ் கல்வி கற்பித்து, உத்தியோக மயக்கங் காட்டிச் சிலரை மதம் மாற்றினர். மாறின பேதையர் இரண்டுங் கெட்டு அலைந்தனர். பாதிரியார் சிவாகமங்களையும் சிவனையும் தூஷித்தனர். சிவாகம ஞானமில்லாதவர்கள் அவர்களை எதிர்த்துப் பேசி வாயடக்காமல், அவர்களை உண்மையென்று நம்பி கிறிஸ்து மதத்திற் சேர்ந்தனர். நம்மவரும் இதெல்லாம் கண்டும் கேட்டும் சும்மா விருந்தனர் ; சிவ நிந்தை செய்வதும் சிவநிந்தையைக் கேட்டும் சும்மா விருத்தலும் அதி பாதகம் என்று வேதமும் புராணங்களும் திருவாசகம் முதலிய அருட்பாடல்களும் சொல்லுகின்றன. ஆதலால் பாதிரிமார்களின் செயலையும் கிறிஸ்து மதத்தின் குறைகளையும் கண்டித்தல் அவசியமா யிருக்கிறது. இங்கிலீஷ் அரசில் இருந்துகொண்டு இங்கிலீஷ்காரர் போற்றும் கிறிஸ்து சமயத்தை மறுத்தல் அபாயமாகும் என்பீர்களோ ? என்னையாளுடைய சிவபெருமான் இருக்கிறுன் ; அச்சமில்லை ; இன்னதனுல், இன்னபொழுது, இன்ன வினையும் என்றறிந்து கூட்டுவான் அவன். அரசனும் செய்வது

ஈசன் அருள்வழி. இறைவ னிச்சைக்கு மிஞ்சிய அரச னில்லை. அவனை யறியாமல் யாதொன்றும் நடக்காது. பரமத கண்டனமும் சைவ மத ஸ்தாபனமும் சிவபுண்ணியம். சிவபுண்ணியருக்கு அவர் அருள்புரிவார் என்பது நிச்சயம் ; ஆதலால் அச்சமில்லை ; மேலும் இங்கிலீஷ் அரசினர் கல்வி, அறிவு, நீதிகளிற் சிறந்தவர்கள் ; மற்ற சமயங்களுக்குக் கொடுமை செய்ய மாட்டார்கள். அநீதியும் பொருளாசையும் கொண்ட பாதிரிமார் மானிப்பாய் முதலிய இடங்களிலுள்ள நமது தேவாலயங்களுக்கு இடையூறு செய்ய முயன்றபோது இங்கிலீஷ் அரசினர், அவர்களைக் கண்டித்து "இன்னும் இவ்வாறு பிறசமயங்களுக்கு இடையூறு செய்ய முயல்வீர்களெனில், நாம் உங்களை இந்நாட்டினின்றே ஓட்டிவிடுவோம்" என்று அப் பாதிரிகளுக்குத் திக்கார தண்டம் செய்தமையே அதற்குச் சான்றாம்.

இனி இவ்வரசர்களால் நீரிற்குமிழி போன்ற நிலையில்லாததாகிய இந்தச் சரீரத்திற்கு ஓர் தீது வருமெனினும் வருக; சரீரம் சாதனம் ; முக்தி சாத்தியம் ; சிவபுண்ணியத்தில் உயிர் விடுதல் முத்தியே தரும். பிராணத் தியாகம் பண்ணியும் நாம் சிவநிந்தையைத் தடுப்பதனால் வரும் சரீர நாசத்தை ஏற்றுக் கொள்வோம். அதனால் முத்தியாகிய சாத்தியம் சித்திக்கப் பெறும் ; எனில் இச்சரீர சாதனம் இருந்தென் ? ஒழிந்தென்? பர தந்திரர்களுக்கு அஞ்சி சுவதந்திரபதியான பரமசிவன் பணியை விடமாட்டோம். வினை போனால் தினைப்போதளவும் நில்லாத உடலுக்கஞ்சி நித்திய முத்தி தரும் சிவபுண்ணியத்தை நாங்கள் நிறுத்தோம். பாதிரிமார்களின் சிவதூஷணத்தைக் கண்டிப்போம். அவர்களுடைய புன்மதமான கிறிஸ்துவ மதத்தை நிராகரித்துவிட்டு, சற்சமயமாகிய சைவத்தை ஸ்தாபிக்கும்படி முயலக் கடவோம். இச் சிவபுண்ணியம் அவசியம் செய்யவேண்டிய உலோகோபகாரம் ; இது சபலமாகும் பொருட்டு நீங்கள் உபகரிக்க வேண்டும்.

1. நீங்கள் எல்லாரும் தினந்தோறும் சந்தியா வந்தனம், சிவ பூஜை, சிவ தரிசனம் பண்ணும் போதெல்லாம் "கிறிஸ்து மதத்தை நிராகரித்துச் சைவஸ்தாபனம் செய்யும் இச் சிவபுண்ணியம் நிர்விக்கினமாக நிறைவேறும் பொருட்டு, அருள்புரியும்" என்று மனங் கசிந்துருகிச் சிவபிரானைப் பிரார்த்திக்க வேண்டும்.



2. இச்சிவபுண்ணியத்திற்கு உங்களுக்கியன்ற பொருளுதவியை லோபமின்றி, காலந்தோறும் செய்தல் வேண்டும்.

3. அப்பொருள் கொண்டு நாங்கள் அச்சிற் பதிப்பிக்கும் புத்தகங்களை நீங்கள் எல்லாரும் வாங்கி, சித்த சமாதானத்துடனே பல முறை வாசித்து உணர்தல் வேண்டும்.

4. நீங்கள் வாசித்ததைப் பிறரும் தெள்ளிதின் அறியும்படி உணர்த்தி, நமது சமயிகள் கிறிஸ்து சமயப் படுகுழியில் விழாதொழியும்படி, சாவதானமாகக் காத்துக்கொள்ள வேண்டும்.

5. பாதிரிகளாயினும் அவர்களைச் சேவிக்கும் பரிசனங்களாயினும் சைவதூஷணஞ் செய்து, கிறிஸ்து மதத்தைச் சாதிக்க வந்தால், அவர்களைப் பிரீதிப்படுத்தல் வேண்டுமென்னும் கருத்துச் சிறிதுமின்றி, எதிர்த்துநின்று, சைவத்தின்மேல் அவர்கள் ஏற்றும் தூஷணங்களைப் பரிகரித்து, அவர்களுடைய மதத்தைக் கண்டித்து, அவர்கள் வாயை அடக்கிவிட வேண்டும்.

6. நீங்களெல்லாரும் உங்கள் பிள்ளைகளை, பரசமயிகளோடு பரிசயம் பண்ணவிடாமல், தக்க பருவத்தில் சிவதீக்ஷைபெறுவித்து, அவரவர் பக்குவத்துக்கு ஏற்ப, சைவநூல்களை, தகுந்த ஆசிரியரைக்கொண்டு, ஐயந்திரிபறக் கற்பித்து, சைவாசாரங்களை அனுட்டிப்பித்தல் வேண்டும்.

7. நிகண்டு, இலக்கணம், தருக்கம் முதலிய கருவி நூல்கள், திருவள்ளுவர் குறள் முதலிய நீதிநூல்கள், தேவார திருவாசகங்களான திருமுறை நூல்களைக் கற்று,சிவதீக்ஷை பெற்று,மெய்கண்ட சித்தாந்தத்தில் வல்லவர்களாயும், குருலிங்க சங்கம பக்தர்களாயும் இருக்கும் அறிஞரை சைவப்பிரசாரகர்களாக ஊர்தோறும் அனுப்பி தேவாலயம், திருமடம் முதலிய பரிசுத்த ஸ்தானங்களில் வாரந்தோறும் சர்வஜனோபகாரமாகச் சைவப்பிரசாரம் செய்விக்க வேண்டும்.

இவ்வெழுவகையாலும் நீங்கள் இந்நன்முயற்சிக்கு உதவினல் தமிழ்நாடெங்கும் புறச்சமயமாகிய இருள்கெடச் சைவசமயமாகிய பேரொளி தழைத்தினிதோங்கும். பிறந்திறந் துழலும் பசுக்களாகிய பிறரைப் பொருளென மதியாது, பரமபதியாகிய சிவனது மகிமை யறிந்து, அவரே பரம்பொருளெனத் தெளிந்து துணிந்து அவரையே மெய்யன்போடு விதிப்படி வழிபட்டு நித்தியமான முத்தியை அடைவீர்கள். இச்சிவபுண்ணியமே எல்லாப் புண்ணியங்களினும் சிறந்தது. தேகம் நிலையற்றது ; உயிர் அதில் இருக்கும்போதே சிறிதும் காலந் தாழ்த்தாமல் சிவனருளை முன்னிட்டு இப்பெரும் புண்ணியத்தை நடத்தக் கடவோம்.

**"உற்றார் யாருளரோ உயிர்கொண்டு போம்பொழுது**
**குற்றாலத்துறை கூத்தரல்லால் நமக் குற்றார் யாருளரோ !**

**இங்ஙனம்,**

**பிரமாதீச வருஷம், தைப்பூசம்** **சைவப்பிரகாச சமாஜீயர்**

**யாழ்ப்பாணம்**

இனி, பாதிரி சைவர் விவாதத்தைக் காண்போம் :

## 1. சிவன் ஒருவனே

**பாதிரி** : நாங்கள் ஒரே கடவுளையே வணங்குவோம் ; நீ பலரைக் கடவுளென்று வணங்குகிறாய் ; சைவா! நீ அஞ்ஞானி.

**சைவன்:** பாதிரியே, நாங்கள் சிவன் ஒருவரையே பரமபதியாக வணங்குகிறோம் ; அவர், ஆன்மாக்கள் ஈடேறவே கருணை கொண்டு, ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், தோற்றல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்கிறார். அவர் முற்றறிஞர் ; வரம்பில் இன்பமுடையவர் ; இயற்கை யுணவினர் ; அவர் ஒருவரே என்று எங்கள் வேதம் கூறுகிறது. சிவனைத் தொழும் நாங்கள் சைவர். நீதான் 'யகோவா, பரிசுத்த ஆவி, ஏசுகிறிஸ்து' என்று பலரைத் தெய்வமென்று வணங்குகிறாய் ; நீயே அஞ்ஞானி.



**பாதிரி** : விஷ்ணு முதலிய தெய்வங்களை நீ வணங்குகிறாயே ?

**சைவன்** : ஆம் ; சிவனைத் தவிர மற்றவர்களை அவனடியார்களாகவே வணங்குகிறோம். ஆபிரகாம் மூன்று தேவரைப் பூமிக்கு நேராக வணங்கினான் ; எகோவாவின் சேனைத் தலைவனை ஏசு வணங்கினான் என்றும், தம் அன்பருக்குச் செய்தவைகள் எல்லாம் தமக்கே செய்தவைகள் என்று ஏசுநாதர் சொன்னதாகவும் உங்கள் விவிலிய நூல் சாற்றுகிறதே. எனில், எங்கள் அடியார் வணக்கத்தை நீங்கள் இகழ்வது மடமை.

**பாதிரி** : சைவனே, சிவனுக்கு உருவம் உண்டென்று உங்கள் வேதாகமம் சொல்லுகிறதே ; உருவ முடையவர் கடவுளாக முடியுமா ?

**சைவன்:** பரமபதியான சிவனுருவம் எலும்பும் தோலுமன்று; உங்கள் கிறிஸ்துவைப் போல் யோனிவாயில் பிறந்து,பெருந்துயர் அனுபவித்து இறந்த மனித உருவன்று ; வினையுடலன்று. சிவன் பிறந்ததில்லை ; உலகில் வாழ்ந்து இறந்தது மில்லை; அப்படிக் கதைகூடக் கேட்டறியோம். ஆன்மாக்களுக்குக் கருணைசெய்யவே ஐந்தொழில் புரியவும், வேதாகமங்களைத் தோற்றவும், அடியார்களுடைய தியானுதிகளுக்கு எளிதாகும்பொருட்டும் சிவபெருமான் அருட்சக்தி வடிவாக விளங்குகிறார். சிவன் உரு,அருளுருதான். அவ்வுருவால் அவனது கடவுட்டன்மைக்கு யாதும் குறைவில்லை—தெரிகிறதா ?

**பாதிரி** : உங்கள் சிவன் பார்வதியை மணந்தார், புணர்ந்தார், பிரிந்தார் என்று புராணங்கள் சொல்லுகின்றனவே ; பெண்ணாசை கொண்டவர் கடவு ளாவாரா ?

**சைவன்:** பாதிரியே,சிவம் ஆண் பெண் அலி யல்லாத நித்திய நின்மலப் பொருள். அந்த ஒரு பொருளையே ஆண்பாற் படுத்திப் பிதா என்றும் பெண்பாற் படுத்தி மாதா என்றும் வணங்குகிறோம். சூரியனும் கதிர்களும் போல, மாதா பார்வதி சிவனின் அருட்கிரணமே. புராணங்கள் சொல்லும் சிவ பார்வதி தத்துவத்தில் உட்பொருள் உண்டு. அதை, தக்க குருமார் மூலம் அறிய

வேண்டும். சிவதூஷணமும் கோ மாமிச பட்சணமுங் கொண்ட உனக்குச் சொல்ல அதிகாரமில்லை. உன் விவிலிய நூல் சாலோமோன் எழுதிய உன்னத கீதத்திலே, கிறிஸ்துவாகிய புருஷன் ஒரு பெண்ணைக் கண்டு மயங்கினு னென்றும், அவளுடன் கூடி மகிழ்ந்தான் என்றும், அவளுடைய அழகைப் புகழ்ந்தான் என்றும், அவளைப் பிரிந்தானென்றும், அதனால் அவள் துயருற்றுத் தேடித் திரிந்தா னென்றும் சொல்லுகிறதே. அதை நிந்தியாது நீ ஒப்புவதேன்? உன் குற்ற மறியாமல் சற்சமயமான சைவத்தைக் குற்றஞ் சொல்லப் புகுந்தாயே. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே.

## 2. புண்ணிய ஸ்தலம்

**பாதிரி** : கடவுள் எங்கு மிருக்கிறார் அன்றோ? நீங்கள் புண்ணியஸ்தலங்கள் என்று சில ஊர்களைச் சொல்லி, அவற்றிலேயே கடவுள் இருப்பதாக யாத்திரை செய்வது மூடக்கொள்கை யல்லவா?

**சைவன்** : பாதிரியே, ஓர் அரசன் ஆதிக்கம் நாடெல்லாம் உள்ளது. எனினும் அவன் குறித்த இடத்திலிருந்து குறை கேட்டு முறைசெய்வதுண்டு. அதுபோல், மஹான்கள் சில இடங்களில் தவம் புரிந்து, இறைவன் அருளைப் பெறுகிறார்கள்; அத் தலங்களில் தெய்வ சைதன்யம் நிறைந்துள்ளது; இறைவன் அப் பரிசுத்தமான இடங்களில் அன்பருக்கு அருள் பாலிக்கின்றான். அத் தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்குதல் புண்ணியம். உன் விவிலிய நூலும் தல யாத்திரையை ஒப்புகிறது. "மோசே, ஒரப் என்னும் தேவமலையைச் சேர்ந்தான்; எகோவா, நீ நிற்குமிடம் பரிசுத்தமானது, பாதரட்சையைக் கழற்றிவிட்டு வணக்கமாக வா என்றார்.......சீனயில் மோசே தேவ சந்நிதியிலேறினான். சீமோனிலே விளங்கும் எகோவாவைப் பாருங்கள்!....... அவனுடைய பரிசுத்த மலையில் நமஸ்காரம் பண்ணுங்கள்..நான் எங்கே என்று நமது பிதா கேட்டால், தாவீதின் ஊரான பெத்தல்ஹாமில் இடும் பலிவிழாவிற்குச் சென்றிருப்பதாகச் சொல்லும்...எகோவா எப்போதும் எருசலத்தில் வாசம் பண்ணி, நமது



சனங்களுக்கு ஆறுதலைக் கொடுத்தார். பரமண்டல பிதா பூமண்டல ராச்சியத்தை எனக்குத் தந்தார். எருசலத்தில் தமக்குக் கோயில் கட்டச் சொன்னார். எருசலத்தில் இருக்கும் எகோவா தேவன்; எனக்குப் பலி யிடும் வீடாக இந்த ஸ்தானத்தைத் தேர்ந்தேன். நான் மழை பெய்யாமல் வானத்தை அடைந்தாலும், நாட்டை அழிக்க வெட்டுக் கிளிகளை ஏவினாலும், சனங்கள் சாகக் கொள்ளை நோயை அனுப்பினாலும், இங்கே என் முகம் நோக்கிப் பிரார்த்திக்கும் அன்பர் முறையை வானத்தினின்று கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து ஆற்றுவேன். இங்கே செய்யும் பிரார்த்தனைகளுக்கு நான் உடனே செவிசாய்ப்பேன். என் கண்ணும் மனமும் எப்போதும் இதிலே தரித்திருக்கும்." பாதிரியே உனது விவிலிய நூல் இப்படிச் சொல்லுகிறதே. நீயும் தலயாத்திரை செய்கிறாயே. அப்படியிருக்க எங்கள் தலங்களையும் யாத்திரைகளையும் நீ இகழ்வது அறியாமை யன்றோ?

## 3. ஆலயம்

**பாதிரி**: நீங்கள் புண்ணியத் தலங்களிலே கோயில் கட்டி வணங்குவது வீண், விருதா!

**சைவன்** : பாதிரியே, மோசே கடவுளுக்குக் கோயில் கட்டி வணங்கினான்; இஸ்ரவேலின் தேவனை எகோவாவுக்கு தாவீது தொடங்கிய ஆலயத்தை அவன் மகன் கட்டி முடித்தான்; சாலமோன் எருசலத்தில் கோயில் கட்டினான். பிதாவின் ஆணைப்படி ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்தான் என்றெல்லாம் உனது வேதம் சொல்லுகிறதே. எங்கள் ஆலயங்களை நீ தூஷிப்பதேன்! சொல்லு.

## 4. இலிங்கம்

**பாதிரி** : நீங்கள் கல்லையும் செம்பையும் நட்டு இலிங்கம், மூர்த்தி என்று வணங்குவது அஞ்ஞானமல்லவா? கடவுளுக்குச் செய்யும் வழிபாட்டை அறிவில்லாத கல் செம்புகளுக்குச் செய்வதா?

**சைவன்** : ஒலி வடிவான எழுத்திற்கு வரிவடிவம் தந்தாலே நாம் படித்தறிய முடியும்; அதுபோல் அருவான கடவுளை உரு

வாகப் பாவித்து முன்னோர் வணங்கினர். இவ்வுருக்களில் உறுப்புக்கள் பூரணமாய் அமைந்தது வியக்தம் ; பீடமும் சிவலிங்கமுமா யிருப்பது அவ்யக்தம். தலையும் புயமும் இருப்பது வியக்தாவ்யக்தம். பால் பசுவின் உடம்பெல்லாம் பரவி யிருந்தாலும் மடியிலிருந்தே சுரக்கிறது . அதுபோல இறைவனருளும் நாம் ஒருமையுடன் வழிபடும் இலிங்கத்தின் வழியே சுரக்கும். உன் சமய நூலிலும், எகோவா, மோசேயை நோக்கி, சீத்தீம் மரத்தினாலே ஒரு பெட்டி செய்து,அதைச் செம்பொன் தகட்டினால் மூடி, அதன்மேல் செம்பொன்னால் செய்த கிருபாசயம் வைத்து,அதன் இருபுறத்திலும் பொன்னால் இரண்டு கெரூபி விக்கிரகங்களை வைத்து, அந்தப் பெட்டிக்குள்ளே தாம் எழுதிய சாட்சிப் பத்திரத்தை வைத்து சதாகாலமும் ஆராதனை பண்ண விதித்தாரே. "இந்தச் சாட்சிப் பெட்டியின் கெரூபிகளுக்கு மத்தியிலிருந்து எகோவா உலகை ஆளுகிறார் ; மனிதர்களே நடுங்குங்கள்" என்கிறதே பைபிள். தாவீதின் குமாரனாகிய சாலோமான் அந்தப் பெட்டிக்குக் கோயிற் கட்டி அநேகம் ஆடு கோழிகளைப் பலியிட்டு ஆராதனை செய்தானே. அந்தப் பெட்டியை அவமதித்தவரை எகோவா தண்டித்தானே. மேலும் கோதுமை அப்பத்தையும், திராட்சா ரசத்தையும் எசு தன்உடலும் இரத்தமும் எனப் பாவித்துக்கொள்ளச் சொன்னாரே. அப்படியிருக்க, நாங்கள் ஆகம விதிப்படி முறையாக வழிபடும் கடவுளுருவை எசுவதேன் ? கடவுள் கல்லன்று ; கல்லுருவில் உள்ள சைதன்ய பாவனை என்பதை நாங்கள் அறிவோம் ; வாயை மூடு......

* * *

இவை சில உதாரணங்கள். இவ்வாறே அபிஷேகம், நைவேத்தியம், தூப தீபம், வாத்தியம், புண்ணியகாலம், சிவாசாரியார், சரீரசுத்தி, ஆசௌசம், நிபந்தத் திரவியம், விவேசனம்,சிவ சின்னம், தியானம், நமஸ்காரம், சிவபுராணம், புண்ணிய தீர்த்தம், சுவர்ணதானம், அன்னதானம், தவம் முதலிய அனைத்தையும் பற்றிப் பாதிரிகள் செய்யும் தூஷணைகளை மறுத்து ஆதாரத்துடன் பதில் சொல்லி யிருக்கிறார் நாவலர்.



நமது துறவிகளைப் பிற மதத்தினர் அடிக்கடி கிண்டல் செய்வதுண்டு. "அனைத்தையும் விட்டு என் பின் வா; முற்றத் துறவாதவன் என் சீஷனாகமாட்டான். இரண்டு எசமான்களுக்கு யாரும் ஊழியம் செய்யமுடியாது ; அப்படியாயின் ஒருவனை நேசித்து மற்றவனைப் பகைப்பான். நீங்கள் தேவனையும் மம்மோனையும் ஒருங்கே சேவிக்க முடியாது. மாதா பிதா பந்துக்களைக்கூட விட்டு என்னுடன் வரவேண்டும் " என்றும் " பெண்ணைத் தொடாதே; காமத்திற்கு இடங் கொடாதே ; மனதால் நினைத்தாலும் மனப் புணர்ச்சியாம் " என்றும் உன் எசுநாதர் சொல்லுகிறாரே. அப்படியிருக்க எங்கள் துறவிகளை என் கிண்டல் செய்கிறாய் " என்று நாவலர் இடித்துக் காட்டுகிறார்.

" எசுநாதர் ஆடை நுனியைத் தொட்டவுடனே ஒருவனுக்குப் பெரும்பாடு விட்டது; அவர் நிழல்பட்டவுடன் நோய்விட்டது" என்கிறாயே. எங்கள் நாயன்மார் திருநீற்றால் வெப்பு நோய் தீர்த்தது முதலிய அற்புதங்களை இகழ்வதேன் ? கிறிஸ்துநாதர் கூறிய துறவை நீ அனுஷ்டிக்கிறாயா ? மண் பெண் பொன்னாசையைக் கனவிலும் வெறுத்தாயா? உங்களுக் குள்ளேயே பெருங்குறைகளிருக்கப் பிறரைத் தூஷிப்பதேன் ? நீங்கள் குற்றம் சுமத்துவதுபோலச் சுமத்தப்படுவீர்கள். நீங்கள் அளக்கும் அளவினால் உங்களையும் பிறர் அளப்பார்கள். உன் கண்ணிலுள்ள துரும்பை நீக்காமல், பிறர் கண்ணில் தைத்த சிராயை நீக்குவது எப்படி ? என்றெல்லாம் எசுநாதர் சொல்லுகிறாரே. ஆசையை விடவேண்டும் என்று நீளப் பேசியென்ன ? பிறருக்குப் புத்தி சொல்லும் நீங்கள் அவ்வாறு நடவாதது என்னை ? இஃதெல்லாம் பணத்தைச் சம்பாதித்துப் பெண்டிர் பிள்ளைகளுடனே உண்டுடுத்து வாழ எடுத்த வேஷம் என்று காண்கிறது என்று விளாசுகிறார் நாவலர்.

சனங்களே ! மனிதப் பிறவி அரிது ; எத்தனையோ பிறவிக்குப் பிறகு மானிடம் வருகிறது. அதிலும் வேதாகமங்கள் விளங்கும் பாரததேசத்தில் பிறப்பது அரிது; அதிலும் சைவராகப் பிறத்தல் அரிது. இப்பிறப்பின் பயன் நல்லாசிரியனை அடைந்து சிவதீக்ஷை

பெற்று, புருஷார்த்தமாகிய நித்தியமுத்தியை அடைதலேயாம். அதைவிட்டு மதிமயங்கிப் பரசமய துர்வாசனையால் சைவசமயத்தை அலட்சியம் செய்து வாணுளை வீணுளாகப் போக்கி, நரகில் விழ உபாயம் தேடுகின்றீர்களே ! சிற்றின்பப் பொருளேயே பொருளென்று தேடி யலேகிறீர்களே! சமய விரோத மில்லாமல் காமம், கொலே, களவு, பொய்ச்சான்றில்லாமல் நியாயமான வழியில் பொருள் தேடியுண்டு,சற்சமயமான சைவத்தைப் பேணுங்கள். சிவதூஷண சிவசாத்திர தூஷணை செய்யும் பாதிரிகளால் மருட்டப் பட்டுப் பரசமயப் படுகுழியில் வீழ்ந்து புகழும் தேட முயன்று அதிபாதகர்களாகின்றீர்களே—இந்நூலேப் பன்முறை படியுங்கள்; சைவத்தின்மேல் பாதிரிமார் ஏற்றும் தூஷணைகளேப் பொய்யென்றுணருங்கள். யாசகம் செய்தாவது பிழையுங்கள்; பர சமயம் புகுந்து பணந் தேடாதீர்கள். உலகத்தீரே ! எப்போதாயினும் கூற்றுவன் வருவான். இச்சரீரம் உள்ளபொழுதே சைவவொழுக்கம் போற்றி முத்தியடைய முயலக் கடவீர்கள்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு படிகளேறி, சுத்தசிவானந்த முத்திபெற வழிகாட்டுவது சைவசமயம் ஒன்றே. இச் சமயத்தில் மற்றெல்லாச் சமய தத்துவங்களும் சோபனபக்ஷமாக அடங்கியுள்ளன. இந்த அரிய சமயத் தத்துவத்தை மாணிக்க வாசகர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், காரைக்கா லம்மையார், தாயுமானுர், பட்டினத்தார், அரதத்த சிவாச்சாரியார், அப்பைய தீக்ஷிதர் போன்ற மஹான்கள் அறிந்து தெளிந்து உலகிற்குப் பல நூல்களாலும் பாடல்களாலும் உபதேசித்துச் சென்றனர். உலக சமரசத்திற்கு மிகவும் பொருத்தமானது சைவம். இதற்கும் பைபிளுக்கும் பல கருத்துக்கள் ஒத்துள்ளன. வள்ளுவர் குறள் சைவசமயத் தெளிவே ; அதில் பைபிள் கருத்துக்கள் மல்கியுள்ளன. நம்மவர், சமய ஞானத்திற்காக வேறெவரிடமும் தலே வணங்கத் தேவை யில்லே. நம் இரத்தத்தில் சமய உணர்ச்சி உயிர்க்கிறது. நமது சமயத் தத்துவத்தை அறியாமல், பயிலாமல் நாமே அதைப் புறக்கணித்து, அனுட்டானத்திற்கு ஒத்துவராத பர சமயம் புகுதல் கொடிது ! கொடிது !



நாவலர் இக்கொடுமையைத்தான் கடுமையாகக் கண்டித்தார். அவர் எழுத்தில் ஒரு சொல் கூட மிகையில்லே; எல்லாம் அளவு, பொருத்தம், திருத்தம் ! நாவலர் வரலாற்றைப் படிக்கும் ஒவ்வொருவரும் சைவ சித்தாந்த உண்மையை உணர்ந்து உலகில் பரவச் செய்வார்களாக !

# 34. யாருக்கும் அஞ்சேன்

**சைவ**தூஷண பரிகாரம் சைவர்களுக்குப் பெருமகிழ்ச்சியையும் கிறிஸ்துவர்களுக்குப் பெருங் கலக்கத்தையும் விளேவித்தது. இலங்கையின்சைவமதக்கோட்டை யாழ்ப்பாணம்;அதைக் கிறிஸ்து மத மாக்கிளுல் மற்றப் பகுதிகள் எளிதாக வசப்படும் என்றே பாதிரிமார்கள் ஏராளமான பணச்செலவில் போதகபோதகிகளேத் தயாரித்து வேலே நடத்திஞர்கள். கொழும்பு, கண்டி முதலிய இடங்களேவிட இங்கே பிரசாரம் பலம். நல்லூர், கோப்பாய், புத்தூர், வேம்படி, வட்டுக்கோட்டை, மானிப்பாய், உடுவில்,நெல்லிப் பிழை முதலிய இடங்களிலெல்லாம் ஏராளமான தமிழர் மதம் மாறி நமக்கே பிரதிவாதிகளாகிச் சைவதூஷணை செய்தனர். “ பாதிரிமார் பரமசாதுக்கள், நமது கண் திறக்கவே ஆகாசத்திலிருந்து குதித்து வந்த வெள்ளேத் தெய்வங்கள், பரிசுத்த மானவர்கள் ; அவர்கள் தரும் பைபிள்களே உண்மை வேதம் ; சைவம் வைணவம் எல்லாம் சுத்தப் புராணப் புரட்டு, பொய்க் கதை, மூடக் கச்சந்தி, குருட்டு நம்பிக்கைக்கு இருட்டு வழி. நம்மவர் அநாகரிகர், நமக்கு நாகரிகமளித்து,சட்டைபோட்டு இங்கிலீஷ் படிப்பித்து, ஜோராக உத்தியோகம் செய்யக் கற்பித்தவர் பாதிரிமார்” என்றெல்லாம் நம்மவரும் பின்பாட்டுப் பாடி வந்தனர். கிறிஸ்து மதத்தைப் போற்றி ஏராளமான பிரசுரங்கள் வந்து குவிந்தன. நமது மதத்தைத் தூஷித்து, குருட்டுவழி, மும்மூர்த்திகளின் லட்சணம், சுப்பிரமணிய சாமியின் குட்டு முதலிய நூல்கள் ஏராளமாக வந்தன. நம்மவரும் இவற்றையெல்லாம் கண்டு கேட்டுச் சும்மா விருந்தனர்.

இத் தூஷணங்களுக் கெல்லாம் சரியான சவுக்கடி கொடுத்துச் சைவத்தின் மாண்பை நிலைநாட்ட எழுந்தவர் நாவலரே. அச்சிலும் மேடையிலும் அவர் சிவ க்ர்ஜனை செய்தார். பாதிரியே, " உன் மதம் இப்படி ; நீ மதம் மாற்றும் விநோதம் இப்படி " என்று அவர் காரசாரமான நகைச் சவுக்குக் கொடுக்கும்போது இப்புறம் சிரிப்பும் அப்புறம் எரிப்புமா யிருக்கும். ஹிந்து பாஸ்டர் என்னும் பத்திரிகை நாவலரைப் பலமாகக் கண்டித்தது. பகைவர், நாவலர் பின்னே தூற்றினர்; முன்னே வர அஞ்சினர். எங்கள் ஐயரை, " பாதிரியே என்று ஏகவசனத்தில் எப்படிச் சொல்வாய் ? பார்; பிராது போடுகிறோம் " என்று பலர் மிரட்டினர். ஐயா, " இந்த மிரட்டிற்கு நான் அஞ்சேன் ; பாதிரி முன்னின்று மொங்கான் போடுவான் ; நான் பின்னின்று மொங்கான் போடுவேன் " என்றார் சைவப்பிரகாசர்.

சைவதூஷண பரிகாரம் எதிரிகள் சினத்தைக் காட்டுத்தீயாகக் கிளப்பிவிட்டது. அந்நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பெற்று இலண்டன் பாதிரிகளுக்கும் எட்டியது. 1855ஆம் ஆண்டில், வெஸ்லியன் சர்ச்சு அறிக்கையில் இந்நூலைக் குறித்தனர். இது நமது சமயப் பிரசாரத்தைக் கெடுத்துவிடுமே என்று பாதிரிமார் பயந்தனர். இதை எழுதியவர் யார் என்று விசாரித்தனர்; ஆள் தெரிந்தது. உடனே கடிதங்கள் பறந்தன.

பர்ஸிவலுக்குப் பிறகு யாழ்ப்பாணம் வெஸ்லியன் மிஷினுக்குப் பாதிரியாக வந்தவர் **ஜான் வால்டன்.** அவர் சைவதூஷண பரிகாரத்தைப் பற்றி நாவலருடன் கடிதக் கண்டனம் நடத்தினார். கடிதங்கள் ஆங்கிலத்தில் உள்ளன. நாடெல்லாம் நாவலர் எனப் போற்றும் புலவரை, பாதிரியார் C. ஆறுமுகம் என்றே முகவரியிட்டார். 'இது எனக்கல்ல' என்று அவர் மறுத்திருக்கக் கூடும். அப்படி மறுத்தால், ஆள் ஒளிகிறான் என்று எதிரிகள் எண்ணக் கூடும் ; ஆதலால் நாவலர் கடிதங்களைப் பெற்றுக் கொண்டு, தாமும் ஆறுமுகம் என்றே கையெழுத்திட்டு எழுதினார். பர்ஸிவலிடம் பண்டிதராக விருந்த " பழைய ஆறுமுகம் " என்று வால்டன் நினைத்தார் ; ஆறுமுகத்தின் வேலைக் கண்ட பிறகு தணிந்தார்.



கடிதங்கள் ஆங்கிலத்தில் உள்ளதால், சாரத்தை மட்டும் தருகிறேன்.

வால்டன்

18—1—1856

**பிரியமுள்ள ஐயா,**

"சைவ தூஷண பரிகாரம்" என்ற நூல் ஒன்று எங்கள் ஏஜண்டுகள் மூலம் கிடைத்தது. அதன் ஆசிரியர் தாங்கள் என்கின்றனர் சிலர்; சிலர் இதை மறுக்கின்றனர். தயவு செய்து இதன் ஆசிரியர் தாங்களா, வேறொருவரா, பலரா; பெயர் விவரங்களைக் குறித்தனுப்புங்கள்.

**பிரியமுள்ள ஐயா,**

**இன்று தாங்கள் எழுதிய கடிதம் வந்தது. சைவதூஷண பரிகாரம் ஒரு வாரத்திற்கு முன்னேதான் தங்கள் கைக்கு வந்ததைப் பற்றி ஆச்சரியப்படுகிறேன். இதுகாறும் அப் பிரசுரம் தங்கள் பார்வைக்கு வராததைப் பற்றி மிக்க வருந்துகிறேன். இந்நூல் ஒரு வருஷமாகச் சுற்றிக்கொண்டிருக்கிறதே ; தங்கள் ஆண்டறிக்கையிலும் நூலின் குறிப்புள்ளதே ; நூலில் ஆசிரியர் பெயர் போடவில்லை ; காரணம், ஆசிரியர் பொதுநலத்தையே விரும்பினர் ; தமது புகழை யன்று. ''அதன் ஆசிரியர் நீர் என்கின்றனர் சிலர் ; அதை மறுக்கின்றனர் சிலர் '' என்றெழுதினீர்கள். மறுப்பு தப்பு ; நியாயமற்றது ; நன்றாக விசாரித்துப் பாரும். நானே அந் நூலை எழுதினேன் என்பதை அறிவீர். நூலைப் பற்றி ஏதாயினும் கேட்கவேண்டுமானல் இதோ தயாராயிருக்கிறேன் ; நட்புரிமையுடன் பேசலாம்.**

**18—1—1856 தங்கள் நன்றியுள்ள,**

**—ஸி. ஆறுமுகம்**

இக் கடிதத்துடன் நாவலர் வெஸ்லியன் மெதாடிஸ்டு ஆண்டறிக்கை விஷயத்தையும் குறித்தனுப்பினார். பாதிரியார் பார்த்தார். அறிக்கையின் சுருக்கமாவது :

"இவ்வாண்டின் மகத்தான சம்பவம் சைவதூஷண பரிகாரம் என்ற தமிழ்நூல். அது அசாதாரணமான இலக்கியம். கிறிஸ்து மதத்தை எதிர்த்து ஆணித்தரமாகச் சைவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் நூல். அது முற்றிலும் புதிய தந்திரத்தைக் கையாண்டு நமது சமயத்தைத் தாக்குகிறது. அது,கிறிஸ்து மதம் முறையற்றது ; பயனற்றது என்றும் சொல்லவில்லை ; சைவத்தின் சடங்குகளையும் தூக்கிப் பேசவில்லை. இரண்டிற்கும் நடுவே இரு சமயங்களையும் எதிரெதிரே வைத்து கிறிஸ்து ஆகமத்திற்குச் சரியான சைவாகமங்களைக் காட்டி அதற்கு இது குறைவொன்றுமில்லையே ; சைவத்தைவிடக் கிறிஸ்து மதத்தில் என்ன விசேஷம் இருக்கிறது என்பதை எடுத்து அலசித் தருகிறது. முழுக்கு, தீர்த்தம், பிரார்த்தனை, விரதம், யாத்திரை, லிங்காராதனை எல்லாம் நம்மிடமும் உள்ளதென்று பைபிள் ஆதாரத்துடன் காட்டுகிறது. இருபது விஷயங்களை அது அலசுகிறது. முதல்தரமான மூளைதான் இதை எழுதியிருக்க வேண்டும். இந்நூல் நமக்குப் பெருங்கெடுதல் செய்கிறது."

பாதிரி வால்ட்ன்

ஸி. ஆறுமுகம் எஸ்குயர்

பிரியமுள்ள ஐயா,

என் கடிதத்திற்குத் தாங்கள் எழுதிய பதில் வந்தது. நூலை நான் எழுதவில்லை யென்று தாங்கள் எழுத வேண்டும் என்றே அக் கடிதம் அனுப்பினேன். ஏனெனில் தாங்கள் மிஷினரிகளுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறீர்கள் ; அவர்களுடன் நீண்ட காலம் பழகி யிருக்கிறீர்கள். தாங்கள் இவ்வளவு கடுமையான வசை எழுதுவீர்கள் என்று நான் நம்பவில்லை. நானே எழுதினேனென்று தாங்களே அறிவித்ததைக் கண்டு மிக்க விசனிக்கிறேன். இருந்தாலும் தங்கள் கடிதம் தனதா யிருக்கிறது (Private). தங்கள் உத்தர வில்லாமல் தங்கள் பெயரைப் பகிரங்கப்படுத்த நான் விரும்பவில்லை. தாங்களே நூலின் ஆசிரியர் என்பதை நான் வெளியிட அனுமதி



யளிக்கிறீர்களா ? சிலர் சந்திரசேகரம் முதலிய பெயர்களைக் குறித்தார்கள். இப்போது தாங்களே என்பது தெளிவாய் விட்டது.

21—1—1856 தங்கள்,

—ஜான் வால்டன்

*இக்கடிதத்திற்கு நாவலர் பத்து நாட்கழித்து 31-1-1856ல் பதிலளித்தார்—புத்தாண்டுப் பரிசு !*

பிரியமுள்ள ஐயா,

தங்கள் கடிதத்தை இன்றே கவனித்துப் பதில் எழுத முடிந்தது ; தாமதத்திற்கு மன்னிக்கவும். தங்கள் குறிப்புகளுக்கு இவையே பதில் :

1. இந்நூல் பரமபதியின் அருளால், அவர் பெருமை விளங்கவே எழுந்து, அதன் வேலையை நன்றாகவே செய்கிறது. அடியேன் எதிர்பார்த்த நன்மைகள் விளைந்தன. எனினும் இத்தகைய நூல்,மிஷினரிகள் வெளியிட்டிருந்தால் எவ்வளவு பிரபலப்படுமோ அவ்வளவு பிரபலமாகவில்லை. கொடும் பகைவர் கூட அது செய்துவரும் காரியத்தை ஒப்புகிறார்கள். சென்ற ஆண்டு இங்கிலாந்தில் வெளியிட்ட வெஸ்லியன் மெதாடிஸ்டு அறிக்கை இருபதாம் பக்கத்தைப் பாருங்கள். அதுவே நூலின் பெருமைக்கு அத்தாட்சி. அது எதிர்க்கட்சிக்குக் கேடு (Mischief) செய்ய, தன் கடமையை நன்கு நிறைவேற்றுகிறது ; என் அன்பிற்கும் கருத்திற்கும் மிக்க அருமை யாகிறது. அதனால் தங்களுக்காக என் பெயரை எப்படி மறுக்க முடியும்? "ஒருவன் தனது நாயகனுக்கு நன்றியுள்ள குலபத்தினியைக் காமுற்றுத் திருடப் பார்க்கிறான் ; பத்தினி அவனை வெறுத்து மறுத்தோட்டுகிறாள். அவன் சினங்கொண்டு, பத்தினிமேல் அபாண்டமான அவதூறுகளைக் கட்டிவிடுகிறான் ; கணவனிடமும் கோளேற்றுகிறான். ஆனால் கணவனுக்கு அவனுடைய வன்மமும், தன் மனைவியின் கற்புறுதியும் தெரிய வருகிறது. அதனால் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள அன்புரிமை

அதிகமாகிறது. அந்தப் பத்தினி தூர்த்தனுடன் விபசாரம் செய்ய நீர் சம்மதிப்பீரா ? மாட்டீர் அன்றோ ?" இதுவே நூலைப் பற்றிய என் உணர்ச்சி.

(சைவசமயத்தைப் பரசமயம் சோரம் செய்வதைத் தடுத்தேன் என்ற கருத்து)

2. நான் நீண்ட காலம் பாதிரிமாருடன் பழகி யிருப்பதாகச் சொன்னீர்கள். வந்தனம். அதனால் அவர்கள் போதனைமுறை களையும் மதமாற்று வேலைகளையும் நன்றாக அறிந்து கொண் டிருக்கிறேன். இந்த அறிவாலேதான் நான் அவர்கள் பொறியில் சிக்காது தப்பினேன்; எனது நாட்டவரும் வழி தப்பும்போது எச்சரித்துத் தப்பச் செய்தேன். மிஷினரிகள் உறவின் பயன் இதுவே. இரண்டாவது, நான் கொஞ்சம் ஆங்கிலம் கற்றேன். பர்ஸிவல் இதை அறிவார். நான் ஞானஸ்நானம் பெற்றிருந் தால் மாதம் பத்துப் பவுன் (ரூபா 150) சம்பளம் பெற்றிருப் பேன்; அஃதில்லாததால் எனக்குக் கிடைத்தது மாதம் முப்பதே ரூபா தான். " போதுமென்ற மனமே பொன் " என்றிருந்து விட்டேன். மிஷினரிகளுடன் நீண்டு பழகியதால் என் மதத் தைப் போற்றக்கூடா தென்று தங்கள் கடிதம் குறிக்கிறது. எந்த மனிதனுக்காவது அஞ்சி என் சமயத்தை மறப்பேனா ? சிவ சிவா ! பிறருக்குப் பயந்து பொய்யைப் புகழ்வேனா; மெய்யைப் போற்றாதிருப்பேனா ? எதிரிகளின் சூழ்ச்சிகளுக்கும் கேவல மான வசைகளுக்கும் அஞ்சேன் ; என் கடமையைக் காத்தே தீருவேன். அறிவு பெருகிய தற்காலத்திலும் மிரட்டுருட்டுகளுக்கு நான் பயப்படுவேனா ?

நான் வசை கூறியதாகவும், வசை—ஆசிரியர் மதிப்பிழப் பார் என்றும் கூறினீர்கள் ; தங்கள் கருத்து எனக்குப் புலப் படவில்லை. நூலில் வசைப்பகுதி புண்படுத்தும் பகுதி எதுஎன்று தாங்கள் காட்டினால், நான் சரியான பதில் கொடுக்கிறேன். கௌரவம் பாராட்டாமல் தங்கள் கடமையைச் செய்யுங்கள் ; தங்கள் சமயதூஷணைகளைத் தாங்கள் எதிர்க்க வேண்டியது கடமை. நூல் செய்யும் கேட்டைத் தடுக்க உங்களால் ஆனதெல் லாம் செய்து பாருங்கள். நூலில் பெயர் போடாதது எனது நாணமே. நான் விளம்பரத்தை விரும்பவில்லை யாதலால், தக்க சமயம் வருமட்டும் என் பெயரைப் பகிரங்கப்படுத்தாமல், மனத்தில் வைத்திருங்கள். மன்னியுங்கள் ; கடிதம் நீண்டு போனது.



31—1—1856 தங்கள் நம்புதலுள்ள,

—ஸி. ஆறுமுகம்

*நாவலர் 26-5-1856 வரையில் காத்திருந்தார் ; பதிலில்லை. உடனே ஒரு கடிதம் எழுதினார் :*

பிரியமுள்ள ஐயா,

ஜனவரி 31-ஆம் தேதி நான் எழுதிய கடிதத் தில், நீங்கள் புகார் செய்தபடியே சைவதூஷண பரிகாரத்தில் புண் படுத்தக்கூடிய வார்த்தைகளையும் வசைகளையும் காட்டும் படி கேட்டிருந்தேன். காட்டினால் நான் தக்க சமாதானம் சொல்வேன்.

தயவுசெய்து கூடிய சீக்கிரம் பதில் எழுதக் கோருகிறேன்.

26—5—1856 தங்கள் நம்புதலுள்ள,

—ஸி. ஆறுமுகம்

*கப்சுப் ! பதிலில்லை. நாவலர் ஒரு மறுப்பெழுதினால் அதற்குப் பிரம்மாவால் கூட எதிர்ப்பெழுதமுடியாது—அவ்வளவு உறுதி யாக அவர் சொற்கள் அமைகின்றன.*

# 35. சுப்பிர போதம்

"வண்ணார் பண்ணை சிவன் கோயிலில், வெள்ளி தோறும் கூட்டம் ! ஆறுமுக நாவலர், ஆள் பார்வையானவர் ; அறி வாளி, படித்தவர் ; மதிப்பானவர் ; மாசற்ற சன்மார்க்கி. அவர் பேச்சில் ஜனங்கள் மனதைப் பறிகொடுக்கிறார்கள் ! அவருடன் கார்த்திகேசர் என்ற பிராமணரும் சேர்ந்து பேசுகிறார். இவர்கள் கிறிஸ்து மதத்தைக் கண்டிக்கிறார்கள்; இந்து மதத்தை உணர்ச்சியு

டன் போற்றுகிறார்கள்" என்று ஹிண்டு பாஸ்டர்ஸ் (Hindu Pastors) என்ற பத்திரிகை அடிக்கடி ஓலமிட்டு, நாவலர் முயற்சிகளை எதிர்த்து வந்தது. சரி, இந்துக்களைச் சும்மாவிடக்கூடாது என்று கிளம்பினார்கள் கிறிஸ்துவர்கள். நம்மைக் கேலிசெய்பவர்களுக்கு மிகவும் எளிதுதானே. இதோ முருகன், வள்ளி தெய்வானையுடன் மயிலேறி உலாவுகிறான்—இரட்டைப் பெண்சாதிக்காரன். அவனைப் பற்றியோ, சிவனுடைய தாருகாவன லீலையைப் பற்றியோ கொஞ்சம் கிண்டல் செய்தால் போதும்; புராணங்களைச் சிறிது அப்படி இப்படிப் புரட்டி எல்லாம் புரட்டு என்றாலே போதுமே; அறியாதவர்கள் உடனே எதிர்ப்பட்டாளத்துடன் கூடிக் கிண்டல் வேலை கற்றுக்கொண்டு நம்மையே நகையாடுவார்கள். இந்தத் தந்திரமும் நடந்தது. வந்தது **சுப்ர தீபம்** !

கந்தசுவாமி கோயில் திருவிழாவைப் பற்றிய கிண்டல் நையாண்டி புறப்பட்டது. " கந்தசாமி கடவு ளில்லை; அவர் ஆலயத் திருவிழாக்களில் பாபமே விளைகின்றன. வித்தகனியால் விளங்கும்; மனிதன் குணம் அவன் ஒழுக்கத்தால் விளங்கும்; கடவுள் மகிமை அவருடைய கிரியையினால் பிரசன்னமாகிறது. கந்தசாமி மானிடர்போலப் பிறந்தார்; தெய்வயானையை மணந்து பிறகு, கன்னி வள்ளியைக் காமுற்றுக் கெஞ்சினார்; அவள் உடன்படவில்லை. யானைத்தமையனாரைவிட்டுப்பயமுறுத்தி அவளைப்புணர்ந்து கடத்திச்சென்றார். ஒரு சாதாரண மனிதன்கூட இந்தச் செயலில் இறங்க மாட்டானே. இப்படிச் செய்யும் கடவுள் நம்மைக் காமக் குரோதங்களிலிருந்து காக்குமா?" என்று பாதிரிமார் வெளுத்து வாங்கினார்கள். நாவலர் சும்மாவிட்டாரா? நாவலர் **சுப்பிரபோதம்** என்ற அறிக்கை விட்டார்: " இதெல்லாம் நமது தெய்வமூர்த்திகளின் தத்துவ மறியாதவர்கள் பிதற்றல். ஆழ்ந்த ஞானிகளுக்கே சிவாகம, குமார தந்திர ரகசியங்கள் விளங்கும். நம்மவர்கள் கூடக் கந்தபுராணத்திற்குச் சிற்றின்பப் பொருளையே கூறுவதால் பிற சமயத்தினர் கேலி செய்ய இடமாகிறது.

கந்தன் என்பது சிவக்கனல்; சிவனுடைய சக்திக் கனலே கந்தன் உருவெடுத்து அசுர பலத்தை வென்றது; கடவுளுக்கு



மூன்று சக்திகள் உண்டு : **இச்சா சக்தி**, ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்கும். **கிரியா சக்தி**, ஆன்மாக்களின் பக்குவா பக்குவம் அறிந்து கர்ம பலன்களை அனுபவிக்கச் செய்தே இருவினை யொப்பை நல்கும். **ஞான சக்தி**, தனுகரண புவனபோகங்களைத் தோற்றுவித்து, ஆன்மாவை மலபரிபாகப் படுத்தும் அறிவாகும். இம்மூன்று சக்திகளே புராணத்தில் வள்ளி, தெய்வானை, வேலாயுதம் என்று சொல்லப் பெற்றன. வள்ளி திருமணப் பொருள், சிவக்கனல் இச்சா சக்தியைப் பொருந்தி, தாமச ராக்ஷஸத் திமிரான சூரபத்மனை ஒழிப்பதேயாம். இந்த உட்பொருள் அறியாத காமுகர் பிறமாதரைச் சோரம்செய்து, நாமும் கந்தசாமி செய்தபடியே செய்தோம் என்கிறார்கள். திருவிழாக்களில் நடக்கும் தாசி, சதுர், சங்கீதம், வாணவேடிக்கைகளைக் கண்டு பாதிரிமார் இங்கே கந்தனுக்கும் காமுகர்க்கும் வாய்ப்பு என்று இகழ்கிறார்கள். நாமும் திருந்தவேண்டும். ஆசாரிய லட்சணமில்லாத பிராமணரைக் கோயில் பூசைசெய்ய விடக்கூடாது; தாசிகளை, கோயில் ஆதரிக்கக்கூடாது. உருத்திரகணிகை அல்லது தேவதாசி என்றால் சிவனுக்கே ஆளாகிச் சைவ ஒழுக்கம் பூண்ட நல்லாள் என்பதே கருத்து; இக் காலத் தாசிகள் மது மாமிச முண்ணும் விலைமாதர். கோயிலில் தேவார திருவாசகங்கள் முதலிய பாடல்களை முழங்க வேண்டும். நம்மவரும் அறியாமல், பிறமதத்தரும் அறியாமலே நம் ஐதீகங்கள் கேலிக்கிடமாயின" என்று கண்டனச் சவுக்கைப் பாதிரிமாரை நோக்கி ஒரு சுண்டுச் சுண்டி நம்மவர் அறியாமைக்கும் ஓர் அடிகொடுத்தார் நாவலர்.

சுப்ர தீபம் எழுதிய இந்து வாலிபர் சுப்ரபோதம் படித்து மனம் மாறினார்; அவர், பிழைப்பிற்குக் கிறிஸ்துவ ரானவர். சென்னையில் பி. ஏ. தேறித் தக்க உத்தியோகம் பெற்றுச் சைவராகி, ஆயுள் முழுதும் சைவப் பிரசாரமே செய்து நாவலரிடம் பக்தி விசுவாசம் வைத்திருந்தார்.

இந்த அச்சமற்ற சண்டமாருதத்தால் நாவலருக்கு இருபுறமும் பகைவர் முளைத்தனர். நாவலர் என்றாலே பாதிரிமார் சினந்தனர். இவர் உபதேசங்கள் மாணவர் உள்ளத்தைக் "குப்"பென்று

பற்றிச் சிவக் கனலை ஊதிவிட்டன. மாணவர் சைவச் சின்னம் அணிந்தே பாதிரிமார் பள்ளிக்கூடங்களுக்குச் சென்றனர். திருநீறிட்டவரைப் பள்ளிக்கூடத்தில் நுழையத் தடைசெய்தனர் பாதிரிமார். மாணவர் நாவலரிடம் முறையிட்டனர். நாவலர் உடனே ஓர் ஆங்கில—தமிழ் வித்தியாலயம் நாட்டி, மாணவரை அதில் படிக்கச் சொன்னார். மாணவர் மகிழ்ச்சியுடன் படித்தனர். பாதிரிமார், இந்தத் தமிழ்ப் புலவருக்கு எவ்வளவு தைரியம் என்று வியந்தனர். நாவலர் மிகவும் கஷ்டப்பட்டு ஆங்கிலப் பள்ளியை நடத்தினார்; ஆனால் அது நீடிக்க வில்லை. அதற்குள் நிலைமை மாறிப்போனது. பாதிரிமார் சமரசமாக விஷயத்தை முடித்துவிட்டனர். இவ்வாறு நாவலர் கிறிஸ்துமதத்தை எதிர்த்துப் பலமான வாய்ப்போர் புரிந்து அஞ்சா நெஞ்சுரத்தாலும், எல்லையற்ற அன்பாலும் சைவ ஒளி பரப்பினார். யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம் பாதிரியா யிருந்த ஈ. ஜே. ரோபின்ஸன் என்பார் நாவலர் பாலபாடம் முதலிய நூல்களை இங்கிலாந்தில் பார்த்து மெச்சி "ஹிந்து பாஸ்ட"ரில் எழுதினார்.

**Ceylon Patriot (இலங்கை யன்பன்) என்ற பத்திரிகையில் அடியிற் காணும் செய்தி வந்தது. 30—11—1872**

**1853-ஆம் ஆண்டு வண்ணார்ப்பண்ணையில் சைவப்பிரகாச சபை ஏற்பட்டது; 1854-ல் அஃது சைவதூஷண பரிகாரம் வெளியிட்டது. ரெவரண்ட் க்ரிபித் (Rev. Griffith) (இவர் பல்லாண்டுகள் யாழ்ப்பாணத்தில் பாதிரியா யிருந்து அரிய பணி செய்த அன்பர்) 1855-ம் ஆண்டு மெதாடிஸ்ட் ஆண்டறிக்கை இருபதாம் பக்கம் அந் நூலை மெச்சினார். ரெவரண்டு ரோபின்ஸன் Hindu Pastors ல் குறித்தார். இந்நூலுக்கு ஸுப்ரதீபம் என்னும் மறுப்பு எழுதிய கிறிஸ்துவர் மிக வருந்தி அண்மையில் சைவராகிச் சைவத்தின் உயர்வை உணர்ந்து போற்றுகிறார்.**

# 36. சைவப் பிரகாசர்

நமது நாட்டின் தெய்வக்கலை, வேதம் ஆகமம் ஆகிய இரண்டு நூல்களில் அடங்கும். வேதம் இலக்கணம், ஆகமம் இலக்கியம் போலும்; வேதம் மூளை, ஆகமம் உள்ளம் போலும். தந்தையும் தாயும் போல் இரண்டும் சேர்ந்தே நமது பாரத நாகரிகத்தை உண்டாக்கின. வேதத் தெளிவே ஆகமம். அஃது அனுஷ்டான நூல். ஜீவன், சிவத்துவம் பெறவே அது படிப் படியாகச் சாதனங்களைச் சொல்லுகிறது. அதன் சாதனங்கள்— சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு அங்கங்களை யுடையது. இவற்றை நாவலர், எல்லாரும் தெரிந்துகொள்ளும்படி தெளிவாக விளக்கி நூல்கள் எழுதியிருக்கிறார். நான்காம் பாலபாடம், சைவ வினாவிடைகள், பெரிய புராணம், திருவிளையாடற் புராண வசனம் ஆகிய நான்கு நூல்களையும் படித்தால், சைவத்தின் மாண்பு தெரியும். இவற்றைச் சைவசமய விவிலியம் என்பது தகும். கிறிஸ்து சமயிகள் தங்கள் பைபிளை எப்படியெல்லாம் உலகறிய விளக்கியிருக்கிறார்களோ அப்படியே நாவலரும் செய்திருக்கிறார். இவ்வகையில் அவரை, சமய குரவருடன் வைத்து மதிக்க வேண்டும்.

சைவவினாவிடை இரண்டு சிறு நூல்களாக வந்தது. முதல் நூல் சிறுவருக்கு; இரண்டாவது கொஞ்சம் பெரியவர்களுக்குப் பயனாகும். பதி, பசு, பாசம், வேதாங்கம், சைவப் பெருமை; விபூதி, உருத்திராக்ஷம், பஞ்சாட்சரம் இவற்றின் அவசியம்; சிவலிங்க மகிமை, நித்திய நைமித்திய கருமங்கள், புண்ணிய பாவங்கள், தமிழ்வேதம் ஓதல், கோயில் வணக்கம், குருலிங்க சங்கம வணக்கம், விரதம், மகேசுர பூசை, அன்பு செயல் இவற்றின் பயன் முதலிய பலபொருள்களைச் சைவவினாவிடையில் நாவலர் விளக்கி, சிவனையும் அவன் மயமான தெய்வங்களையும் அடியார்களையும் தோத்திரஞ் செய்யும் முறையும் காட்டுகிறார்.

உலகின் முதல்வர் சிவபெருமான்; அவர் என்றும் எங்கும் உள்ளவர், மாசறு தூயர், முற்றறிஞர், நித்திய சுத்த முத்தர், நிர்

விகாரி. அவர் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டே அருட் சக்திமூலம் ஐந்தொழில் செய்கிருர். தனுகரண புவன போகம் பிரபஞ்ச காரியம். சிவபெருமான் உலகிற்கு நிமித்த காரணம்; சிவசக்தியான அருள் வல்லமை துணைக்காரணம்; சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி என மூன்றும் முதற் காரணம். மாயாசக்தியே தனுகரணபுவன போகாதிகளைத் தந்து நுகர்வித்து, ஆன்மாக்களின் மும்மலம் நீங்க உதவுகிறது. பரமசிவன் அருவன் ; அருவுருவான சதாசிவன் ; உருவான மகேசுரன். சிவபெருமானுக்கு வினையுடற் பிறப்பும் இறப்பும் அவதாரமும் இல்லை. எங்கும் நிறைந்த அவனுக்கு அவதாரம் அவசியமில்லை ; அவன் எங்கிருந்தும் தன் அருள் வல்லபத்தால் எல்லாம் செய்வான். அவன் சுத்தமாயையின் தொழிலை, தானே தூண்டி நடத்துகிருன் ; அசுத்தமாயா காரியத்தை அனந்தேசர் மூலமும், பிரகிருதி காரியத்தை ஸ்ரீகண்டருத்திரரை அதிட்டித்தும் செய்வான். ஸ்ரீகண்டருத்திரர் பிரம்மாமூலம் படைத்து, விஷ்ணு மூலம் காத்து, காலருத்திரர் மூலம் அழித்து முத்தொழில் புரிவார்; சமய தீட்சை பெற்றவர் வணங்கும் மூர்த்தியாவார் ; அவரே சைவாகமங்களை அறிவிக்கும் குருவும், மும்மூர்த்திகள், முனிவர், அடியார்களுக்கும் நிக்ரக அனுக்ரகங்களுக்கும் கருத்தா. சதாசிவம் இலிங்க வடிவானது. இலிங்கம் என்றுல் சித்தரித்தல்; ஐந்தொழில்களால் உலகைச் சித்தரிப்பதே இலிங்கம். ஆன்மா சிற்றறிவுப் பொருள், நித்தியம், வியாபகம், பாசத் தளை யுடையது ; சுதந்தரமற்றது, உடல்தோறும் வெவ்வேறுனது, இருவினையும் பயனுமுடையது. அதன் தலைவன் இறைவன். எவ்வளவு பெரிய ஆத்மாவும் இறைவனுக்குச் சமானமாகாது. ஆன்மா தூல சூக்ஷ்ம தேகங்களை உடையது. சாதி, குலம், நிறம், பிறவி வேறுபாடுகளுடன், ஐம்பூதம் ஞான கர்மேந்திரியங்களாகப் பரிணமித்தது தூல தேகம். கரணமும் தன்மாத்திரையுங் கூடிய மனமே சூக்ஷ்ம சரீரம். ஆன்மாக்கள் தனுகரண புவன போகாதிகளை அனுபவித்து, மீண்டும் பிறவி எடுக்க ஏதுவா யிருப்பது சூக்ஷ்ம தேகம். தூலம் உரு; சூக்ஷ்மம் அருவுடம்பு. ஆன்மாக்கள் பறவைபோல் முட்டையிலிருந்தும், பேன் புழுபோல் வேர்வையிலிருந்தும், மரம் போல்



வித்திலிருந்தும், மனிதர் விலங்குபோல் கருப்பையி லிருந்தும் தோன்றும் ; தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் ஆகிய எழு தோற்றங்களாகக் காணும். இவற்றுள் தாவரம் அசரம் ; மற்றவை சங்கமம் அல்லது சரம் ; இயங்கும் பொருள்கள். எல்லாம் எண்பத்து நான்கு கோடி யோனி பேதமாகக் காணும். ஆன்மாக்கள் வினையைச் செய்து பயன்களை அனுபவிக்க இடமாயிருப்பது இப்பூமி. நல்வினைப் பயனுல் சுவர்க்கமும், தீவினைப் பயனுல் நரகமும் கிடைக்கும். வினைப் பயனை அனுபவித்த ஆன்மா கர்ம சேஷத்தை அனுபவிக்க மீண்டும் பிறக்கும்.

பிறவியிற் சிறந்தது மானிடம். அதுவே இறைவனையும் புண்ணிய பாவங்களையும் அறிந்தொழுகி முத்தி பெறும். முத்திக்கு நான்கு படிகள் உண்டு. 1. **சரியை** ; ஆலயம், அடியார்தொண்டு; இதனுல் சிவசாலோக்யம் எய்தும். 2. **கிரியை** ; உள்ளும் புறமும் இறைவனை உபாசித்தல் ; இதனுல் சிவசாமீப்யம் எய்தும். 3. **யோகம்** ; மனதை அடக்கி, தியான சமாதி சாதனங்களால் சிவத்தில் லயித்தல். இதனுல் சிவசாரூப்யமெய்தும். 4. **ஞானம்**; பதி, பசு, பாச லட்சணம் அறிந்து, உயிர் இறையுடன் கலந்து இன்பத்திட்டைகூடல். இதனுல் சிவசாயுச்ய பரமுத்தி சித்திக்கும். இந்த முத்தி அடையவிடாமல் ஆன்மாக்களைப்பந்தித்து நிற்பவை ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய பாசங்கள். செம்பிற் களிம்புபோல **ஆணவம்** ஆன்மாவைப்பற்றி மாசுறுத்துகிறது ; நலந்தீதாகிய இருவினைப் பயன்கள் அதைத் தளைக்கின்றன. சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை ஆகிய மூன்றும் ஆன்மாவை மயக்குகின்றன. அசுத்த மாயைதான் தனுகரணபுவன போகங்கள் தோன்றக்காரணமாகும். தனுகரண புவன போகம் மாயேயம் ; ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றையும் தொழிற்படுத்துவது திரோதாயி. வண்ணுன் , சாணி உவர்மண் அழுக்கால் அழுக்கு வேட்டியை வெளுப்பதுபோலவே, தனுகரணபுவனபோகங்களையும் மாயை யழுக்கையுங் கொண்டு, இறைவன் ஆன்மாவை அழுக்கு வெளுக்கிருன். வேதங்களும்

தேவார திருவாசகங்களும் மெய்கண்ட சாத்திரங்களும், ஆத்ம சுத்திக்கும் சிவ சித்திக்கும் வழி காட்டுகின்றன. சாதனங்களிற் சிறந்தவை சிவபூஜை, தியானம், தோத்திரம்.சிவதீட்சை பெற்று இயமம், நியமம், சந்தி, ஜபம், சிவலிங்க பூஜை, தேவார திருவாசக பாராயணம், சிவாலய தரிசனம், கைங்கரியம், குருவாக்கிய பரிபாலனம், மகேசுர பூஜை முதலியன செய்ய வேண்டும். கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, கள்ளுண்ணாமை,காமத்தை யடக்கும் ஆண் தகைமை, இரக்கம், வஞ்ச மில்லாத உள்ளம், பொறுமை, மனங்கலங்கா வுறுதி, பசியள வுண்ணல், ஆசாரம்–இவை இயமம் அல்லது நன்னெறி. மனக்களிப்பு, தெய்வ நம்பிக்கை, பக்திவிசுவாசம், தவம், ஜபம், விரதம், யோக்கியமான தொழிலாற் பொருள்தேடி அறஞ்செயல், பெரியாரை வணங்கல், அருட்பாடல்களைப் பாடல், அருள்வாக்குகளைக் கேட்டல், அடக்கம், தக்கது தகாதது அறிந்து நடத்தல் இவை நல்லொழுக்கமாகும். விபூதி உருத்திராட்சம் தரித்தல் உடலுக்கும் மனத்திற்கும் இனிதாகும். தக்க குருவிடம் உபதேசம் பெற்று, தினம் 108 பஞ்சாட்சரியாவது ஜபிக்க வேண்டும். மந்திரம் என்றால் நினைப்பவனைக் காப்பது என்று பொருளாகும். வாயாற் சொல்வதினும் மனதால் ஜபிப்பது பன்மடங்கு பலனுள்ளது. தர்ப்பாசனம் அல்லது பலகையில் பத்மாசனத்தில் அமர்ந்து, ஜபிக்க வேண்டும். தீக்ஷை பெற்றவர் சிரத்தையாகச் சிவபூஜை செய்தே உண்ணவேண்டும். இருபாலாரும் சிவபூஜையும் ஜபமும் செய்ய வேண்டும். விடிய நான்கு மணிக்கே எழுந்து, முகம் கைகால் கழுவி, விபூதி தரித்து சிவத்தியானம் செய்து, அருட்பாடல்களைப் பாடவேண்டும். பிறகு வெளியே சென்று அவசிய கருமத்தைக் கவனித்து, சௌசம் செய்து குச்சிபோட்டுப் பல்விளக்கி, சந்தி ஜபம், சூரிய நமஸ்காரம் செய்து, சிவபூஜை, சிவாலய தரிசனம், பாராயணம் முதலியன நடத்தி, மாத்தியானம் செய்தபிறகு, சுசிருசியாகச் சைவவுணவு கொள்ளவேண்டும். சிவ சாத்திரங்களைக் கற்க வேண்டும். மாலை அப்படியே சந்தி, ஜபம், சிவாலய தரிசனம் செய்து உண்டபிறகு, புராணங் கேட்டு, தூயசிந்தையுடன் படுக்கவேண்டும். எல்லாரும் சிவாலய கைங்கரியமும் குருலிங்க சங்கம சேவையும் செய்வது



அவசியம். சிவனடியார் குருபூசை நாட்களைக் கொண்டாட வேண்டும். இயன்ற மட்டும் நல்லடியாருக்கு உணவளிக்க வேண்டும். சோம வாரம், திருவாதிரை, சிவராத்திரி, கார்த்திகை, கந்தர் சஷ்டி, பிரதோஷம் முதலிய விரதங்களைக் காக்க வேண்டும். சிவனை எப்போதும் அன்பு செய்ய வேண்டும். சிவனடியாரை அன்புசெய்ய வேண்டும். இவ்வாறே சிவநெறி கடைப்பிடித்தால், திருவருள் வழிநடத்திச் சிவத்துவமளிக்கும்.

இதுவே நாவலர்சைவாகம நூல்களின் சுருக்கம். சிவப்பிரகாசருக்கும் சிவஞான யோகிகளுக்கும் பிறகு இவ்வளவு தெளிவாக, சிவசமயத்தை உலகெல்லாம் அறிந்து பயிலும்படி விளக்கியவர் நாவலரைத் தவிர வேறு யாருமிலர். அவரது சைவ வினாவிடையே ஒரு வேதமெனக் கொள்ளலாம். சௌசம் செய்வது, பல் விளக்குவது, குளிப்பது, உறங்குவது முதலிய ஒவ்வொரு அனுட்டானத்தையும் தாமே அனுட்டித்து, விரிவாக நாவலர் நமக்கு விளக்கியிருக்கிறார். நூலின் இறுதியில் திருமுறைகளிலிருந்து பாராயணத்திற்கு இனிய தோத்திரங்களைத் திரட்டித்தந்திருக்கிறார். அவர் தொட்டதெல்லாம் நிறைவே ; சொன்னதெல்லாம் திருமறையே. தயானந்த சரஸ்வதியும் வேததர்மத்தைத் தெளிவாகச்சொன்னார்.ஆனால் அவர், கோயில், உருத்தொழுகை, குருத் தொழுகை, விபூதி ருத்திராட்ச தாரணம் முதலிய சமயவொழுக்கங்களைப் பலமாகக் கண்டித்தார். மற்ற மதங்களையும் குறைகூறிக் கண்டனம் செய்தார். அதனால் பலர் புண்பட்டு அவருக்குப் பகைசெய்தனர். நாவலர் கண்டனங்கூட நாசூக்காயிருக்கும். உண்மையினின்று சிறிதும் அவர் விலக மாட்டார். சைவவினாவிடை சைவத்திற்கு இலக்கணம் ; அதற்கு இலக்கியம் திருவிளையாடலும், பெரிய புராணமும், கந்த புராணமு மாகும். அவர் பதிப்பித்த கந்தபுராணமே இன்று நாம் படிப்பது. மருகரும் மாணவருமான பொன்னம்பலப் பிள்ளை எழுதிவைத்த எட்டுப்பிரதியைச் சோதித்து, நாவலர் பெரிய புராணம் மூலத்தைத் திருத்தமாக வெளியிட்டார். அதையே எல்லாரும் படித்துப் பயன் பெற எளிய உரைநடையில் எழுதி யுதவினார். அவ்வாறே திருவிளையாடற் புராணத்தையும் உதவினார் ; இவ்விரண்டும் தமிழ்

இலக்கியத்தில் என்றும் இணையற்ற மணிகளாக விளங்கும். இன்று சைவத்தைப் பற்றி நமக்கு ஏதாவது தெரியுமானால்,அது நாவலர் பெருமையினால். சைவத்திற்கு மட்டுமா? தமிழுக்கு அவர் செய்த தொண்டை நாம் நன்றியுடன் வியக்கிறோம். தமிழுக்குக் கண்ணான திருக்குறளை அவரே அழகாகப் பதிப்பித்தார். நாவலர் இன்றேல் பரிமேலழகர் உரையுடன் கூடிய குறளை நாம் அனைவரும் படித்திருக்க முடியாது. திருக்கோவையாரைப் புலவர்மணிகள் மெச்சும்படி அவர் வெளியிட்டார். தேடிக்கூடக் கிடைக்காத தொல்காப்பியம் சேனாவரையர் உரையை, எட்டுப் பிரதிகள் கொண்டு சோதித்து வெளியிட்டார். நன்னூல் அவராலே தான் திருத்தமாக வெளிவந்து பலருக்கு உதவியது. நாவலர் பதிப்புக ளெல்லாம் அக்காலப் பதிப்புகளிற் சிறந்தவை. எல்லாம் கறுப்புக்கலிகா பைண்டு செய்தவை. ஒரு பிழை யில்லாமல் எழுத்துக்களை அழகாக அடுக்கி நூல் கையடக்கமா யிருக்கும்படி சிக்கனமாக அவர் வெளியிட்டார். நாவலர் நூல்களும் பதிப்புகளும் ஒவ்வொரு தமிழரிடமும் இருக்க வேண்டும். இந்த நூலைப் படிப்பவர்கள் எல்லாரும் நாவலர் பதிப்புகளை வாங்கிப் படிக்க வேண்டும்.

## 37. தீக்ஷையும் பூஜையும்

தீவிர சிவபக்தரான நாவலர் சைவவொழுக்கங்களை அணுப் பிசகாமல் அனுட்டித்துவந்தார் ; வாழ்வால் நடந்துகாட்டி, வாயாற் பேசி, பிறகே நூல்களாக எழுதி உலகிற்குச் சிவநெறியை இவர் விளக்கினார்.

இவர் சிறுவயதிலேயே தமது குலகுருவான வேதக்குட்டிக் குருக்களிடம் தீக்ஷை ஏற்றார். முப்பத்திரண்டாம் வயதில் தலயாத்திரை செய்து, குறுநாடு சென்றார். இவரது கல்வி ஒழுக்கங்களை, சிவாசாரியார் வியந்து தாங்கள் சிவலிங்க பூஜை செய்ய வேண்டும் என்றார். "மேற்கொண்டால் விதிப்படி நடக்க வேண்டுமே ; அதற்கு நான் தகுவேனா ? என் வாழ்க்கை பொதுக்காரியங்களிலேயே சென்றுகொண்டிருக்கிறதே " என்றார் நாவலர்.



" சிவபூஜைக்குத் தங்களைவிடத் தக்காரில்லை " என்றார் குருக்கள். அச்சமயம் வடநாட்டிலிருந்து ஒருவர் இரண்டு ஸ்படிகலிங்கங்களை விற்பனைக்காகக் கொணர்ந்தார். குருக்கள், " பாருங்கள் சிவன் ஆணையை; இது நல்ல குறி ; ஸ்படிக லிங்க பூஜையையே செய்யுங்கள் " என்றார். நாவலர் பஞ்ச சூத்திர விதிப்படி இலிங்கங்களைச் சோதித்தார். ஒன்று மாசற்றது. அதைத் தேர்ந்தெடுத்து வாங்கிக்கொண்டார்.மாணவர் சதாசிவப் பிள்ளை நிர்வாணதீட்சை பெற்று, க்ஷணிக லிங்கபூஜை செய்தார். நாவலர் முறையாக உபதேசம் பெற்றுச் சிவ பூஜை செய்யத் தொடங்கினார்.

இராமனுதப்புலவர் என்ற முதிய யாழ்ப்பாணவித்துவானுடன் நான் தேவார திருவாசக ஆராய்ச்சி செய்துவந்தேன். அவர், அருட்பாடல்களை மிக உருக்கமாகப் பாடுவார் ; இடையிடையே நாவலர் சிவபக்தியைப் பற்றியும் சிவபூஜையைப் பற்றியும் இவ்வாறு புகழ்வார்: " ஹ,அதென்ன ஆர்வம் ! என்ன பக்தி ! எவ்வளவு உருக்கம் ! ஐயா, எங்கள் நாவலர்பெருமான் சிவஉணர்ச்சியிலேயே ஊறிக்கிடந்தார். காலை நான்குமணிக்கானால் அவரது தோத்திரங்களைக் கேட்கலாம். சரியாகப் பதினொரு மணியானால் சிவபூஜைக்கு உட்காருவார் ; அப்போது உலகையே மறந்து விடுவார். " நமச்சிவாய வாழ்க " என்று தொடங்கி மந்திரங்களைச் சரியாகச் சுத்தமாகச் சொல்லி அபிஷேகம் நடத்தி, துடைத்து வத்திரம் அணிவித்துச் சந்தனம் வைத்து வில்வம், ரோசா, தும்பை, மல்லிகை முதலிய மலர்களால் அருச்சனை செய்து, ஆசாரமாகச் சமைத்ததை நிவேதிப்பார். பூசை மலரைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, தீர்த்தம் பருகிக் கண்ணை மூடிச் சிவத்தியானம் செய்வார் ; டடட, அந்தக் காட்சி ! பட்டுடையும் கட்டுக் கட்டாகத் திருநீறும், தலையிலும் கழுத்திலும் அக்கமாலையும், முகத்தில் விளங்கும் சிவக்காந்தமும் பார்த்தால் மெய்கண்டாரே போல்இருக்கும் ஐயா ! பிறகு " கண்ணார நீர் மல்கி உள்ள நெக்குருகி..." "அப்பநீ, அம்மை நீ ஐயனுநீ"; " புழுவாய்க் கிடக்கினும் புண்ணியா உன்னடி என்னகத்தே வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும் " " நின்று மிருந்துங் கிடந்தும் நினைப்பதுனை"; " உறவிலேன் உனையன்றி மற்றடியேன் " " ஆரெனக்குறவு அமரர்களேறே "

" அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமையும் எல்லாம் குன்றே அனையாய் என்னையாட்கொண்டபோதே கொண்டிலையோ " என்று மனங்கசிந்துருகி அவர் பாடுவதைக் கேட்டவர் கண்ணில் கண்ணீர் துளும்பும் ஐயா ! முடிவில் எழுந்து நின்று "சொல்லால் வருங்குற்றம், சிந்தனையால் வருந் தோடம்.........எல்லாம் பொறுத்தருள்வாய் இறைவா " என்று நிலந்தோயப் பணிந்து வணங்கி, சமயகுரவர் நால்வருக்கும் அருச்சனை செய்து, தேவார திருவாசகம் பாடி, திருமுருகாற்றுப் படையைப் பாராயணஞ் செய்து, பிறகுதானையா அவர் உலகை நினைப்பார். தவசிப் பிள்ளை வந்து அழைத்தாலே உணவு நினைப்பு வரும். அவர் உடலைக்கூட மறந்து சிவஞானக்கடலாக விளங்கினுரையா." இதைக் கேட்கும் என் மனக்கண்முன் நாவலரின் சிவக்கோலம் தோன்றும். சிவ பூசையுடன் நாவலர், மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மெய்கண்டார் முதலிய குருமார்களுக்கும் வழிபாடும் குரு பூசையும் நடத்திவந்தார். அடிக்கடி சிவனடியார்களை உபசரித்து அன்னதானம் செய்துவந்தார். பிரதோஷம், சோமவாரம், கந்த சட்டி, திருக்கார்த்திகை, சிவராத்திரி முதலிய விரதங்களைக் காத்து வந்தார். அவர் செய்த நித்திய கருமவிதி என்னும் நூலுக்கு அவர் வாழ்வே விளக்கமா யிருந்தது. ஆகம நியமங்களை இவர் பயபக்தியுடன் பின்பற்றி நடந்தார். இவர் தாயார் பிங்கல வருஷம் மார்கழி மாதம் ஏகாதசி யன்று இறந்தார். நாவலர் தமது தாயாருக்குச் செய்ய வேண்டிய கடன்முறைகளைக் கருத்துடன் நிறைவேற்றினுர்.இவர், தந்தை தாய் ஆகிய இருவருடைய சிராத்தங்களைமட்டும் கருத்துடன் செய்துவந்தார். மற்றப்படி ஆசௌசங் காப்பதில்லை. தமது வாழ்வைப் படிகம் போல் உள்ளும் புறமும் சிவம் பொலிய வைத்திருந்தார். ஒழுக்கங்களில் பகைவர் கூடப் பிழை காண முடியாது. சிவ நிந்தை, சைவ ஒழுக்கத் தவறு இவற்றை நாவலர் பொறுக்க மாட்டார். வெள்ளை யுள்ளத்தால், ஒளிவு மறைவில்லாமல், ஆட்களின் எதிரிலேயே உள்ளதைச் சொல்லித் திருத்தப் பார்ப்பார். இப்படி இவர் திருத்திச் சிவபக்தராஞர் மிகப் பலர்.

# 38. நாவலர் கவி

உரைநடை அரசான நாவலர், செய்யுள் திறமையும் உடையவர். ஆனுல் பழைய பதிப்பாடல்களே போதும் என்று அவர் விரும்பினுர். இக்காலத்திற்கு இன்றியமையாத உரைநடையிலேயே கருத்தூன்றினுர். அது கவிதைக்கு ஒரு நட்டமும் உரைத்தமிழுக்கு ஒரு பெரிய இலாபமும் ஆகும். அவர் சில செய்யுட்களும் பாடியிருக்கிருர். அவற்றினின்று நாவலர் கவித்திறமை நமக்கு விளங்குகிறது. கேளுங்கள் :

நாவலர், நூல்களிற் **கணபதி துணை** போடுவார். சொற்பொழிவுகளுக்கு முன்னே தலையில் கைகுவித்து விநாயகரை வணங்கித் தோத்திரம் செய்வார். ஒரு பிரசங்கத் தொடக்கத்தில் நாவலர் தமது மாணுக்கரான சதாசிவப் பிள்ளையை நோக்கி " தம்பி, விநாயகர் வணக்கம் பாடு " என்ருர். மாணவர் " தங்கள் வாக்கிலிருந்தே அது வந்தால் நல்லது " என்ருர். நாவலர் கண்மூடி அரைக் கணம் தியானித்து, தடை யில்லாமல் மளமளவென்று பாடினுர் :

**சீர்பூத்த கருவிநூல் உணர்ச்சி தேங்கச்**
**சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்**
**பார்பூத்த புறசமய விருள்க ணீங்கப்**
**பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்**
**பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்**
**பிறைபூத்த சடைமௌலிப் பிரானுர் தந்த**
**வார்பூத்த அறிவிச்சைத் தொழிலென் ருேதும்**
**மதம்பூத்த விநாயகன்ருள் வணங்கி வாழ்வாம் !**

இச்சா ஞான கிரியா சக்திகளை யானைமுகத்தோனின் மும்மதமாக்கி, விநாயக தத்துவத்தை இக்கவிதை தெளிவாகச்சொல்லுகிறது. இக்கவிதை பல சைவப்புலவர் நாவில் தவழ்கிறது. யாழ்ப்பாணத்தில் இதை அறியாதார் இரார். இஃதொரு சீர் பூத்த, பேர் பூத்த, சிவம் பூத்த வரகவிதான். ஒருநாள் நாவலர் தம்

முடன் கல்வி கற்ற அறிஞரான கார்த்திகேய உபாத்தியாயருடன் பேசிக்கொண்டிருந்தார். உபாத்தியாயர் திடீரென்று ஓலை எழுத் தாணி கொணர்ந்து நாவலர் கையிற் கொடுத்தார். தங்கள் திரு வாக்கால் இரண்டு விருத்தங்கள் அருளவேண்டும் : ஒன்று நல் லூர் கைலாசபிள்ளையார் பேரில், மற்றொன்று சுப்பிரமணியக் கட வுள்பேரில் என்று வேண்டினர். நாவலர் உடனே எழுதினர் :-

சீர்கொண்ட பரமவா னந்தசிற் சுகசொருப
 செகதீச திருமங் களம்
தெய்வசர வணபவசண் முகவற்கு முன்வந்த
 திகழீச திருமங் களம்
பேர்கொண்ட சதுர்மறையின் முதலிலகு பிரணவப்
 பிரகாச திருமங் களம் ;
பிறைநுதலொ டயில்விழிகொள் வலவையெனு மரிவையிற்
 பெருநேச திருமங் களம்
ஊர்கொண்ட பரிதிமணி யெனவிலகு முதரமதி
 லொளிர்தேச திருமங் களம்
ஒருவெண்ணெய் நல்லையமர் மெய்கண்ட தேசிகற்
 குபதேச திருமங் களம்
கார்கொண்ட கரடதட கயமுகவ அங்குசக்
 கரராச திருமங் களம்
கருணேச நல்லையங் கைலாச புரிவாச
 கவினேறு கணரா சனே !

அருணவிக சிதகமல மலரைநிகர் தருவதன
 மாறுமநு தினமும் வாழி !
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவ
 னருண்முருகர் சரணம் வாழி !
கருணைமழை பொழிபனிரு நயனமதி ஞெடுவலிய
 கவினுலவு தோள்கள் வாழி !
கனகிரியை யிருபிளவு படவுருவு நெடியவயில்
 கரதலத் தினிது வாழி !



நள வருஷம் சித்திரை மாதம் ஐந்தாம் தேதி (எப்ரல் 1856); வண்ணபுரம் என்னும் அராலியில் விநாயகரைச் செல்லையாக் குருக்கள் பிரதிஷ்டை செய்தார். செல்லையாக் குருக்கள் கோயில் ஆதீனஸ்தர் ; அர்ச்சகர், சைவாகம அறிஞர். அவர் நாவலரை அழைத்தார். இச் சமயங்களில் நாவலர் சிறப்பான காணிக்கை நிவேதனம் கொண்டு செல்வதுண்டு. நாவலர், பட்டு பழம் முத லியன கொண்டுவரும்படி வேலையாளிடம் திட்டம்செய்திருந்தார். அவன் மறந்து போனுன். வண்ணபுரத்திற்கும் நல்லூருக்கும் ஏழு மைல் ; சென்றுவர நேரமில்லை ; அந்த ஊரிலும் சாமான் கிடைக்காது. ஆகையால் நாவலர் பூ மாலைக்கும் கனிகளுக்கும் பதிலாக முக்கனியினும் இனிய பாமாலை புனைந்து சூட்டினர். மூன்று பாமாலைகள் : 1. சித்தி விநாயகருக்கு; 2. விசுவநாத ருக்கு; 3. விசாலாட்சி யம்மைக்கு :—

### சித்தி விநாயகர் துதி

சீரேறு கருணையுரு வாயவிசு வேசஞெடு திகழ்விசா லாட்சிதந்த
 செல்வமே, யடியவர்க ளினிதுண்ண வுண்ணத்
 தெவிட்டாத தெள்ள முதமே !
பேரேறு மறிவிச்சை தொழிலென்று மதமூன்று
 பெருகு மானந்த வடிவே,
பிரணவப் பொருளேயென் னுறவேயெ னுள்ளமே
 பேசுமிரு கண்ணின் மணியே
காரேறு நெடுமாலொ டயன்முதலி யாவருங்
 காணரிய நினதிரண்டு
கழல்பணிந் திடின்மகப் பேறுமுத லியாவையுங்
 கைகூட்ட லரி தாகுமோ ?
வாரேறு களபபரி மளமருவு முபயமுலை
 வலவையுள மகிழ் கொழுநனே
வண்டுமது வுண்டுலவு தண்டலை யராலிநகர்
 வாழ்சித்தி வேழ முகனே !

## விசுவநாதர் துதி

உலகெலா மாகிவே ருயுடனு மாய்நின்ற
உண்மையறி வின்ப வடிவே
ஓங்குமி சானுதி சத்திபஞ் சகமேமெய்
யுருவெனக் கொண்ட முதலே
அலகிலா முற்றறிவு முதலறு குணங்களா
றங்கமென வுடைய பரனே
அவனிமுதன் மூர்த்தமெட் டுடையனுய்ச் சர்வாதி
யட்டநா மங்கொள் சிவனே....

## விசாலாட்சி யம்மை துதி

பொன்பூத்த விமயப் பொருப்புதவு புதல்வியே,
போதவா னந்த வடிவே !
பொலியுமெண் ணுன்கறம் வளர்த்தருளு மன்னேயே
போக்குவர வற்ற பொருளே,
கொன்பூத்த அயில்வேற் குமாரனைத் தந்தநிர்க்
குணனிடப் பாலம் மையே,
குலவுபரை யாதியைஞ் சத்திவடி வாய்நின்ற
கோதில் கருணு வாரியே,
மின்பூத்த கொடியிடைகொள் சலசைகலை மகள்பணியு
மேன்மையுறு மாதேவியே,
மிக்கபா மாலைசாத் திடுமடியர் வேண்டுவன
வேண்டியாங் குதவு நிதியே ;
தென்பூத்த நினதுபத மலரிறைஞ் சிடுமடியர்
சிந்தித்த வரமருள் செய்வாய் ;
செங்கமல மலர்வாவி தங்கிடு மராலிநகர்
திகழ்விசா லாட்சி யுமையே !

ஒரு சமயம் நாவலர் அரிமழம் மீனுட்சிசுந்தரேசர் பேரில் நான்கு விருத்தங்கள் பாடினுர் :



## அரிமழம், சுந்தரேசர் மீனுட்சி துதி

திருக்கிளர் கமலத் தயன்முத லமரர்
திகழ்மறை முனிவரேத் தெடுப்ப,
மருக்கிளர் சோலை யரிமழ நகர்வாழ்
வரதனே மறைமுடி விளங்குங்
குருக்கிளர் மணியே, யன்பர்த மகத்துக்
குலவிய தீபமே, யடியேன்
கருக்கிளர் பிறவி நோயொழித் தருள்வாய்
கடவுளே கருணைவா ரிதியே !

மெய்யறி வின்ப வடிவமே நெடுமால்
விரிஞ்சனு டரும்பரஞ் சுடரே,
மொய்குழற் கயற்கட் கொடியொரு மருங்கு
முளைத்தெழு முதியமா மருந்தே !
தெய்வத மறையோர் தினந்துதித் திறைஞ்சத்
திகழரி மழமுறை சிவனே,
உய்யநன் னெறிநா யேற்கினி தருளா
யொருவனே யுலகநா யகனே.

அவனவ ளதுவென் றுரைத்திடு முலக
மாகிவே றுயுள ணுகுஞ்
சிவபெரு மானே படைத்தலா தியவைந்
திறத்தொழி லுயிர்ப்பொருட் டுளுற்ற
நவவடி வெடுத்த வருட்பெருங் கடலே
நவிறரு மரிமழ நகர்வாழ்
பவனெனுஞ் சொக்க நாதனே யெனக்குப்
பற்றுநின் பதமலா தில்லையே.

அங்கியின் சத்தி யொன்றதே யெனினு
மடுதலா தியபல தொழிலாற்
பொங்குபஃ றிறத்த தாதல்போற் பதிக்குப்
பொருந்துமோர் சத்திநீ யெனினுந்

தங்கிய பரையே முதலவைந் தானோர்
சகம்புக ழரிமழ நகர்வா
ழுங்கயற் கண்ணி யம்மையே யுன்ற
னடித்துணை யாருயிர்த் துணையே.

"சனி நீ ராடு" என்ற ஔவை வாக்கிற்குப் பல உரைகளுண்டு; சனிக்கிழமை எண்ணெய் தேய்த்து முழுகு; புதிதாக ஊறும் (ஜனி) நீரில் குளி என்பர்; "அட சனியனே அழுக்கோடிருக் காதே; போய்க் குளி" என்றும் சிலர் பொருள் செய்வர். நாவலர் இதற்கு ஓர் அரிய சீட்டுக்கவி எழுதி உதயதாரகையில் வெளியிட்டார். அதில்,

"தக்கசனி நீரா டெனும் ஔவை யார்மொழி
தனக்குரைதனைப் பகரிடின் சனிவாரமதி லெண்ணெய்
இட்டுவெந் நீரினில் தலைமுழுக வென்பதாகும்.

இதே உரையை, தணிகைப் புலவர் கந்தப்ப தேசிகர் தந்த சரவணப் பெருமாள் புலவரும், சோதிடரும், அரப்பளீசுர சதக ஆசிரியரும் ஒப்புகின்றனர் என்றார். இன்னும் சில பாடல்கள் உண்டு; மாதிரிக்கு இவைபோதும். நாவலர் உரைத்தெளிவு கவியிலும் காண்கிறது.

## 39. நாவலர் தமிழிசை

இப்போது தமிழிசை முழக்கம் எங்கும் கேட்கிறது! தமிழிசைக்கு விதை போட்டவரும் நமது நாவலரே; நாவலருக்கு முறையான இசைப்பயிற்சி யில்லை; என்றாலும் அவர் குரல் இனிமையாயிருக்கும்; அருட்பாடல்களை உருக்கமாக இன்னிசையுடன் பாடுவார். இயற்கையான இசையறிவு உண்டு. நாவலர் முருகனை உபாசனா மூர்த்தியாகக் கொண்டவர். அவர் கதிர்காமத்திற்குச் சென்று முருகனைத் தரிசித்து வருவது வழக்கம். ஒரு முறை நாவலர் கதிரை முருகன்மேல் ஆறு இனிய கீர்த்தனங்களும் ஒரு மங்களமும் பாடிக் கதிர்காமத்திலேயே அரங்கேற்றினர். அக் கீர்த்தனங்களில் சில வரிகளைச் சுவைப்போம்:



இராகம் சாவேரி தாளம் ஆதி

பல்லவி

உன்னிருபாதந் தெரிசனஞ் செய்த பின்னரே
யுவகைக்கடலு லாழ்ந்தேனே. (உன்)

அநுபல்லவி

தன்னிகரில் கதிரை—தனில்வாழும் போதனே
சற்குண்ய பரிபூரண—சண்முக நாதனே. (உன்)

சரணம்

சனன மரணத்துயரத் தாழ்கின்றேன்—இன்னுஞ்
சஞ்சலச் சாகரத்துள் வீழ்கின்றேன்
இன்னமும் பராமுகஞ் செய்யா தெனக்குருகுவாய்
ஏதிலாத முத்தி யின்பந் தருகுவாய். (உன்)

இராகம் : சுருட்டி தாளம் ஆதி

பல்லவி

நிருமல பரசிவ சண்முகா—சுத்த
நித்திய—சத்திய—வித்தக னுங்குக (நிரு)

அநுபல்லவி

திருவு லாவு மிலங்கையின் மேவிய
சீர்திக ழுங்கதிர் காமத்துறைதரு
சிற்பரா—அருள் தற்பரா—அன்பர்
சிந்தை யுகந்தம ருந்தனி வேலனே (நிரு)

சரணம்

அறிவுக்கறிவாய் நின்றவா—கிரௌஞ்சகிரியுடன்
அவுணர் கிளையைக் கொன்றவா
குறிகுண மிறந்திலகு முருகா
சூரந்துளாயணி மருமன் மருகா
கோலனே—புரி நூலனே—ஒற்றைக்
கொம்பினன் பின்வரு தம்பியே யின்பருள். (நிரு

இராகம் : கல்யாணி தாளம் ரூபகம்

பல்லவி

என்மே லிரக்கமில்லையா சாமி—புதல்வனுக்குத் தந்தை
இரங்காதிருந்தா லென்சொல்லும் பூமி

அநுபல்லவி

தன்னிகரில்லாக் கதிரைமலை வாழுந்
தற்பரானந்த சாமிசு காரம்ப
வுன்னுபய சரணும்புய மல்லாம
லொன்றும்புக லிடமின் றினியாகுதல் (என்)

சரணம்

நித்தியபரி பூரணனந்த நிருமலா
முருகா பாம்பில் நிருத்தம் புரியும்
பரந்தாமனுக்கு நிகரில்லாத நன்மருகா
துத்திய வள்ளி மணளா பலதொண்டர் வணங்கிடு தாளா
என்மேற் சூதை யெண்ணுதே
என்னையிந்த வாதை பண்ணுதே
கனமிகு துய்யா—மெய்யா—பொய்யா
பன்னிருகையா—அய்யா—செய்யா—இன்னும்.... (என்)

இராகம் : அசாவேரி தாளம் ஆதி

பல்லவி

சிவகுரு நாதருக்குச் செய மங்களம் நல்ல
செங்கமல பாதருக்குச் செய மங்களம்.

அநுபல்லவி

பவமறுத் தெனையாளும் பன்னிரு தோளருக்கு
தவமுனி வர்களுளந் தங்கரு ளாளருக்குச் (சிவ)



சரணம்

சங்கரன் குமாரர்குலைத் தாரருக்கு மங்களம்
தன்னிகரில்லாதநல் லூரருக்கு மங்களம்
பொங்குசினத் தவுணரைப் போரில்வென்ற வீரருக்குத்
துங்கவகத் தியர்க்கருள் தோமிலதி தீரருக்குச் (சிவ)

# 40. நிகழ்ச்சிக் கதம்பம்

சமய இலக்கியப் பணிகளைத் தவிர யாழ்ப்பாணத்தில் நாவலர் செய்த பொதுநலங்கள் ஏராளமாக உண்டு. சுயநலம் என்பதே அவர் பேச்சிலு மில்லை, மூச்சிலு மில்லை, எழுத்திலு மில்லை ; செயலிலுமில்லை. தமிழ் சைவம் இரண்டிற்கும் வரும் தீமைகளை நீக்க, அவர் தம் உயிரையும் கொடுத்து உழைக்க எப்போதும் சித்தமாக முன்வந்தார்.

## கல்லூரி

அவர் ஏற்றிய சைவவுணர்ச்சி, மாணவரிடையே தீவிரமாகப் பரவியது ; அவர்கள் சைவ அனுட்டானங்களைக் காக்கத் தலைப்பட்டனர் ; நீறு பூசியே கல்லூரிகளுக்குச் சென்றனர். பாதிரிமார்களுக்குப் பிடிக்கவில்லை. விபூதி இட்டுக்கொண்டவர்களைத் தமது பள்ளிக்கூடங்களில் இடம் பெற முடியாதபடி செய்தனர். மாணவர், நாவலரிடம் முறையிடவே, அவர் உடனே ஓர் ஆங்கில—தமிழ்க் கல்லூரி நாட்டினர். ஒரே வாரத்தில் இக் காரியத்தைச் செய்து முடிக்க எவ்வளவு திறமை வேண்டும் ! அக்கல்லூரி சில காலம் நடந்தது ; பொருளும் பொதுஜன ஆதரவும் இன்றி அது தளர்ந்தது. ஆனல் நாவலரின் கொள்கையும் உணர்ச்சியும் தளரவில்லை ; அவை பொன்னம்பலம் ராமனுதனக உருவெடுத்து யாழ்ப்பாணிகளுக்கு ஓர் பெரிய சைவக் கல்லூரியை அளித்தது.

## அரிசி மூட்டை

அச்சுக்கூடம் வைப்பவர், சட்டப்படி அதிகாரிகள்முன்வந்து தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். நாவலர் தம் அச்சகப் பதிவுக்காக சர்க்கார் ஏசண்டான டைன் துரை முன் ஆசராகி மனு

லை நீட்டினார். இவரது சைவப்பிரசாரத்தைப் பற்றியும் கிறிஸ்து மத கண்டனத்தைப் பற்றியும் எத்தனையோ புகார்கள் அவர் செவிக்கு எட்டியிருந்தன. துரை ஆளை ஏற இரங்கப் பார்த்தார் ; மனதில் "நேர்மையான தைரியவான்" என்று எண்ணிக் கொண்டார்; ஒருவார்த்தை பேசவில்லை. நாவலரை "போகலாம்" என்று கைவிரலைக் காட்டி அனுப்பிவிட்டார்; நாவலர் வீடு திரும்பினார். அன்று மதியத்திலேயே உத்தரவு வந்தது: "உடனே அச்சுக்கூடம் நடத்தலாம் ; கொழும்பிலிருந்து உத்தரவுக்குக் காத்திருக்க வேண்டாம் ; நான் அதை வாங்கித்தருகிறேன்" என்று டைன் துரை எழுதி அனுப்பினார். நாவலர் மகிழ்ச்சிகொண்டார். ஒரு தரம் அதே துரையை இவர் தெருவிற் கண்டார் ; துரை, ஆராய்ச்சியார் தம்பு வீடு எது ? என்று கேட்டார். இவரும் பேசாமல் துரை செய்தது போலவே கையைக் காட்டிச் சென்றார்.

நாவலர் அசல் சம்பா அரிசிதான் சாப்பிடுவார் ; டைன் துரையும் அப்படியே. ஒருநாள் அவ்வரிசி கிடைக்க வில்லை ; நாவலரிடம் இரண்டு மூட்டைகள் இருந்தன ; துரை பணம் அனுப்பித் தமக்கு நாலு படி அரிசி வேண்டும் என்றார். நாவலர் ஒரு பெரிய அரிசி மூட்டையுடன் பணத்தையும் திருப்பி அனுப்பினார். துரை பணத்தைப் பெற்றுக்கொள்ள வற்புறுத்தினார். "நான் வியாபாரி யல்லன் ; தங்கள் நண்பன்" என்றார் நாவலர். இப்படி அவர் செய்த உபகாரங்கள் பல. பசி யென்று யார் வந்தாலும் அவர் முகம் பார்த்து அன்னமிட்டார். கல்வி என்று யார் கேட்டாலும் வித்தியா தானம் செய்தார்.

## நாவலர்

**நா**வலர் நேர்மையான கனவான். எனது யான் என்ற உணர்வே அவரிட மில்லை. அவர் மாணவர் பொன்னம்பலப் பிள்ளை, இவருடன் சிவபூசை செய்யும்போது தேவாரம் பாடுவார் ; சுந்தரமூர்த்தி தேவாரத்தில் "**நாவலா** உனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே" என்ற வரி வரும்போது "நாவலா உனை" என்று ஏகவசனமாகச் சொல்ல அஞ்சி, வார்த்தையை



விழுங்குவார் பிள்ளை. நாவலர் "இது, தேவாரத்திற்குச் செய்யும் குற்றம். சொல்லை அழுத்திச் சொல்; அங்கே அஃது என் பெயரன்று, இறைவன் பெயர். இந்த வீண்கௌரவ மெல்லாம் ஏன்? கடவுளை வழிபடும்போது எவர் பெயர்க்கும் அஞ்சக் கூடாது" என்று பூசை முடித்து உபதேசித்தார்.

## தவசிப் பிள்ளை

**நா**வலருக்குக் கோபம் வரும். ஆனால் உடனே மாறிப்போகும். அவர் கோபம் நன்மைக்கே யாகும் ; எதிரியைத் திருத்தும். ஆளைத் திருத்த அவர் கடுமையாக முயல்வார்.

நாவலருக்கு ஒரு தவசிப்பிள்ளை—**சாமிநாதன்**—வாய்த்தான் ; இவர் உபதேசங்களுக்கு நேர் எதிரிடையாக நடப்பதே அவன் வேலை. இவர் முன்னே நீறு பூசிய பூனைபோல் இருப்பான்; பின்னே புறங் கூறுவான். அகங்கரிப்பான் ; வம்பாடுவான். தாசி வீட்டிற்குப்போவான். வேறென்ன வேண்டும்? நன்மை சொன்னால் கேளான் ; இன்னும் பிடிவாதமாகவே நடப்பான். அவனுக்குப் பைத்தியமும் உண்டு. ஒருநாள் அவன் குணம் மாறி, சாதத்தை அள்ளி இவர் இலையில் எறிந்துவிட்டான் ; நாவலர் பொறுத்துக் கொண்டார். "அடியார் நம்மைக் கடியார்" என்ற துணிச்சல் அவனுக்கு வலுத்தது. நாவலர் இரவில் தம் அணிமணிகளைக் கழற்றி ஒரு கைப்பெட்டியில் வைப்பதுண்டு. ஒருநாள் காலையில் அவற்றை அணிந்து ஒரு சபைக்குச் செல்லப் பெட்டியைத் திறந்தார். பெட்டி காலி ! நகைகள் களவு போயின : ஒரு பவுத்திர மோதிரம், பஞ்ச ரத்தின மோதிரம், சிவப்புக் கல் மோதிரம், கௌரிசங்கம் கொண்ட கண்டிகை, குவளைக் கடுக்கன்கள், இடை சூரிகள் இணைந்த உருத்திராக்ஷமாலை எல்லாம் அக்காலவிலைக்கு ரூபா 750 பெறும். கள்ளன் யார் ? நாவலருக்குத் தெரியாதா?

—சாமிநாதா, இரவு என்ன செய்தாய் ? எங்கே போனாய் ?
—நான் எடுக்கவில்லை ஐயா, நான் அயர்ந்து தூங்கினேன்.
—யார் வீட்டில்..உம்....உம். சொல் உண்மையை.
—என்னையா ? தங்கள் சொத்தை நானா திருடுவேன்.....?

ஆடு திருடிய கள்ளன் விழி அறிவாளிக்குத் தெரியாதா? நாவலர் உடனே போலீசில் எழுதிவைத்தார். போலீஸ் அதிகாரி களை இன்ன தாசிவீட்டிலும் இன்ன காசுக்கடையிலும் சோதனை போடுங்கள் என்ருர் அவ்வாறே நடந்தது ; தாசி வீட்டிலிருந்து மோதிரங்களும், காசுக்கடையிலிருந்து மற்றவையும் புறப்பட்டன. சாமிநாதனுடன் இரண்டு கூட்டுக் களவாணிகளும் அகப்பட்டனர். அணிகள் நாவலரிடம் வந்தன; ஆட்கள் சிறை சென்றனர். சாமி நாதன் விடுதலை பெற்று வந்ததும் நாவலரின் காலில் விழுந்து, "என்னை மன்னித்து ஆட்கொள்ள வேண்டும்" என்று கண்ணீர்விட்டு நின்ருன். நாவலர் "தம்பீ, தீமை பொல்லாது ; திருட்டும் விபசாரமும் ஆளைக்கொல்லும். இனிக் கவனம்" என்று வேலைக்குச் சேர்த்துக்கொண்டார். அன்றுமுதல் அவனும் ஒழுங்காக நடந்தான்.

## நன்றி

நாவலர் சிறிய உதவிக்கும் பெரிய நன்றி செலுத்தும் நண்பர். இவரது வித்யாதானத்தைப் புகழாதவரில்லை. கொடும் பகைவர் கூட அறிவும், ஒழுக்கமும், அறிவைப் பரப்பும் ஆர்வமுங் கொண்ட பெரியார் என்று அவரை மதித்தனர். இவர் மாணவரிடம் எவ்விதமான பிரதிபலனும் பெறுவதில்லை. அவர்களது கல்விவளர்ச்சியைக் காண்பதே இவர் மகிழ்ச்சி. உள்ளன்பர் சிலர் இவர் நாட்டிய கல்விக்கழகங்களுக்குப் பொருள் வழங்குவது உண்டு. ஒரு தரம் இவர் மாணவர் ஆறுமுகம் செட்டியார் $197\frac{1}{2}$ ரூபா பெறும் சிறுநிலம் வாங்கி, நாவலர் பள்ளிக்கூடத்திற்குத் தந்தார். நாவலர் சென்னை செல்லும்போது, செட்டியாரிடம் போதிய பணம் தந்து தமது பள்ளிக்கூடத்தைப் பார்த்துக்கொள்ளச் சொன்னர். ஆறுமுகம் செட்டியார், பள்ளிக்கூடத்தை இரண்டு கண்ணுனும் நன்ருகப் பார்த்தார் ; ஆனல் அதன் செலவுக்காக நாவலர் தந்த பணத்தைச் சொந்தச் செலவு செய்துவிட்டார் ; வறுமை ; திருப்பித்தர வழியில்லை ; நாவலர் வந்ததும் இதை அறிந்தார்; "போடும் பிராது, வட்டியுடன் தொகை வந்து சேரும்" என்று நண்பர் தூண்டினர். முன்னே செட்டியார் செய்த நன்றியைக்



கருதி நாவலர் மன்னித்துவிட்டார். "ஆளே பெரிது; பணமல்ல" என்பது அவர் கொள்கை. இப்படி எத்தனையோ முறை பண மிழந்துள்ளார் நாவலர்.

## சமயோபகாரம்

நாவலர் தாம் புலவர் என்ற செருக்கற்றவர்; ஏழை எளியவர்களுக்குத் தாய்போல் உதவும் கருணையர்.

ஒருதரம் ஒரு வீடு தீப்பிடித்தது ; அப்போது இவர் வித்தியாசாலையில் முக்கியமான அலுவலில் ஈடுபட்டிருந்தார். "தீ, தீ" என்ற சத்தம் கேட்டதும் பாய்ந்து சென்று தண்ணீர் சுமந்து கொட்டிக் கூரையைப் பிரித்துத் தீயை அணைத்தார்.

ஒரு மாணவனுக்கு அம்மை புகட்டியது ; நாவலர் அருகே யிருந்து நோய் தீரப் பேருதவி செய்தார். சுப்பிரமணியம் என்ற மாணவன் இவரிடம் கருத்துடன் சைவநூல்களைக் கற்ருன். அவனுக்குக் காய்ச்சல் வந்து வருந்தினன் ; இவர் அருகேயே யிருந்துதவினர் ; தக்க வைத்தியம் பார்த்தார் ; விதி வேறுவிதமானது. மாணவன் ஈமக்கடன்களை உடனிருந்து நடத்தி, அவன் வரலாற்றை ஒரு நூலாக எழுதினர். சிவநேசர்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால், இவர் மனம் நோகும் ; உடனே ஆவன செய்வார். ஒருசமயம் சதாசிவப் பிள்ளைக்குக் கடுமையான சுரம் வந்தது ; கஞ்சிகூடச் செல்லவில்லை ; நாவலர் ஊணுறக்க மின்றி அவர் பக்கத்திலேயே யிருந்து பஞ்சாட்சரி ஜபித்து, தக்க சிகிச்சை செய்து, அன்பரைக் காத்தார்.

## மாட்டேன்

நாவலர் கடுமையான சைவவொழுக்கம் பூண்டவர். ஒழுக்கந் தவறினவரை அவர் மதிக்கமாட்டார். ஒரு நண்பர் தமது வைப்பாட்டி மகனுக்கு அக்ஷராப்யாசம் செய்து வைத்தால் ஆயிரம் ரூபா தருவதாக மன்ருடினர் ; நாவலர், மனைவி யிருக்கும் போது விபசாரம் செய்தவன் வீட்டிற்கு வரமாட்டேன் என்ருர். "ஐய, பதினயிரம் தருகிறேன்" என்று அன்பர் கெஞ்சினர். "கோடி வந்தாலும் ஒழுக்கங்கெட்டவரை மதியேன்" என்று நாவலர் மறுத்தார். மது பானமும் விபசாரமும் செய்யும் ஒரு

செல்வர் " நாவலரே, தங்கள் நூல்களில் எனக்குப் பிரியமான இந்த இரண்டினங்களை மட்டும் கண்டிக்காதிரும். உமது பள்ளிக் கூடச் செலவு முழுதும் தருகிறேன் " என்றார். நாவலர் மது பானம் விபசாரம் இரண்டையும் பலமாகக் கண்டித்து அச்சுப்பிர சுரம் வெளியிட்டு அந்தச் செல்வருக்கு அனுப்பி " எனது செல விற்குச் சிவபிரான் தருவான் ; முதலில் நீர் தீய பழக்கத்தை விட்டுத் திருந்தும் " என்றார். அந்த ஆள் வெகுண்டு நாவலருக் குப் பல இடர்களைச் செய்து தீர்த்த பிறகு திருந்தினான்.

## 41. கவர்னருக்கு

நாவலர் ஆங்கிலம் படித்துக் கால நடப்பும் அறிந்தவர் ; வழக்காளரை விட நன்றாக வழக்காடுவார் ; அரசாங்கத்தின் அநீதிகளையும் அஞ்சாது கண்டிப்பார்.

ஈசுர வருஷம் யாழ்ப்பாணமெங்கும் கொடிய பஞ்சமும் பேதி யும் வந்து தொல்லைசெய்தன. சர்க்கார் சில இடங்களில் கொட்ட கை போட்டு, நோயாளிகளை வைத்துச் சிகிச்சை தரவும், கஞ்சித் தொட்டி வைக்கவும் ஏற்பாடு செய்திருந்தது. உத்தியோகஸ்தர் கள் அவற்றைச் சரிவர நிர்வகிக்கவில்லை ; ஏஜண்டு துவைனந் துரை, வீடுகளில் நுழைந்து துணிமணிகளைக் கொளுத்தி மக்களை இமிசை செய்தார். நாவலரிடம் எல்லாரும் முறையிட்டனர். நாவ லர் தமது வித்தியாசாலையில் ஒரு கூட்டம் கூட்டி, உத்தியோகஸ் தர் போக்கைக் கண்டித்தார். அச்சமயம் பசியாலும் பேதியாலும் சிலர் இறந்த செய்தி வந்தது. அச்சமயம் கவர்னரும் யாழ்ப்பா ணத்தில் முகாம் போட்டிருந்தார். நாவலர் பொங்கி எழுந்தார். அரசாங்க ஊழல்களை யெல்லாம் விசாரித்துக் குறித்துக்கொண்டு, அழகான ஆங்கிலத்தில் கவர்னர் ஜேம்ஸ் லாங்டனுக்கு ஒரு நீண்ட விண்ணப்பம் எழுதி நேரே கண்டுபேசித் தந்தார். அதன் சுருக்கமாவது :

" இலங்கைக் கவர்னரும் சேனாதிபருமான ஸர் ஜேம்ஸ் லாங்டன் **(Sir James Longden)** அவர்கள் சமுகத்திற்கு யாழ்ப் பாணம் மகாஜனங்கள் செய்துகொள்ளும் விண்ணப்பம் :



தங்கள் வரவு நல்வரவாகுக! இத்தகைய சந்தோஷமான நாட் களில் தங்கள் சர்க்கார் ஏஜண்டுகளைப் பற்றி நாங்கள் புகழ்வது வழக்கம்; இன்று அதற்கு இடமில்லை என்பதைப் பற்றி வருந்து கிறோம். சென்ற சில ஆண்டுகளாகப் பஞ்சமும் பேதியும் யாழ்ப் பாணத்தைக் கடுமையாகப் பீடித்து வருத்துகின்றன. இப்போது உள்ள ஏஜண்டு துவைனந் துரை வந்தது முதல், சென்ற மூன் றாண்டுகளாக நாங்கள் படுந்துயரம் சொல்லி முடியாது. எங்களு க்கு அவரிடமும் வேறுயாரிடமும் விரோதமில்லை; எனினும் இங் குள்ள நிலைமையைச் சமுகத்திற்கு உள்ளது உள்ளபடியே விளக் குகிறோம்; எங்களுக்குப் பரிகாரம் கிடைக்குமென்று நம்பியே இப் படி விண்ணப்பிக்கிறோம்.

திரு டைக் ( **Dyke** ) ரஸ்ஸல் ( **Russel** ) போன்ற ஏஜண்டுகள் எங்கள் விண்ணப்பங்களை அனுதாபத்துடன் கேட்டு வந்தனர் ; முறையிடுவதே குறை தீரும் வழி; தற்போதுள்ள ஏஜண்டு துவை னன் ( **Twynan** ) எங்கள் விண்ணப்பங்களை மதிப்பதே யில்லை. நாட்கணக்காகக் கச்சேரியில் காத்திருந்தாலும், அவரது பேட்டி கிடைப்பது முயற்கொம்புதான். ஆபீசுக்குக்கூட துரை அரிதாகவே வருகிறார். அவர் சில செல்லப்பிள்ளைகளின் பேச்சைத்தான் கேட் கிறார். மணியம் அரங்கநாத முதலியார், கச்சேரி முதலியார் சவரி முத்து, யாழ்ப்பாணம் மணியக்காரர் கணபதி பிள்ளை, பண்ட சாலையார் குட்டித்தம்பி முதலியோரே அவருக்குப் பிரியமான குலாமிகள்.

முன்பெல்லாம் கிராம ஊழியர் வேலை காலியானால், பத்திரி கைகளில் விளம்பரம் செய்து மனுதாரர்களை வரவழைத்துப் பொதுஜனங்களின் வாக்கைக் கேட்டுத் தக்க உத்தியோகஸ்தர் களைத் தேர்ந்தெடுப்பது வழக்கம் ; ரஸ்ஸல் காலத்திற்கூட இப் படியே நடந்தது. இந்த நல்வழக்கம் போய்விட்டது ; இப்போது கச்சேரியில் துரைக்குப் பிரியமான குலாமிகள் சிபார்சு செய்பவர் களுக்கே வேலை கிடைக்கிறது ; தகுந்தவர்களுக்கன்று.

ஜனங்களின் மனமறிந்து நடக்கக் கிராமாதிகாரி உள்ளூரானா யிருப்பது நல்லது. அறிவும், திறமையும், நல்ல நடத்தையும்,

தன்பாதுகாப்பிற்குப் போதிய செல்வ நிலையுங்கொண்டவர்களையே பொதுஜன சம்மதப்படி கிராமாதிகாரி யாக்குவது ரஸ்ஸல் காலத்திற்குக்கூட வழக்கமா யிருந்தது. யாழ்ப்பாணம் மணியக்காரர் வேலை மிகப் பொறுப்பானது; அதற்கு நல்ல நல்ல பேர்வழிகள் மனுப் போட்டார்கள் ; எல்லாரையும் அசட்டை செய்துவிட்டு, தற்போதுள்ள ஏஜண்டு, மன்னாரிலிருந்து தனக்குப் பிரியமான கணபதி பிள்ளையை நியமித்திருக்கிறார். இந்தப் பேர்வழி, அடிக்கடி சொந்த வேலைகளைப் பார்க்க ஊருக்குப் போய்விடுகிறார். அச்சமயங்களில் மணியக்காரர் பொறுப்பை இளம்பிள்ளையான தமது மச்சானிடம் விட்டுப் போகிறார்.

யாழ்ப்பாணத்தைச் சுற்றி இருபது தீவுகள் உண்டு ; இரண்டு வருஷமாக இங்கே மணியம் வேலை காலி ; தக்க நபர்கள் அவ்வேலைக்கு விண்ணப்பம் செய்துகொண்டும், துவைனந்துரை கவனிக்க வில்லை ; தனக்குப் பிரியமான அரங்கநாத முதலியாரை மணியக்காரராக நியமித்திருக்கிறார். இவர் 22 கிராமங்கள் அடங்கிய வலிகாமம் மணியக்காரர் ; அதையே இவரால் சரியாகக் கவனிக்க முடியாது ; வெகுதூரத்திலுள்ள தீவுகளை எப்படிக் கவனிக்க முடியும் ? தீவினர் செய்த விண்ணப்பங்களை, துரை மதிக்கவே யில்லை. அரங்கநாத முதலியார் டெல்ட் ( Delft ) ரஸ்தா பார்வையாளராகவும் இருந்து சம்பளம் பெறுகிறார். இவரால் தீவு வேலையைக் கவனிக்கவே முடியாது.

வேலை தரும் விஷயத்தில் சலுகையுடன் லஞ்சமும் தலைவிரித்தாடுகிறது ; தக்காருக்கு இடமே யில்லை.

வேலைக்காரரை ஏஜண்டு தன் கைப்பாவையாக ஆட்டி வைக்கிறார். ஜன சம்மதத்தை மதிப்பதில்லை.

குலாமிகளின் உறவினருக்கெல்லாம் வேட்டைதான், வேலைதான். சில இடங்களில் உறவினரே உடையாரும், நொத்தேருமாகி அட்டூழியம் செய்கிறார்கள். பத்திரப் பதிவுகளில் படுமோசம் நடக்கிறது.



பாதைபோடுவதற்கென்று ஏஜண்டு, தன் குலாமிகள் பேச்சையே கேட்டு நல்ல கனி மரங்களை வெட்டிச் சாய்க்கிறார்; வேலிகளைப் பிரிக்கிறார் ; வீடுகளை இடிக்கிறார் ; நிலங்களை ஆக்ரமிக்கிறார். இவற்றிற்குச் சரியான ஈடுகாணம் தருவ தில்லை. அல்லது தன் ஆட்களின் பேச்சைக் கேட்டுச் சொற்பத் தொகையே தருகிறார். பலர் அதுகூட இல்லாமல் பங்கிழந்து நிற்கிறார்கள். சமீபத்தில் ஒரு ஜில்லா ஜட்ஜே ஒரு நிலத்தைப் பார்த்து அதிகமான ஈடுகாணம் தர உத்தரவிட்டார். இவை யெல்லாம் சட்ட விரோதம் ; முறையிட்டும் பயனில்லை.

உத்தரவான பணமும் சரியாகச் செலவாவதில்லை. ஒருகாரியத்திற்கு ஏற்பட்ட தொகை இன்னொரு காரியத்தில் செலவாகிறது. உழைப்பவர்களுக்குச் சரியாகக் கூலியும் கிடைப்பதில்லை.

இங்கே போலீஸ்காரர்கள் குடிகாரர்கள் ; அவர்கள், கிராமத்தில் நடக்கும் கலக வழக்குகளைக் கவனிப்பதில்லை. இரண்டு மூன்று மைல் நடந்தே போலீசாரைப் பார்க்கலாம். அவர்களை அழைத்து வருமுன்னே திருட்டும் கலகமும் நடந்துவிடுகின்றன. வீடு கொள்ளைபோன பிறகு கதவை மூடி யென்ன ? இந்தச் சிவப்புத் தலைப்பாகைகள் மரியாதையான சனங்களையும் முரட்டுத்தனமாக நடத்துகின்றன. புகார் செய்தவர்பாடு ஆபத்துத்தான். டைக்துரை ஒரு ஏழையை அரற்றி விரட்டிய சேவகனைக் கண்டித்து நீக்கினார். பிரதம நீதிபதி ஸர் சார்லெஸ் மார்ஷல் டைக்கின்முன்னே ஒரு வழக்கை விசாரித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு சிப்பாய் ஒருவரை முரட்டுத்தனமாகப் பிடித்துத் தள்ளினான். அவனை அவர் கண்டித்து நீக்கினார். இப்போதுள்ள துவைனந் துரையோ மரியாதைக்குரிய ஜனங்களை மதிப்பதில்லை. போலீசாரைப் பற்றிய புகாரைக் கவனிப்பதே யில்லை.

நெல் விளைவில்லாது கொடிய பஞ்சம் எம்மைச்சூறையாடுகிறது. இப்போது இரக்கமில்லாமல் கடுவரி வசூலிக்கப்படுகிறது. சர்க்கார் உத்தரவின்படி விதைநெல் கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை ; இதனால் பல விளைநிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. நஷ்டம் ஏராளம். இப்போது நல்ல மழை பெய்தும் விதைப்பில்லாமல்

விவசாயிகள் பாடு திண்டாடுகிறது. விதைநெல் தந்து விதைத்தால், ஜனங்களுக்கும் நல்லது ; சர்க்காருக்கும் இலாபமாகும்.

முன்பெல்லாம் பெருமழையால் வயல் நிரம்பினால் வாய்க்கால் வெட்டி நீரைக் கடலிற் சேர்ப்பதுண்டு. இதைத் துவைனந் துரைக்குச் சொல்லியும் தெரிய வில்லை ; இப்போது பயிர்கள் நீரில் மூழ்கிக் கெடுகின்றன.

இவற்றால் பஞ்சமும் பேதியும் உயிர்களைக் கொல்லுகின்றன. நிலைமையை அறிந்தும் ஏஜண்டு துரை ஒரு பரிகாரமும் செய்யாமல், எல்லாம் செய்துவிட்டதாக வெளிக்குக் காட்டுகிறார்.

### காலரா

கமிஷனர் வந்தபோது மட்டுமே, அங்குமிங்கும் சிகிச்சைச் சாலைகளை அவசரமாகக் கட்டி, எல்லாம் நெடுங்காலமாக நடப்பதாகக் காட்டி அனுப்பிவிட்டார். ஏழை நோயாளிகளை உடல் திடமாகி அவர்கள் வேலைக்குப் போகுமட்டும் வைத்துக் காப்பாற்றியதாகவும், பஞ்சத்தில் அடிபட்டவர்களுக்கு அரிசி தருவதாகவும் சோறு தருவதாகவும் மேலதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்புகிறார் ஏஜண்டு ; இதெல்லாம் சுத்தப் பொய். ஏஜண்டு, தாம் நேரே சுற்றிப் பார்த்து ஜனங்களின் துயரமறிந்து உதவி செய்ததாகச் சொல்லுவது வெறும் பகட்டு. பிப்ரவரி மாதம் முதல், ஜூலை மாதம் வரையில் இவர் ஊரிலில்லை ; இவரோ இவர் ஆட்களோ பஞ்ச—பேதி நிவாரணத்திற்கு ஒருதவியும் செய்யவில்லை. 1876 நவம்பரில், கரையூரில் பேதி கண்டது. ஏஜண்டு ஒரு சகாயமும் செய்யாமல், ஜனங்களைக் கண்டபடி கைது செய்தார். அவர்கள் பயந்துபோய் பலதிசைகளிலும் ஒளிந்து தொத்து நோயைச் சுற்றிப் பரப்பினார்கள். பல ஏழைகள் வீடுகளும் துணிமணிகளும் தீயிட்டு எரிக்கப் பெற்றன. இன்னும் அட்டூழியங்கள் பல. வாயைத் திறந்தால் ஏஜண்டு துரை குடியைக் கெடுத்து விடுவார். பரிந்து பேசும் வக்கீல்களைக் கூட மிரட்டுகிறார் ; அவர்கள் உறவினரை வேலையைவிட்டு நீக்குகிறார். துரையின் கோபத்திற்குப் பயந்து பலர், கஷ்ட நிஷ்டூரங்களைக் கண்ணீர்விட்டு வளர்த்துவருகின்றனர். இனித் தெய்வமே கதி !



போலீஸார் மேலோ, துரை மேலோ மேலதிகாரிகளுக்கு நியாயமான பல புகார்கள் சென்றன ; சர்க்கார் அப் புகார்களை ஏஜண்டு விசாரணைக்கே அனுப்புகிறது. ஏஜண்டின் முகம் சிவக்கிறது. புகார்தாரின் உறவினரை வேலை நீக்குகிறார்; இல்லாத மிரட்டுருட்டுச் செய்கிறார். கச்சேரிகளில் எல்லாம் ஊழல் ; துரையின் சித்தம் போக்குத்தான் ! தனக்குப் பிரியமான பேர்களுக்கும், அவர்களுடைய மாமா மச்சான்களுக்கும் சரியான வேட்டைதான். குட்டித்தம்பிக்கு ஸ்டோர் வேலையுடன் ஆபீஸ் குமாஸ்தா வேலையும் உண்டு ; இரட்டைச் சம்பளம் ! அனுபவம் பெற்ற நாலாங் குமாஸ்தா முத்தையாவை ஆறுங் குமாஸ்தாவாக்கி, கத்துக்குட்டி பாலை நாலாங் குமாஸ்தா வாக்குவார் துரை. என் ? பால் அவர் சலுகை பெற்ற அடிமை ! பிரதம முதலியார் துவைனந்துரையின் வீட்டுக் காரியங்களைப் பார்க்கிறார். ஏஜண்டு துரை கடுமையான அபராதங்கள் போடுகிறார் ; அபராதப் பணம் சர்க்கார் கணக்கில் தாக்கலாவதில்லை. துரை, வீட்டுச் சேவகனை சின்னத்தம்பியை அரசாங்க ஊழியன் என்று பேர் பண்ணி அரசாங்கப் பணத்திலிருந்து சம்பளம் தருகிறார். துரை தன் கீழுள்ளவர்களுள் லேவாதேவி நடத்துகிறார். போஸ்டுமாஸ்டர் ராசலிங்கம் தபால்கட்டுகளில் சுளையமாடிப் பணம் திருடுகிறான் ; லஞ்சமடிக்கிறான்; சிறை காக்கிறான் ; அவன் வெளியே வந்ததும் உதவி ஜெயிலர் வேலை கிடைக்கிறது. என் ? தலைமுதலியாரின் மச்சான் ! துரையின் சலுகை இரகசிய நாடகம் ! ஏலப் பணமோ விற்பனைப் பணமோ ஒழுங்காகச் சர்க்கார் கணக்கிற்கு வருவதில்லை. பத்திரிகைகளில் புகார் செய்து கிளர்ச்சி செய்தபிறகு, ஏதோ விதாயகம் நடப்பது போலக் காட்டுகிறார்கள் ; எல்லாம் வெளிமயக்கே.

கவர்னர் அவர்கள் இவற்றை யெல்லாம் நன்றாக விசாரித்து எங்கள் குறையைத் தீர்க்க வேண்டுகிறோம். அதற்காக மிகவும் நன்றி செலுத்துவோம்.

15—1—1878 **ஆறுமுக நாவலர் முதலியோர்.**

தேசாதிபதி, புகாரையும் பார்த்தார் ; ஆளையும் பார்த்தார் ; " சொ சொ சொ ! இப்படியா செய்தி ; நீங்கள் போங்கள், நான்

எல்லாம் விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளு கிறேன்" என்று அனுதாபத்துடன் பேசி யனுப்பினுர்; ஆனுல் அனுதாபம் உதட்டிலே தவழ்ந்து மூச்சுடன் உமிழ்ந்துபோனது! காரியம் வழவழா !

## 42. நாவலர் கிளர்ச்சி

**து**வைனந் துரை நாவலருக்குப் பெரும் பகைவ ரானுர். அவர் பெயரைச் சொன்னுலே பல்லைக் கடித்தார்; தமது கட்சியை விளம்பரம் செய்யத் தாதர்களையும் தாஸர்களையும் தயாரித்தார். விசாரணைக்கு ஒரு கமிஷன் வந்தது; நாவலர் கிளம்பினுர். "யாழ்ப்பாணிகளே விழித்துக் கொள்ளுங்கள்! இது சமயம். கிறிகோறி (Gregory) வந்தபொழுது, துவைனந் துரை தந்திர வேலை செய்து தங்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களைக்கொண்டு நாட கம் நடத்தித் தமது குற்றங்களை மறைத்துவிட்டார். தம் மீதுவந்த வழக்குகளை யெல்லாம் தந்திரமாக விலகச்செய்து அநியாய ராச்சி யம் நடத்துகிருர். தகாதவர்களுக்கு உத்தியோகம் தந்து அடிமை யாக்கிக் கொண்டார். ஒரு ஏழையின் மனைவியை இழுத்துக் கொண்ட ஒருவனை, உமது வீட்டுக் கன்னிகைகளுக்குக் கலியா ணம் எழுதும் உத்தியோகஸ்தராய் விடும்படி செய்துவிட்ட துவை னந்துரை எவ்வளவு பரமயோக்கியர் !

சனங்களே, துவைனந்துரையின் தீமைகளை விசாரிக்க மூன்று துரைமார்கள் வந்திருக்கிருர்கள். துவைனந் துரை தமக்குடன் பட்ட முதலியார்களையும் தலைமைக்காரரையும் சனங்களிடையே அனுப்பிப் பிரசாரம் செய்கிருர். தாம் வெகுசன உபகாரம் செய்த தாகச் சொல்லும்படி தமது மனையாளுடனுங் கூடி மாய்மாலஞ் செய்கிருர்.

சனங்களே ! உங்கள்மேல் வைத்த இரக்கத்தினுலே சொல்லு கிறேன்; கேளுங்கள்: உங்களுக்கு இது நல்ல சமயம்; தப்பினுல் வேறு சமயம் வாய்க்காது. நீங்கள் திரண்டு நின்று, கமிஷனர் முன் துவைனந் துரையின் தீமைகளையும் அட்டூழியங்களையும் தைரியமாக மறைப்பின்றி வெளிப்படுத்துங்கள். அது செய்தால் நீங்களும் உங்கள் சந்ததிகளும் துன்பமின்றி வாழலாம். எக்சா மினர் (Examiner) முதலியவர்கள் உங்களுக்குப் பரிந்து எழுதுகிருர்கள். நீங்கள் பயந்து உண்மையை மழுப்பினுல் அவர் கள் வருந்த நேரிடும். வன்கண்மை, பொய்வஞ்சனை, கோள், கைக்கூலி இவை நிறைந்த மகாபாவிகளாகிய உத்தியோகஸ்தர்க ளுக்குப் பயந்து, உங்கள் தலையிலே நீங்களே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளாதீர்கள். பரோபகாரிகளான தலைவர்களை நம்பி நடந்து வாழுங்கள்."



இங்ஙனம்,

**இரக்கம்.**

இந்த மாதிரி நாவலர் சிம்ம கர்ஜனை செய்தார். அக்காலத்தில் நாடறிந்த அறிஞரும், செல்வரும், அன்பரும், பொதுஜன விசு வாசிகளுமாகிய தில்லையம்பலம் சங்கரப்பிள்ளை, பெஞ்சமின் சந்தி யாகு பிள்ளை, சின்னக்குட்டி பொன்னம்பலம், தில்லையம்பலம் குமாரசாமி, சின்னத்தம்பி, வைத்திநாதச் செட்டியார், செல்வ நாயகச் செட்டியார், மயில்வாகனம் முதலிய நல்லோர் அனைவ ரும் நாவலர் பக்கம் இருந்து கிளர்ச்சி செய்தனர். துவைனந் துரை தமது கூலிப்பட்டாளத்தைத் தூண்டிவிட்டார். உதயதாரகை யின் ஆங்கிலப் பகுதி ஆசிரியர், துரை யிடம் ஈடுபட்ட ஒரு உத்தி யோகஸ்தரின் மைத்துனர். அவரைத் துரை நன்ருகத் தூபம் போட்டுவிட்டார். உதய தாரகை நாவலருக்கு எதிராகக் கிளம்பி வசையம்பு தொடுத்தது. நாவலர் உதயதாரகைக்கு ஒரு சவுக்கடி விளாசினுர்.

"உதயதாரகையே, நீ சனங்களுடைய பணத்தினுலே தானே இவ்வளவு காலம் நிலைபெற்றிருந்தாய் ! பத்திரிகையின் கடமை அறிந்தாயா? சனங்களுக்குப் பொதுநன்மை செய்வது பத்திரிகை யின் கடன். நீ என்ன செய்கிருய் ? யாழ்ப்பாணத்தி லுள்ள இந்துக்கள், கிறிஸ்துவர்கள், முகம்மதியர்கள் என்கின்ற சனங் கள் இப்பொழுது இரண்டு மூன்று வருஷ காலம் என்ன நிலை யில் இருக்கிருர்கள் ? துவைனந்துரையின் சிநேகிதர்களான சில உத்தியோகஸ்தர் தவிர மற்றவர்கள் துன்பமே அனுபவிக்கிருர்

கள். யாரால்? துவைனந் துரையால். சனங்களுடைய பணங் கொண்டு நடாத்தப்படுகிற உதயதாரகை இதிலே தன் கடமையைச் செய்கிறதா? இல்லை; பின் யாது செய்கிறது? துவைனந் துரைக்குச் சார்பாகச் சனங்களுக்கு மாருகப் பொய்வார்த்தையே பேசுகின்றது. அம் மட்டோ, சனங்களுடைய நன்மையின் பொருட்டு சனங்களுடைய விண்ணப்பத்தைக் கவர்னருக்குக் கொண்டுபோய்க் கொடுத்த பிரபுக்களை அயோக்கியர்கள் என்று தூஷிக்கிறது. தூஷிக்கப் பட்டவர்களோ பேரறிஞர்; செல்வமும் செல்வாக்கும் பெற்ற பொதுநல நேசர். இந்தப் பிரபுக்களை, புண்ணியசீலர்களை அயோக்கியர்கள் என்ரு எழுதுவது? நல்லது; வெகுசனத்துரோகியாகிய உதயதாரகையை இப்பொழுதும் சனங்கள் வாங்குகிருர்களா? தீய பத்திரிகைக்குத் துணை செய்கிறவன் தீமையை விருத்தி செய்கிறவன்..."

நாவலர் இலங்கை நேசன், உதய பானு இரண்டின் மூலமும் தம் கட்சியைக் கதறினர். ஆனல் துவைனந் துரையின் நாடகமே கமிஷனர்களுக்கு நியாயமாய் விட்டது. ஜனங்கள் முறையீடுகளுக்கு ஆதாரமில்லை என்று துரைமார் அறிக்கைவிட்டனர்.

நாவலர் கொதித்தெழுந்தார். சட்டசபையில் முதன்மைபெற்ற குமாரசாமி பிள்ளையைத் தூண்டி, சட்டப்படி வாதாடச்செய்தார்; நேசப்பத்திரிகைகள் மூலம் பேசித்தீர்த்தார். இலங்கை நேசனில் அவர் எழுதிய **கருணைப் பத்திரம்** இது :—" யாழ்ப்பாணத்துச் சனங்களே, துவைனந்துரை உங்களுக்கு அநீதி செய்துவருகிருர். அவருக்கு மாருக, உங்களுக்குச் சார்பாக சமாசாரப் பத்திரிகைகள் ஓலமிட்டன; இங்கே வந்த கமிஷனர்கள், தங்கள் ரிப்போர்ட் புத்தகத்திலே "எல்லாம் பொய்" என்று சாதிக்கிருர்கள். ஆக்டிங் கவர்னரா யிருந்துகொண்டு கமிஷனர்களை இங்கே அனுப்பிய பார்ச்சு துரை, கமிஷனர்களுடைய ரிப்போர்ட்டுப் புத்தகமே மெய்யென்று சாதிக்கிருர். பத்திரிகை ஓலம் மெய்யானல் துவைனந் துரையின் உத்தியோகம் போய்விடும். சுப்ரீம் கோர்ட்டிலே தண்டனை கிடைக்கும்; பத்திரிகைகளில் பேசப்பட்டவை பொய்யென்று ஒப்பிக்கப் பட்டால் பத்திரிகைகளுக்கும், எழுதினவர்களுக்கும்



டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிலே பொருள் தண்டங் கிடைக்கும. பத்திரிகைகளில் பேசப்பட்டது பொய்யானல் துரை, மான நஷ்டிக்கு வழக்குத் தொடுக்கலாமே? என் செய்யவில்லை; பத்திரிகைகள் மேல் உள்ள கருணையாலோ? அல்லது தாங்கள் அகப்பட்டுக் கொள்வார்கள் என்ற பயமோ? மறுமொழி மௌனந்தானே! பரிதாபம்! பரிதாபம்! புதுக் கவர்னரும் கமிஷனர்களுடைய ரிப்போர்ட்டுப் புத்தகத்தினுல் மயங்கிவிட்டார்! யாது செய்வார்? கமிஷனர்களுடைய ரிப்போர்ட்டுப் புத்தகம் பொய் பொதிந்தது என்பது உங்களுக்குத் தெரியும்; பத்திரிகைக்காரர்களுக்குத் தெரியும்; உங்கள் பிரதிநிதியாகிய ஸ்ரீ குமாரசாமிக்குத் தெரியும். புதுக் கவர்னருக்கு எப்படித் தெரியும்? பத்திரிகைக்காரர்கள் இன்னும் ஓலமிடுகிருர்கள். ஸ்ரீ குமாரசாமி மனவஞ்சனை யில்லாது பாடுபட்டார். இப்போது அந்த மகானுபாவர் சட்ட நிரூபண சபையில் ஒரு கேள்வி கேட்டார்: "இவ்வாண்டு ஜனங்களுக்கு விதைநெல் கொடுக்க கவர்ண்மெண்டு உத்தரவு செய்ததே; கொடுக்கப்பட்டதா? எங்கே கொடுக்கப்பட்டது? அவ்விஷயத்திலே செய்துகொண்ட உடன்படிக்கை என்ன?" இதற்குப் பார்ச்சு துரை, "வட்ட மாகாணத்து ஏஜண்டு சந்தேகமில்லாமல் விதைநெல் கொடுத்திருக்கிருர்; விபரமாகிய அறிவிப்பு வேண்டுமானுல், வருவிக்கப்படும்" என்று மறுமொழிந்தார். என்ன துணிவு கொண்டு இப்பொய் உரைத்தாரோ? அன்பர்களே! தமது தீங்குகளைத் தலைமைக்காரர் வாயிலாக மறைப்பித்துத் தாம் தப்புவித்துக்கொண்டு, துள்ளுதலிலே உயர் ஒப்பில்லாத பண்டிதர் நமது துவைனந்துரை என்பது பார்ச்சு துரைக்கு இனிது விளங்கும் போலும். என்ன வேலை! இங்கே தலைமைக்காரர் சிலர், விதை நெல் பெற்றுக்கொண்டோம் என்று சனங்களிடத்திலே பற்றுச்சீட்டு வாங்கித் தரும்படி தாங்கள் வலிந்து எவப்படுகிருர்கள் என்று புலம்பிக் கொண்டு திரிகிருர்கள். அவர்கள் அழுது கெஞ்சி, சனங்களிடம் பொய்ப் பற்றுச்சீட்டு வாங்கிக்கொடுப்பதில் சந்தேகமா? இப்படிப் பற்றுச்சீட்டு வாங்க முடியுமானுல் உங்கள் பிரதிநிதி குமாரசாமி யாதுசெய்வார்? யாழ்ப்பாணத்துக் கச்சேரி பொய்க்கோள் படிப்பிக்கிற கலீசு! அதற்குத் தலைவர்

**(Principal)** துவைனந் துரை ! உபாத்தியாயர்கள் "பாபந்தோன்றிய நாளையில் தோன்றிய பதகன் ஆகிய முதலியார் முதலிய உத்தியோகஸ்தர்கள். இப்படியானால், யாழ்ப்பாணம் விரைவிலே தேவனுடைய சாபத்திற்குப் பாத்திரமாவதிற் சந்தேகமா ? சனங்களே, குமாரசாமி உங்கள் பொருட்டுப் பிரயாசைப்படுகிறார். இது நல்ல சமயம். சைவர், வைணவர், கிறிஸ்துவர், முகம்மதியர் அனைவருக்கும் நல்ல சமயம் ! ஒரு சமயமும் இல்லாதவருக்கும் நல்ல சமயம். கச்சேரி உத்தியோகஸ்தர்களுக்கும் தலைமைக்காரர்களுக்கும் உண்மைக்கு மாறாகப் பயப்படாதீர்கள்! அவர்கள் அழுகையையும் கெஞ்சுதலையும் கண்டு மனம் இளகிப் பற்றுச்சீட்டுக் கொடுத்து, உங்கள் வாய்ச்சோற்றிற்கே கேடு விளைத்து, உங்களுக்கு நன்மை செய்யத் தலைப்பட்ட பரம தயாளுக்களைத் தலை குனிய வைத்து, இனி ஒருபொழுதும் வாய்திறவா வண்ணம் அதைரியப் படுத்திவிடாதேயுங்கள் ! அன்பர்களே, நீங்களெல்லாம் உங்கள் உண்மையிலேயே நிலைபெற்று நில்லுங்கள். அப்போது குமாரசாமி எடுத்த கருமம் பலித்துவிடும். இது நல்ல சமயம்."

### கருணை

இந்தக் காலத்தில் மிகப் பெரிய மேடை வீரர்கூட இவ்வளவு ஆணித்தரமாகப் பேசுவார்களா என்பது சந்தேகம். நாவலர் இக்கால அரசியல் வாதியானால் நமக்கு விரைவில் சுயராஜ்யம் கிடைத்திருக்கும் ! அவர் வாக்கில் அவ்வளவு தீவிரமான சக்தி யாவேசம் விளையாடுகிறது ! இலங்கைச் சட்ட சபையிலும் நாவலர் கிளர்ச்சி பலிக்க வில்லை ; நாவலர் தளர்ந்தாரா ? இல்லை; இன்னொருபடி ஏறினார். இலண்டனுக்கே தன் மனக் கொதிப்புச் சென்று தாக்கச் செய்தார். திருவனந்தபுரம் நீதிபதி செல்லப்ப பிள்ளை, அப்புக்காத்து நாகலிங்கம் பிள்ளை, பொன்னம்பலம் ராமநாதன், குமாரசாமி முதலியோரைக் கொண்டு உணர்ச்சி ததும்பும் அறிக்கை தயாரித்து, சரியானவழியில் இலண்டனுக்கு அனுப்பி இந்தியா காரியதரிசி யாழ்ப்பாண அரசியல்ஊழல்களைக் கவனிக்கும்படி செய்துவிட்டார். துவைனந்துரைக்கு உதடும் உள்ளமும் துடித்தன, கொதித்தன ; பகைத்தீ "குப்" என்று எரிந்தது. நாவலரை மடக்க வழிபார்த்தார்; முடியவில்லை. அக்காலம் மகேந்திரன் முன் நாவரசர் " நமனை அஞ்சோம் " என்று நின்றதுபோலவே நாவலர், துரையின் அநீதிகளை எதிர்த்து நின்றார். நாவரசர் சாந்தமாகச் சிவன்மேல் பாரத்தைப்போட்டு நின்றார் ; நாவலர் தீவிரமாகச் சத்தியத்தின் மேல் பாரம்போட்டுச் சிம்மம் போல் கர்ச்சித்து நின்றார்.சுற்றியிருந்த பகைவர், இதுதான் சமயம் என்று கோளேற்றிக் குட்டிக் கலகம் செய்தனர். நண்பர் 'நாவலருக்கு என்ன வருமோ' என்று அஞ்சினர். உறவினர் " உனக்கேன் இந்த வம்பு ?" என்று கண்டித்தனர். நாவலர் மனச்சாட்சியோ " சிவனிருக்கிறான் ; சத்தியம் வெல்லும்"என்று தைரியமாக நின்றது. துரையும் எரிப்பும் வியப்பு மானார்; இவர் சொல்வது உண்மைதானே என்று அவர் மனச்சாட்சியும் படபடத்தது ; சில ஆண்டுகள் துரை உதட்டைக் கடித்துக் கொண்டேயிருந்தார். ஆனால் நாவலரின் அஞ்சா நெஞ்சமும், வீரத் துணிவும், வெள்ளை யுள்ளமும், நேர்மையும் அவரையும் கவர்ந்தன. பிறகு நாவலரிடம் அவருக்கு மரியாதை யுண்டானது. நாவலர் இறந்த செய்தி கேட்டதும் " ஒரு சத்திய வீரரை இழந்தோம்" என்று வருந்தி அன்று கச்சேரிகளுக்கு விடுமுறை யளித்தார். இவ்வாறு நாவலர் பொதுக்காரியங்களில் ஈடுபட்டு, சர்க்காரையும் உஷார்ப் படுத்தியே வந்தார்.



# 43. பொன்னம்பலம் ராமநாதன்

**நா**வலர் அரசியலிலும் பெரியமூளை ; இக்காலம் அவர் அரசியல் மேடை யேறியிருந்தால், அவர் திலகர், சிதம்பரம் பிள்ளை போல் விளங்கியிருப்பார். அவர் அக்கால ஊழல்களைத் திருத்தி, தமிழ், சமயம், பொதுநலம் மூன்றையுங் காக்க "**உதய பானு**" என்ற பத்திரிகையை நடத்த முயன்றார். யாழ்ப்பாணத்தாருக்கு உதயதாரகைதான் வாய்த்தது ; பானுவை ஒருவரும் மதிக்க வில்லை ; நாவலர் முயற்சி பயன்பெறாமல் " பானு " அவர் உள்ளத்திலேயே அஸ்தமித்தது. இப்போது யாராவது அப்பெயருடன் பத்திரிகை நடத்த மாட்டார்களா ?

ஜனங்கள் சிக்கனமாகவும் வாழ்ந்து, கொஞ்சம் மிச்சம் பிடிக்க சேமநிதிகள் உண்டாக்க முயன்றார் நாவலர். பிற்காலம் அவை உண்டாகி நல்ல வேலை செய்தன. நாவலர் அரசியல் காரியங்களில் சிறந்தது ஒன்றுண்டு.

இலங்கை சட்டசபைப் பிரதிநிதி கனம் **ஸர். மு. குமாரசாமி பிள்ளை** இறந்துபோனார். அவர் சிறந்த அறிஞர், பொதுநலக் காரர். அவர் இடத்திற்கு இரண்டு பேர் போட்டிபோட்டார்கள். ஒருவர் குமாரசாமியின் மருமகனான **பொன்னம்பலம் ராமனாதன்.** இவர் இலங்கை உயர்நீதி மன்றம் அட்வகேட். மற்றொருவர் **பிரிட்டோ (Britto)** என்ற கிறிஸ்துவர்; இவரைப் பலர் போற்றினர்; முதன்மையாக நாவலர் எதிராளர். நாவலர், பொன்னம்பலம் ராமனாதனுக்கே சட்டசபை அங்கம் வேண்டுமென்று கவர்னர் ஜேம்ஸ் லாங்டனுக்கு நேரே மனுச் செய்து கொண்டார். அதன் சாரமாவது: "கவர்னர் அவர்களே, ஸர். குமாரசாமி அவர்கள் மறைந்தது எல்லாருக்கும் பெருந் துக்கம். அத் துக்கம் ஒருவாறு மாறி எங்களுக்குச் சமாதானம் உண்டாக வேண்டுமானால், அவரது மருமகரான பொன்னம்பலம் ராமநாதரை அந்த இடத்திற்குத் தேர்ந்தெடுக்க மன்றாடுகிறோம். இக் கனவான் நிரம்பப் படித்தவர், பலதுறைப் புலவர், ஊரறிந்த உபகாரி, எங்கள் உள்ளமறிந்த நண்பர்; எங்கள் குறை யறிந்து நிறைவு செய்யத் தக்க ஒருவர் இவரே. இரக்கம், ஒழுக்கம், நேர்மை, அன்பு, பொதுநல ஊக்கம் எல்லாம் நிரம்பிய உயர்குலச் சீமானான இவர் எல்லா வகையிலும் அந்த இடத்துக்குத் தக்கவர். இவர் குடும்பமே பரோபகாரக் குடும்பம், மேதாவிக் குடும்பம். இராமனாதனின் பாட்டனார் எ. குமாரசாமி பிள்ளையே இலங்கையின் முதல் சட்டப் பிரதிநிதியாகி, 1836-ல் அவர் இறக்கு மட்டும் ஸ்தானம் வகித்து, அரிய நன்மைகளைச் செய்தார். ஆதலால் பொன்னம்பலம் ராமநாதனையே சட்டசபைக்கு நியமிக்கத் தங்களை வேண்டுகிறோம்."

—**ஆறுமுக நாவலர் முதலியோர்**



இதன் பிறகு எதிர்க் கட்சி வலுத்தது; நாவலர் ஊர்ஊராக, மேடை மேடையாகப் பொன்னம்பலம் ராமநாதனை ஆதரித்துப் பேசினார். இவருக்கு விரோதிகள் அனைவரும் சரியான சந்தர்ப்பம் வாய்த்தது என்று எதிர்ப்பக்கம் நின்று கூச்சலிட்டுக் கொதித்தனர். தேர்தலில் ஈடுபடுவோரின் பகடி வித்தைகள் தெரிந்தது தாமே. நாவலர் ஆணித்தரமான ஆதாரங்களுடன், தன் கட்சியைப் பேசினார். அவர் ஒரு கூட்டத்தில் பேசிய அறிக்கை இங்கே உள்ளது:

"ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் பிறருங்கூடி வண்ணார்பண்ணையிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையில் 1879-ஆம் ஆண்டு வைகாசி மாதம் 22-ம் திகதி வியாழக்கிழமை*உருமத்தின்பின்ஒரு கூட்டம் வைத்தார்கள். மூன்றுமணி யளவில் தஞ்சாவூரிலிருந்து வந்த காரேல் (விஸ்வநாத பிள்ளை) பண்டிதரே சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் பிரசிங்கித்து முடிந்த பின், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் எழுந்து குமாரசுவாமி பிள்ளை யவர்களின் கீர்த்திப் பிரபாவத்தை விஸ்தரித்த பின்னர், அவர் மருமகன் அப்புக்காத்து **இராமனாதத் துரையே** எங்கள் தமிழ்ப்பிரதிநிதியாகச் சட்டநிரூபண சபையில் இருக்கத் தகுந்தவரென இலக்கண வழுக்கள் எதுமின்றித் தருக்க சாஸ்திர முறை பிறழாது பிரசங்கித்தார். இத்தை, திருவாங்கூரின் நீதிபதி (Magistrate) பொன்னம்பலம் பிள்ளை அநுசரித்தும் மெச்சியும் பேசினார்.

(இஃது 1879-ஆம் ஆண்டு வைகாசி மாதம் 28-ஆம் திகதி வெளிவந்த இலங்கை நேசனில் கண்டது.)"

நாவலர் கட்சியே முடிவில் வென்றது. பொன்னம்பலம் ராமனாதன் ஜயகோஷத்துடன் சட்ட சபையில் வீற்றிருந்து, அளவற்ற நலஞ் செய்தார். நாவலர் விட்ட காரியத்தை அவரே நிறைவேற்றினார். தமிழுக்கும் சைவத்திற்கும் அவர் செய்த பணி இன்று ஒரு கல்லூரியாக விளங்குகிறது. இதே ராமனாதன் நாவலரை சட்டசபையில் "Champion Reformer of the Hindus" என்று புகழ்ந்தார்.

*உருமம்—மத்தியானம் (உலக வழக்கு)

# 44. ஆலயப் பணி

நாவலர் சிவாலய தரிசனத்தைச் சிறந்த சமய ஒழுக்கமாக வற்புறுத்தினர். யாழ்ப்பாணத்திலுள்ள சில சிவாலயங்களைப் புதுக்கவும், அமைக்கவும், திருத்தவும் முயன்றார். திருக்கேதீச்சுரம், தேவாரம் பெற்ற திருத்தலம். அதில் இருந்த கோயிலை அன்னியர் அழித்துத் தரைமட்ட மாக்கிவிட்டனர். நிலத்தையும் அரசினர் எடுத்துக் கொண்டனர். அதை மறுபடி வாங்கிக் கோயில் கட்ட நாவலர் முயன்றார். ஆனால் துவைனந்துரை தர்பார் நாவலருக்கு எதிரிடையா யிருந்ததால், காரியம் நடக்கவில்லை. இவர் காலத்திற்குப் பிறகு, துரையே இவரது நேர்மையை மெச்சி, அந்த நிலத்தைச் சைவர்களுக்குத் தந்தார்; ஆலயமும் எழுந்து விளங்குகிறது.

### கீரிமலை

அதேமாதிரி கீரிமலையிலும் இப்போது விளங்கும் கோயிலுக்கு முயன்றவர் நாவலரே. அதைப் பற்றி அவர் விடுத்த அறிக்கை ஒன்று உதய தாரகையில் வந்தது. அதை அப்படியே இங்கே காண்க. நல்ல காரியங்களுக்காக இந்த மகான் பொருள் தேடிய நேர்மையும் இதில் விளங்குகிறது.

“யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரத்துக்கு வடமேற்கே, இரண்டு மைல் தூரத்திலுள்ள கீரிமலையிலே, ஆதியில் ஒரு பெரிய சிவன் கோயில் இருந்தது. அது போர்த்துக்கேசரால் இடிபட்டது. கீரிமலையின் அடியினின்றுஞ் சுத்தஜலம் ஊற்றெடுத்துக் கடலினுள்ளே பாய்கின்றது. அந்தச் சங்கமம் புண்ணிய தீர்த்தம் என்று விசுவசித்தன்றோ, யாழ்ப்பாணம் எங்குமுள்ள சைவசமய சனங்கள், விசேஷ தினங்களிலே அங்கே போய் ஸ்நானஞ் செய்கின்றார்கள். அநேகர் அங்கே சங்கற்பஞ் செய்து ஒரு மண்டலம், அரை மண்டலம் ஸ்நானஞ் செய்துகொண் டிருக்கிறார்கள். அநேகர் அந்தியேட்டி சிரார்த்தம் முதலிய கிரியைகள் அங்கேபோய்ச் செய்கிறார்கள். அவர்களெல்லாம் ஸ்நானஞ் செய்தவுடனே சுவாமி தரிசனம் செய்யும் பொருட்டு, அங்கே ஒரு கோயில் இல்லையே. யாழ்ப்



பாணத்தில் எத்தனையோ இடங்களிலே கோயில் சமீபத்திலிருக்கவும் புதிதுபுதிதாகக் கோயில் கட்டும் நம்மவர்கள் எல்லாச் சனங்களுக்கும் பொதுத் தலமாகிய கீரிமலையிலே ஒரு கோயில் கட்டுவிக்க இதுவரை நினையாதது என்னையோ ?

கீரிமலையிலே ஒரு கோயில் கட்டுவித்துச் சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்து, நித்தியபூசை நடத்துவிப்பது மேலாகிய சிவதருமம். பொருளுதவி செய்வார்களானால், இந்தச் சிவ தருமத்தைத் தொடங்கி நிறைவேற்றலாம்.

1. சனங்கள் இந்தச் சிவதருமத்தின்பொருட்டுப் பணமாகவேனும், மரம், கல், சுண்ணாம்புமுதலிய உபகரணங்களாகவேனும் தங்களால் இயன்றது கொடுத்தல் வேண்டும்.

2. கீரிமலையிலே அந்தியேட்டி சிரார்த்தம் செய்யும் சனங்கள் தகுதியாகிய தானம் இரண்டு இந்தச் சிவதருமத்தின்பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

3. கீரிமலையிலே அந்தியேட்டி செய்யும் குருமார்கள் அந்தியேட்டி தட்சிணையிலே அந்தியேட்டி ஒன்றுக்குக் காலரூபா வீதம் இந்தச் சிவதருமத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

4. கீரிமலையிலே விசேஷ தினங்களிலே போய் ஸ்நானஞ் செய்கிற ஜனங்கள் இந்தச் சிவதருமத்தின் பொருட்டு, அங்கே வைக்கப்படும் உண்டிப் பெட்டியிலே தங்கள் தங்களா லியன்ற பணத்தொகை போடல் வேண்டும்.

5. கீரிமலைக்குச் சமீபத்தில் உள்ள ஊர்களில் வசிக்குஞ் சனங்கள் தங்கள் தங்கள் நிலங்களிலே நெல், சிறுதானியம், காய்கனி, வெற்றிலை, புகையிலை முதலிய பலங்கள் உண்டாகும் பொழுது, அவைகளிலே தங்களாலியன்றது இந்தச் சிவதருமத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

6. கீரிமலைக்குச் சமீபத்தில் உள்ள ஊர்களில் வசிக்கிற சைவ சமய சனங்கள், இந்தச் சிவதருமத்தின் பொருட்டுத் தங்கள் தங்கள் வீடுகளிலே போடப்படுகிற குட்டான்களிலே நாளொன்றுக்கு ஒரு பிடி அரிசி போட்டு அந்த அரிசியை மாதமுடிவில் வரும் தண்டல் ஆளிடத்தில் ஒப்பித்தல் வேண்டும்.

7. காங்கேயன் துறையிலே அரிசி நெல் இறக்குமதி செய்கிற வியாபாரிகள் அரிசி, கரிசை ஒன்றுக்கு ரூபா அரை; நெல், கரிசை ஒன்றுக்கு ரூபா கால் வீதம் மகமை இந்தச் சிவதருமத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

8. தகுதியாகிய பணத்தொகை வைத்துக்கொண்டு சிவதருமஞ் செய்ய விரும்புகிறவர்கள் கீரிமலைச் சிவன் கோயிலிலே தங்கள் தங்களால் இயன்ற திருப்பணி செய்வித்துக்கொள்ளலாம். அவ ரவர் செய்வித்த திருப்பணியிலே அவரவர் பெயர் வெட்டப்படும்.

1878-வெகுதானிய வருடம்
வைகாசி மாதம்
24-ஆம் திகதி

இங்ஙனம்,
**க. ஆறுமுக நாவலர்**
**வண்ணார்பண்ணை**

இப்படி ஆலயத் திருப்பணிகள் செய்ததுடன் நாவலர் நாட்டுக் கோட்டைச்செட்டிமார் கட்டிய ஆலயங்களையும் சீராக ஆகம விதிப் படி நடத்த வற்புறுத்தினார். உதாரணமாக, வண்ணார்பண்ணைக் கதிரேசன் கோயில் ஊழல்களை வெட்டவெளிச்ச மாக்கி, தீக்ஷை பெற்ற குருக்களைக் கொண்டு குமாரதாந்திர விதிப்படி நடத்தச் செய்தார்.

இவ்வாறு நாவலர் செய்துள்ள பணிகளை எண்ணினால், எவர் உள்ளந்தான் அன்பினாலும் நன்றியாலுந் துடிக்காது! இலங் கைத் தமிழர் "**எங்கள் நாவலர்**" என்பதுபோல் எல்லாத் தமி ழரும் "**எமது நாவலர்**" என்று பெருமை கொள்ளவேண்டும். இப்போது போற்றுகிறோம். அக் காலம்......?

# 45. காலம் அறியவில்லை

**தாய்மொழி**, சைவம், பொது வாழ்வு, அரசியல், சமுதாய சீர் திருத்தம் முதலிய எல்லாத் துறைகளிலும் சலியாது உழைத்த இந்த மகானை அக்காலத்தார் அறிந்து தக்கபடி போற்றி யிருந்தால், இப்போது தமிழர் வரலாறே உலக வரலாற்றில் தெய்வச் சித்திரமாகப் பொலியும்! ஆனால் நாவலரை அக்காலம்



...முமப்பு தமிழ்ச் சங்க... நூலகம்

தக்கபடி ஆதரிக்க வில்லை. அவர் நாட்டிய வித்தியாசாலைக்குத் தக்க பொருளுதவி வரவில்லை. அதைப் பற்றி அவர் ஆரம்பத்தில் ஓர் அறிக்கைவிட்டு "நான், என் வாழ்வையே தமிழ், சைவம் இரண்டிற்கும் தந்துள்ளேன். எவ்விதமான பிரதிப்பிரயோசனத் தையும் கருதாமல் அறிவுப்பணி செய்கிறேன். சைவ சமயாபி மானிகள் என் முயற்சிகளை ஆதரிக்க வேண்டும்" என்று வேண் டினார். அறிஞர் சிலர் அறிந்து சிறிது உதவினர்; பகைவர் நான்கு புறமும் முளைத்துத் தூற்றினர். இருந்தும் நாவலர் யாழ்ப்பாணத்திற்கு வழிகாட்டித் தமது வித்தியாசாலையை நன்கு நிலைநாட்டி, தக்க பொருளும் வைத்தார். தமது கருத்து நிறை வேற இன்னும் ஏராளமான காரியங்கள் செய்யவேண்டும்; பொருள் வேண்டும். அதற்குத் தமிழ்நாட்டில் முயலலாம் எனக் கருதினார் நாவலர். தமது வித்தியாலயத்தை மாணவரான ஆறு முகம் செட்டியாரிடம் விடுத்துக் கப்பலேறினார். அவர் தமிழகத் தில் சுற்றிக்கொண்டிருக்கும்போது, "அண்ணாவின் மகள் சிவ பதஞ் சேர்ந்தாள்" என்ற செய்தி வந்தது. அதற்கு நாவலர் சென்னையிலிருந்து எழுதிய கடிதம் அவர் வாழ்வின் கண்ணாடியா யிருக்கிறது. அக் கடிதத்தை இங்கே தந்து இனி நமது நாவலரைச் சிதம்பரத்திற் காண்போம்.

உ
**சிவமயம்**

ஸ்ரீமத் அண்ணா அவர்களுக்கு விஞ்ஞாபனம்.

பரம கருணாநிதியாகிய நடேசருடைய திருவருளினாலே, இவ் விடத்தில் அனைவரும் க்ஷேமம். அவ்விடத்தில் தாங்களும் சகோ தரர் சகோதரிகள் முதலிய சமஸ்தரும் க்ஷேமமா யிருக்குஞ் சமாசாரம் அறிய விரும்புகிறேன்.

இந்த மாதம் இருபதாம் தேதி, தாங்கள் எழுதிய காகிதம் நேற்று வந்து சேர்ந்தது. அதற்கு முன் சதாசிவம் அனுப்பிய காகிதத்தினாலே தங்கள் புத்திரி தேகவியோகம் அடைந்த துக்க சமாசாரம் அறிந்தேன். தங்களுக்குப் போல எனக்கும் துக்கம்!

துக்கம் ! ஆயினும் என்ன செய்யலாம் ! ஒருவர் முன்னும் ஒருவர் பின்னுமாக நாமெல்லாம் மரணிக்கவே போகிறோம் !

தேவாரம்

**நடலை வாழ்வு கொண் டென்செய்தீர் நாணிலீர்**
**கடலை சேர்வது சொற்பிர மாணமே ;**
**கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்,**
**உடலி னார்கிடந் தூர்முனி பிண்டமே.**

ஆதலால் நமது சரீர நிலையாமையை நாமெல்லாம் சிறிதேனும் மறவாமல், எப்போதும் இடைவிடாமல் நினைவிலே வைத்துக்கொண்டு நமக்கு உள்ளபடி இனிய பொருள் இன்னதென்று அறிந்து, அந்தப் பொருளைத் தேட வேண்டும். எல்லாவற்றினும் பார்க்க நமக்கு இனிய பொருள் உயிர்க்குயிராயுள்ள பரமசிவம்.

தேவாரம்

**கனியி னுங்கட்டி பட்டக ரும்பினும்,**
**பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்,**
**தனிமு டிகவித் தாளு மரசினும்**
**இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே.**

இப்படி உள்ளவாறே நமக்கு இனிய பொருளை நாம் அடையாமல், வீணாள் போக்குவோமாயின், நமக்கு நாமே வஞ்சகரென்பதற்குச் சந்தேகம் உண்டோ ? இல்லை, இல்லை !

ஆகையால் நாமெல்லாம் நீர்க்குமிழி போல நிலையில்லாததாகிய இச்சரீரம் உள்ளபோதே, நமக்கினிய பரமசிவனது திருவடிகளை மெய்யன்போடு வழிபட்டுய்ய வேண்டும். இந்த வழிபாட்டுக்கு அங்கம், பாவங்களை வெறுத்தலும் புண்ணியங்களைச் செய்தலும். இவையில்லாத வழிபாடு அபத்தியத்தைத் தள்ளாமலும் பத்தியங்கொள்ளாமலும் தின்கின்ற மருந்துக்குச் சமானமேயாகும்.



ஆதலால், நாமெல்லாம் மனைவி மைந்தர் முதலிய சுற்றத்தார்களுடனே கூடி யிருந்தாலும், வேளாண்மை, வியாபாரம் உத்தியோகம் முதலிய லௌகிகங்களைச் செய்தாலும், சிவநிந்தை வேதாகம நிந்தை, கொலை, களவு முதலிய பாவங்களை வெறுத்து, இரக்கம் முதலிய புண்ணியங்களை உடையவர்களாய், நமக்கினிய கடவுளுடைய திருவடிகளை, நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும் மறவாமற் சிந்தித்து வழிபட்டு வரவேண்டும். ஐயையோ ! இப்படிச் செய்யோமாயின், நாம் எல்லா உயிர்களுக்கும் ஏகநாயகரா யிருக்கிற கடவுளுடைய ஆணையினாலே மறுமையிலே எவ்வளவு பெருந் தண்டனையை அடைவோம் !

**"நின்று மிருந்துங் கிடந்து நடந்துநினை**
**என்றுஞ் சிவன்றா ளிணை."**

தங்கள் வீட்டுக்குச் சமீபத்திலுள்ள கைலாசபிள்ளையார்கோயில், இன்னும் கும்பாபிஷேகம் செய்யப்படாமல் இப்படி யிருப்பது, இயன்றவரை இடம் பொருள் ஏவல்களுள்ள தங்களுக்கும் அப்படிப் பட்ட மற்றவர்களுக்கும் சிறப்புத்தானா ? ஐயையோ ! நாமெல்லாம் இவ்வுலகத்தை விட்டுப் போம்போது எது நம்முடனே கூடிவரும் நமது புண்ணியமன்றி ? " I have lost except what I have given away" என்று Mark Antony என்ற ஒரு விவேகி தனது மரண காலத்திற் சொல்லிய அருமருந்தன்ன வாக்கியத்தை நினைவுகூறுங்கள்.

**"உற்றாராருளரோ ! உயிர் கொண்டுபோம்பொழுது**
**குற்றாலத்துறை கூத்தரல்லால் நமக்**
**குற்றாராருளரோ !"**

என்கின்ற அருமைத் திருவாக்கியத்தைச் சிந்தியுங்கள்! சிந்தியுங்கள் !

தாங்கள் தங்கள் அதிப்பிரியமுள்ளபுத்திரியை நினைந்து அவள் பெயரால் மேற்படி கோயிற்றிருப்பணியை நிறைவேற்றி அதிசீக்கிரத்திலே கும்பாபிஷேகத்தை முடிப்பீர்களாயின், பெரும் புண்ணியம் ! பெரும்புண்ணியம் ! நாளை நாளை என்பது தகாது ! தகாது ! நிறைவேற்றுவீர்க ளென்றே நம்புகிறேன்.

தாங்கள், தேகவியோகம் அடைந்த புத்திரியின்பால் உள்ளபடி அன்புடையவர்க ளாயின், அவளுடைய ஆன்மாவிற்கு நற் கதி கிடைக்கும் பொருட்டும், மிக இளைய அக்குழந்தையினது பெயர் என்றும் நிற்கும்பொருட்டும், இதை நிறைவேற்றுவீர்கள் என்ப தற்குச் சந்தேகமா !

யாழ்ப்பாணத்திலே உவாந்திக்கப்பட்ட அசுசிப் பிராணியாகிய நான், இச் சென்னப்பட்டணம் என் சென்ம பூமியிற் சிறந்த தென்று சொல்லும்வண்ணம் கிருபாசமுத்திரமாகப் பன்றிக் குட்டிக்கும் முலையருத்தின சர்வசீவ தயாபரராகிய நடேசரது திருவருளினாலே, சற்றே சௌக்கியமா யிருக்கிறேன்.

சென்னப் பட்டணம்<br>ரௌத்திரி வருஷம்<br>ஆடி மாதம் உ௪ உ

இப்படிக்கு,<br>**க. ஆறுமுகன்**

# 46. சந்நிதானத்தில்

1858—ஜூன் மாதம் (காலயுத்தி ஆனி) நாவலர் யாழ்ப்பாணத் திலிருந்து வேதாரண்யம் வந்து சேர்ந்தார். கோயில் மரி யாதையுடன் சுவாமி தரிசனம் செய்து, தேவார திருவாசகங்களைக் காது குளிரக் கேட்டார். கோயிலில் வேத கோஷத்துடன் தமிழ் வேதமான தேவார திருவாசகங்களும் முழங்க வேண்டுமென்று வற்புறுத்தினார் நாவலர். திருவாரூர் தியாகராச சுவாமியை வணங்கினார் ; அங்கே சுந்தரர் பாடிய " தில்லைவாழ் அந்தணர் தம்அடியார்க்கும் அடியேன்" என்ற தேவாரம் அவர் உள்ளத்தை உருக்கியது. அங்கிருந்து நாவலர் திருவாவடுதுறைக்கு வந்தார். பண்டார சந்நிதிகள் நாவலரை முகமலர்ந்து உபசரித்தார் ; தம் முடன் அமர்ந்து உண்ணச்செய்தார். நாவலரின் சொல்லமுதைப் பருகத் தம்பிரான்களும், கல்விக் கடல்களும், செல்வரும், ஓது வார்களும் ஆவலா யிருந்தார்கள். நாவலர், " திருமுறையே அருமறை, சைவசமயமே சற்சமயம், சிவனே பரமபதி, மெய் கண்ட தத்துவம் " முதலிய பல விஷயங்களைப்பற்றிச் சொன்மாரி



பொழிந்தார் ; கேட்டார் உள்ளம் சிவச் செழிப்படைந்தது. பிரசங் கத்துடன் நாவலர் திருமடத்திலுள்ள ஏட்டுப்பிரதிகளையும் ஆராய் ந்தார். அச்சிடுவதற்கு அரிய நூல்களைத் தொகுத்தார். நாவலர் நான்கு ஏட்டுப்பிரதிகளைக் கேட்டார் ; பண்டார சந்நிதிகள் மகிழ் வுடன் அவற்றை முன்வைத்து, ஒன்றைமட்டும் தாம் பார்ப்பது போல் தனியே எடுத்துவைத்துக் கொண்டார். நாவலர் முறைப் படி வணங்கித் திருநீறு வாங்கி இட்டுக்கொண்டு, விடைபெற்றுப் பத்தடி சென்றார். சந்நிதிகள் " இப்புத்தகத்தை விட்டுவிட்டீர் களே " என்று **எழுந்து சென்று**, தாம் எடுத்துவைத்த ஏட்டைத் தந்து புன்னகைத்தார். சந்நிதானம் யாருக்கும் எழுந்து மரி யாதை செய்வதில்லை; நாவலருக்கு அம்மரியாதை செய்யவே இத் தந்திரம் நடந்தது; நாவலரும் அறிந்துகொண்டு, கை குவித்து, "நமச்சிவாய" என்று வணங்கி, நான்கு ஏட்டுப்பிரதிகளுடன் தருமபுரத்திற்குப் போனார். கேட்கவேண்டுமா! கலைவாணரை எப் போதும் வரவேற்கும் தருமபுரம்,நாவலரை ஆர்வமுடன்வரவேற் றது. பண்டார சந்நிதிகள் நாவலரைத் தம் அருகே அமர்த்தி, போசனம் செய்வித்து, சாத்திர விஷயமாக அளவளாவினார். அடியார் வேண்டுகோட்படி நாவலர், பெரியபுராணத்தின் பெரு மை, திருத்தொண்டர் இலக்கணம் என்னும் பொருள் பற்றி இனிமையாகப் பேசினார். " ஐந்து பேரறிவுங் கண்களேகொள்ள, அளப்பருங் கரணங்கள் நான்குஞ் சிந்தையேயாக " என்னும் பெரியபுராணச் செய்யுளின் கருத்தை விளக்கும்போது சபை வியந்தது. மறுநாள் கந்த புராணத்தில் சூரன் வதைப் படலத் தைப் பிரசங்கித்தார். ஆதீனத்திலிருந்த ஏட்டுப்பிரதிகளையும் பரி சோதித்துத் தமது வெளியீடுகளுக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு உத்தரவு பெற்றுச் சீர்காழிக்கு வந்தார். சீர்காழி எல் லையை மிதித்ததும், " ஆளுடைப்பிள்ளைக்கு ஞானப்பா லளித்த அம்மையப்பா போற்றி " என்று நிலந்தோய வணங்கி அன்புக் கண்ணீர் துளும்பத் திருத்தோணியப்பரைத் தரிசித்து, சம்பந்தர் தேவாரங்களைப் பருகினார். பிறகு சிதம்பரம் வந்தார். தில்லையப் பன் சந்நிதியில் அன்பு ததும்ப நிற்கும் சைவப்பிரகாசருக்கு ஒரு சிறந்த எண்ணம் உதித்தது: சைவத்தின் இதயமான சிதம்பரத்

தில், தமிழும் சைவமும் பலகலைகளும் செழிக்கப் பெரியகல்லூரி நாட்டவேண்டும் என்ற எண்ணமே. நாவலர் அதற்குத் தகுந்த நிலம் வாங்கிக் கட்டிடம் எழுப்பப் பல யோசனைகள் செய்து தக்காரைக் கலந்து பேசி, சென்னைக்குச் சென்றார்.

## 47. திருக்கோவையார்

சென்னைப் புலவரும் சைவரும் அவரை வணக்கமுடன் வரவேற்று உபசரித்தனர். சென்னையில் நாவலர் தமது வித்யானுபாலன யந்திரசாலையை நிலைநாட்டியதை முன்பே சொன்னோம். அந்தக் கட்டிடத்திலேயே தங்கசாலைத் தெருவில் அவர் வசித்தார். தாம் சேர்த்துவந்த ஏட்டுப்பிரதிகளை யெல்லாம் நாவலர் அச்சிடத் தொடங்கினார். சென்னையில் ஒரு கம்பீரமான செந்தமிழ்வீரர் இவரைக் கண்டார். ஆள் உரத்துப் பருத்துத் திண்மையா யிருந்தார் ; சொல்லும் குரலும் வெகு அழுத்தம் ; தமிழில் நல்ல புலமை ; அவர் பேச்செல்லாம் திருக்குறளும் திருவாசகமுமா யிருந்தன. இந்தக் கனவானே **இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதியின் அமைச்சரான பொன்னுசாமித் தேவர்** ; அவர் தமிழ்ப் புலவர்களுக்கு வரையாது கொடுக்கும் வள்ளல். இவரும் பாண்டித்துரைத் தேவருமே மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் புதிதாக நாட்டித் தமிழ்ப்பணி புரிந்தவர்கள். தேவரின் உசாத்துணைவரான இராமசாமி பிள்ளை நாவலரிடம் பாடம் கேட்டவர். இவர் மூலமும் இன்னும் பலர் மூலமும் நாவலர் பெருமையைத் தேவர் அறிந்தார். தேவர், "தாங்கள் திருக்கோவையாரையும், உரையுடன் திருக்குறளையும், சேதுபுராணம் தருக்க சங்கிரகம், அன்னபட்டியம் ஆகியவற்றையும் சோதித்து வெளியிட வேண்டும். அவற்றிற்கு ஆகும் செலவை நானே தருவேன்" என்று வேண்டினார். நாவலர் "அப்படியே செய்யலாம்" என்று உடனே திருக்கோவையாரை அச்சிடத்தொடங்கினார். நச்சினார்க்கினியார் உரையுடன் அது வெளிவந்தது. குறளையும் அவ்வாறே வெளியிட்டார். இவரது திருக்கோவையாரை மெச்சி, திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் **மீனாட்சிசுந்தரம் பிள்ளையும்** அவர் மாணவரும், கும்பகோணம் கல்லூரித் தமிழ்ப் புலவருமான வித்துவான் **தியாகராசச்செட்டி** யாரும் அழகான சாற்றுக் கவி தந்தனர் :



மீனாட்சிசுந்தரம் பிள்ளை

மன்னுபெருந் தமிழ்ப்பாடை யிலக்கணமு
மிலக்கியமும் வரம்பு கண்டோன்,
பன்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன்;
சிவாகமநூற் பரவை மூழ்கி,
யுன்னுமநு பூதியெனும் விலைவரம்பி
லாமணிகை யுறக்கொண் டுள்ளா
னின்னுநய குணத்தினனுய்ச் சைவமெனும்
பயிர் வளர்க்கு மெழிலி போல்வான்.

நீடுபுகழ்த் திருக்கேதீச் சுரந்திருக்கோ
ணசலமிந் நிலவா நின்ற
நாடுபுகழ்த் தலம்பொலியாழ்ப் பாணத்து
நல்லூர்வாழ் நகராக் கொண்டோன்
தேடுபுக ழுருவமைந்த கந்தவே
டவத்துதித்த செல்வன் ; யாரும்
பாடுபுக ழாறுமுக நாவலனவ்
வாறச்சிற் பதிப்பித்தானே.

தருக்க சங்கிரகப் பதிப்பின் சிறப்புப் பாயிரம்

அகத்தியந்தொல் காப்பியமுன் னுயபல விலக்கணமுஞ்
சகத்தியல்பல் லிலக்கியமுஞ் சாற்றுபர மதநூலு
மகத்வதுமெய்ப் பொருணூலு மதியமையப் பயின்றுணர்ந்து,
சுகத்தியலு மனுபூதித் தோன்றலா யமர்பெரியோன்.

மாறுபடு பரசமய வழியனைத்து மறமாற்றி,
யாறுபடு செஞ்சடிலத் தண்ணலா ரருணெறியே
தேறுபடும் படிவளர்த்துத் திகழுமா தவமுடையோன் ;
வீறுபடு சிவனடியார் மேன்மைமுழு மையுமுணர்ந்தோன்.

## திருக்கோவையாருரை பதிப்புச் சிறப்புப் பாயிரம்

ஆசிரியப்பா

கந்தவேடவத்திற் கருதரன்பான்முன்
வந்தவேளென்ன வந்தவதரித்தோன்
நீற்றெடுகண்மணி நிறையப்பூண்பார்ப்
போற்றெடுபொலியும் புண்ணியபுருடன்
நவநெறியாய வனைத்துங்களைந்து
சிவநெறிவளர்க்குந் திப்பியகுணத்தன்
எழுத்துமுதலாக வியம்பிலக்கணமும்
வழுத்திலக்கியமும் வரம்புகண்டெழுந்தோன்.
சமயம்விசேடந் தகுநிருவாணமென்
றமையுமுத்தீக்கையு மடைவுறப்பெற்றேன்.
சுமங்கலவிசேடச் சுருதியாமூலா
கமங்களின்முப்பொருள் கருதுபேரருளாளன்.
யுத்தியினமைத்துணர்ந் தோங்கனுபூதி
சித்தியுற்றமைந்த சிவசிந்தாமணி,
கற்றுணர்புலவருட் களிக்கு
முற்றுணராறு முகநாவலனே.

## திரு. தியாகராசச் செட்டியார் அவர்கள்

நேரிசை யாசிரியப்பா

தென்னீழ நாட்டின் மன்னுயாழ்ப் பாணத்துப்
பல்லூர் புகழு நல்லூர் வாணன்,
சந்தத முஞ்சிவ சிந்தனை யகலாக்
கந்தவே டவத்தினில் வந்தவ தரித்தோன்
தொல்காப் பியமுத னல்லிலக் கணங்களு
மொல்காப் பயன்றரும் பல்காப் பியங்களுந்
தவநெறி காட்டுஞ் சிவபுரா ணங்களும்
பதிபசு பாசப் பகுப்பினி துணர்த்துஞ்



செய்தவர்க் கேயுறுஞ் சைவசாத் திரங்களும்
ஐயந் திரிபற வறிந்து தெளிந்து,
பெயரா வறிவிற் பெரியோ னாகி
வீறுகொண் டுயர்ந்த வாறுமுக நாவலன்.

இன்னும் திருவாவடுதுறை ஆதீன வித்துவான் தாண்டவராய சுவாமிகள், சிவசங்கர பண்டிதர், சோடசாவதானம் சுப்புராயச் செட்டியார் முதலிய பல புலவர்மணிகள் நாவலரைப்போற்றினர்.

திருக்குறள், திருக்கோவையார் நாவலர் பதிப்புத்தான் இன்றும் சுத்தப் பதிப்பாக வழங்குகின்றன. இவற்றிற்குப் பிறகு நாவலர் **திருவாசகம்** என்னும் அருளன்பு வேதத்தைப் பதிப்பித்தார். பிறகு வரிசையாகப் பல நூல்கள் வந்தன.

நாவலர் இரவில் நெடுநேரம் நூல்களை ஆராய்ந்து பாடபேதங்களை எட்டுப்பிரதிகளைப் பார்த்துச் சீர்திருத்திக் கொள்வார்; பகலில் அச்சகத்தி லிருந்து ஓயாமல் எழுதி யெழுதி அச்சுக் கோக்கத் தந்துகொண்டிருப்பார். அல்லது மளமளவென்று வாயினுற் சொல்லிக்கொண்டே போவார். அப்படியே கோப்பாளர் கோத்துக்கொண்டே செல்வர். இடையிடையே வல்லினம், மெல்லினம், புள்ளி, அரைப்புள்ளி என்று தெளிவாகச் சொல்வார். அவர், திருவிளையாடல், பெரிய புராணம் வசனங்களை இவ்வாறே மூலத்தைப் பார்த்துப் பார்த்து, வசனமாகச் சொல்லி விரைவாகக் கோத்து அச்சிடுவித்தார். அவை இரண்டும் சிறந்த வசன மணிகளாக விளங்குகின்றன. நாவலரிடம் வீண் பேச்சிராது; சிவ சிந்தையி லிருந்து, சிவமய உணர்வுடன் அவர் பணிசெய்வார். அவர் வாயைத் திறந்தால், மனித சமுதாயத்திற்குப் பெரும்பயனளிக்கும் சொற்களே வெளிவரும். சைவப்பிரசாரம்; சிவகைங்கரியம், சிவசன்மார்க்க விரோத கண்டனம், பொதுநலம் இவற்றிற்கே அவர் தமது வாக்கைச் செலவிட்டார். தமிழினுள்ள கருவிநூல்களையும், பதிநூல்களையும், சைவப்பிரகாச இலக்கியங்களையும், அசைவ கண்டனங்களையும் வெளியிடவே மையைச் செலவிட்டார். இவரது அருமை பெருமைகளைப் பெரும் புலவரும் அருட் பெரியார்களும் அறிந்தனர்.

மயிலாப்பூரில் திருவண்ணாமலை ஆதீனத்துச் சின்னப் பட்டம் ஆறுமுக தேசிகர் இருந்தார். அவர் ஓதுவார்களை அனுப்பி நாவலரை அன்புடன் அழைத்து உபசரித்து, அளவளாவி அவரது கல்வி ஒழுக்கம் சைவப் புலமைகளைப் போற்றித் தாம் தரித்திருந்த உருத்திராட்ச மாலையைத் தமது திருக்கரங்களாலேயே சூட்டி மரியாதை செய்து அனுப்பினார். இவ்வாறு புகழ் சிறந்து நாவலர் தமிழகத்தில் விளங்கினார். சென்னை அச்சுவேலைகளை, சதாசிவப் பிள்ளையிடம் விடுத்துத் திருத்தணி முருகனை வணங்கி, திருக்காளத்தியில் கண்ணப்ப பிரானைப் பணிந்து, காஞ்சி, திருவீரட்டானம், திருப்பாதிரிப்புலியூர், சிதம்பரம் முதலிய பல்தலங்களைச் சேவித்து, நாவலர் திருவாவடுதுறைக்கு எழுந்தருளினார். அங்கே உற்சாகமான வரவேற்பு, மரியாதைக்குமேல் மரியாதை, தமிழ்விருந்து மயம், சிவானந்தச் சிலிர்ப்பு! மகா சந்நிதானம் **சுப்பிரமணிய தேசிகர்** "நாவலர் இங்கேயே இருந்தால் நல்லது; வேண்டிய ஏற்பாடுகள் நடக்கும்; எல்லாரும் பயன் பெறுவார்கள், ஆதீனத்திற்கும் புகழா யிருக்கும்" என்றார். நாவலர் சம்மதித்திருந்தால், நாளடைவில் அவர் பண்டார சந்நிதியாக விளங்கியிருத்தல் கூடும். அதற்கேற்ற அறிவொழுக்கமும் தவமும் அவரிடம் உண்டு. எனினும் எவ்வளவு பெரிய இடமானாலும் ஒரே இடத்தில் கட்டுப்பட்டிருந்தால், தம் வாழ்வின் நோக்கம் நிறைவேறாது. மரநிழலில் மரம் வளராது; அததற்குச் சுதந்தர நிலம் வேண்டும். ஓரிடத்தில் கட்டுப்பட்டால், அந்த இடத்தின் மனமறிந்து பலர் கருத்துக் கோணாமல் நடக்கவேண்டும். ஆன்ம சுயேச்சை யிராது. ஆதலால் நாவலர், பண்டார சந்நிதிகளை வணங்கி, "இந்த இடத்தில் நான் நிலைப்பா யிருக்க முடியாவிட்டாலும், சந்நிதானம் என் உள்ளத்தில் என்றும் நிலைப்பா யிருக்கும். நான் மேற்கொண்டுள்ள சிவகைங்கரியம் நிறைவேற வேண்டும்; பல இடங்களில் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் நாட்ட வேண்டும். சிவத்தொண்டரைத் தயாரித்து, ஊர்தோறும் அனுப்பி, எங்கும் சிவமணம் பரப்ப வேண்டும். இதற்கெல்லாம் பெரியார் ஆசி வேண்டும்; ஓயாமல் உழைக்க வேண்டும்" என்றார். பண்டாரசந்நிதிகள் "இவை உயர்ந்த நோக்கங்கள்; இங்கேயிருந்தால் இத்தொண்டுகளை நாமே நிறைவேற்றி வைப்போம். தாங்கள் விரும்பிய இடங்களில் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நாட்டலாம்" என்றார். "சுயாதீனமா யிருந்தாலே என் எண்ணங்கள் நிறைவேறும் என்று தோன்றுகிறது. சந்நிதானம் உத்தரவு தரட்டும்" என்றார் நாவலர். உடனே சந்நிதானத்திடம் விடைபெற்று, நாவலர் தெற்கே புறப்பட்டு ஆங்காங்கு சைவப்பிரசாரம் செய்துகொண்டே திருநாரைக்காரோணத்திற்கு வந்தார். "வருக வருக, சிவந்தழைக்க வந்த திருநாவல வருக!" என்று அவ்வூரார் வரவேற்றனர். நாவலர் அங்கே "சைவசமய விளக்கம்" என்னும் சொற்பொழிவாற்றினார். 1861—மார்ச்சில் (துன்மதி மாசி) தோணி யேறி யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தார். அப்போது அவர் வயது சுமார் நாற்பதே.



# 48. முதல் விக்கியாபனம்

**நா**வலர் ஒருநொடிகூட ஓய்வில்லாமல் சிவபுண்ணியஞ் செய்தார். யாழ்ப்பாணம் வந்ததுமே, தாம் சிதம்பரத்தில் நாட்டப்போகும் சைவப்பிரகாச வித்தியாசாலையைப் பற்றிப் பிரசங்கம் செய்து பணம் வசூலித்தார். துந்துபி வருஷம் வைகாசி மாதம் உச உ சனிக்கிழமை, வண்ணார்ப்பண்ணையில் தமது வித்தியாசாலையிலேயே பெரிய சபைகூட்டி, நாவலர் தமது கருத்தை விளக்கினார்; பருத்தித்துறை சித்திவிநாயகர் கோயில், புலோலி முதலிய இடங்களிலும் பேசினார்; சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் வெள்ளி தோறும் சொற்பொழி வாற்றினார். அருமையறிந்த செல்வர் இயன்ற பொருளுதவி செய்தனர். சில வியாபாரிகள் தமது லாபத்தில் மகமை ஏற்படுத்தி, ஒழுங்காகக் கொடுத்தார்கள். நாவலர், தாம் சிதம்பரத்தில் செய்யப் போகும் பெரிய கல்விப் பணியைக் குறித்து, முதல் விக்கியாபனத்தை அனுப்பினார்; அதை அப்படியே தருகிறேன்; நாவலரின் உள்ளமும் உயர்ந்த கொள்கைகளும் அதில் விளங்கும். இது சென்னப்பட்டணத்திலேயே அச்சிட்டு, முன்பே வழங்கப் பெற்றுப் பின்பு யாழ்ப்பாணத்திற்கு வந்தது:

## சிதம்பரம் வித்தியாசாலை

யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன், அந்தச் சமயத்தின்வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாத பொழுது, பயன் பெருன். அந்தச் சமயத்துக்கு உரிய கடவுள் இவரென்பதும் அவருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும், விலக்கப்பட்ட பாவங்களும், அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுகதுக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும், அந்த வழிபாட்டினுலே பெறப்படும் பிரயோசனமும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத பொழுது, அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குரு முகமாக விதிப்படி பெறப்படுஞ் சமய நூற் கல்வி கேள்விகள் இல்லாத பொழுது, அந்த அறிவு உதியாது. ஆதலால், கல்வியும், அறிவும், ஒழுக்கமு மாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு.

கல்வி கேள்விகள் இல்லாதவர்கள், கடவுளை அறிந்து வழிபட்டு உய்யமாட்டார்கள் என்பது "கல்லார் நெஞ்சி னில்லா னீசன்" என்றும், "கற்றல் கேட்ட லுடை யார்பெரி யார்கழல் கையாற் றெழு தேத்த" என்றும் "கற்றவர்தொழு தேத்துஞ் சீர்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி நற்றவா!" என்றும் "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை மற்றவ ரறியா மாணிக்க மலையை" என்றும் வரும் உண்மை நாயன்மார் திருவாக்குகளானும் அறிக.

கிறிஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமயநூலைத் தாங்கள் கற்றும், வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளை ஸ்தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களினும் பிறவிடங்களினும் யாவருக்கும் போதித்தும் வருகிறபடியினுலே அவர்கள் சமயம் எத்தேசங்களினும் வளர்ந்தோங்கி வருகிறது.

நம்முடைய சைவசமயிகள் சைவநூல்களைக் கல்லாமையினுலும் எங்கேயாயினும் சிலர் கற்றுலும் அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும், நமது சற்சமயமாகிய சைவ சமயம் வரவரக் குன்றுகிறது.



ஆதலால் நமது தமிழ்நாடெங்கும் பாடசாலைகளைத் தாபித்து, பிள்ளைகளுக்குச் சமய நூல்களையும் அவைகளுக்கு வேண்டுங் கருவி நூல்களையும் "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுல் முடியும்" என்றும் "வறியார் இருமை யறியார்" என்றும் திருக்கோவையாரில் அருளிச்செய்தபடி இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக்காரணமாய் உள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகீக நூல்களையும் கற்பித்தலும், திருக்கோயில்கள்தோறும் சனங்களுக்குச் சமய நெறியைப் போதிப்பித்தலும் மிகமேலாகிய புண்ணியங்களாம்.

எல்லாத் தருமங்களையும் அறிந்து விதிப்படி சிரத்தையுடனே செய்து பயன் பெறுதற்குச் சமயநூலுணர்ச்சியே எதுவாதலால், அப்படிப்பட்ட சமயநூலுணர்ச்சியை வளர்த்தலாகிய இந்தத் தருமமே எல்லாத் தருமங்களினும் மிக மேலானது என்பதும், எல்லாத் தருமங்களுக்கும் மூலம் என்பதும் சொல்ல வேண்டுமா?

வேதாகமங்களை ஓதுதலும், அறிவுநூல்களைப் பிறர்க்கு விரித்துணர்த்துதலும், தருமங்களை எடுத்துப் போதித்தலும், பள்ளிக்கூடங் கட்டுதலும் பெரும் புண்ணியங்கள் என்பது'ஞானமிர்தம்' என்னும் ஞான நூலில் வகுத்துச் சொல்லப்பட்டது.

இன்னும் கன்மயாகம், தபோயாகம், செபயாகம், தியானயாகம், ஞானயாகம் என ஐவகை யாகங்கள் உண்டு. அவைகளுள், கன்ம யாகமாவது சிவனை விதிப்படி பூசித்து அக்கினி காரியம் முதலியன செய்தல்; தபோ யாகமாவது சரீரம் வாடச் சாந்திராயணம் முதலிய விரதங்களை அனுஷ்டித்தல்; செப யாகமாவது மந்திரங்களை விதிப்படி உச்சரித்தல்; தியான யாகமாவது மனசை வேறொரு விடயத்திலும் பொருந்தாத வண்ணம் நிறுத்திச் சதாசிவாதி விக்கிரகங்களை அன்பினுலே தியானித்து, அந்தத் தியானத்திலே இடைவிடாது கலந்து நிற்றல்; ஞான யாகமாவது சிவனை அறிவிக்கும் திவ்வியாகமங்களைத் தாம் ஓதுதலும் பிறரை ஓது

வித்தலும், அவைகளிலே சொல்லப் படும் பொருளைத் தாம் தெளித்தும், பிறரைத் தெளிவித்தலும், அந்தப் பொருளை நாடோறும் மறவாமல் மனசிலே தரித்தலுமாம். இந்த ஞான யாகமே பக்குவான்மாக்களுக்கு வைப்புமாய்ப் பிறவி நோய்க்கு மருந்துமாய், உயர்வொப்பின்றி நிற்குந் தலைமை யுடையது.

எல்லாத் தருமங்களுக்கும் மூலமாய், அவ்வெல்லாத் தருமங் களுக்கும் மேற்பட்டு விளங்கும் இச் சிவதருமம் நமது தமிழ் நாடெங்கும் வளர்ந்தோங்கல் வேண்டும் என்னும் பேராசை யானது என்சிறுவயசில் என்னுள்ளத்திலே தோன்றி நாடோறும் பெருகிப்பெருகி, இப்பொழுது அவ்வுள்ளத்தை விழுங்கித் தான் மேற்கொண்டு நிற்றலால், நான் என் மேன்மையை நினைந்து நினைந்து தடைப்படாமல், உயிர்க்குயிராகிய சிவனது வண்மையை " ஆட்டுவித்தாலாரொருவராடாதாரே—யடங்குவித்தாலாரொருவ ரடங்காதாரே—யோட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே, யுருகு வித்தா லாரொருவ ருருகாதாரே—பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே—பணிவித்தா லாரொருவர் பணியாதாரே—காட்டு வித்தா லாரொருவர் காணுதாரே—காண்பார்யார் கண்ணுதலாய் காட்டாக் காலே " என்னும் அருமைத் திருவாக்கு வழியாக நினைந்து நினைந்து, அவருடைய திருவருளை முன்னிட்டு நின்று முன்னே, சிவஸ்தலங்கள் எல்லாவற்றுள்ளும் பொதுவாயுள்ள **சிதம்பரத்திலே** சில முயற்சிகள் செய்யக் கருதுகின்றேன். அவை கள் வருமாறு :

1. சிதம்பரத்திலே திருவீதியில் விசாலமாகிய ஒருநிலம் வாங்க வேண்டும்.

2. இந்த நிலத்திலே ஒரு **பாடசாலையும்,** பூசைக்கட்டு, சாத்திரக் கட்டு, சமயற்கட்டு என மூன்று கட்டுள்ள ஒரு **திரு மட**மும் கட்டு விக்கவும், சிவபூசைக்கு உபயோகமாகும் பொருட்டு ஒரு சிறு **நந்தனவனம்** வைக்கவும் வேண்டும்.

3. இந்தப் பாடசாலையிலே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த உபாத்தியாயர்களை நியோகித்து, பிள்ளைகளுக்குப் பாலபாடங்கள், நிகண்டு, திருவள்ளுவர் முதலிய நீதிநூல்கள், சிவபுராணங்கள் இலக்கணம், கணிதம், தருக்கம், வெளிப்படையாகிய வசனநடை யிற் செய்யப்பட்ட சைவசமய நூல்கள், பூகோள நூல், ககோள நூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மைநூல், வாணிகநூல், அரசநீதி, சிற்ப நூல் முதலானவைகளைப் படிப்பிக்க வேண்டும்.



4. சாமர்த்தியர்களாகிய ஓதுவார்களை நியோகித்து, சில பிள்ளை களுக்குத் தேவாரமும் திருவாசகமுமாகிய தமிழ் வேதத்தைப் பண்ணுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும் பழக்குவிக்க வேண் டும்.

5. திருக்கோயிலிலேனும், திருமடத்திலேனும், நாடோறும் இரவிலே, கேட்போர் யாவருக்கும் பயன்படும் பொருட்டு இந்த உபாத்தியாயர்களைக் கொண்டு, பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கோயிற்புராணம், கந்த புராணம், உபதேச காண்டம், வாயுசங்கிதை முதலிய சிவ புரா ணங்களையும், சிவ தருமோத்தரத்தையும் படித்துப் பொருள் சொல்லுவிக்க வேண்டும்.

6. சாயங்காலத்திலே, சிவதரிசனம் பண்ணுகிறவர்களுக்குச் சிவ பக்தி விளையும் வண்ணம், இந்த ஓதுவார்களைக்கொண்டு, சிவசந் நிதானத்திலே தேவாரத்தைப் பாடுவிக்கவும், சாரங்கியில் வாசிப் பிக்கவும் வேண்டும்.

7. தமிழ் நாட்டார் உய்யும் வண்ணம், தமிழ்வேதஞ் செய்தரு ளிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் முதலிய சமய குரவர் நால்வருக்கும் பெரிய புராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனு ருக்கும், தமிழ்ச் சித்தாந்தஞ் செய்தருளிய மெய்கண்ட தேவர் முதலிய சந்தான குரவர் நால்வருக்கும், இந்தத் திருமடத்திலே வருடந்தோறும் அவரவர் பரிபூரணதசை யடைந்தருளிய திருநட் சத்திரத்திலே குருபூசை செய்து, அவரவர் மகிமையை யாவருக் கும் விரித்துரைக்க வேண்டும்.

8. இந்தப் பாடசாலையிலே கற்றவர்களுள்ளும் பிறருள்ளும், கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த பரிபக்குவர்களுக்குச் சைவா சாரியாரைக் கொண்டு நிருவாணதீக்ஷை செய்வித்து, இந்தத் திரு

மடத்திலே ஞான நூல்களாகிய சைவ சித்தாந்த சாத்திரங்களைப் படிப்பிக்க வேண்டும்.

9. சிதம்பராலயத்திலே கட்டளை வைத்திருக்கும் மகிமை பொருந்திய மடாதிபதிகளும், பிரபுக்களும், நாடோறும் தங்கள் தங்கள் கட்டளை யன்னத்திலே சிறிது இந்தத் திருமடத்திற்குக் கொடுப்பிப்பார்களாகில், அந்த அன்னத்தை இங்கே படிப்பிக்கும் துறவிகளுக்கும் வறியவர்களுக்கும் உபயோகப்படுத்த வேண்டும்.

10. இங்கே படிக்கும் மாணுக்கர்கள் கற்ற கல்வியை வருஷந் தோறும் மடாதிபதிகளும் வித்துவான்களும் பிரபுக்களும் கூடிய சபையிலே பரிட்சை பண்ண வேண்டும்.

11. வருஷந்தோறும் இந்தத் தருமத்தின் வரவு செலவு கணக்கும், இது நடத்தப்படும் கிரமமும், பிறவும் விவரமாகி அடங்கிய அறிவிப்பை இந்தச் சபையார் முன் படித்து, பின்பு அச்சிற் பதிப்பித்து, எங்கும் பிரகடனஞ் செய்ய வேண்டும்.

12. இந்தப் பாடசாலையிலே சிலகாலங் கற்றுக்கொண்டு போய், இங்கிலீசு கற்பவர்களுள்ளும் லௌகிகங்களிலே பிரவேசித்தவர்களுள்ளும், தங்களுக்கு ஒழிவுள்ள காலத்திலே வந்து, யாதாயினும் கற்க விரும்புகிறவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

13. இங்கே கற்றுத் தேர்ந்த மாணுக்கர்களை இந்தச் சபையாருக்கு முன்னே பரீட்சித்து, கற்று வல்லர்களென நன்கு மதிக்கப் பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுக்க வேண்டும்.

இந்த நன்முயற்சிகளை விரைவிலே தொடங்கி, இடையூ றில்லாமல் நடத்துகில், நமது தமிழ்நாடெங்கும் சைவசமயம் தழைத்து இனிதோங்கும்; ஓங்கில், அநேகர் பரமபதியாகிய சிவனது மகிமையையும் புண்ணிய பாவங்களையும், அவைகளின் பலன்களையும் அறிந்து, பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்து, அவரை மெய்யன்போடும் விதிப்படி வழிபட்டு நித்தியானந்த முத்தியை அடைவார்களே !



நமது சற்சமயமாகிய சைவ சமயம் குன்றுகின்றதே என்றும் இச்சமயத்தை வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்ய வேண்டுமே என்றும், அவைகளுக்கு உதவி செய்பவர்கள் இல்லையே என்றும், ஐயையோ ! இதற்கு என்ன செய்வேன் என்றும் நெடுங்காலமாக இரவும் பகலும் நினைந்து நினைந்து பெருமூச்செறிதலும் பலருக்குப் பிதற்றலுமே தொழிலெனக்கொண்ட என் உண்மையை நெடுங்காலமாக அறிந்திருக்கின்ற என்னிஷ்டர்களும், மாணுக்கர்களும், இந்தச் சிவபுண்ணியத்தின் பொருட்டு, இப்பொழுது தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்யும் பொருட்டும், தங்கள் தங்கள் சீவனோபாயம் உள்ள வரையும் காலந்தோறும் யாதாயினும் நிபந்தத்திரவியம் கொடுத்துவரும்படி சங்கற்பித்து, அந்தச் சங்கற்பம் தவருமல் நடத்தி வரும் பொருட்டும், “ வேண்டுவோர் வேண்டியதேயீ ”யும் பரம கருணாநிதியாகிய நடேசர், அவர்கள் உள்ளத்தைக் கனிவித் தருளுவார் என்று விசுவசிக்கிறேன். என்னுண்மையை அறியாத மற்றவர்களுக்கு, இந்தச் சிவபுண்ணிய முயற்சிகளைத் தெரிவித்தல் மாத்திரஞ் செய்கின்றேன். இதற்கு உதவி செய்யும்படி அவர்களை நான் இப்போது கேட்பதில்லை. அவர்கள் தாமே இதற்கு உதவி செய்வார்களாகில் அவர்களைத் தடுப்பது மில்லை.

இதற்கு உதவப்படும் பொருளை வட்டிக்குக் கொடுத்துவைத்து, சிதம்பரத்திலே திருவீதியில் ஒரு நிலம் வாங்கத் தக்க பொருள் சேர்ந்தவுடனே, நிலம் வாங்கிக் கொண்டு, பாடசாலையைக் கட்டுவித்து, பிள்ளைகளைப் படிப்பித்தும், தமிழ் வேதம் ஓதுவித்தும் சிவபுராணப் பிரசாரம் செய்வித்தும் வரலாம்.

பின்பு இந்த நன்முயற்சியைச் சிதம்பர தரிசனத்திற்கு வந்த போது கண்டறிந்தவர்க ளுள்ளும், அவர்களாலே கேள்வியுற்றறிந்தவர்களுள்ளும்,புண்ணியவான்களா யுள்ளவர்கள், தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து இந் நன்முயற்சியைக் குறைவற நிறைவேற்றி, நமது சைவசமயத்தை வளர்ப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஆதலால் இப்பொழுது பொருளுதவி செய்து, இந்த நன்முயற்சி

யைத் தொடங்கும்படி செய்கிறவர்கள், இதனது நயத்தைப் பின்பு அநேகர் கண்டுங் கேட்டும் பொருளுதவி செய்து இதை நிறைவேற்றி வளரச் செய்தற்குக் காரணர்களாய் இருத்தலால் அவர்கள் அடையும் புகழிலும் மறுமை யின்பத்திலும் பார்க்கப் பெரும் புகழையும் பேரின்பத்தையும் அடைவார்களென்பதற்குச் சந்தேகம் இல்லை.

சைவசமயத்தை வளர்க்குங் கடமையையும் அதற்கு வேண்டும் பெரும் பொருளையும் உடைய மகிமை பொருந்திய மடாதிபதிகளும் தமிழ்நாடெங்கும் உள்ள அறிவொழுக்கங்களிற் சிறந்த பிரபுக்களும், இக் காலத்திலே மிக்க முயற்சியும் ஒற்றுமையும் பொருட் செலவும் உடைய நாட்டுக்கோட்டையார்களும், வருஷந்தோறும் திருக்கோயில்களிலே பெரும்பொருள் செலவிட்டுச் சிவபுராணங்களை நியமமாகக் கேட்போர்களாயும் சிதம்பர சபாநாதர் மேல் மிக்க பத்தியுடையவர்களாயும் உள்ள நமது யாழ்ப்பாணத்தார்களும், இந்தச் சிவபுண்ணியத்தின் பெருமையை அறிந்து, இதற்கு உதவி செய்வார்களாயின் இது எவ்வளவு தழைத்தோங்கும் !

* * * *

அன்னதானம் முதலிய தானங்களைச் சற்பாத்திரத்திலே செய்வது புண்ணியம் ; அசற்பாத்திரத்திலே செய்வது பாவம். சற்பாத்திரங்களுள்ளும், கரும யாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது ஒரு பிறப்பளவு நிற்கும் ; தபோயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது நூறு பிறப்பளவு நிற்கும் ; செப யாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது ஆயிரம் பிறப்பளவு நிற்கும் ; தியான யாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது கற்பமளவு நிற்கும்; ஞான யாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது மகாசங்கார காலமளவு நிற்கும். இதற்குப் பிரமாணம்:-சிவதருமோத்திரம், நான்காவது பலவிசிட்ட காரணவியல்.

"கருமிகட் கீகை நிற்குங் கலந்தொரு பிறப்பிற் கற்ற
பெரியராந் தவத்தோர்க் கீகை பிறப்பொரு நூறு நிற்கு
மரியமந் திரத்தார்க் கீகை யாயிரம் பிறப்பு நிற்கு
முரியயோ கிக்கு ஞானிக் கீகைபே ரூழி நிற்கும்" என்ன வரும்.



ஆதலால் அன்னதானம் செய்யும் பிரபுக்கள், இந்தச் சிவதருமம் நடந்துவரும்பொழுது இந்தத் திருமடத்திலே சமய சாத்திரங்களைப் படிக்குந் துறவிகளுக்கும் வறியவர்களுக்கும் அன்னதானமும் பண்ணுவார்களாயின், அது எவ்வளவு பெரும்புண்ணிய மாகும் ! அப்புண்ணியம் அநேகர் இடையூறில்லாமல் சமய சாத்திரங்களைக் கற்று வல்லவர்களாகி, தாங்கள் உய்தற்கும், தமிழ்நாடெங்கும் ஊர்கள்தோறும் திருக்கோயில்களிலே அநேக சனங்களுக்குச் சமய நெறியைப் போதித்து அவர்களை உய்வித்தற்கும் ஏதுவாகு மல்லவா ? இதை யாவரும் சித்த சமாதானத்தோடு சிந்திக்கக் கடவர்கள்.

* * *

**"பாம்பழல் வாயினுற் பற்ற மண்டுகந்**
**தேம்பிடுந் துயருறுஞ் சிவன் றேயுநாள்**
**ஓம்பிட வல்லரோ வுற்ற மற்றையார்**
**போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்."**

**"அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்காற் பொன்றுத் துணை."**

சென்னப்பட்டணம்
ரௌத்திரி வருஷம்
வைகாசி மீ 21 உ

**திருச்சிற்றம்பலம்**
**இங்ஙனம்,**
**யாழ்ப்பாணம்**
**நல்லூர், ஆறுமுக நாவலர்**

ஒரு சிறுதொகை சேர்ந்தது ; அதைக்கொண்டு விரைவில் காரியந்தொடங்க நினைத்தார் நாவலர். யாழ்ப்பாணம் வித்தியாசாலை வர்த்தகசாலை இரண்டையும் மாணவரான மு. தில்லைநாதபிள்ளையிடம் ஒப்பித்துத் தோணி யேறினர். 1863, டிசம்பர் (ருதிரோற்காரி மார்கழி இறுதி, தை ஆரம்பத்தில்) அர்த்தோதய

புண்ணிய காலம். நாவலர் சேதுஸ்நானம் செய்து இராமேசுரம் சென்று வணங்கி, இராமநாதபுரம் புறப்பட்டார்.

# 49. தேவர் மரியாதை

இராமநாதபுரத்தில் திருவாவடுதுறை மடம் உள்ளது; அங்கே கட்டளைத்தம்பிரான் **விசுவலிங்கனர்**. ஆதீனத் தம்பிரான்கள் பலர் நாவலரிடம் பாடங் கேட்டவர்கள் ; சென்னைக்குச் சென்றும் பாடங் கேட்டனர். நாவலர் என்றல் அவர்களுக்குத் தனி மரியாதை உண்டு. ஆதலால் விசுவலிங்கத் தம்பிரான் நாவலரை அன்புடன் உபசரித்தார் ; தமக்குப் பெரிய புராணத்தில் உள்ள சந்தேகங்களையும் இலக்கணச் சந்தேகங்களையும் அவரிடம் கேட்டறிந்தார்.

இராமநாதபுரம், புலவருக்குப் பொன்னகம். சேதுபதி சபைக்கு வராத புலவர் இல்லை. அதிலும் அமைச்சர் பொன்னுசாமித் தேவர், தமிழ்வாணரை உபசரிப்பதில் புகழ் பெற்றவர். "நாவலர் நம் தலைநகருக்கு வந்ததும் நம்மிடம் என் வரவில்லை" என்று வியப்பும் வருத்தமுங் கொண்டு, சமஸ்தான வித்வானை அனுப்பி அழைத்தார். அழைக்கச் சென்ற வித்வான் வேம்பத்தூர் பிச்சுவையர். அவர் இச் சம்புவத்தை வர்ணிக்கக் கேட்டிருக்கிறேன். வித்வான் வணக்கமுடன் நாவலரை அணுகி,

—தாங்கள் சமஸ்தானத்திற்கு வந்ததும் எங்கள் தேவரைக் காணவில்லையே ?

—விருப்ப மில்லை.

—அப்படிச் சொல்லலாமா ? அது சாமானியமான இடமா ? அங்கே வராத வித்வான்க ளில்லையே. மரியாதைக்காகவாவது தேவரை அவசியம் காண வேண்டும். காணுது செல்லல் முறையில்லையே.

—விருப்பமில்லாததைச் செய்தல் என் வழக்க மில்லை.

—தேவரைக் காணத் தங்களுக்கு விருப்பமில்லையா? அப்படியே தெரிவிக்கட்டுமா ?



—செய்யும்

வித்வான், தேவரிடம் நாவலர் மனப்பான்மையைத் தெரிவித்தார். தேவர் வருந்தி வருந்தி, இரண்டு மூன்று தடவை வித்வானை அனுப்பி அழைத்தார். மூன்றுந்தடவை வித்வான் நாவலரைக் கொஞ்சம் மிரட்டிப் பார்த்தார்.

—நாவலரே, எங்கள் தேவர் இங்கே சர்வாதிகாரி; நினைத்தால் எதுவும் செய்வார் ; அவரைப் பகைத்துக்கொண்டு சமஸ்தான எல்லையைத் தாண்ட முடியாது. பேசாமல் வாரும் ; இன்றேல் ஆபத்து வரும்.

—ஐயா, உமது தேவரின் அமுலும் செல்வாக்குங் கண்டு நான் பயப்பட மாட்டேன். எதற்கும் அஞ்சி என் விருப்பத்தை மாற்றேன். உமது சொற்களுக்கு அஞ்சி அங்கே வந்தால் என் விரதம் என்னவாகும் ? நான் செல்வர் துணையைக் கெஞ்சேன் ; சிவபெருமான் அருட்டுணையே எனது அருந்துணை. அருள்வழி செல்லும் நான் பொருள்வழிச் செல்வருக்கு அஞ்சேன். மேலும் தங்கள் தேவர் இங்கே செய்யும் கொடுமைகளும், அவற்றல் மக்கள் படும் பாடும் நாடறிந்ததுதாமே. அதிகப் பேச்சேன் ? தேவரைத் தெரியும் போம்.

* * *

நாவலர் இப்படி மறுத்ததின் காரணத்தை இராமநாதபுரம் சமஸ்தானத்தில் பலவிதமாகப் பேசுவார்கள். சென்னையில் நாவலரிடம் அடிக்கடி வந்து காஞ்சி புராணம், பெரியபுராணம் முதலிய நூல்களைப் பாடங் கேட்டவர் **இராமசாமி பிள்ளை**. அவர் தேவருக்கு நெருங்கிய நண்பர். நாவலர், வன்றெண்டச் செட்டியார் நமச்சிவாயத்தம்பிரான் முதலியோருக்குப் பாடஞ்சொல்லி வந்தார். விசாகப் பெருமாளையர் போன்ற மகாவித்வான்களும் நாவலர் புலமையைப் போற்றி மதித்தனர். ஆனுல் சில புலவர் நாவலர்மேல் பொருமைகொண்டு, இராமசாமி பிள்ளையின் அன்பைக் கலைத்துத் தேவரிடமும் கோளேற்றச் செய்து அபிப்பிராய பேதம் உண்டாக்கினர். நாவலரின் நேர்மையும், கூர்மையும், தலைநிமிர்

ந்த சுதந்தரமும் அவர்களுக்கு வேறுவிதமாகத் தோன்றின. " செல்வரிடம் பணம் யாசித்துப் புத்தகம் போடும் ஒருவர்தாமே" என்ற மட்டில் ஆளை அவமதித்துப் பேசினர். தேவரிட மிருந்து அன்றுமுதல் பணவுதவி வரவில்லை. அவர் அகமாற்றமும் முக மாற்றமும் அறிந்தே, நாவலர் அவரிடம் செல்ல மறுத்தார். மேலும் தேவர் முன்னிலையில் பரிசில் பெறும் புலவர் வணக்க ஒடுக்கமாகச் செல்வதுண்டு ; நாவலர் சிவபிரானைத் தவிர வேறு எந்த மனிதனையும் இறைஞ்சமாட்டார். அவரும் தக்க செல்வப் பிரபு ; பிறரைக் கெஞ்சத் தேவையில்லை. வித்வான், தேவரிடம் " நாவலர் தங்களை மதிக்கவே யில்லை ; தங்கள் அதிகாரத்தைக் காட்டியே ஆளை இணக்க வேண்டும் " என்றார். தேவர் " நாம் அவருக்கு விரோதம் செய்தால் ஆபத்து ; அவர் ஆங்கிலமும் அறிந்த புலவர். சென்னை உத்தியோகஸ்தரும் பிரபுக்களும் அவ ரிடம் பெருமதிப்புக் கொண்டிருக்கிறார்கள். அவரைப் பகைத்துக் கொண்டால், நம் அரசிற்குத் தீங்கு விளையும். மேலும் திருவா வடுதுறை, தருமபுரம் ஆகியஆதீனங்களில் அவர் செல்வாக்குள்ள வர் ; சைவசித்தாந்தம், சமயம் முதலிய எந்த விஷயத்தையும் சாத்திர ரீதியாகப் பிரசங்கிக்க வல்லவர் இவர் ஒருவரே என்று உலகம் அறியும். மற்ற வித்வான்களைப்போல் நமது மதிப்பிற்கும் சன்மானத்திற்கும் காத்திருப்பவரன்று. நமது தயவைப்பெற்றுப் புகழேறும் விருப்பம் அவருக்கில்லை. அவர் நட்பு நமக்கு வேண் டும் ; அவரை நயமாகவே பேசி அழைத்து வருதல் நலம்" என்று தேவர் ஒரு சூழ்ச்சி செய்தார். சில வைஷ்ணவர்களைக் கொண்டு ஒரு கடிதம் அனுப்பினர் : " நாவலரவர்களே, தாங்கள் "சைவ சமயமே சமயம்" என்று நாடெங்கும் பிரசங்கம் செய்கிறீர்கள் ; நாங்கள் அதை மறுத்து "வைஷ்ணவ சமயமே சமயம், விஷ்ணு வுக்கே பரத்துவம் உண்டு" என்று தேவர் சபையில் வாதிப் போம் ; வந்து உமது கொள்கையை நிலைநாட்டும் பார்க்கலாம்" என்பதுவே அதன் சாரம். நாவலர் அக் கடிதத்தை ஊன்றிப் பார்த்தார். பிழைகள் மலிந்திருந்தன. "எழுத்துச் சொற்பிழைக ளில்லாமல், ஒரு கடிதம் எழுதத் தெரியாத நீங்கள்தாமா சமய வாதம் செய்யத் துணிந்தீர்கள் ? நன்று, நன்று !" என்று பரிகா



சஞ் செய்து வைணவர்களைத் திருப்பி அனுப்பி விட்டார். இந்த வீறு பெற்ற துணிவைக் கண்ட தேவர் பணிந்து விட்டார்.

" தங்களுக்கு நான் ஏதாவது பிழைசெய்திருந்தால் மன்னிக்க வேண்டும் ; தாங்கள் அவசியம் இங்கே எழுந்தருள வேண்டும் " என்றொரு சீட்டுக்கவி அனுப்பினர் ; முன்சென்ற வித்வான் இப் போது வணக்கமுடன் அச் சீட்டைத் தந்து பணிந்தார். கவியைக் கண்டதும் நாவலர் மனம் இரங்கினர். இவ்வளவு தூரம் வலிய வலிந்தழைப்பவ ரிடம் செல்லா திருப்பது முறையன்று என்று உணர்ந்தார் ; ஆனால் சில நிபந்தனைகள் போட்டார். " நாம் வரு வோம் ; ஆனால் சுதந்தரமாகவே வருவோம் ; அங்கவஸ்திரம் தரித்து பாதகுறடிட்டுக்கொண்டு பரிவாரத்துடனே வருவோம் ; தேவரிடம் பரிசில் பெறமாட்டோம். தேவர் எழுந்திருக்கும்போது நாமும் எழுந்திரோம் ; இக்கட்டுப்பாடுகளுக்குச் சம்மதமா ?" என்று வினவினர். தேவர், " விருப்பம் போல் வருக " என்ற துமே நாவலர் அரண்மனைக்குச் சென்றார். தேவர் தக்க மரியா தையுடன் நாவலரை முகமலர்ந்து எதிர்கொண்டு அழைத்து உப சரித்தார். உயர்ந்த பீடம் அளித்து அவருடன் பல விஷயங்களைப் பேசிய பிறகு பிரசங்கிக்குமாறு வேண்டிக்கொண்டார். நாவலர் " சைவசமயமே சமயம், சமயாதீதப் பழம் பொருளை " என்ற செய்யுளைக் கொண்டு சொன்மாரி பொழிந்தார். வைஷ்ண வர்களுக்கும் தக்கபடி தர்க்க ரீதியாகப் பதிற்சொன்னர். சிவனே பிறப்பிறப்புப் பந்தமில்லாத அனாதி முத்தன், சர்வசக்திமான், பரமன், பரமகருணாநிதி என்று விளக்கினர். தேவர் மிக்க மகிழ் ச்சி யடைந்து நாவலரைப் பலவாறு புகழ்ந்துபேசி, எந்த வித்வா னுக்கும் அதுகாறும் அளிக்காத இரண்டு சாதராக்களை நாவல ருக்கு வணக்கமுடன் அளித்தார். நாவலர் " நாம் பரிசு வாங் கோம்; பரிசிலுக்காக நாம் சிவகைங்கரியம் செய்யவில்லை" என்று மறுத்தார். இது பரிசிலன்று, நான் செய்யவேண்டிய மரியாதை; தயவுசெய்து ஏற்கவேண்டும் என்று நயந்து, தன் கையாலேயே சாதராவைப்போர்த்தி, இன்றே உய்ந்தோம் என்று மகிழ்ந்தார். பிறகு " தாங்கள் பழந்தமிழ் நூல்களைச் சோதித்து அச்சிடவேண்

டும் ; நம்மாலான சகாயம் செய்வோம் " என்று வாக்களித்தார். நாவலர் அவ்வாறே செய்துவருவதாகச் சொல்லி, தமது சிதம்பர வித்தியாசாலைப் பத்திரத்தையும் அளித்துத் தேவரிடம் விடைபெற்றுக்கொண்டு, அரண்மனையை விட்டுத் திருமடத்திற்குச் சென்றார்.

மறுநாள் உத்தரகோச மங்கைக்குச் சென்று தரிசித்து வந்து, மதுரைக்குப் புறப்பட்டார்.

## 50. மதுரையில் நாவலர்

மதுரையில் குதூகலமான வரவேற்பு ; ஓதுவார்களும், தம்பிரான்களும் பண்டிதர்களும் நாவலரை எதிர்கொண்டேற்றுத் திருஞானசம்பந்த சுவாமிகள் மடத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆதீனத்துப் பண்டாரசந்நிதிகள் நாவலரை அன்புடன் உபசரித்தார்கள். நாவலர் மதுரையில் சிலநாட்கள் தங்கி, மீனாட்சிசுந்தரேசர் தரிசனம் செய்து வந்தார். பண்டார சந்நிதிகள் விருப்பப்படி மீனாட்சி சந்நிதியில் மதுரைத் தலமான்மியம், சொக்கலிங்க மூர்த்தியின் பெருமை, திருவிளையாடல்கள், சைவசித்தாந்தப் பெருமை முதலிய பொருள்கள் பற்றிப் பிரசங்கம் செய்தார். சுற்றியுள்ள ஊர்களில் விளம்பரம் செய்திருந்ததால் நாவலர் பிரசங்கம் கேட்கத் திரளான ஜனங்கள் வந்திருந்தனர். பிரசங்கமுடிவில் பட்டர்களும் கோயில் அதிகாரிகளும் தலையில் பரிவட்டம் கட்டி, மீனாட்சியம்மைக்குச் சூட்டிய மாலையைத் தோளிற் போட்டு, விபூதிப் பிரசாதம் கொடுத்து, ஆசி கூறினார்கள். பின்பு கோயில் மரியாதையுடன் வாத்திய வரிசைகள் தொடர, நாவலர் திருமடத்திற்கு வந்தார். " இப்படிப் பிரசங்கம் கேட்டதில்லை; அமுதமழை ! அமுதமழை ! சிவானந்தத் தேனருவி !" என்று மதுரை முழுதும் நாவலர் பேச்சாகவே யிருந்தது. பல ஆண்டுகள் அப்பிரசங்கத்தை மதுரை மறக்கவில்லை. பண்டாரசந்நிதிகள் வேண்டுகோட்படியே நாவலர் திருமடத்தில் சில பிரசங்கங்கள் செய்தார். அடியார் உள்ளம் பூரித்தது. மகாசந்நிதானம் வியந்து மகிழ்ந்து தமது, காதில் அணிந்த குவழைகளைக் கழற்றி நாவலர் காதில் அணிவித்தது. சின்னச்சந்நிதானம் தமது ஆறுகட்டி உருத்திராக்ஷ மாலையைக் கழற்றி நாவலருக்கு அணிவித்தது. மற்றவர்களும் தக்க மரியாதை செய்தார்கள். சின்னச்சந்நிதானம் முதலியோர் தமக்கு இருந்த இலக்கண இலக்கியச் சந்தேகங்களை நாவலரிடம் கேட்டுத் தெளிவுற்றனர். நாவலர் மதுரையைச் சுற்றியுள்ள திருவேடகம், திருப்பூவனம் முதலிய தலங்களைத் தரிசித்தார். திருப்பரங்குன்றம் சென்று முருகனை வணங்கிவந்தார். மதுரையில் இன்னும் சிலநாட்கள் தங்கிப் பண்டாரசந்நிதிகளிடம் பிரியாவிடைபெற்றுக்கொண்டு நாவலர் திருப்புத்தூரை வணங்கிக் குன்றக்குடிக்கு வந்தார்.



அதுவே திருவண்ணாமலை ஆதீன நிலயம். ஆதீனத் தலைவர் நாவலரை உபசரித்துச் சிலநாட்கள் தம்முடன் இருக்கும்படிசெய்தார். அவர்கள் விருப்பப்படியே நாவலர் சைவசித்தாந்தத்தைப் பற்றியும் சிவதருமிகள் அடையும் பயனைப் பற்றியும், அரிய சொற்பொழிவுகள் ஆற்றினார். பண்டாரசந்நிதிகள் உள்ளம் குளிர்ந்தது. முன்னே எவருக்கும் செய்யாத மரியாதைகளை அவர் நாவலருக்குச் செய்தார். நாவலரை, தந்தச் சிவிகையில் ஏற்றி, மேளதாளங்களுடன் ஊர்வலஞ் செய்வித்தார். கட்டியத் தடிகளும், வாணத்தடிகளும், கோணத்தடிகளும், வெள்ளிக் கைப்பந்திகளும், கொடிகளும் ஆகிய விருதுகள் முன்சென்றன. ஓதுவார்கள் இனிய தேவாரம் பாடிவந்தனர். தம்பிரான்கள் சிவநாம கோஷஞ்செய்தனர். " ஹரஹர மஹாதேவ " என்ற ஒலி எங்கும் நிரம்பியிருந்தது. " நாவலர் வாழ்க " என்று ஒவ்வொரு நாவும் நவின்றது. ஞானசம்பந்தர் காலம் மறுபடி வந்து விட்டது ! ஐந்தாங் குரவரைத் தமிழர் அறிந்துகொண்டனர் !

மறுநாள் பண்டாரசந்நிதிகளிடம் விடைபெற்று, நாவலர் மணிவாசகப் பெருமான் குருதரிசனம் பெற்றமைத்த திருப்பெருந்துறைக்குப் போனார். அங்கே திருவாவடுதுறை மடத்திலேயே தங்கியிருந்து காலை மாலை கோயில் புகுந்து வணங்கி வந்தார். இங்கே இராமசாமி பிள்ளையும் வன்றொண்டச் செட்டியாரும்

நாவலரிடம் நன்னூலிலும் திருவிளையாடற்புராணத்திலும் தமக்கிருந்த சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்துகொண்டனர். மாணிக்கவாசக சிவத்தைத் தரிசித்து நாவலர் அன்பர் அழைப்பிற் கிணங்கிப் புதுக்கோட்டைக்கு வந்தார். அங்கே தொண்டைமான் மன்னரும், அமைச்சரும், அன்பரும் உபசரித்தனர். நாவலர் சமயத்தொண்டிற்கு நல்ல ஆதரவு கிடைத்தது. அங்கே தனவணிகர் பலர் வந்து நாவலரைக் கண்டுகொண்டார்கள்.

அச்சமயம் நெடுங்குடிக் கும்பாபிஷேகம் நடந்தது. நாவலரை, அதற்கு வரவேண்டும் என்று தனவணிகர் அழைத்தனர். நாவலர் புறப்பட்டு வழியில் அரிமழத்தில் சிவ தருமத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர். இடையே புலாலுண்ணலின் மகாபாதகத்தைப் பற்றி உணர்ச்சி ததும்பப் பேசினர். அதைக் கேட்ட பலர் இனித் தாம் ஊனுண்பதில்லை என்று விரதம் பூண்டு புலால் சமைக்கும் சட்டிகளை உடைத்து விட்டுச் சைவரானார்கள். நெடுங்குடிக் கும்பாபிஷேகத்தில் நீண்ட பிரசங்கம் நடந்தது; கோயில் மரியாதைகளுடன் நாவலர் புதுக்கோட்டைக்குத் திரும்பி வந்தார். அங்கிருந்து திருச்சிராப்பள்ளி, திருவானைக்காவல், தஞ்சாவூர், திருவையாறு முதலிய தலங்களைக் கண்டு நாவலர் கும்பகோணம் வந்தார்.

## 51. மீனாட்சிசுந்தரம் பிள்ளையுடன்

கும்பகோணத்தில் நாவலர் நிம்மதியாகச் சிவதரிசனம் செய்துகொண்டிருந்தார்; சுவாமிமலைக்குச் சென்று திருமுருகாற்றுப்படை பாடி முருகனை வணங்கிவந்தார். திருநாகேச்சுரம் தரிசித்தார். சிவசிந்தனையிலேயே காலங் கழித்தார். அக் காலம் வித்வான் தியாகராசச் செட்டியார் நாவலரைக்கண்டு அளவளாவி அவர் புலமையை மெச்சினர்.

இவ்வாறு நாவலர் கும்பகோணத்திலிருந்த செய்தி திருவாவடுதுறைக்கு எட்டவே, ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவரை மரியாதை செய்து அழைத்துவர மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையையும் சில ஓதுவார்களையும் அனுப்பினர். அப்பரைக் கண்ட அப்பூதி போல் நாவலரைக் கண்டு மகாவித்வான் பெருமகிழ்ச்சி கொண்டார். தியாகராசச் செட்டியாரும் சேர்ந்துவிட்டால், கேட்க வேண்டுமா? நாளெல்லாம் சிவமுந் தமிழுமே இடையிடையே சிலேடைகளும் வரும். மூவரும் சிவபக்தர்கள்; ஆசார சீலர்கள்; சிவபூஜையில் சிரத்தையுள்ளவர்கள். மூவரும் அதிகாலையில் காவேரியில் குளிக்கச் சென்றனர்.



பனிக்காலம், உடலை நடுக்கும் குளிர்; தண்ணீர் ஜில்லென்றிருந்தது. பிள்ளையவர்கள் நாவலரிடம் "பனிக்காலம் கொடிது" என்றார். நாவலர் "பனிக்காலம் நன்று" என்றார். கூட தியாகராசச் செட்டியாரும் வேறு சிலரும், "பிள்ளையவர்கள் சொல்வதே சரி; பனிக்காலம் கொடிது, ஜலதோஷம் உண்டாக்கும்" என்றனர். மற்றொருவர் பனிக்காலம் நன்று, உடலைக் குளிரச்செய்யும் சூட்டைத் தணிக்கும் என்றனர். இரண்டு கட்சி வாதமிட்டு, நாங்கள் நாவலர் பக்கம்; நாங்கள் பிள்ளையவர்கள் பக்கம் என்றனர். "இதென்ன வீண்வாதம்; நானும் பிள்ளையவர்களின் பக்கமே; அவர் சொன்னதையே வலியுறுத்திக் கூறினேன்" என்றார் நாவலர். அதெப்படி என்று எல்லாரும் வியப்புடன் கேட்டார்கள். "பிள்ளையவர்கள் பனிக்காலம் கொடிது என்றார்கள்; நான் பனிக்கு ஆலம் நன்று; பனியைவிட விஷம் நல்லது; அது அவ்வளவு கொடிது என்றேன்" என்றார். குளித்துவிட்டு எல்லாரும் ஆசாரமாகத் திருநீறிட்டு வந்தபோது, ஒரு வீரவைஷ்ணவப் புலவர் நாவலர் முதுகைச் சுரண்டினார்; தெருவில் ஆபாசம், சாம்பல் மூடிக்கிடந்தது. "பாரும் உமது சிவக்கோலத்தை" என்று காட்டினார்; நாவலர் "உமது வராகப்பெருமாளுக்குப் பிரியமானதல்லவா அது, அவருக்காகப் பாதுகாத்து வைத்திருக்கிறது" என்றார்; நையாண்டி செய்தவர் முகம் சுருங்கியது; மேலே பேசவில்லை.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப் பற்றித் தனி நூலாக எழுதியுள்ளேன். ஆதலால் இங்கே நாவலரைப் பற்றியே சொல்லுகிறேன். இருவரும் அரிய நண்பர்; நாவலர், பிள்ளையவர்கள் பாடல்களைக் கேட்டு வியந்து மகிழ்ந்தார். பிள்ளை யவர்களின் சிவ பக்தியும்,

ஒழுக்கமும், அடக்கமும், கல்வி நிறைவும், சொற்செறிவும், கருத்தாழமும் நாவலருக்குப் பேரின்பம் அளித்தன. அவர்களைப் போன்ற புலமைக்கவி அரிது என்று நாவலர் அடிக்கடி வியப்பதுண்டு. நாவலருடைய வசன நடையும், சைவத்தொண்டும், கட்டுரைகளும், கண்டனங்களும் பிள்ளையவர்களுக்குப் பேருவகை தரும். நாவலரைப்போல் வசனம் எழுதினால் தமிழ் வெகுவிரைவில் முன்னேறும் என்று அவர் அனைவரிடமும் சொல்லி வந்தார். தமிழுலகின் ஒப்பற்ற கவியரசரும், உரையரசரும் ஒருவரையொருவர் அறிந்து நன்கு மதித்து அன்பு செய்தது போற்றத்தக்கது.

மகாவித்வானுடன் நாவலர் திருவாவடுதுறைக்குச் சென்று மகாசந்நிதானத்தின் ஆதரவில் எக்குறையுமில்லாமல் இன்பமாயிருந்தார். இவரிடம் சென்னை சென்று பாடங் கேட்டுவந்த நமசிவாயத் தம்பிரான் சின்னப் பட்டம் வகித்தார். தம்பிரான்களும் ஓதுவார்களும் பாடங்கேட்டனர். மகாவித்வானும் நாவலரும் அளவளாவுவதைக் கேட்பதே சிவானந்தச் சிலிர்ப்பளிக்கும். இடையிடையே சைவப்பிரசங்கம் நடக்கும்; நூலாராய்ச்சிகள் நிகழும்; ஆதீனத்திலிருந்த ஏட்டுப்பிரதிகளை யெல்லாம் பார்த்து நாவலர் குறிப்பெடுத்துக்கொள்வார்; சென்னையில் நடக்கும் அச்சு வேலைகளுக்குக் கையெழுத்துப் பிரதி தயாரித்து அனுப்புவார்; அங்கிருந்து வரும் அச்சுத்தாட்களைத் திருத்தியனுப்புவார். ஓயாதவேலை, ஒழியாத் தொண்டுதான். இக்காலமே இவர் மஹா வைத்தியநாத ஐயரின் பாட்டைக் கேட்டார். ஒருநாள் நந்தனார் கீர்த்தனம் பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார் நாவலரைப் பார்த்தார். பாரதியார், "ஒன்றுந் தெரியாத நானும் நடராஜன் அருளால் ஏதோ பாடியிருக்கிறேன்; கேட்டருள வேண்டும்" என்ற பீடிகையுடன் "தில்லை வெளியினிலே, ஆடும் சிதம்பரமே, வருகலாமோ" முதலிய கீர்த்தனங்களைப் பரவசமாகப் பாடி, நந்தன் சரித்திரமே செய்துவிட்டார். பாரதியார் சலியாது பாடுவார். நாவலர் கேட்டுப் பூரித்து, "சிவபக்தி நிரம்பிய இப் பாடல்கள் கேட்கக் கேட்கப் பேரின்பமளிக்கின்றன" என்று போற்றித் தகுந்த சன்மானமளித்தார்.



இக்காலமே நாவலர் **வேதநாயகம் பிள்ளையையும்** கண்டு அளவளாவினார். நாவலரின் சீரிய ஒழுக்கத்தையும் நாவீறுகொண்ட சொல்நயத்தையும் மெச்சாதவரில்லை. மகாசந்நிதானத்திடம் நல்விடை பெற்று, நாவலர் புள்ளிருக்கும் வேளூர் சென்று சிவ தரிசனம் செய்தபிறகு சீர்காழிக்குச் சென்றார்; ஞானசம்பந்தர் அவதரித்துத் திருமுலைப் பாலுண்ட அத்தலத்தின் எல்லையை அடைந்ததும் பக்தி பரவசத்துடன் "ஞானசம்பந்தப்ரபோ வணக்கம்" என்று சிரமேற் கரங்குவித்து வணங்கி, நாவலர் அனுட்டானங்களை முடித்துத் தோணியப்பர் சந்நிதிக்குச் சென்றார். சம்பந்தர் தேவாரம் முழங்கியது; அடியார் "ஹர ஹர மகாதேவ" என்று சிவகோஷம் செய்தனர். தோணியப்பருக்கும் பெரிய நாயகியம்மைக்கும் அபிஷேக நிவேதனதீபாராதனைகள் நடந்தன. நாவலர் சிவசிந்தனையுடன் தேவாரங்களையும் திருவாசகத்தையும் பாடிக்கொண்டு, சிவதரிசனம் செய்து திரும்பினார். திருவாவடுதுறை மடத்திலேதான் அவர் இறங்கியிருந்தார். அங்கே ஓதுவார்களும், தம்பிரான்களும், சிவபக்தர்களும் கூடினர். நாவலர், அவர்களுக்குச் சைவசமயத்தின் மாண்பை உணர்த்தி, சிதம்பரம் சென்றார். தில்லையில் அவர் செய்த கல்விப் பணியைக் காண்போம்.

## 52. சிதம்பரம் வித்தியாசாலை

சிதம்பரம் என்றால் சித்தம் சிலிர்க்கும்; சிதம்பரம் தமிழரின் இதய ஸ்தானம்; அங்கே அற்புதமான விசுவ வித்யாலயம் ஸ்தாபிக்க நாவலர் விரும்பி விடுத்த முதல் விக்கியாபனத்தை அறிந்தோம். பல தமிழரும் தம்மால் இயன்ற உதவி செய்தனர்; ஆனால் உதவி போதாது. அக்காலம் நாவலரிடம் தமிழர் அரைக்கோடி ரூபா தந்திருந்தால், இன்று அங்கே விளங்கும் சர்வகலாசாலை அன்றே விளங்கித் தமிழ்நாடெங்கும் தமிழும் சைவமும் முழங்கும். அதன் கிளை ஊர்தோறும் சிவ மலர் குலுங்க விரிந்து பரவும். ஆயினும் நாவலர் தாம் எடுத்த காரியத்தை ஒருவாறு நிறைவேற்றி வழிகாட்டி விட்டார். சிதம்பரம் மேலை வீதியில் ஒரு நிலம் முன்பே வாங்கப்பெற்றது—(1864—

ஆகஸ்டு. இரத்தாட்சி ஆவணி ௬ தேதி). நாவலர் சென்றதும் கட்டிட வேலை மும்முரமாகத் தொடங்கியது. அதற்கு வேண்டிய தச்சுவேலைக்கு மரங்களைத் தந்து உதவியவர் இணுவில் வேங்கடாசல ஐயர். கட்டிடத்தை மேற்பார்த்துப் பொறுப்புடன் நடத்த ஓர் அரிய அன்பர் வாய்த்தார்—யாழ்ப்பாணம் காசிநாத பிள்ளை; இவர் பச்சிலைப்பற்று மணியக்காரர் புதல்வர். மணம் புரிந்து மனைவியை இழந்தவர்; உலக நிலையாமையை அறிந்து, துறந்து சிதம்பரம் சென்று, நடராஜ தரிசனமும் பஞ்சாட்சர ஜபமும் சிவ பூஜையுமாகக் காலங் கழித்தார். சுவாமிக்குப் பூமாலை கட்டிக் கொடுத்துச் சிவ கைங்கரியங்களைக் கருத்துடன் செய்தார். திருவாசகம் பாடிக்கொண்டே இவர் பூத்தொடுத் தளித்தார். இவர் சைவாகமங்களிலும் வல்லவர்; நாவலரிடம் ஈடுபட்டவர். நாவலர் இவரது சிவபக்தியைக் கண்டு மகிழ்ந்து, இவரிடமே கட்டிடவேலையை ஒப்பித்துத் தகுந்த தொகையுந் தந்து சென்னைக்குச் சென்றார். அன்பர் காசிநாத பிள்ளை பக்தி சிரத்தையுடன் கட்டிடப்பணியைச் செய்து முடித்தார். அவர், வணக்க ஒடுக்கமும் வசீகரமுங் கொண்ட உத்தமர். இவரிடம் எல்லாரும் வசப்பட்டு நடந்ததால் நாவலர் இவரையே அத்யட்சகராக நியமித்து, வித்யாலயத்தைத் தொடங்கினார். இவரிடம் நாவலருக்கு அன்பு அதிகம்! நாவலர் இவரை அழைத்துக்கொண்டு (சுக்கில வருஷம்) யாழ்ப்பாணம் சென்று தம்முடன் வைத்து ஆதரித்தார். அங்கே காய்ச்சல் வந்து இவர் சிவபதமடைந்தார். இவருடைய அபக் கிரியைகளை நாவலரே சிறப்பாக நடப்பித்தார்.

இரத்தாட்சி வருஷம் ஐப்பிசி மாதம் உ-ஆம் தேதி சுப ஓரையில் நாவலர் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலையை நிலை நாட்டினார். திறப்புவிழா மிகச்சிறப்பாக நடந்தது.

நடராஜப்பெருமானுக்கு அபிஷேக நிவேதனங்கள் நடந்தன. ஓதுவார்கள் தேவாரம் முழக்கினர். தில்லைவாழ் அந்தணர், பிராமணர், சிவபக்தர் எல்லாரும் வந்திருந்தனர். தமிழ் நாட்டு ஆதீனங்களெல்லாம் வாழ்த்தும் நன்கொடையும் அனுப்பின. பல செல்வரும் நன்கொடை யளித்தனர். நன்மாணக்கர்கள்



நான்கு திசைகளிலிருந்தும் வந்து சேர்ந்தார்கள். இங்கே கருவி நூல்களும், சமய நூல்களும், திருமுறைகளும் முறையாக நடந்தன. சைவர்களுக் கெல்லாம் இவ் வித்தியாசாலை ஞானபீடமாயிருந்தது. சிதம்பரத்திற்கு வரும் பெரியார்கள் அனைவரும் இதைப் பார்வையிட்டு உதவினர். திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், திருவண்ணமலை ஆதீனங்களெல்லாம் இங்கே வரும்போது, மாணவரைப் பரீட்சித்துப் பரிசுகள் தருவ துண்டு. ஆசிரியர் திறமையை மெச்சுவதுண்டு. நாவலர் சென்னையினும் சிதம்பரத்திலுமா யிருந்தார். அங்கே நூல் வேலை நடந்தது. இங்கே நூலைப் புகட்டிச் சைவசமயப் பிரசாரகர்களைத் தயாரிக்கும் வேலை நடந்தது.

நாவலர் திருநாகைக்காரோணம், திருவேட்டக்குடி, திருக்கடவூர் முதலிய தலங்களைத் தரிசிக்கச் செல்வதுண்டு; பாடல் பெற்ற தலங்களைக் காண்பதில் அவருக்கு விருப்பம் அதிகம். ஆங்காங்கு தனவணிகரும் செல்வரும் நாவலரை உபசரித்து, அவரது வித்தியாசாலைக்குத் தம்மால் இயன்ற பொருளைத் தருவ துண்டு. ஆனால் அவர் ஆர்வம் பெரிது. அதை நிறைவேற்றப் போதிய பொருளில்லை; கைக்கு வந்தது மிகச் சிறுதொகை. தனக்கென எதுவும் வைத்துக்கொள்ளாமல், அவர் அனைத்தையும் சிவகைங்கர்யத்திற்கே தந்தார். வேதாரண்யம், மாயூரம், மதுரை, திருவண்ணமலை, இராமேசுரம் முதலிய திருத்தலங்களி லெல்லாம் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் நாட்ட வேண்டும்; சைவப்பிரசாரகரைப் பயிற்றி, நாடெங்கும் அனுப்பிச் சிவமணம் பரப்ப வேண்டும் என்பது அவர் முயற்சி. அதற்கு ஏராளமான பணம் வேண்டும்; கிடைத்த ஆதரவு மிகச் சிறிது. ஆதலால், நாவலர் மற்றும் இரண்டு விக்கியாபனங்கள் எழுதி, நாடெங்கும் அனுப்பினார். இவற்றில் முதன்முதல் வண்ணார்பண்ணை வித்யாலயத்திற்காக அவர் விடுத்த அறிக்கையும் அடங்கியுள்ளது. நாவலர் விண்ணப்பத்தைப் பன்முறை படிக்க வேண்டும்:—

“நான் ஜய வருஷம் பீற்றர் பார்ஸிவல் துரையுடைய இங்கிலீஷ் வித்தியாசாலையிலே இங்கிலீஷ் கற்றேன். பிலவ வருஷம் பார்ஸி

வல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனுயினேன். பிதிரார்ச்சிதம்நான் பெறவில்லை; என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்ற மட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களா யிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக வருஷம் புரட்டாசி மாதம் பரித்தியாகம் செய்தேன். பர்ஸிவல் துரை "நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்; தாங்கள் என்னை விடலாகாது" என்று பல தரம் வற்புறுத்திச் சொல்லியும் நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலீஷிலே அற்பவிருத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலீஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சக்திக்கேற்ற உத்தியோகம்பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சக்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின், அது தப்பாது சித்திக்கும் என்று அறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித்துணை மாத்திரங் கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்தபொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒருதுட்டாயினும் வாங்காது வீடு விளைநிலம் தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்மதேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்கும்காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையாம்.

இப்பேராசையினுல் இருபது வருஷ காலம் நான் செய்த முயற்சிகள் பல ; அவைகளுள்ளே சித்தி பெற்றவை மிகச் சில. சைவ சமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தையுடையவர்களாகித் தங்களால் இயன்ற உதவி செய்தார்களாயின், நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்குமுன்னரே நிறைவேறிவிடும்; நிறைவேறின், என்னைப்போலவே பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய்வார்கள் ; செய்யிற், கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.



தன் இம்மைப் பயன்களெல்லாம் இழந்தும் கைம்மாறு வேண்டாதும் இருபது வருஷ காலம் சைவசமய விருத்தியின் பொருட்டு முயற்சி செய்பவன் ஒருவன், மற்றைச் சமயத்தார்களுள் இருப்பானுயின் அவன் எடுத்த முயற்சிகளுள் யாது சித்தி பெறுது ? நம்முடைய சைவசமயிகள், தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும் பொருட்டு, நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்றுர்கள். இதனுல் எனக்கு யாதாயினும் ஓர் குறைவு உண்டு என்னுங் கவலை எனக்குச் சிறிதும் இல்லை. எனக்குச் செய்யப் படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும், பிறருக்குத் தமிழ் கற்றலின்கண்ணும் தமிழ்க் கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின்கண்ணும் ஊக்கங் கிளராவண்ணம் தடைவிளைக்கின்றதே என்னுங் கவலை எனக்குப் பெரிதும் உண்டு. பூர்வகாலத்திலே சைவசமய விருத்திப் பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சிவசமயிகளாலே நன்கு மதிப்பும் பர சமயி களாலே இடையூறும் செய்யப்பட்டன. தற்காலத்திலே சைவசமய விருத்திப்பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சிவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப் படுகின்றன. பர சமயிகளோ எனக்கு இடையூறு செய்யவு மில்லை, என்னை அவமதிக்கவு மில்லை. இஃதென்னை ஆச்சரியம் ! ! சைவ சமய விருத்திப்பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்பட்டபோது, நான் தமிழ்க் கல்வியினும் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளினும் போக்குங் காலத்தை முன்னை பயின்ற இங்கிலீஷிலேயே போக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே நன்கு மதிக்கப்படல்வேண்டும் என்று விரும்பாவண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங்கருணைத் திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடைத் தாயதோர் பெருஞ் செல்வம். இஃதிங்ஙனமாக,

நிலையில்லாத என் சரீரம் உள்ளபொழுதே என்கருத்து நிறைவேறுமோ நிறைவேறுதோ என்னுங் கவலை என்னை இரவும் பக

னும் வருத்துகின்றது. அக்கருத்து இது : தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தி யாதற்குக் கருவிகள், முக்கிய ஸ்தலந் தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரஞ் செய்வித் தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும்வேண்டப்படுவார்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்ப மும், இடையறு முயற்சியும், ஆரோக்கியமும் உடையர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கணவிலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்க ளுள்ளே தேர்ச்சி யடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்.

இதன் பொருட்டு ஏறக்குறைய மாசம் ஒன்றுக்குச் செல்லத் தக்க செலவு வருமாறு :

| | | |
|---|---|---|
| போசனம், விளக்கெண்ணெய், க்ஷௌரம், வஸ்திரம், புத்தகம் இவற்றின் பொருட்டுப் பிள்ளை ஒன்றுக்கு ரூபாய் ஐந்து வீதம் பிள்ளைகள் நூறுக்கு | ரூ | ௫00 |
| முதற்றமிழ் உபாத்தியாயர் வேதனம் | ” | ௫0 |
| இரண்டாந் தமிழுபாத்தியாயர் வேதனம் | ” | ௩0 |
| மூன்றாந் தமிழுபாத்தியாயர் வேதனம் | ” | ௨0 |
| சமுஸ்கிருத உபாத்தியாயர் வேதனம் | ” | ௨0 |
| சிவாகம பண்டிதர் வேதனம் | ” | ௨0 |
| ஓதுவார் வேதனம் | ” | ௧0 |
| இலேககர் வேதனம் | ” | ௭ |
| கணக்கப்பிள்ளை வேதனம் | ” | ௫ |
| சேவகன் வேதனம் | ” | ௫ |
| தோட்டக்காரன் வேதனம் | ” | ௩ |
| புத்தகாதி சம்பாதனம் | ” | ௩0 |
| | ஆக ரூபா | ௭00 |



இவ்வுத்தமோத்தம தருமத்தின் பொருட்டு எண்பதினாயிரம் ரூபாவேண்டும். எழுபதினாயிரம் ரூபாவைக்கொண்டு நீர்ப்பாய்ச்ச லுள்ள நல்ல கிராமம் வாங்கிவிடல் வேண்டும். பதினாயிரம் ரூபா வைக்கொண்டு வித்தியாசாலையும் மடமுங் கட்டுவித்தல் வேண்டும். நம்மவர்கள் பலர் சிறிது சிறிதாக உபகரிப்பினும், “ஆயிர மாகாணி அறுபத்திரெண்டரை” என்றபடி இத்தொகை சேர்ந்து விடும். இத்தொகை சேராதொழியினும், சேர்ந்த தொகைக் கிசை யவாயினும் நடக்கலாமே. சைவ சாத்திரங்களைக் கற்போரும், அவர்களுக்கு அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுப்போரும், சைவாகமவுணர்ச்சி நிலைபெறும் பொருட்டுத் தனராசிகளையும் பூமிகளையுங் கொடுப்போரும் பெறும் பயன், சுப்பிரமணியக் கட வுள் அகத்திய மகாமுனிவருக்கு உபதேசித்தருளிய சிவதரு மோத்தரம் என்னும் உபாகமத்திலே சொல்லப் பட்டிருக்கிறது.

இதுவே எல்லாத் தருமங்களுக்கும் மூலமாகிய உத்தமோத்தம தருமம் என்பது சாத்திரம், யுக்தி, அநுபவம் என்னும் மூன்றுக் கும் ஒத்த துணிவு. இது ஒருவராலும் மறுக்கப்படமாட்டாது. இது சத்தியமே எனக் கொள்ளினும், இத்தருமத்தை நடத்துதற்கு நான் யோக்கியனல்லேன் என்னுங் கருத்து அநேகருக்கு உண்டு. அக் கருத்துடையவர்கள் தாங்களே நடத்தக் கடவர்கள் ; அது கூடாத வழி, யோக்கியராகிய பிறரைக் கொண்டாயினும் நடத்து விக்கக் கடவர்கள். இத்தருமத்தை நானே நடத்தல் வேண்டும் என்னுங் கருத்து எனக்கில்லை. “யாவர் குத்தினும் அரிசியா னாற்போதும்” என்றபடி யாவர் நடத்தினும் இத்தருமம் நிறை வேறினாற் போதும் என்பதே என் கருத்து.

மேற்கூறியபடி ஒரு வித்தியாசாலை நடத்தப்படுமாயின், அதிலே தேர்ச்சி யடைந்தவர்களைத் திருக்கோயிலதிகாரிகள் எல்லாரும் தங்களாலே நடத்தப்படுந் திருக்கோயில்களிலே சைவப்பிரசாரகர்க ளாக நியோகித்து அவர்களைக்கொண்டு சனங்களுக்குச் சைவ சம யத்தைப் போதிக்கலாமே. தேவாலயந்தோறும் சனங்களுக்குச் சைவசமயத்தைத் தேச பாஷைகளிலே போதித்தல் வேண்டும் என்று காமிகாகமத்திலே சிவபெருமானால் விதிக்கப்பட்டிருக்கின்

றது. நம்முடைய சைவமடாதிபதிகள், இவ்வுண்மையை அறிந்திருந்தும், தங்களால் நடத்தப்படுந் திருக்கோயில்களிலே யாயினும் சைவப்பிரசாரணம் நடத்தியருளாத தென்னேயோ ! அவர்கள் செய்தருளின் அது கண்ட பிறரும் அவ்வாறு செய்வார்களே. இங்ஙனம் செய்யப்படிற் சற்சமயமாகிய சைவ சமயம் எங்கும் தழைத்தோங்குமே. இதனை எட்டுணையும் சிந்திப்பார் இல்லையே ! ஏழை சொல் அம்பலத்துக் கேறுமா ! ! !

இது அவசியஞ் செயற்பாலதாகிய பரமதருமம் என்பது தமது கருத்திற் பதியினும், என் வாயிற் பிறந்தமை பற்றி இதனை அவமதிப்பவர் பலர். ஐயையோ இதற்கு யாது செய்யலாம் ! ! ! இராசாவினுடைய ஆஞ்ஞை புலையன் வாயிற் பிறந்தமை பற்றி அதற்கு அமைந்தொழுகாது அதனை அவமதிப்பவர் இல்லையே. சர்வலோக நாயகராகிய சிவபெருமானுடைய ஆஞ்ஞை, புல்லனுகிய என் வாயிற் பிறந்தமை பற்றி அதற்கு அமைந் தொழுகாது அதனை அவமதிப்பது தகுதியாமா ? ஆகாதே.

அடியவர் குறைவு தீர்த்தாண்டருள்வதே விரதம் பூண்ட பெருங் கருணைக்கடலாகிய சிவபெருமான், நான் நல்லறிவும் நல்லொழுக்கமும், தம்மாட்சி மெய்யன்பும் சற்றுமுற்றறியாப் பரம சண்டாளனேயாயினும், தமது சமயங் குன்றுதலைக் காண்டலின் கண்ணே பெருங்கவலையும் அச்சமயத்தைவளர்த்தலின்கண்ணே பேராசையும் உடைமையினுற்றுனே என் இம்மைப்பயன்களெல்லாவற்றையும் இழந்தும், பலராலே பலவகை இடையூறுகளை அநுபவித்தும் வருத்தமுறும் உண்மையைத் திருவுளங் கொண்டு இரங்கி, என் கருத்தை யான் எடுத்த தேகம் விழுமுன் நிறைவேற்றி யருளும் பொருட்டு, அவருடைய திருவடிகளைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

| | |
|---|---|
| சென்னப்பட்டணம்<br>விபவ வருஷம்<br>சித்திரை மாதம். | இங்ஙனம்,<br><br>நல்லூர். க. ஆறுமுக நாவலர். |



## உதவுங்கள்

பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமானது திருவருளினுலே நான் யாழ்ப்பாணத்துள்ள புண்ணியவான்கள் சிலர் உபகரித்த பொருள் கொண்டு சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்து வண்ணுர் பண்ணையிலும் வித்தியாசாலை தாபித்து நடத்திக்கொண்டு வருதல் எல்லாருக்குந் தெரியுமே. அந்த வித்தியாசாலைகளின் வரலாறும், வரவு செலவு இருப்புக் கணக்கும், பிறவும், நான் அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்திய ஆவேதனங்களினுல் நன்ருக விளங்கும். இவ்வருஷம் கோப்பாயிலே ஒரு வித்தியாசாலை தாபித்திருக்கின்றேன். இந்தப்பிரகாரமே வடதேசத்திலும் இலங்கையிலும் ஊர்தோறும் வித்தியாசாலை தாபிக்கவும் தேவாலயந்தோறும் சைவப்பிரசங்கம் பண்ணுவிக்கவும் வேண்டும். இப்படிச் செய்யிற் கல்வியுஞ் சைவமும் தழைத்தோங்கும்.

வடதேசத்திலுள்ள பிரபுக்கள் பலர் தங்கள் தங்கள் ஸ்தலங்களிலே வித்தியாசாலைகள் தாபிக்கும்படி கேட்கின்ருர்கள் ; அவைகளுக்குப் பொருளுதவி தாங்களே செய்ய உடன்பட்டிருக்கின்ருர்கள். மகிமை பொருந்திய சைவாதீனத்தார்கள் தங்கள் தங்களாலே நடத்தப்படுந் தேவாலயங்களிலே சைவப் பிரசாரகர்களை நியோகித்து வேதனங் கொடுத்துச் சைவப்பிரசங்கஞ் செய்விக்க உடன்பட்டிருக்கின்ருர்கள். இவற்றின்பொருட்டுக் கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினுலே, நல்லொழுக்கமும் விவேகமும் உடையவாகளாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் நூற்றுவரைச் சேர்த்து, தனித்தனி இருபது பிள்ளைகளையுடைய வகுப்பு ஐந்தாக வகுத்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்துக் கல்வி கற்பித்தல் வேண்டும். வருஷந்தோறும் தேர்ச்சி யடைந்த முதல் வகுப்புப் பிள்ளைகள் இருபதின்மரும் வித்தியாசாலையை அடுக்க ஐந்தாம் வகுப்பின் பொருட்டு இருபது பிள்ளைகள் சேர்க்கப்பட்டு வரல் வேண்டும். இப்படிக் கற்றுத் தேர்ச்சி யடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகித்தல் வேண்டும்.

இதன்பொருட்டு ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு எழுநூறு ரூபா செலவாகும்.

இவ்வித்தியாசாலையிலே சேரும் பிள்ளைகள் உயர்வாகிய இலக்கணவிலக்கியங்களை நன்ருகக்கற்றுக்கொள்வார்கள். அம்மட்டோ, சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு ஒரதிபதிக்கும் அவ்வதிபதியின் அதிகாரத்துட்பட்ட உபாத்தியாயர்களுக்குங் கீழ்ப்பட்டிருந்து, அநுட்டானம், பஞ்சாட்சர ஜெபம், சிவபூசை, சிவாலய தரிசனம், தேவார திருவாசகமோதல், சிவபுராணம் படித்தல், சிவ சாத்திரம் படித்தல் முதலிய சிவபுண்ணியங்களை நாடோறும் அவ்வவற்றிற்கு ஏற்படுத்தப்பட்ட நேரங்களிலே நியமப்பிரகாரம் செய்து கொண்டு வருவார்கள் ; உற்சவ காலங்களிலே யாவருக்கும் சிவபக்தி செனிக்கும்படிக்கு, பெருந்திருக்கூட்டமாகிச் சுவாமிக்குப் பின்னே தாளந் தட்டித் தேவாரம் பண்ணுடனே ஓதிக்கொண்டு, வருவார்கள்; ஒழுக்கத்திலும் சமயானுட்டானங்களிலும் தவறும் பொழுதெல்லாம் அதிபதியினுலும் உபாத்தியாயர்களாலும் தண்டிக்கப் பட்டுத் திருத்த மடைவார்கள். வித்தியாசாலையை விடுக்கும்பொழுது உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கப்பட்டு, ஊர்தோறும் வித்தியாசாலைகளிலே கல்வி கற்பித்துக்கொண்டும் திருக்கோயில்களிலே சைவ சமயத்தைப் பிரசங்கித்துக்கொண்டும் சீவிப்பார்கள். இப்படியே தங்களுக்கும் பிறர்க்கும் பயன்படும்படி நற்செய்கைகளைச் செய்யும் இயல்புடையவர்களுக்கு அன்ன தானம் செய்வது எவ்வளவு பெரும் புண்ணியம் !

மிகமேலாகிய இத்தருமத்தை நிறைவேற்றுதற்கு அங்கங்கே சபை கூட்டிப் பிரசங்கஞ் செய்து பொருளுதவி பெறும்பொருட்டு ஊர்தோறும் சஞ்சரிக்கத் தொடங்கினேன். சைவசமயிகளே, சிவபெருமானுடைய திருநாமம் விளங்கும்பொருட்டு நான் எடுத்த முயற்சியை நீங்கள் அவமதியாது நன்கு மதித்து உதவி செய்வீர்க ளென்று நம்பியே உங்கள் ஊருக்கு வருகின்றேன். சிவபெருமானே மெய்க் கடவுளென்று விசுவசித்து அவருடைய சின்னமாகிய விபூதியைத் தரிக்கிறவர் ஒவ்வொருவரும், 'இல்லை'



யென்னுது சிறிதாயினும் பெரிதாயினும் தங்கள் தங்களால் இயன்றது உதவுவாராயின், நான் எடுத்த முயற்சி நிறைவேறிவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை.

நீங்கள் இத்தருமத்தின் பொருட்டு உங்க ளுங்களால் இயன்ற மட்டும், நிலமாகவேனும், பணமாகவேனும், பனைமரம் பாலைமரம் முதலிய மரங்களாகவேனும் உபகரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். உபகரிப்பவர்கள் தங்கள் தங்கள் பெயரையும், ஊர்ப்பெயரையும், தந்தையர் பெயரையும், தொழிற் பெயரையும் அறிவித்தல் வேண்டும். உபகாரகர்கள் அவரவர் உபகரித்த பொருட்டொகையும் வேதனத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

பிரமோதூத வருஷம் இங்ஙனம்,

**நல்லூர். க. ஆறுமுக நாவலர்.**

எதிர்பார்த்த அளவு பணம் சேரவில்லை.

## 53. திருப்பித் தந்தார்

**நா**வலர் யாரிடமும் தமக்காக எதையும் யாசிக்க மாட்டார். அவர் விண்ணப்ப மூலம் சைவப்பிரகாசனத்திற்கே பொருள் கோரினர். அதுவும் வலுவில் வந்ததுடன் மகிழ்ந்தார். எவரையும் வலுவில் எதுவும் கேட்பதில்லை. ஒருசமயம் சிதம்பரம் தேர் விழாவிற்கு வந்திருந்த உபய குருமூர்த்திகள் அளித்த பரிசுகளையும் பணத்தையுங் கூடத் திருப்பி விட்டார். அதன் விபரத்தை அவரே எழுதியவாறு இங்கே காண்க :

"ஆனி மாசம் மகோற்சவ தரிசனத்தின் பொருட்டுத் திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீமத் அம்பலவாண தேசிகர் சுப்பிரமணிய தேசிகர் என்னும் உபயகுருமூர்த்திகளும் சிதம்பரத்திற்கு எழுந்தருளி வந்தார்கள். அவர்கள் வரவு, முன்னே அவர்கள் நமசிவாயத்தம்பிரான் வைகாசி மாசம் கஅ உ எனக்கு எழுதிய கடிதத்திஞல் அறிந்தமையாலும், அவர்கள் சிதம்பரத்திற்கு எழுந்தருளின் வித்தியாசாலைக்கும் எழுந்தருளுவார்கள் என்பது

அவர்களுள்ளே துவிதிய குருமூர்த்திகள் குரோதன வருஷம் பங்குனி மாசம் ௨௮ ௳ எனக்கு எழுதியருளிய திருமுகத்தினாலே தெரிந்தமையாலும், அவர்கள் வரவை எனக்கு எழுதும் பொருட்டு, அவர்கள் பொன்னம்பலத் தம்பிரான் வித்தியாசாலை அத்யக்ஷகரை வேண்டிக்கொண்டமை அவர் கடிதத்தினால் உணர்ந்தமையாலும், அவர்களுக்கு வித்தியாசாலையில் உபசாரம் நான் இல்லாத வழித் தவறுமோ என்னும் ஐயத்தாலும் அவர்களுக்கு வித்தியாசாலையைக் காட்டி அவர்களாலே செயற்பாலனவற்றை வெகுஜனசமூகத்திலே பிரசங்கிக்கின் அவர்கள் இனியாயினும் தங்கள் தலங்களில் இப்படி வித்தியாசாலைகளைத் தாபித்துக் கல்வியறிவொழுக்கங்களையும் சமயத்தையும் வளர்த்தல் கூடுமே என்றெழுந்த பேராசையாலும், நான் சென்னபட்டணத்தை விடுத்தலால் எனக்கு விளையும் நட்டத்தை எட்டுணையேனும் நோக்காது, புறப்பட்டுச் சிதம்பரத்தை அடைந்தேன்.

உபய குருமூர்த்திகளும் ரதோற்சவ தினத்துக்கு முதற்றினமாகிய ௨௩ ௳ சுக்கிர வாரத் திரவிலே எழு மணிக்கு வித்தியாசாலைக்குத் திருக்கூட்டத்தோடும் எழுந்தருளி வந்தார்கள். பரீட்சையைப் பார்க்கும்பொருட்டும் பரீக்ஷை முடிவிலே குருமூர்த்திகளாலே செயற்பாலதாகிய பிரசங்கத்தைக் கேட்கும் பொருட்டும் வெகுசனங்கள் வந்து கூடினார்கள். பிரதம குருமூர்த்திகள் ஆசனத்திலே தக்ஷிணாபிமுகமாக வீற்றிருப்ப, துவிதிய குருமூர்த்திகள் ஆராதனை செய்தார்கள். ஆராதனை முற்றியவுடனே, பலர் நமஸ்கரித்து விபூதி பெற்றுக்கொண்டபின், எல்லாரும் வரிசையாக இருந்தார்கள். அதன்பின் நான், கீழ்வகுப்புப் பிள்ளைகளைப் பரீட்சை செய்துகொண்டு மேல் வகுப்புப் பிள்ளைகளைப் பரீக்ஷை செய்யும்பொழுது, உபயகுருமூர்த்திகளும் பரீட்சையை விரைவில் நிறுத்தும் பொருட்டுப் பலதரம் குறிப்பாலும் பின் வெளிப்படையாலும் உணர்த்தினார்கள். அதனாலே பரீட்சை செவ்விதின் முற்றுப்பெறாது நிறுத்தப்பட்டது. அது அவ்வகுப்புப் பிள்ளைகளுக்கும் அங்கிருந்த வித்துவான்கள் பிரபுக்கள் முதலாயினோர்க்கும் மன்வருத்தத்தை விளைவித்தது.



பரீக்ஷை நிறுத்தப்பட்ட வுடனே, பிரதம குருமூர்த்திகள் எனக்கு ஒரு சால்வையும் இரண்டு சரிகை வேட்டியும், உபாத்தியாயர்கள் நால்வருக்கும் வாமதேவ பட்டருக்கும் ஒவ்வொரு சோடி வேட்டியும் சமர்த்தர்களாகிய மாணாக்கர்களுக்குப் புத்தகப் பரிசின் பொருட்டு ஐம்பது ரூபாவும் உபகரித்துவிட்டு மடத்துக்கு எழுந்தருளினார்கள். பிரசங்கஞ் செய்யப்படவில்லை ; அது, பிரசங்கத்தை அவாவிக் கொண்டிருந்த சனங்களுக்குப் பெருந் துக்கத்தை விளைவித்தது. பரிசாகக் கொடுத்த புத்தகவிலை ரூபா ௧௩ அணா ௧௨ ; சேஷம் ரூபா ௩௬ அணா ௪. இத்தொகை, மேல் வருஷத்துப் பரிசின் பொருட்டு வைக்கப்பட்டிருக்கின்றது.

எனக்குத் தந்தருளப் பட்ட சால்வை வேட்டிகள் விலையைக் கொண்டு சிதம்பரத்தைச் சார்ந்த திருக்காளாஞ்சேரியில் மறைஞானசம்பந்த சிவாசாரிய சுவாமிகளுடைய சமாதித் திருக்குறட்டையும் திருமதிலையும் ஜீர்ணோத்தாரணம் செய்வித் தருளும் பொருட்டு, அவைகளைத் துவிதியகுருமூர்த்திகளிடத்தே சமர்ப்பித்துவிட்டேன். அக் குருமூர்த்திகள் தாங்கள் சிதம்பரத்தை விடுத்தருளும்பொழுது, யாதுகருதியோ எனக்கு ரூபா எண்பது அனுப்பினார்கள். நான் சென்னப்பட்டணம் சேர்ந்தவுடனே, அதற்கு உண்டிகை வாங்கி அக் குருமூர்த்திகளுக்கு அனுப்பிவிட்டேன்.

## 54. சிவ சொத்து

தமக்குரிமையில்லாத பொருளை நாவலர் மனத்தாலும் தீண்டார் ; பிறரும் சுயநலத்துடன் அபகரிப்பதைக் கண்டிப்பார். முதன்மையாகச் சிவசொத்தை எவராயினும் துர் விநியோகம் செய்தாலும், சுயநலத்திற்காக அபகரித்தாலும், பலமாகச் சண்டைபோட்டு அதைச் சிவார்ப்பணமாக்குவார். ஓர் உதாரணம் காண்போம் : சிதம்பரத்திற்கு அருகே யுள்ள சிவபுரியில் வெள்ளந்தாங்கி ஆறுமுகப் பிள்ளை என்னும் அன்பர் இருந்தார். அவர் நாவலரிடம் பேரன்புடையவர் ; அவர் பல்லக்கேறும் செல்வர் ; நாவலர் வசிக்குமிடத்திற்குச் சிறிது தூரத்திலேயே சிவிகை

விட்டிறங்கி மரியாதையுடன் சென்று ஐந்தாங்குரவரை வணங்குவார். வெள்ளந்தாங்கியில் நாற்பது வேலி நிலம் உண்டு ; அது சிதம்பரம் சிவகாமி யம்மைக்குத் தரும சாசன மானது ; அந்த நிலத்தையும் ஆறுமுகம் பிள்ளை அநுபவித்து வந்தார் ; இதை நாவலர் கண்டு கண்டித்தார். நிலத்தைச் சிவகாமிக்கே அர்ப்பணித்துச் சிவ கைங்கரியம் செய்யப் பன்முறை வற்புறுத்தினுர் ; பிள்ளை கேட்கவில்லை. ஒருநாள் "சிவசொத்துக் குலநாசம் ; அதைத் திருடி அநுபவிப்பவன் மனிதனு" என்றெல்லாம் காரமாகப் பேசிவிட்டார் நாவலர். செல்வர் ஆறுமுகம் பிள்ளைக்குப் பொறுக்கவில்லை ; மான நஷ்டிக்குப் பிராது செய்தார் ; பலமான வக்கீல் வைத்துத் தன் பக்கம் தீர்ப்பு வாங்கினுர். நாவலர், தாம் கடுமையாகப் பேசியதை ஒப்புக்கொண்டு அதற்கு நியாயமும் சொல்லி எழுபது ரூபா அபராதம் கட்டினுர். அப்பீல் செய்தால் அவர் பக்கம் நியாயம் பிறந்திருக்கும் ; நாவலர் மறுத்துவிட்டு 1867—ல் சிவபுரி மடத்து வாரிசு வைத்திலிங்கம் என்பவரைக் கொண்டு வியாச்சியம் செய்வித்தார். அதன்படி விளைநிலங்களை அநுபவித்த காலத்தில் வந்த வரும்படி சகிதம் நிலத்தை வாங்கிக் கொடுத்தார். மலையாளம் ஜட்ஜா யிருந்த செல்லப்ப பிள்ளை நாவலர் பக்கம் பேசி மஞ்சக்குப்பம் கோர்ட்டு அசல் எண் 2–ஆகிய இவ்வியாச்சியத்தைச் செயித்துக் கொடுத்தார். ஆறுமுகம் பிள்ளை தன் அபராதத்தை உணர்ந்து மன்னிப்புக் கேட்டார். இன்று வெள்ளந்தாங்கி நிலம் சிவகாமி சொத்தாகி, சிவபுரம் மடத்தின் நிர்வாகத்தில் உள்ளது.

## 55. தீட்சை அவசியம்

நாவலர் எங்கே சென்றுலும் நல்லதைப் போற்றுவார்; வேதாகம விரோதங்களைக் கண்டிப்பார். அவர் செய்யும் கண்டனங்களும் நன்மையே தரும்.

சைவர்கள் அனைவரும் தக்க சிவாசாரியார்களிடம் தீக்ஷை பெற்றே சிவபூஜை செய்ய வேண்டும் என்பதை இவர் வற்புறுத்தினுர். இவர் எல்லாவிதமான தீக்ஷைகளையும் பெற்றவர் ; சமயாசாரியாரா யிருக்க எல்லாத் தகுதியும் இவருக்குண்டு ; நாவலர் ஒரு பண்டாரசந்நிதிகளா யிருந்தால் திருமடங்களின் பெரும் பொருளைக் கொண்டு உலகெல்லாம் சைவ முழக்கம் செய்திருப்பார்.



தீக்ஷையில்லாதவர்கள் வைதீகப் பிராம்மணராஞலும் நாவலர் அவர்களைக் கும்பிடுவதில்லை ; அவர்கள் கையால் இவர் விபூதி வாங்குவதுமில்லை. சிராத்தம் முதலிய விசேஷங்களில் அவர்களை வரவழைப்பதும் இல்லை. ஆகமப்படி அமைந்த ஆலயங்களில், தீக்ஷை பெறுத பிராமணர்கள் சிவாராதனை செய்யத் தகுதியற்றவர்கள் என்று நாவலர் வாதித்துக் கிளர்ச்சி செய்தார். அக்கிளர்ச்சி யாழ்ப்பாணம், வேதாரண்யம், சிதம்பரம், சென்னை எங்கும் காட்டுத்தீ போலப் பரவியது. பிராமணரும் பலமாக ஆட்சேபித்தனர் ; நாவலரின் எதிரிகள் இதே சமயமென்று அப்பெரியாரைத் தூஷித்துக் கண்டனப் பத்திரம் விடுத்தனர். வேதமே பெரிது என்று சிவாகமத்தைத் தூஷித்தனர் ; இலிங்கத்தை ஆண்குறி என்று இகழ்ந்தனர். நாவலர் தமது வித்தியாசாலைகளில் கூட்டங்கூடி "வேதம் பொது ; ஆகமம் சிறப்பு, அதன் தெளிவே இது; ஆகமமே சாலோக, சாமீப்ய, சாரூப்ய, ஸாயுஜ்ய முத்தி தரும் ; அதுவே முப்பொருளறிவை நிறைவாகத் தருவது" என்று சரியான ஆதாரங்களைக் காட்டி நிலைநாட்டினுர். ஸூத ஸம்ஹிதை, பத்மபுராணம், சிவஞானசித்தியார், சிவாகம மான்மியம், புண்டரீக புராணம் முதலியவற்றை ஆதாரமாகக் காட்டி வைதிகர்களுடன் பலமாக வாதாடினுர். அதை எதிர்த்து, வைதிகப் பிராமணர் "வாதம் செய்வோம்" என்று புத்தகங்களைக் (முலாம் பூசிய ஆங்கிலப் புத்தகங்களை) கொண்டுவந்தனர். ஆனல் நாவலரின் சண்டமாருதத் தமிழின்முன் அவர்கள் வாயெடுக்க முடியவில்லை. இதைக்கண்ட பலர் வைதிகப் பிராமணரை வணங்குவதை நிறுத்தினர் ; அவர்களுக்குத் தானதருமங்களும் செய்வதில்லை; கோயிலதிகாரிகள் தீக்ஷை பெற்ற ஆதிசைவர்களைக் கொண்டே பூஜை நடத்தினர். வைதிகப் பிராமணர் பலர் சிவதீக்ஷை பெற்றனர். சிவபூஜை செய்து சைவநெறி யொழுகினர். தேவாரம், திருவாசகம், பெரிய புராணம் ஆகிய தமிழ்வேதங்களை அலட்சியம்

செய்தவர்கள் இவற்றை ஆர்வமுடன் கற்றனர். சிதம்பரத்தில் இக்கிளர்ச்சி பலமாக நடந்தது. கோயில் தீக்ஷிதர்கள் நாவலரை எதிர்த்தனர்; நாவலர் தமது சிதம்பரம் வித்தியாசாலையில் தமது கட்சியைப் பேசி எதிரிகளுக்கு நல்ல பதிற் சொன்னார். அன்று மார்கழி மாத ரதோற்சவம்; ஏராளமான கூட்டம்.

"சிதம்பராலயத்தில் சில பூஜகர்கள் சைவாகமங்கள் பிரமாண மல்ல வென்றும், சிவதீக்ஷையினால் உயர்ச்சி யில்லை யென்றும், சிதம்பராலயக் கிரியைகள் வைதிகக் கிரியைகள் என்றும் அதை நடத்த சிவதீக்ஷையில்லாத வைதிகரே அருகரென்றும்சொல்லிப் பலரையும் மயக்கித் திரிகிறார்கள். பதஞ்சலி முனிவர் வேதசிவாகமமுறையே பத்தி செய்தார். ஆதியில் இருந்த தில்லைவாழ் அந்தணர்கள் சிவதீக்ஷை, சிவானுஷ்டானம், சிவாகம உணர்ச்சி யுடையவர்கள். தற்கால வைதிகர்கள் தீக்ஷையின்றிப் பூஜைசெய்தல், சிவ வாக்கான ஆகமத்திற்கும், பதஞ்சலி, வியாக்கிரபாதர், தில்லைவாழ் அந்தணர்களுக்கும் விரோதமானது" என்று நாவலர் பிரசங்கித்தார். தீக்ஷிதர்கள் என்ற பட்டமே சிவதீக்ஷைபெற்றவர்களைக் குறிக்கும். அவர்கள் உள்ளத்தில் நாவலர் சொல்வது உண்மை என்றே பட்டது. ஆனால் சிலர் வெகுண்டு எதிர்த்து விஷயத்தைக் கூட்டிலேற்றியது விசனிக்கத் தக்கது. அவர்கள் பெயருடன் **இராமலிங்க சுவாமிகள்** பெயரும் கலந்திருப்பது இன்னும் விசனிக்கத் தக்கது.

பாரபட்சமின்றி இரண்டு கட்சிகளையும் நாம் ஆராய வேண்டும். இராமலிங்கசுவாமிகள் சிதம்பரம் கோயிலில் செல்வாக்குப் பெற்றிருந்தார். அதற்குக் காரணம் அவரது இனிய வாக்கும் நடராஜ பக்தியும் அருள் உள்ளமுமாகும். அதிலிருந்து பொங்கியெழுந்த அருட்பாவை அக்காலம் அறியவில்லை; இன்று பாடிக் கொண்டாடுகிறது. அருட்பாவை மறுத்து அக்காலம் கிளர்ச்சி செய்தார் நாவலர். அதை அடுத்த அத்தியாயத்திற் சொல்லுவோம்.வள்ளலார் மாணவர் நாவலரைக் குறைவாகப் பேசியதாகத் தெரிகிறது. நாவலரால் மனப்புண்பட்ட தீக்ஷிதர்களும் இராமலிங்க சுவாமிகளைத் துணைக்கொண்டு கனகசபையிலே கூட்டங் கூட்டி (1868



ஜூன்) சுக்கில வருஷம் ஆனி மாதம் நாவலரைத் தூஷித்தார்கள்; அவர் பெயருக்கு விநோதமான அர்த்தங்கள் செய்தார்கள். பேரம்பலம் பிரசங்கம் என்ற பெயரால் ஒரு துண்டுப் பிரசுரமும் வந்தது. அதில் நாவலர்மேல் ஆதாரமற்ற வசைமாரிகள் காணப்பட்டன. நாவலர் சிங்கம் சும்மா விடுமா? மஞ்சக்குப்பம் கோர்ட்டில் வழக்கு நடந்தது. தீக்ஷிதர்கள் சாட்சி ஜோடித்துப் பெரு வழக்காடினர். வள்ளலாரும் கூட்டிலேறினார். தாம் நாவலரைத் தூஷிக்கவே யில்லை என்றார்.

வாயிதா நாள் நாவலர் சிவ பூஜை செய்து இலிங்கத்தை சதாசிவப்பிள்ளையிடம் கொடுத்து "நான் இன்று சிக்ஷிக்கப்படின் என் உயிரை விட்டுவிடுவேன்; நீ இவ்வுடையவரைக் கங்கையில் விட்டு விடு" என்று சென்றார். யாழ்ப்பாணம் சௌந்தரநாயகம்பிள்ளை அவர் கட்சியை எடுத்து வழக்காடினார். எதிரிகள் மிடுக்கான கேள்விகள் கேட்டனர்; நாவலர் சிவனையே நினைத்து, கண்ணீர் துளும்ப உண்மை யுரைத்தார். "சிவாயநம வென்பாருக்குஅபாயமில்லை"; அவர் பக்கமே வென்றது. தீக்ஷிதர்களுக்கு ஐம்பது ரூபா அபராதம். வள்ளலார் விடுதலையானார். நாவலர் பேசிய திறமை நீதிபதியின் உள்ளத்தை உருக்கியது. இச்சம்பவம் நடந்தது முதல் சிவதீக்ஷைக்குக் கொண்டாட்டந்தான்; சைவ நெறி எங்கும் தழைத்தோங்கியது. அத்துடன் அருட்பா–மருட்பா சொற்போரும் ஊர்தோறும் நடந்தது. அதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

# 56. அருட்பா வழக்கு

ஒவ்வொரு பெரியார் வாழ்விலும் நாம் விரும்பத் தக்க பல விஷயங்களூடு விரும்பத் தகாத இரண்டொன்றும் இருக்கலாம். குற்றம் பார்த்தாற் சுற்றமில்லை, குணத்தையே பாராட்டுதல் நலம். இன்று தமிழுலகெல்லாம் அருட்பாவை ஓதுகிறது; அன்று அதைக் குறைகூறினார் கணக்கிலார்; வள்ளலார் முறையாகக் கல்வி பயிலவில்லை; **உள்ளெழுச்சியாலேதான் பாடினார்;** புலவர் வேலாயுத முதலியாரே அப்பாடல்களை ஆறு திருமுறை

களாகவகுத்து, செப்பனிட்டு அச்சிட்டார். அவரே அதற்கு அருட்பா என்றும் அருட்பிரகாச வள்ளலார் இயற்றியது என்றும் குறித்தார். வள்ளலார் அப்பெயரை ஆட்சேபித்ததும் உண்டு. முழுவிவரம் "**அருட்சுடர் வள்ளலார்**" என்னும் நூலில் காண்க. நாவலர் பெருந்தன்மையாளர். மழவை மகாலிங்க ஐயர், விசாகப்பெருமாளையர், வை. தாமோதரம் பிள்ளை, மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தியாகராச செட்டியார் போன்ற பெரும் புலவர்களின் அரிய நண்பர். தக்க புலவர்களைப் பிறர் தூஷிப்பதை அவர் பொறுக்கமாட்டார். உதாரணமாக, நரசிங்கபுரம் வீராசாமிபிள்ளை யாழ்ப்பாணப் புலவரான வை. தாமோதரம் பிள்ளையின் சேனாவரைய விளம்பரத்தில் பிழை கண்டு யாழ்ப்பாணத்தாரையே தூஷித்தார். " நீர் இலக்கணம் சரியாகத் தெரியாத மகானுபாவர் ; மாதம் ஐம்பது ரூபா சம்பளம் பெற்றுத் தலைமைத் தமிழ்ப் புலமை நடாத்தும் பாடசாலையில் நான்காம் உபாத்தியாயரா யிருக்கவும் யோக்கியரல்ல என்று தள்ளப்பட்ட நீரா, சிறிதும் நாணாது தலைநிமிர்ந்து, வித்தியா பண்டிதப் பட்டம் பெற்ற ஸ்ரீ தாமோதரம் பிள்ளை விளம்பரத்திற் பிழை காட்ட வல்லீர் ! போப்பையர் இலக்கணங் கற்ற சிறுவர்கூட உமது வினாக்களுக்கு விடை சொல்லி, உமது விஞ்ஞாபனப் பத்திரிகையிலுள்ள அளவிறந்த பிழைகளை எடுத்துக்காட்டி உம்மைத் தலைகுனிய வைக்க வல்லவர்கள். தாமோதரம் பிள்ளை அவர்கள், " தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கிணை யில்லாதவர் " என்று நாவலருக்குக் கொடுத்த விசேஷணம் இத்தமிழ் நாடெங்குமுள்ள மெய்ப் புலவர்களுள் ஒருவர்க்காயினும் சிறிதேனும் வருத்தம் விளைக்கக் கண்டிலேம், கண்டிலேம். வித்வன் மணம் சிறிதும் வீசாத உமக்கும், உம்மை ஏவி மறைந்து நிற்கும் போலிப் புலவர்களுக்குமே ஆறா மனப்புழுக்கத்தை விளைவிக்கக் கண்டு விவேகிகள் யாவரும் ஆச்சரியப்படுகிறார்கள். நாவலரைப் பரீட்சிக்கும்பொருட்டு இராமாயணத்தில் ஒரு செய்யுள் வரைந்தீர். சபாசு ! சபாசு ! நீரா வித்துவான்களைப் பரீட்சித்துத் தரங்குறித்துப் பட்டங்கொடுக்கப் புகுந்தீர் ! கெட்டி கெட்டி ! ! ! தான் கிடப்பது குட்டிச்சுவர் ; கனாக்காண்பது மச்சு மாளிகையா !" இந்தமாதிரி விழும் நாவலர் சொற்சவுக்கு. அரிய கவிகளையோ வித்துவான்களையோ தூஷிப்பதை அவர் பொறார். அப்படிப்பட்டவர் இராமலிங்கர் அருட்பாவைக் கண்டித்ததேன் ?



ஒரு சமயம் வடலூரில் வள்ளலார் கையெழுத்துப் பிரதிகளை அலசிப் பார்த்தேன். இருபுறமும் வீசிய சொற்சிலம்பக் கடிதங்களும் கட்டுரைகளும் கிடைத்தன. ஆனால் வள்ளலார் கைப்பட எழுதிய ஆதாரம் எதுவுமில்லை. அவர் இவ்விவாதத்திலேயே தலையிடாமல் அடக்கமாகவே யிருந்ததாகத் தெரிகிறது.

நாவலர் எதை மறுத்தார் ? அவரது போலி யருட்பா மறுப்பிலிருந்து சில குறிப்புகளைத் தருகிறேன் :

1. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் இவ்வைந்தும் அருட்பாடல்கள். இவை சிவபூசைக்கும், தோத்திரத்திற்கும் ஏற்ற மந்திரங்களாம். இவையெல்லாம் சிவனருள் பெற்ற சமயாசாரியார்களின் அருள்வாக்குகளாகும் ; இவையே தமிழ்வேதம். இவற்றையே ஓதத் தகும். இவை பத்தி தரும், முத்தி தரும். இவற்றை அருளிய அருட்பெரியார்கள் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள் ; இவர்கள் வரலாறு மஹான்களால் எழுதப்பெற்றது ; பரம்பரையாக இவர்களுக்குக் குருபூசை செய்துவருகிறோம். இவர்களே பசுகரணம் நீங்கிச் சிவனருள் பெற்ற அருளாளர் ; சரியை, கிரியை, யோக, ஞான நான்கு சாதன சித்திகளையும் இவர்கள் திருவாக்கு நல்கும் என்று நாம் உறுதி கொண்டு வழிபடுகிறோம்.

2. கருங்குழி இராமலிங்கம் பிள்ளை, தம்மைத் திருவருட்பிரகாச வள்ளல் என்கிறார் ; தம் மாணவர் ஒருவராலே தமக்குத் திருவருட்பா வரலாறென ஒரு புராணஞ் செய்வித்தார் ; தாம் பாடிய பாடல்களை அருட்பா என்றுவெளியிட்டார். அவர் பாடலைத் தேவார திருவாசகங்களுடன் சமமாகச் சிலர் மதிக்கின்றனர். சிவதரிசனங்களில் அதையே ஓதுகின்றனர் ; சென்னப்பட்டணத்தில் உள்ள சில சிவாலய உற்சவங்களில் தேவார முதலியஅருட்பாக்களை நிறுத்திவிட்டு இராமலிங்கம் பிள்ளை பாடலையே ஓதுவிக்கிறார்கள் ; இது பிசகு.

3. இராமலிங்கம் பிள்ளை தம்மை ஒதாதுணர்ந்தவர் என்கிறார்; சிவனருளாலே அவர் எல்லாம் ஓதாதுணரின் அவர் எழுத்துக்களில் பிழை யிருப்பானேன் ? ஓதாதுணர்ந்த ஞானசம்பந்தர் வாக்குகளில் ஒருபிழையுண்டா ? அவை இலக்கண இலக்கிய ஞான சாத்திரங்களுக்குப் பொருத்தமாகப் பொருந்தியுள்ளனவே.

4. அவர் தொண்டைமண்டலம் என்பதை தொண்டமண்டலம் என்று வாதாடுகிறார். ஸ்ரீகண்டபரமசிவன் என்பதற்குப் பெண்ணைத் தன் பாகத்தில் உடையவன் என்கிறார். ஸ்ரீ என்பதற்கு ஸ்திரீ என்று பொருள் செய்கிறார். ஒழிவிலொடுக்கத்தில் மும்மலங்களில் ஒருமல நீத்தோர் பிரமன் முதலானோர் என்கிறார் ; பிரளாயகலர் இருமலமுடையார், பிரம்ம விஷ்ணுக்கள் மும்மலமுடைய சகலர் என்பதைச் சிறுவரும் அறிவாரே. சுழுமுனையைச் சுழி முனை, சொப்பனத்தைச் சொற்பனம், கேட்க என்பதைக் கேழ்க்க என்று இவ்வாறு பல பிசகுகள் காணும். இவர் வாக்கை அருள் வாக்கு என்று சொல்வதெப்படி ?

5. தாம் தண்ணீரால் விளக்கெரித்ததாகப் பாடுகிறாரே ; நம்மெதிரே அப்படிச் செய்வாரா ? சாக்கிரத்தில், நடேசர் சென்னைத் தெருக்களைத் தாண்டித் தம் வீடு வந்து தமது கையில் ஒன்று தந்ததாகப் பாடுகிறார். அக் கருத்துள்ள பாடல்கள் இரு நூறு உண்டு. தாம் நடேசரைக் கட்டித்தழுவித் திருவருள் பெற்றதாகச் சொல்லுகிறார். இவர் திருவருளால் வாக்குப் பெற்று அற்புதம் செய்பவராயின், எல்லார் முன்பும் அற்புதஞ் செய்து பரசமயிகளுக்கும் நம்பிக்கை யூட்டித் தொண்டு செய்யலாமே ; நாம் அற்புதஞ் செய்யப் பாடவில்லை ; ஆத்ம லாபங் கருதியே பாடினோம் எனில், தாம் அற்புதஞ் செய்ததாகவும் சித்தாடல் புரிவதாகவும் பாடியிருக்க வேண்டியதில்லையே.

6. நித்தியதேகம் தருவோம் செத்தாரை எழுப்புவோம் என்று ஓயாது பாடும் இவர் இறந்தாரை என்றாவது எழுப்பியதுண்டா ? இனியும் முடியுமா ? தம்மை ஞானசிரியராய் அடைந்த சிதம்பரத்துத் தீக்ஷிதர் ஒருவர் சன்னிபாதத்தால் வருந்தி, " அடியேனைப் பிழைப்பித்தல் வேண்டும் " என்று கெஞ்சினார். இராமலிங்கர், " பிழைப்பிப்போம் " என்று சொல்லிச் சொல்லி இறுதியில் இறக்கும்படி கைவிட்டாரே. அவர் எனும்மை அருட்பாவால் ஆணுக்கி அதிசயங் காட்டுவதுதானே !



7. சிவபெருமானே தமக்கு இரசவாதம் கற்பித்ததாகவும் தாம் ஆறுபாரம் தங்கம் வைத்திருப்பதாகவும், அதைக்கொண்டு பார்வதிபுரம் என்றொரு பட்டணம் அமைத்து அதனுள்ளே ஒரு கனகசபையுங் கட்டுவித்துச்சிதம்பர சபாநாயகரை உலகறிய நடந்து அங்கே வந்து நின்று நிருத்தம் செய்யப்போகின்றோம் என்றும் சொல்லுகிறார். இரசவாதத்தால் சம்பாதித்த திரவியத்தால் சிதம்பரம் சிற்சபா சம்ப்ரோக்ஷணத்தின் பொருட்டு இரண்டு லக்ஷம் ரூபா கொடுப்பதாகப் பலரெதிரே தீக்ஷிதர்களுக்கு வாக்களித்தாரே ; ஒன்றுந் தரவில்லையே. இவர் பொன் செய்வாராயின் ஊர்தொறுந் திரிந்து பணம் யாசிப்பானேன் ? இவர் மாணவர்,"தமது குரு அற்புதம் செய்வார் ; செத்தாரை எழுப்புவார். இரசவாதம் செய்வார்" என்று சொல்லிச் சென்னப்பட்டணத்தில் இரண்டணு ஒரணு யாசித்துத் திரிவானேன் ?

8. இராமலிங்கம் பிள்ளை ஆகாய கமன குளிகை செய்தாராம் ; அதையுண்ட இரண்டு மாணவர் இரண்டுதென்னைமர உயரத்தின் மேல் பறந்து இரண்டு நாழிகைப் பொழுதில் சென்னப்பட்டணம் அடைந்தார்களாம் ! அவர் எல்லாருங்காண இதைச் செய்வாரா ?

9. ஒருநாள் இவர்,"சென்னப்பட்டணத்திலே என் மனைவி இறந்தாள் ; இங்கே தெரிந்தது"என்றார். இவர் மனைவி இன்றும் ஒரு பரதேசியுடன் கூடித் திரிவதை யாருங் காணலாம். மனைவியின் பழிக்கஞ்சியே அவர் சென்னப்பட்டணத்தை விட்டு ஓடினார். இவற்றை யெல்லாம் சிந்தித்தால் உண்மை விளங்கும்.

இவையே நாவலர் கருத்துக்களாம். தேவார திருவாசகங்களைக் கைவிட்டு, நேற்றெழுந்த ஒருவர் பாடலையே போற்றக் கூடாது. பழைய தமிழ் மறைக்குச் சேதம் வரும்படி எதுவும் செய்யலாகாதென்பதே நாவலரின் எண்ண மாகும். மற்றென்று, நித்திய

தேகம், செத்தாரை எழுப்பல் என்பது எல்லாம் வீண் மயக்கம் என்பதே.

நித்திய தேகம் என்பதைப் பலர் தப்பர்த்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றுகூட இரண்டொருவர் தமது உடல் சாகாது என்று புத்தகம் போடுகிறார்கள். பூதவுடல் ஊனுடல் ; மலரின் இதழ்போல் உதிர்ந்தே தீரும். அது வயது முதிர்ந்து தளர்ந்து வீழ்வதை யாரும் தடுக்க முடியாது ; செத்தாரை எழுப்புவது என்பது வீண் பிரமை. உடல் காலத்தின் கனி ; கனி, மரத்தில் எவ்வளவு காலம் ஒட்டிக்கொண்டிருக்கும் ? **நரமனிதனுள் அமரத் தன்மை பெற்ற ஆன்மா உள்ளது. " அது, நான் " என்ற உணர்ச்சி யுடன் வாழ்வதுதான் அமர வாழ்வு ; அதுவே சாகாநிலை.** சாவது உடல்; நானாகிய சுத்தான்மாவுக்குச் சாவில்லை; உடல் வீழ்ந்தாலும் அது வாழும் என்றுணர்வதுதான் நித்திய ஞானமாகும். இராமலிங்க சுவாமிகள் சாகாவுடல் என்பதைப் பிரணவ தேகம் நாத சரீரம் என்கிறார். யோகிகளுக்குள்ளே பரநாதப் பண் என்றும் முழங்கும். ஊனுடல் விழுந்தாலும்,சூக்ஷ்மாத்மாவுடன் கலந்து ஓமொலிக்கும். ஓமே அதன் உருவம். அதைத்தான் அவர் நித்திய தேகம் என்கிறார். இந்த நித்திய தேகம் பெற அவர் அருட்சோதி சித்தி தரும் துரியநிலை அடைய வேண்டுகிறார். துரியமுடிமேல் வளரும் சோதிவளநாட்டில் சுத்தபரமாத்மனை இறைவன் திருநடனம் கண்டால், கேவலம் தூலத்தையே பற்றி அருளுணர்வின்றிச் செத்துக்கிடக்கும் ஆன்மாக்கள் இறையுணர்வான அருளுணர்வடைந்து பிழைப்பார்களென்பது வள்ளலார் கருத்து. இதை வடலூர் கைப்பிரதிகளைப் பார்த்ததில் அறியலாயிற்று. எப்படியும் அருட்பா இன்று தமிழர் வாழ்வுடன் கலந்து போனது. நாவலர் சொன்னதெல்லாம் "அது, பழமறையான தேவார திருவாசகங்களை விழுங்கிவிடக்கூடாது" என்பதே. நாம் நாவலர் சொற்படி தேவார திருவாசகங்களைக் காப்போம் ; அருட்பாவில் உள்ள பத்திச்சுவையையும் புசிப்போம். மற்ற விவாதங்களை மறந்துவிடுவது நல்லது.

வள்ளலார் மறைந்த பிறகு நாவலர் சில ஆண்டுகள் இருந்தார். சிலர், செத்தாரை எழுப்ப முடியாமல் வள்ளலார் ஓர் அறைக்குள் உயிர்விட்டார் என்பர்; சிலர்,இறந்தவுடலை இரகசியமாகக் கொணர்ந்து ஞானசபையில் புதைத்துவிட்டார்கள் என்பர். பஞ்சபூதக் கூடு உதிர்ந்து மண்ணாகும் சரக்கே. உலகில் கட்டுக்கதைகளுக்குக்குறைவில்லை.அவைஎப்படியிருப்பினும் வள்ளலார் பெயரை உலகுள்ளளவும் இருக்கச் செய்யும் சாகாவுடல் **அருட்பா**தான் என்போம். அதுபோல் நாவலரின் சாகாவுடலும் அவர் அருளிய **நூல்களும்** , அவர் தூண்டிய **சைவக் கனலும்** என்போம். இருவரும் மறைந்த பிறகு அவரவர் சீடர்கள் நீண்ட காலம் அருட்பா-மருட்பா போர் தொடுத்துத் தமிழ் நாட்டைக் கலக்கினர். அடிதடிகளும் வழக்குகளும் நடந்தன. ஆனால் இப்போது இச்சந்தடிகளில்லை. அருட்பா அழகான பதிப்பாகி அனைவரும் படிக்கிறார்கள். வள்ளலார் மாலைகளும் விண்ணப்பங்களும் நெஞ்சை யள்ளுகின்றன. தொளை யெண்ணாமல், அப்ப முண்போம். இருவர் புகழும் விளங்கவே இவ் விவாதம் எழுந்தது. தேவார திருவாசகங்களான திருமறை நூல்களையும் அவற்றை அருளிய குருமார்களையும் வணக்கமுடன் போற்றி நாவலர் ஆவியை மகிழ்விப்போம்.



## 57. சாவிற்கும் அஞ்சேன்

நாவலர் சாவிற்கு அஞ்சாதவர் ; " உடல் என்றும் அழியும். இதற்கு அஞ்சி நான் சிவகைங்கரியத்தை விடமாட்டேன் ; யார் என்னை என்ன செய்தாலும் இறைவன்மேல் பாரம் போட்டுச் செய்வன செய்தே தீருவேன் " என்ற வீறுகொண்ட கரும வீரர். அத்தகைய வீறுதான் அவரது நித்தியதேகம். நாவலர் இரவும் பகலும் ஓயாது உழைத்தார். நான்காம் பால பாடம், சேது புராணம், கந்த புராணம், பெரிய புராணம், இலக்கணக் கொத்து, தொல்காப்பியம் சேனாவரையம் முதலிய பல நூல்களை வெளியிட்டார் ; பொன்னுசாமித் தேவரும் சுப்பிரமணிய தேசிகரும் அவரது சலியாவுழைப்பை வியந்தனர். உழைப்பின் மிகையால் நாவலர் உடம்பு படுத்தது. அன்னத்வேஷமும் பித்தமும் வந்தன. நாலைந்து மாதங்கள் நோய் ஆளைப்படுத்தியது. அப்போதும்

நாவலர் சிவபூஜையை விடவில்லை ; சிவ கைங்கரியத்தை மறக்க வில்லை. சிறிது குணங் கண்டதும் சிதம்பரம் ஆருத்திரா தரிசனத் திற்கு வந்துவிட்டார். அப்போது அங்கே அம்மைநோய் பரவிப் பலரைப் பலி வாங்கியது; பலர் ஊரை விட்டே ஓடத்தொடங்கினர். மாணவர்கூடக் கலங்கினர். நாவலர் " பயப்படாதீர்கள், சிவன் காப்பான் " என்று எல்லாருக்கும் தைரியம் சொல்லித் தாமும் சிதம்பரத்திலேயே வசித்தார். நாவலர், சனங்களுக் கெல்லாம் " கடவுளை நம்புங்கள் ; எதற்கும் அஞ்சாதீர் ; அவனருளால் தீமை நீங்கும் " என்று தைரியம் சொல்லிவந்தார். நாவலர் எத் தனையோ அரிய நண்பர் இறந்ததைக் கண்டார். இச் சமயமே யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலை முதல் உபாத்தியா யர் தில்லைநாத பிள்ளை தமது நாற்பத்துநான்காம் வயதில் உடல் நீத்தார். அவர் இடத்தில் மா. வைத்திலிங்கம் பிள்ளையை வைக் கும்போது " உடல் உயிர் எல்லாம் சிவன் கொடுத்தது ; அவை உணர உள்ளமட்டும் சிவபுண்ணியமே செய்து உயிரை உயிர்ப் போம் ; பிறகு நடப்பது அவன் செயல் " என்றார். சிதம்பரம் வித்தியாசாலையைக் கண்ணெனக் காத்த அன்பர் இறந்தார். அப் போது " உற்றார் யாருளரோ " என்னும் அப்பர் வாக்கைப் பாடி " உடல் நிலையில்லாப் பொருள் ; அதில் உயிருள்ளமட்டும் உடை யான் பணி புரிவதே கடன் " என்றார். நாவலர் தம் உடலும் ஒரு நாள் உதிரும் என்று உணர்ந்து, இறுதிநாட்களில் தீவிரமான பொதுநலங்களையும் சிவநலங்களையும் சிவோபாஸனைகளையும் செய்துவந்தார்.

# 58. சென்னைப் பிரசங்கம்

நாவலர் செய்த பிரசங்கங்கள் மிகப்பல. அவருக்கு ஒரு தமிழ் " குட்வின் " வாய்த்திருந்தால் விவேகானந்தர் பிரசங்கமாரி போல் நாவலர் சொன்மாரியும் இன்று நமக்கு நூல் வடிவா கக் கிடைத்திருக்கும். அஃதின்றி நாம் ஓர் அரிய செல்வத்தை இழந்தோம். எனினும் ஒரு பெரிய சொற்பொழிவு நமக்குக் கிடைத்துள்ளது. சென்னப்பட்டணத்தில் நாவலர் பல சைவப்



பிரசங்கங்கள் செய்தார். நாவலர் பேசுகிறார் என்றால், திரளான ஜனங்கள் கூடுவார்கள். தம் உறைவிடத்தில் சுக்கிர வாரந் தோறும் தவறாமல் அவர் பேசினார். பொதுக் கூட்டங்களிலும் உணர்ச்சியுறப் பேசினார். அவர் பேச்சால் சென்னை நகரமே சைவ உணர்ச்சி பெற்றது. பலர் சிவவொழுக்கம் மேற்கொண்டு நடந்த னர். தேவாரம் பெற்ற திருத்தலங்களைப் புதுப்பிக்கச் சில சிவ நேசர்கள் முன்வந்தனர். சிவ கைங்கரியம் என்றால் நாவலர் பெயரை முன்வைத்தே நடக்கவேண்டும். பெத்துநாயக்கன்பேட்டை யிலே சுப்பிரமணிய முதலியார் வீட்டிலே சிவநேசர் சபை கூடி யது ; அதற்குத் " திருத்தொண்டைநாட்டுப் பதிபுண்ணிய பரிபா லன சபை" என்ற நீளப்பெயர். திருப்பணிச் சங்கம் என்று அதைச் சுருக்கமாகச் சொல்லுவோம். அன்பர் விருப்பப்படியே நாவலர் அச்சபைக்குத் தலைமை வகித்தார். காரியதரிசி, சபையின் விருத் தாந்தத்தைப் பற்றிப் படித்தார் ; பிறகு நாவலர் எழுந்து சிவ புண்ணியத்தின் பெருமையைப் பற்றி அற்புதமான சொற்பொழி வாற்றினார்:

### சிவ புண்ணியம்

கனம்பொருந்திய சைவ சமயப் பிரபுக்களே !

தங்கள் சமயம் இது எனவும், அதற்குரிய கடவுள் இவர் என வும், அக் கடவுள், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண் டருளும் முறைமை இதுவெனவும், அவரை ஆன்மாக்கள் வழி படும் முறைமை இது எனவும், அறிதலும், அறிந்தபடி அனுட் டித்தலும் எல்லாச் சமயத்தாருக்கும் கடனாகும். ஆதலினால் நம்முடைய சமயக்கிரமத்தை அறிதலும், அறிந்தபடி அனுட்டித் தலும், சைவ சமயிகளாகிய நமக்குக் கடனாமே.

நாமெல்லாம் சைவர்கள். சைவர் என்னுஞ் சொற்கு, சிவனை வழிபடுவோர் என்பது பொருள். ஆகவே, சிவனை வழிபடுவோர் யாவர், அவரெல்லாருஞ் சைவர் எனப்படுவர்.

சிவபெருமான் புறத்தே சிவலிங்க முதலிய திருமேனியும் தமது மெய்யடியாருடைய திருவேடமும் இடமாகக்கொண்டு நின் றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர்.

" லிக " என்னும் தாது சித்தரித்தல் எனப் பொருள்படுதலால், படைத்தல் காத்தல் முதலியவைகளினாலே உலகத்தைச் சித்தரிப்பதாகிய சிவத்தினுடைய பிரபாவமே இலிங்கம் எனப்படும். அவ்விலிங்கத்தினது விளக்கத்துக்கு இடமாகிய வாணம் சைலம் முதலியவைகளும் உபசாரத்தினால் இலிங்கம் எனப்படும்.

சைவ சமயத்தை அடைந்தவர் சிவபெருமானுடைய திருவடியைச் சேர்தற்குரிய மார்க்கம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும். அவைகளுள்ளே, **சரியை**யாவது புறத்தொழிலினாலே உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. **கிரியை**யாவது புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டினாலும் அருவுருத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. **யோக**மாவது அகத்தொழிலினாலே அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. **ஞான**மாவது புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டுமில்லாமல், அறிவுத்தொழின் மாத்திரத்தினாலே அம் மூன்று திருமேனிக்கும் மேலாய் அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவனிடத்தே செய்யும் வழிபாடு. இந்த நான்கு மார்க்கத்தில் ஒழுகுவோர்களே மெய்யடியார்கள். இவ்வடியார் திருமேனி அசைவுடையதாதலாற் சங்கமம் எனப்படும்.

சிவபெருமான், எங்கும் வியாபகமாய் நிற்பினும் சிவலிங்க முதலிய திருமேனியும் மெய்யடியார் திருவேடமு மாகிய இவ்விரண்டிடத்து மாத்திரமே தயிரில் நெய் போல விளங்கி நிற்பர்; மற்றை இடங்களி லெல்லாம் பாலில் நெய் போல வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே, சைவ சமயிகளாகிய நாமெல்லாம் நமது பரமபதியாகிய சிவபெருமானை இலிங்கமும் சங்கமுமாகிய இவ்விரண்டிடத்தும் விதிப்படி சிரத்தையோடு வழிபடல் வேண்டும்.

சிவலிங்க வழிபாடு நான்கு பாதத்தாராலும் செய்யப் படுமாயினும், அது அவரவர் கருத்து வகையால் வேறு படும் ; படவே, அவருக்குச் சிவபெருமான் அருள் செய்யும் முறைமையும் வேறுபடும். அதனைச் சிறிது சொல்வாம் : சரியையாளர்கள் பகுத்தறிதலில்லாமற் சிவலிங்க முதலிய திருமேனியே சிவமெனக் கண்டு



வழிபடுவார்கள் ; அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்படாது நின்று அருள் செய்வார். கிரியை யாளர்கள் அருவப் பொருளாகிய சிவபிரான் ஈசான முதலிய மந்திரங்களினாலே சிவலிங்க முதலிய திருவுருக்கொண்டார் என்று தெளிந்து, மந்திர நியாசத்தினால் வழிபடுவார்கள் ; யோகிகள் யோகிகளுடைய இருதயமெங்கும் இருக்கும் சிவபிரான் இந்தத் திருமேனியிலும் இருந்து பூசைகொண்டருள்வர் என்று தெளிந்து, சாத்திய, மந்திரங்களினால் வழிபடுவார்கள் ; இவ்விரு திறத்தார்களுக்கும் சிவபெருமான் " கடைந்தபோது தோன்றும் அக்கினியும், கறந்தபோது தோன்றும் பாலும் போல " அவ்வம் மந்திரங்களினால் அவ்வவர் விரும்பிய வடிவமாய் அவ்வத் திருமேனிகளில் அவ்வப்போது தோன்றி நின்று அருள்செய்வர். ஞானிகள் இம் முத்திறத்தாரும் போல ஓரிடமாகக் குறியாது அன்பு மாத்திரத்தால் அங்கே வழிபடுவர்கள். அவர்களுக்குச் சிவபெருமான் கன்றை நினைந்த தலையீற்றுப் பசுவின் முலைப்பால் போலக் கருணைமிகுதியினால் அவ்வன்பே தாமாகி எப்பொழுதும் வெளிப்பட்டு நின்று அங்கே அருள் செய்வார்.

ஞானத்தின் மிக்க முத்தி நெறியும் ஞானசாரியாரின் மிக்க ஆசாரியரும் இல்லாமையாலும், ஞானசாரியார்க ளுள்ளும் மிக மேலானோர்கள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் முதலிய சமய குரவர்களே யாதலாலும், காமுக னாயினோன் தன்னைப் புகழ்ந்து தன்னா லுரைக்கப்பட்ட வாக்கினும் தன் காமக் கிழத்தியர் வாய்த் தோன்றிய வாக்கில் விருப்ப மிக்குடையவனாய் அதனால் வசீகரிக்கப் படுமாறு போலச் சிவபெருமான் தம்மைப் புகழ்ந்து தம்மா லுரைக்கப்பட்ட வேதத்தினும், தம் மெய்யன்பர்களாகிய சமயாசாரியர்கள் வாய்த் தோன்றிய தேவார திருவாசகங்களில் விருப்பமிக் குடையவராய், அவைகளால் வசீகரிக்கப்படுவாராதலாலும், அவர்களால் வணங்கப்பட்டு அவர்கள் திருப் பதிகங்களைப் பெற்ற சிவஸ்தலங்களே உத்தமோத்தம சிவஸ்தலங்களாகும்.

சிவாலயங்களிலே நித்திய பூசை முதலியவை காலந்தோறும் தவறுமற் சிரத்தையோடு விதிப்படி செய்யப்படுமாயின், உலகத்

திலே காலந்தோறும் மழை தவறுமற் பெய்யும்; நென்முதலிய வளங்கள் பெருகும் ; ஆரோக்கியம் உண்டாகும்; அரசநீதி நடக்கும். நித்தியபூசை முதலியவைகள் சிரத்தையோடு விதிப்படி செய்யப்படாதொழியின், உலகத்திலே மழையின்மையும் பஞ்சமும் மசூரிகை விஷூசி முதலிய கொடுநோய்களும், கன்னம் களவு முதலிய தீத்தொழில்களுமே விருத்தியாகும். இதற்குப் பிரமாணம் :

திருமந்திரம்

**ஆற்றரு நோய்மிகு மவனி மழைகுன்றும்**
**போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்**
**கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை**
**சாற்றிய பூசைகள் தப்பிடிற் றனே.**

**முன்னவனர்கோயிற் பூசைகண்முட்டிடின்**
**மன்னர்க்குத்தீங்குள ; வாரிவளங்குன்றுங்**
**கன்னங்களவு மிகுத்திடுங்காசினிக்**
**கென்னருணந்தி யெடுத்துரைத்தானே.**

சிலமா யுள்ள ஸ்தலங்களை ஜீர்ணோத்தாரணஞ் செய்தற்கும் நித்தியபூசை முதலியவை இல்லாத ஸ்தலங்களிலே நித்தியபூசை முதலியவை நடத்துதற்கும் பெரும் பொருள் வேண்டுமாதலாலும், தனித்தாயினும் சிலர் மாத்திரம் கூடியாயினும் இவைகளை முடித்தல் இயலாமையாலும், சைவசமயிகளாகிய நம்மவர்கள் எல்லாரும் ஒற்றுமை யுடையவர்களாய் ஒருங்கு கூடல் வேண்டும். அப்படிக் கூடாத வழி, இக்கருத்துச் சித்தி பெறுது. தமிழர்களாகிய நம்மவர்கள் யாதாயினும் ஒரு கருமத்தை நடத்துதற்கு ஒருங்கு கூடுதல் அரிது. ஒரோவழிக் கூடினும் ஐக்கியத்தோடு நிலை பெற்று எடுத்த கருமத்தை நிறைவேற்றல் அரிது. அவர்கள் ஐக்கியமே யின்றிப் பெரும்பான்மையுந் தங்கள் உள்ளத்தில் விளையும் பகையையே பாராட்டிக் கலகம் விளைத்து, எடுத்த கருமத்தைக் கைநெகிழவிடுதலே வழக்கம். இது பற்றியே நம்மவர்கள் லௌகிகநெறி, வைதிகநெறிஎன்னும் இரண்டினும்மேன்மை



யடையாது, அன்னிய தேசத்தார்களும் அன்னிய பாஷையாளர்களும் அன்னிய சமயத்தார்களுமா யுள்ளவர்களாலே அவமதிக்கப்பட்டுத் தலைகவிழ்கின்றார்கள். சகோதரர்கள் பலர் தங்கள் பிதாவினுடைய வீடு முதலியவற்றிற்கு இடையூறு நிகழும்பொழுது, தங்களுள்ளே எத்துணைப்பகை யிருப்பினும் அதனைச் சிறிதும் பாராட்டாது, ஒற்றுமை யுடையர்களாய்த் திரண்டு அவ்விடையூற்றை நீக்கி, அப்பிதாவுக்கு இனியர்களாய் ஒழுகுவது இயற்கை. அதுபோலவே சைவசமயிகளாகிய நாமெல்லாம் நமது பரமபிதாவாகிய சிவபெருமானுடைய திருக்கோயின் முதலியவற்றிற்கு இடையூறு நிகழும்பொழுது, நம்முள்ளே எத்துணைப்பகை இருப்பினும் அதனைச் சிறிதும் பாராட்டாது ஒற்றுமை யுடையர்களாய்த் திரண்டு அவ்விடையூற்றை நீக்கி, அச்சிவபிரானுக்கு இனியர்களாய் ஒழுகுவதன்றோ அழகு? இப்படிச் செய்பவர்களன்றோ சைவசமயிகளென்னும் பெயருக்கும் அதனுற் பெறற்பாலதாகிய பெரும்பயனுக்கும் பாத்திரராவார்கள். இவ் வியல்பில்லாதவர்கள் அங்ஙனம் ஆவார்களா ? ஆகார்கள், ஆகார்கள்.

நம்மவர்களெல்லாரும் பொறாமை பகை முதலியவைகளின்றி ஐக்கியமுடையவர்களாய்க் கூடும் பொருட்டும், தங்கள் தங்களால் இயன்றமட்டும் வாக்காலும் காயத்தாலும் பொருளாலும் சகாயஞ் செய்து மேற்சுட்டிப் போந்த உத்தமோத்தம சிவபுண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு நிறைவேற்றிப் பெரும் புகழையும் பெரும் புண்ணியத்தையும் அடையும் பொருட்டும், திருவருள் சுரக்கும்படி பரம காருண்ணிய சமுத்திரமாகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

## 59. பச்சையப்பர் கல்லூரிப் பிரசங்கம்

மேற்சொன்ன பதிபுண்ணிய பரிபாலன சபையின் இரண்டாங் கூட்டம் பிரபவ வருஷம் மாசி மாசம் முதல் தேதி பச்சையப்ப முதலியார் கல்லூரியில் கூடிற்று. நாவலர் தலைமை வகித்துச் செய்த அரிய பிரசங்கத்தின் சாரம் நமக்குக் கிடைத்துள்ளது அதையும் அறிவோம் :

### சைவ சமய சாரம்

**"தமக்கினிமை வஞ்சகரே தாந்தா முதற்சாரார் ;**
**தமக்கினியார் தம்முதற்சார்ந் தார்."**

இத் திருக்குறள், தமக்குத்தாம் வஞ்சகராவார் இவரென்பதும் இனியராவார் இவரென்பதும் உணர்த்துகின்றது. இதன் பொருள் : தமக்கு இனிமை தாம் வஞ்சகர் தம்முதற் சாரார்—தங்களுக்கு இனிமையா யுள்ளதிலே தாங்களே வஞ்சகர்களா யுள்ளவர்கள், தங்கள் நாயகரை அடையாதவர்களே ;—தமக்கு இனியார் தம்முதற் சார்ந்தாரே—தங்களுக்கு இனியர்களா யுள்ள வர்கள், தங்கள் நாயகரை அடைந்தவர்களே எ—று. தாமென் றது பசுக்களாகிய ஆன்மாக்களை. தம்முத லென்றது பசுபதியாகிய சிவபெருமானை. இனிமை—இன்பம்.

துன்பத்தில் வெறுப்பும், இன்பத்தில் விருப்பும் ஆன்மாக்க ளுக்கு இயற்கையே யாயினும், அவர்கள் இன்பம் இது, துன்பம் இது, துன்பத்தினின்று நீங்கி இன்பம் பெறுநெறி இது என உள்ளபடி அறிதற்கும், துன்பத்தினின்று நீங்கி, இன்பத்தைப் பெறுதற்கும் சுதந்தர சக்தி யுடையவர்க ளல்லர். சுதந்தரர் சிவ பெருமானொருவரே ; ஆன்மாக்களோ பரதந்திரர்கள். ஆன்மாக் கள் இவ் வுண்மையை அறிந்து, சிவபெருமானது திருவருள் வழிப்பட்டொழுகினன்றி இன்ப துன்பங்களை அறிதலும் துன்பத் தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதலும் இயலாவாம். நித்திய மாகிய பேரின்பம் முத்தி யின்ப மொன்றே; மற்றை யின்பங்க ளெல்லாம் முட்பூவிற் றேன் போல்வனவாம்.

சிவபெருமானை அடைதலாவது அவரை விதிப்படி சிரத்தை யோடு வழிபடுதல். அவ் வழிபாட்டுக்கு மிக மேலாகிய கருவி சிவ ஞானம். இவ் வழிபாடே முத்திக்கு வாயில். சிவஞானம் ஏழு பகுதிகளை யுடையது. அவையாவன: அத்துவ சுத்தியாகிய நிரு வாண தீக்ஷை பெற்றுக்கொண்டு சிவஞான நூல்களாகிய சைவ சித்தாந்த சாத்திரங்களை ஓதல், ஓதுவித்தல், அவற்றின் பொரு ளைக் கேட்டல், கேட்பித்தல், கேட்டதைச் சிந்தித்தல், சிந்தித்த



தைப் பின்பு தெளிதல், தெளிந்தபடியே அதன்பின் நிட்டை கூடல் என்பனவாம்.

இச்சிவஞானத்துக்கு ஏதுக்கள் சிவாகமத்தில் விதிக்கப் பட்ட சரியை கிரியை யோகங்களாகிய பதிபுண்ணியங்களாம். (பதி புண் ணியமெனினும் சிவபுண்ணிய மெனினும் ஒக்கும்). ஸ்மிருதியில் விதிக்கப்பட்ட யாக முதலியவை பசு புண்ணியங்களாம். ஞானம், யோகமின்றியும், யோகம், கிரியை யின்றியும், கிரியை, சரியை யின்றியும் சித்தியாவாம். அது " விரும்புஞ் சரியை முதன் மெய்ஞ்ஞான நான்கு—மரும்புமலர் காய்கனிபோ லன்றோ பரா பரமே " என்னுந் தாயுமானசுவாமி பாடலால் அறிக.

சரியை சிவசாலோக்கியத்தையும், கிரியை சிவசாமீப்யத்தையும், யோகம் சிவ சாரூப்யத்தையும், ஞானம் சிவ சாயுச்யத்தையும் கொடுக்கும். யாக முதலிய பசு புண்ணியங்களோ சுவர்க்கத்தைக் கொடுக்கும். இவைகளெல்லாவற்றையும் அறிதலும் அனுட்டித் தலும், கல்வி கேள்விகளா லன்றிக் கூடாமையால், வித்தியாசாலை களைத் தாபித்தலும், சைவப்பிரசாரஞ் செய்வித்தலுமே முக்கிய தருமங்களாம்.இவைகளினாற்றானே மேற்கூறிய சிவதருமங்களும் சிவஞானமும் அபிவிருத்தியாகும். இவைகளை விருத்தி செய்த லின் மிக்க புண்ணியமும், விருத்தி செய்யாமையின் மிக்க பாவ மும் இல்லை, இல்லை.

சிவாலயத்திருப்பணிகளுக்குப் பொருள் கொடுப்பவர்களும்,அப் பொருளை வாங்கிச் சிவாலயத் திருப்பணிகளைச் செய்பவர்களும் முத்தியை அடைவார்கள். இதற்குப் பிரமாணம் :

### சைவ சமய நெறி

**"திருப்பணிசெய் வார்க்குஞ் சிவனையுன்னிச் செம்பொன்**
**விருப்புடனீ வார் பெறுக வீடு."**

**"உய்வா ருதவுநிதி வாங்கித் திருப்பணியைச்**
**செய்வார் பெறுக சிவம்."**

சிவபக்தர்கள் தங்களிடத்துள்ள திரவியத்தை மூன்று பாகம் பண்ணி, ஒரு பாகத்தைத் தங்கள் சீவனத்தின் பொருட்டு வைத்

துக்கொண்டு, மற்றை இரண்டு பாகங்களையும் சிவபுண்ணியங்களுக்குக் கொடுத்தல் வேண்டும் என்று சிவாகமங்கள் சொல்கின்றன. இப்படிச் செய்தல் அரிதாயினும், சைவ சமயிகளாகிய நம்மவர்களெல்லாரும், உலோபஞ் செய்யாது, இச்சபையார் எடுத்துக்கொண்ட சிவபுண்ணியத்தின் பொருட்டுத் தங்கள் தங்களால் இயன்றபடி சிறிதாயினும் திரவியம் உபகரிக்கக் கடவர்கள். இப்படிச் செய்யின், " ஆயிர மாகாணி அறுபத்தி ரெண்டரை "என்றபடியே நம்மவர்களால் உபகரிக்கப்படும் பொருள்கள் மிகப்பெருகி வளர்ந்து, சபையார் உத்தேசித்த சிவ புண்ணியங்க ளெல்லாம் இனிது நிறைவேறுதற்குக் காரணமாகும்.

யாவராயினும் ஒரு தருமத்தின்பொருட்டுத் திரவியம் உபகரிக்கச் சங்கற்பித்தாராயின், சங்கற்பித்த அக்கணமே அத்திரவியம் தருமத்திரவியமே யாய்விடும். ஆகவே, அத்திரவியத்தைப் பின்பு கொடாதொழிந்தவர் தருமத்திரவியத்தை அபகரித்த அதிபாதகராகி எரிவாய் நரகத்தில் விழுந்து வருந்துவர். இது உண்மை நூற்றுணிபு. ஆதலினால், நீங்கள் தருமத்தின் பொருட்டுச் சங்கற்பித்த பொருளைச் சிறிதாயினுந் தடையின்றி அச்சத்தோடும் அன்போடுங் கொடுத்துவிடல் வேண்டும்.

புண்ணியத்தையேனும் பாவத்தையேனும் செய்தல், செய்வித்தல், உடன்படல் என்னும் மூன்றும் தம்முளொக்கு மாதலால், நீங்கள் இத்தருமத்துக்கு உபகரித்தன் மாத்திர மன்றி, உங்கள் உங்கள் பந்துக்கள் இஷ்டர்கண் முதலாயினோர்க்கும் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் நல்லறிவுச் சுடர் கொளுத்தி, அவர்களையும் இயன்ற மட்டும் இத் தருமத்துக்கு உபகாரகர்க ளாக்க முயலல் வேண்டும்.

தெய்வப் புலமை பொருந்திய ஔவையாராலே " சான்றோருடைத்து " என்று புகழப்பட்ட இத்திருத் தொண்டைநாட்டின் கண்ணதாகிய இச்சென்னப்பட்டணம் இராஜதானியாயும், கல்வி செல்வம் அதிகாரம் முதலியவற்றினாலே பிரசித்தி பெற்ற தானமாயும் விளங்குதலினால், இப்பட்டணத்திலே தாபிக்கப்பட்ட இச் சபையார் எக்காலமும் ஐக்கியமும், தருமத்திலே சிரத்தையும், இடையறு முயற்சியும் உடையர்களாகி, எடுத்த தருமங்களை விதிப்படி நிறைவேற்றிக் கொண்டுவருவார்களாயின், மற்றை நாட்டார்களும் தங்கள் தங்கள் நாடுகளிலே இப்படியே சபை தாபித்துச் சிவபுண்ணியங்களைப் பரிபாலனஞ் செய்துவருவார்கள். அப்பொழுது, அவைகளுக்கெல்லாம் இச்சபையார்களே மூலகாரணர்கள் ஆதலால், அப் புண்ணிய பலங்களினும் இச் சபையார் பாகம் பெறுவார்க ளென்பதற்குச் சந்தேகம் உண்டோ? இல்லை,இல்லை.



இப்பொழுது நாம் கூறியவாறே நடத்தப்படின்,சிவபுண்ணியங்களும் சிவஞானமும் அபிவிருத்தி யாகும். ஆகவே, சபையார்களாகிய நீங்கள் உங்களுக்கும் பிறருக்கும் பயன்பட்டு உங்களுக்கு இனியர்களாகி உங்களுக்கு உங்களினும் இனியராகிய சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று வாழ்ந்திருப்பீர்கள். நமக்கு நம்மினும் இனியர் சிவபெருமான் என்பதற்குப் பிரமாணம் :

**திருநாவுக்கரசு நாயனர் தேவாரம்**

**என்னில் யாரு மெனக்கினி யாரிலை**
**யென்னி லும்மினி யானெரு வன்னுளன்**
**என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்**
**கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே.**

## 60. புறப்படுகிறார்

இவ்வாறு நாவலர் திக்விஜயம் செய்து சிதம்பரத்திற்கு வந்தார். அப்போது ஆனித் திருமஞ்சன உற்சவம் நடந்தது. அதைச் சேவிக்க நாவலர் அங்கேயே சிலகாலம் இருந்தார் ; வித்தியாலயத்தையும் உறுதியாக நிலைநாட்டி சதாசிவப்பிள்ளையிடம் ஒப்புவித்தார். இச்சமயமே சிவதீக்ஷை விவாதம் முற்றி மஞ்சக்குப்பம் கோர்ட்டில் வழக்கு நடந்தது. அதற்காக நாவலர் எட்டு மாதம் தாமதிக்க நேர்ந்தது. நாவலர் பக்கம் வென்றதை முன்பே அறிந்தோம். நாவலர் அப்பைய தீக்ஷிதர் வாக்குகளைக் கொண்டு சிதம்பரத்தில் சிவ தருமத்தின் சிறப்பை உபதேசித்தார்.வைஷ்ணவர்கள் கூட இவர் சொற்களை மறுத்துப்பேச முடியவில்லை.

சிதம்பரம் வேலைமுடிந்ததும் நாவலர் மாயூரம் வந்துதரிசித்து, தருமபுரம் மடத்தில் முப்பொருளைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்து, திருவிடைமருதூரில் மஹாலிங்க தரிசனங் கண்டு பிறையாறு, திருவேட்குடி, காரைக்கால் முதலிய தலங்களைக் கண்டு வேதாரண்யம் வந்தார். கோயில் தர்மகர்த்தாக்கள் நாவலரைச் சிறப்பாக உபசரித்தனர். நாவலர் சிவமகிமையைப் பற்றிப் பேசி, அது பரவ வேதாரண்யத்தில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலை அமைக்க வேண்டு மென்று வற்புறுத்தினர். தேவார பஜனையை இனிது கேட்டார். பிறகு கோடிக்கரை வந்து தோணியேறி யாழ்ப்பாணத்தை நோக்கினர்—சுக்கில-மாசி-உஎ உ (1870 ஜனவரி).

# 61. வாழ்க நாவலர்

" நமக்கொரு நாவலர் வந்தார் !" என்று தமிழர் கூட்டமே பெருமை கொள்ளும்போது, யாழ்ப்பாணம் பெருமை கொள்ளக் கேட்க வேண்டுமா ! தமது நாவலரின் அரிய செயல்களையும், பெரிய புகழையும் கண்டு, கேட்டு யாழ்ப்பாணச் சமுதாயம் பூரித்துப்போனது. நீண்டகாலம் வடதேசத்திலேயே தங்கிய நாவலர் தாய் நிலத்தில் அடி வைக்கும் நாளை எதிர்பார்த்தது. " நாவலர் சிதம்பரத்தை விட்டுப் புறப்பட்டார், யாழ்ப்பாணத்தை நோக்கி வருகிறார் " என்ற செய்தி மனோவேகத்திற் பறந்தது. சிகாகோ மேடையில் வேதாந்த வெற்றிபெற்ற விவேகானந்தரை வரவேற்கப் பாரதநாடு, முதன்மையாக நமது தமிழர்,ஆவலாகக் காத்திருந்தது போலவே வடதேசத்தில் சித்தாந்த வெற்றி பெற்றுத் திக்விஜயம் செய்த நாவலரை வரவேற்க யாழ்ப்பாணம் ஆவலாகக் காத்திருந்தது. இன்று வருவாரோ, நாளை வருவாரோ என்று தாய்நாட்டுள்ளம் துடித்தது. கடலில் மிதந்து வரும் தோணிகளை யெல்லாம் " நாவலர் தோணியோ " என்று ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து, இன்னும் வரக் காணேனே நாவலரை என்று யாழ்ப்பாணிகளின் ஆவல் சிறகடித்து, தனுக்கோடியை நோக்கிப் பறந்தது. முடிவில் வில்லியம் என்ற கப்பல் இன்பக்கடலில் அன்பு நாவலரைச் சுமந்துவந்து "இதோ உங்கள் தீர்க்கதரிசி " என்று கரையில் விட்டது. நாவலர் தாய்நிலத்தில் திருவடியை நாட்டினர். " வாழ்க நாவலர் ! வாழ்க சைவப்பிரகாசர் ! வாழ்க ஐந்தாங் குரவர் ! யாழ்ப்பாணத்தின் தவப் பயனை எமது நாவலர் வாழ்க !" என்று ஆயிரக்கணக்கான குரல்கள் ஆர்த்தன; விரோதிகள்கூட வாழ்த்தினர். பிறகு நடந்ததை சிலோன் பேட்ரியட் **(Ceylon Patriot)** இலங்காபிமானி ஆகிய இதழ்கள் விளக்குகின்றன—சுருக்கமாகச் சொல்லுவோம்:



## நாவலருக்கு வரவேற்பு

கீர்த்தி பெற்ற இப்பண்டிதர் உண்மையான பெரியார். ஆறு வருட காலமாக இந்தியாவிலே தங்கியிருந்து, இன்று பின்னேரம் யாழ்ப்பாணம் வந்து சேர்வாராயினர் ; சென்ற ஞாயிற்றுக்கிழமையே இப்பெரியார் இங்கு வந்துசேர்வாரென இங்குள்ளார் காத்திருந்தனர். ஆனால் தவிர்த்துக்கொள்ள முடியாத சில அசந்தர்ப்பங் காரணமாக ஊர்காவற்றுரைக்கு அவர், போன புதன் கிழமைக்குமுன் வருதல் முடியாது போயிற்று; இத் தமிழறிஞரை வரவேற்பதற்காக யாழ்ப்பாணத்துள்ள பெருமக்கள் பல ஆயத்தங்கள் செய்தனர். துறைமுகத்தில் ஒரு அலங்காரமான பந்தல் இதற்கென்றே இடப்பட்டது. இது மாத்திரமல்லாமல் துறைமுகத்திலிருந்து வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக் கணித்தாக வுள்ள அவருடைய வாசஸ்தானம் வரையி லுள்ள தெருவில் இடையிடையே நடைப் பந்தல்கள் பல இடப்பட்டன.

இங்குள்ள பிரபல வர்த்தகராகிய ஸ்ரீ முத்துக்குமாரச் செட்டியார், துறைமுக உத்தியோகத்தராகிய ஸ்ரீ சுப்பிரமணியர், நாவலரவர்களுடைய மாணுக்கர்களிற் பலர், ஏனைய பல அபிமானிகள் எல்லாரும் ஒருங்குகூடி நேற்றுப் பின்னேரம் ஊர்காவற்றுரைக்குப்போய் கப்பலில் அவரை எதிர்கொண்டு அழைத்து அவருடன் இன்று பின்னேரம் இங்கு வந்தனர். **உவில்லியம்** என்னும் பிரசித்தி பெற்ற வள்ளமே அப்பெரியாரையும் அவருடன் வந்தவர்களையும் இத்துறைமுகத்திற் கொண்டுவந்து சேர்த்தது ; இக்கரையில் நின்று பார்த்தவர்களுக்குக் கடலில் அவ்வள்ளம் வரும்போது அழகாகத் தோன்றியது எவர்க்கும் மகிழ்ச்சியைத் தந்தது.

மாலை ஐந்தரை மணிவரையில் அங்கு குழுமி நின்றோர்
ஆனந்தமேலீட்டினால் ஆரவாரஞ் செய்ய, நாவலரவர்கள் இறங்கி,
யாழ்ப்பாணத்துள்ள பெருமக்கள் சூழ்தரப் பந்தருள் வந்து,
விசேஷமாக அலங்காரஞ் செய்யப்பட்ட பல்லாக்கில் ஏறி வாத்திய
கோஷத்துடன், தம்மை எதிர்கொள்ளும்படி வந்தோரெல்லாம்
இருமருங்கும் மெல்ல நடந்துவர, அப் பல்லக்கின்மீது வருவா
ராயினர். கடற்கரைத் தெரு வழியே வந்து நீதிஸ்தலத்தின்
பக்கத்திலுள்ள தெருவழியே வடக்கு நோக்கிச் சென்று பெருந்
தெருவால் வந்து அக்கூட்டத்தினர் பெரியகடைத் தெருவிற்கு
வந்தனர். நாவல ரவர்களுடைய மாணாக்கர்களும் அபிமானிகளும்
தெருவீதியில் இடங்கள் தோறும் கண்டு கண்டு அவருக்கு மரி
யாதை செய்தனர். செட்டி கடைகளுள்ள வீதியினால் வரும்போது
இருமருங்குமுள்ள செட்டிப்பிள்ளைகளும் வியாபாரிமாரும் சிவிகை
தாங்கி வந்தவர்களுக்குக் கோடிவஸ்திரங்களை வழங்கி நாவல
ரவர்களைச் சிறப்புச் செய்தனர். அதன்பின், அப் பெரியாரால்
ஸ்தாபிக்கப்பெற்ற வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியா
சாலைக்கு வருதலும், நாவலரவர்களைச் சிவிகையிலிருந்து இறங்
கச் செய்து, அவர் வரவை உத்தேசித்து, அலங்காரங்களும் ஆயத்
தங்களும் செய்யப்பெற்ற மண்டபத்தில் அழைத்துச்சென்று, ஒரு
உன்னதமான ஆசனத்தில் அமரச்செய்தார்கள். சந்தனம் தாம்
பூலம் முதலியன அந்தச் சமயத்தில் வழங்கப்பெற்றன. அங்ஙன
மாக, நாவலரவர்கள், தமக்குச் செய்த உபசரணையின் பொருட்டு
அங்குள்ளார்க்கு நன்றிகூறி, அதன்பின் சைவசித்தாந்தநூலில்
ஒரு செய்யுளைப் பீடிகையாகக் கொண்டு சித்தாந்த உண்மைகள்
சிலவற்றைக் கேட்பார்க்குக் கர்ணாமிர்தமாம் வண்ணம் சிறிது
நேரம் உபந்யாசஞ் செய்து முடித்தனர்.

நாவலரவர்கள் தாம் செய்த பிரசங்க முடிவிலும் இங்குள்ளார்
தமக்கு அச்சமயத்திற் செய்த உபசரணையைப்பற்றியும், தம்மிடத்
திற் பாராட்டிய அபிமானத்தை யிட்டும் சில பேசினர் ; தம்மைப்
பற்றிக் குறிப்புரை கூறியவர்கள், தம்மிடமில்லாச் சுகுணங்களை
யும் நற்செயல்களையும் தம்மீது சுமத்திப் பேசினார்களென்றும்,
தம்மைச் சமய குரவர்கட்கு ஒப்பிட்டமை சிறிதும் பொருந்தா



தென்றும், அப்பெரியாருடைய அடிப்பொடிக்குள்ள மகத்துவத்
தில் ஆயிரத்தி லொன்றுதானும் தமக்கில்லை யென்றும், செந்
தமிழ் விஷயமாகவும் சைவசமய விஷயமாகவும் தாம் ஏதும் அற்
பத்தொண்டு புரிந்திருந்தால் அத்தொண்டு எல்லாம்வல்ல இறை
வனுடைய திருவருளுக் குரியதாகு மென்றும் எவருள்ளமும்
உருகும் வண்ணம் கனிவுடன் பேசி முடித்தார்.

பிரசங்கம் முடிந்தபின்னர், யாழ்ப்பாணம் மணியகாரர் முடிப்
புரை கூறத்தொடங்கி நாவலரவர்களின் செயற்கருந் தொண்டு
களைப் பாராட்டி, தாங்கள் அப்பெரியாருக்குச் செய்த உபசாரம்
போதியதன்றென்றும், அவருடைய வருகையை இன்னுஞ் சில
நாள் முந்தி அறிந்திருந்தால் தாங்கள் அதிக உபசரணைக்குச் சித்
தப்படுத்தி யிருக்கலாமென்றும் கூறினார். மேலும் இந்தியாவில்
நாவலரவர்கள் தங்கியிருந்த காலத்திலே, இங்குள்ள சில முழு
மக்கள் பொறாமை காரணமாக அவரை இடர்ப்படுத்த முயன்றன
ரென்றும், சமயத்தைப் போதிப்பவற்கு இப்படியான பெரியார்
தங்களுக்கு இலகுவிற் கிடைப்பவரல்ல ரென்றும், இத் திருத்
தொண்டுகளைச் செய்யும் வண்ணம் இறைவன் நாவல ரவர்கட்கு
அரோக திடகாத்திரத்தையும் நீடித்த ஆயுளையும் பாலிப்பாராக
என்றும் கூறி முடித்தார். அதன்பின், ஸ்ரீ விநாயகமூர்த்தி என்
பவர் சில வாழ்த்துப் பாக்களைப் படித்தார். ஈற்றில் அங்கிருந்து
தம்முடைய வாசஸ்தானத்திற்குச் சகலவரிசைகளுடனும் அழைத்
துச் செல்லப்பட்டார். யாழ்ப்பாணத்து மக்கள் ஒரு யாழ்ப்பாணப்
பெரியாரை இதற்கு முந்தி இப்படியாக உபசரித்துப் பாராட்டிய
தில்லை யெனலாம்.

**(இலங்காபிமானி பிப்ரவரி மாசம் 24 உ 1870-ஆம் ஆண்டு )**

# 62. வேலைச் சுழல்

**யாழ்ப்பாணம்** வேலை சூழ்ந்தது ; அதைவிட வேலை சூழ்ந்தது
நாவலர் வாழ்க்கை. இப்போது அவருக்கு வயது 47.
வாலிபத்தெம்பு இன்னும் பொதுநலப் பணிக்குத் தூண்டுகிறது.

நண்பர்கள், " தாங்கள் ஆறுண்டுகள் வடதேசத்தில் இருந்துவிட்டீர்கள் ; இங்கே பரசமயிகள் கிளம்பி எதிர்ப்பிரசாரம் செய்து எங்களைக் கண்ட கேள்விகள் கேட்டார்கள். பதிற் சொல்ல முடியாது விழித்தோம். தாங்களே அவர்கள் வாயை அடக்க முடியும்; சைவப்பிரகாசரே, தாங்களின்றி எங்கள் வாழ்வு நாசமாகும் ; தாங்களே எங்கள் கண்ணைத் திறந்து நல்வழிகாட்டிச் சிவம்பெற நடத்தினீர்கள். எம்மை மேன்மேலும் மெய்வழி நடத்த வேண்டும் ; வழக்கம்போல் தங்கள் பிரசங்கங்களை நாங்கள் கேட்கவேண்டும் " என்றனர். நாவலர் உளங்கனிந்து பிரசங்கமாரி பொழியத் தொடங்கினுர். தமதுவித்தியாசாலையில்செய்தவெள்ளிக்கிழமைப் பிரசங்கங்கள் தவிர வேறு பிரசங்கங்களும் செய்தார். பரசமயிகளுக்கும் நன்ருகச் சூடு கொடுத்தார். அவர்களும் பலமாக எதிர்ப்பிரசாரஞ் செய்து, நாவலரை அடக்க முயன்றனர்—தீயை நெய் விட்டவிக்க முயன்றது போலானது ! இச்சமயமே (1872) விபூதி பூசின மாணவரைப் பாதிரிமார் பள்ளிக்கூடங்களிலிருந்து துரத்தினுர்கள். நாவலர் அவர்களுக்கே வண்ணுர்பண்ணை சைவ—ஆங்கில வித்தியாசாலை நாட்டினுர். பிள்ளைகளின் சம்பளம் தன் கையிருப்பு இரண்டுங் கொண்டு அதை நடத்தினுர் நாவலர். சர்க்கார் உதவியை எதிர்பார்த்தார்; கிடைக்கவில்லை. இதில் நடக்கும் பரீட்சையையும் அது ஒப்பவில்லை. ஆதலால் பள்ளிக்கூடம் நின்றது. 1873-ஆம் ஆண்டு நாவலர் கோப்பாயிலும் புலோலியிலும் சைவப்பிரகாசவித்தியாசாலை நாட்டினுர்; முன்னதைத் தமது பொருள் கொண்டு நடத்தினுர். பின்னது ஊரார் செலவில் நடக்கிறது. அதற்குப் பிரசங்கத்தில் பதினுயிரம் ரூபா வசூல் செய்தளித்தார். ஐம்பது வயதிலேதான் நாவலர் கந்தசாமி கோயில் சீர்திருத்தத்திற் புகுந்தார். இச் சமயமே " யாழ்ப்பாணச் சமய நிலை " எழுதினுர். அதனுல் உணர்ச்சி பெற்ற தமிழர் சைவசமயத்தைத் தீவிரமாகப் போற்றினர். குருபூசைகள் செய்தனர். கோயில்களில் தேவாரம் முழங்கியது. சமயகுரவர்களுக்குக் குருபூசை நடந்தது. திருஞானசம்பந்தர் குருபூசையில் நாவலர் " தோடுடையசெவி " என்ற தேவாரத்தை எடுத்துக்கொண்டு சொற்பொழிந்தார். நாவலர் திருவாவடுதுறையி லிருந்து



ஓதுவார்களை வரவழைத்துத் தமிழ் வேதம் முழங்கச் செய்தார்.

இக்காலம் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. நாவலர் பஞ்ச நிவாரணத்திற்காகப் பாடு பட்டார். தமது கைப்பொருளையும் தந்து பொதுவிலும் வசூலித்துக் கஞ்சித் தொட்டி வைத்தார். ஜனங்களுடைய துயரை அரசாங்கத்திற்குத் தெளிவாக எழுதி விளக்கினுர். இன்னும் அவர் செய்த பொதுநலங்களை, கீழுள்ள பத்திரிகைத் துண்டுகளிற் காண்க:

புலோலி

27—1—1875 நாவலர் இங்கிருக்கும் பள்ளிக்கூடநிர்வாகத்தை ஏற்றுப் பதினுயிர ரூபா வசூலித்து நடத்தினுர்.

22-3-1820. கந்தர் மடம் பள்ளிக்கூடம், வண்ணுர்ப் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் கிளைதான். இங்கே நாவலர் சைவ சமய மேன்மையைப் பற்றிப் பேசினுர்.

3-10-1863. நாவலர் சங்கரநமச்சிவாயப் புலவருடன் வந்து சிவ தருமத்தையும், தீக்ஷை பெற்ற பிராமணரே கோயில் பூசைக்கு அருகர் என்றும் பேசினுர்.

நாவலர் திருவிளையாடற்புராண மகிமையை விளக்கினுர். பெரிய புராணம் படித்தார். திருவாசகம் உள்ளுறை கூறினுர் என்று இவ்வாறு அவர் செயல்கள் நாவுக்கு நாவு தவழ்ந்து கொண்டிருக்கும்.

### பிசாசு யார் ?

மீனுட்சிசுந்தரம் பிள்ளைக்குப் பிறகு ஆதீனத்தில் மகாவித்துவான் பட்டம் பெற்றவர் கோப்பாய் சபாபதிப் பிள்ளை. அவர் ஒரு தரம் யாழ்ப்பாணத்திற்கு வந்தார். அப்போது நாவலர் மருமகன், அவருடன் முரண்பட்டுச் சினந்து சமவாத சைவராகிய அவரைத் தாக்கி தற்ககுடாரதாலுதாரி எனும் புனைபெயரால் ஒரு கண்டனம் விடுத்தார். அதில் திருவாவடுதுறை மடாதிபதிகளையும் இழிவாகத் தாக்கினுர். " சமவாத சைவப்பிசாசு" என்று ஞானப்பிரகாசரைத் தாக்கினுர். இக் கண்டனம் சுப்பிரமணியதேசிகருக்கு எட்டவே அவர் அதை நாவலருக்கு அனுப்பினுர். நாவலர்,

"பிசாசு யார் ?" என்ற பெரிய அறிக்கை தயாராக்கி விடுத்தார். அதைக் கண்ட தேசிகர் சமாதானமாய் மன்னிப்புக் கோரி ஒரு கடிதம் எழுதினார்.

## 63. இறுதி மொழிகள்

நாவலர் கீரிமலை சிவன் கோயில் கட்ட வேண்டிய அடிப்படைக் காரியங்களைச் செய்து திரும்பினார். வெகுதானிய வருஷம் வைகாசி மூலம் ; திருஞானசம்பந்தர் குருபூசையைத் தமது வித்தியாசாலையிலேயே மிகச் சிறப்பாகக் கொண்டாடி அற்புதமான பிரசங்கம் செய்தார் ; ஞானசம்பந்தர் சிவனருளாற் செய்த அற்புதங்களையும்,அவரால் தமிழ் வேதம் செழித்த பெருமையையும் விளக்கினார். முடிவில், " நான் உங்களிடத்தில் கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது, நம் சமயத்தவர்களோடும், புறச்சமயத்தவர்களோடும் பெரும் பகையை எடுத்து, முப்பத்திரண்டு வருஷ காலமாக உங்களுக்குச் சைவசமயத் துண்மையைப் போதித்து வந்தேன். எனக்குப்பின் சைவசமயம் குன்றிப் போமென்று பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால், நான் உயிரோடிருக்கும்போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப் போலவே படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாகிய அநேகர் வருவார்கள்.ஆனால் உங்களுடைய வைவைக் கேட்டுக் கேட்டுக் கைமாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப் போலவே ஒருவரும் வரார்." இதுவே அவரது பிரசங்கத்தின் இறுதி. உண்மை ! உண்மை ! இன்னொரு நாவலரை நாம் எங்கே காண்போம் ! அவரே வர வேண்டும் ; இறைவனை வேண்டுவோம்.

## 64. இறுதி நாள்

பிரமாதீச வருஷம் கார்த்திகை மாசம் ௧௮ உ (1879 நவம்பர்) நாவலருக்கு அதிக உழைப்பால் உடம்பு கொதிப் பெடுத்தது ; படுக்கையுட னிருந்தார். குளிக்க வில்லை. எனினும் சிவ பூசையை மறக்கவில்லை. வேதாரண்யம் சைவாசாரியார் ஒருவரைக்கொண்டு பூஜை செய்யச்சொல்லி சிவசிந்தையுடன் பஞ்சாட்சரி ஜபித்துக்கொண்டிருந்தார். புறமண்டபத்திலிருந்து புஷ்பாஞ்சலித்ரயஞ் செய்தார். மறுநாளும் அவ்வாறே செய்து சிவனை வணங்கிப் படுத்தார்.தேவார திருவாசகங்களையே ஓதும்படி சொன்னார் ; வேறு பேச்சில்லை. சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய தலங்களின் விபூதிகளை அணிந்தார். உருத்திராக்ஷமணிந்தார். கங்கா தீர்த்தம் உட்கொண்டார். " சிவனே இனி என்னை ஏற்றுக்கொள் ; நமச்சிவாய வாழ்க, நாதன்றாள் வாழ்க ! ! ! !" என்று சிரசில் கைகுவித்துத் தியானத்தில் ஆழ்ந்தார். ஓதுவார்களின் தேவார பாராயணத்தை நிறுத்தச் சாடை காட்டினார் ; சிறிது உள்ளாழ்ந்தார் ; மனம், மனமணி யாகிய இலிங்கத்தில் ஒடுங்கியது ; மீண்டும் திருவாசகம் பாடச்செய்தார் ; தேவாரம் முழங்கச் செய்தார். 5-12-1879 இரவு பத்து நாழிகை மக நட்சத்திரம் கார்த்திகை ௨௧ உ சப்தமி திதி நமது சமயந் தழைக்க வந்த நாவலர் நடராஜாவின் குஞ்சித பத நிழலை அடைந்தார். செய்தி கேட்டு யாழ்ப்பாணமே கண்ணீர் பெருகியது. திரளான அன்பர் கூடினர் ; மறுநாள் சனிக்கிழமை, நாவலரின் பூதக்கூட்டை நீராட்டி, நீறு பூசி, உருத்திராக்ஷம் அணிவித்து, மலர்களால் அலங்கரித்து, அழகான பூந்தேரில் வைத்து ஆயிரக் கணக்கான சிவநேசச் செல்வர் புடைசூழப் பூந்தேரை முன் செலுத்தினர். ஓதுவார்கள் தமிழ் வேதம் முழங்கினர். "எந்தை நாவலரே எம்மை விட்டுப் போனீரே, இனி எமக்கு யார் இப்படிச் சிவஞானம் புகட்டுவார்கள்!" என்ற துன்பக் குரல்கள் காற்றைப் பிளந்தன. இனி யென்ன ? உயிர் உடையானை அடைந்தது ; சடலம் சுடலையில் ஏற வேண்டியதுதானே! வேதாரண்ய சைவாசாரியார்,சமய முறைப்படி அபரக்கிரியைகளை நடத்தினர். அன்பர் சந்தனக்கட்டைகளும் அகிலும் குவித்து நாவலர் உடலை அக்கினிக் கடவுளுக்கு ஆகுதி யாக்கினர். நாவலர் மறைவு தமிழகத்தையே துன்பக்கடலில் ஆழ்த்தியது. அவர் இன்னும் நாற்பது ஆண்டுகள் வாழ்ந்திருந்தால்........ஆ எவ்வளவு அரிய செயல்களைச் செய்திருப்பார் ! ஆனால் அவர் ஒவ்வொரு துறையிலும் நமக்கு வழி காட்டிவிட்டார். அவ்வழியைப் பற்றி நாம் முன்னேறுவோமாக.

கார்த்திகை மாதம் மக நட்சத்திரம் (5, டிசம்பர்) நாவலர் குரு பூசைநாள். அதைத் தமிழ்நாடு முழுதும் கொண்டாடவேண்டும்:

1. **நாவலருக்கு யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும், சென்னையிலும் சிலை நாட்ட வேண்டும்.**
2. **அவர் படத்தைப் பெரிதாக வர்ணப்பொலிவுடன் அச்சிட்டு ஒவ்வொரு தமிழரும் வீட்டில் வாங்கி வைக்க வேண்டும். அதைக் காணும்போதெல்லாம் தமிழுக்கும் சமயத்திற்கும் அவ்வாறு தியாகத் துணிவுடன் உழைக்கும் எழுச்சி பெற வேண்டும்.**
3. **நாவலர் பால பாடம், வசனநூல்கள் இவற்றை ஒவ்வொரு தமிழரும் படிக்க வேண்டும்.**
4. **தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் முதலிய பதி நூல்களைத் தமிழர் மதக்கடனாக ஓதி யுணர வேண்டும்.**
5. **நாவலர் வழியைப் பின்பற்றி, நாடெங்கும் கல்வி பரப்ப வேண்டும்; நல்ல தமிழ் நூல்களை அச்சிட்டுப் பரப்பவேண்டும்.**
6. **தமிழர் முன்னேற்றத்திற்குத் தடை செய்யும் தீமைகளை வீறுடன் கண்டித்து நீக்க வேண்டும்.**
7. **திருக்கோயில்களில் வேதமுழக்கத்துடன் தேவார திருவாசகங்கள் முழங்கச் செய்ய வேண்டும்.**
8. **தமிழர் தம்மால் இயன்ற மட்டும் சிவ சன்மார்க்கத்தில் வைராக்கியமாக நடக்க வேண்டும்.**

இவையே நாம் நாவலருக்குச் செய்யும் கைம்மாறுகும்.

# 65. நாவலர் புகழ்மாலை

நாவலரைப் பற்றி ஒவ்வொரு நாவும் புகழ்கிறது. எத்தனையோ புகழ்மாலைகள் குவிந்து கிடக்கின்றன. அவற்றிற் சில நறுமலர்களை இங்கே சேர்த்து ஓர் அன்பு மாலை தொடுப்போம்:

"The Champion Reformer of Hindus, Arumuga Navalar"
( "வீறு பெற்ற இந்து சீர்திருத்தக்காரர்—ஆறுமுக நாவலர். )

**—கனம் பொன்னம்பலம் ராமனுதன்**



"......நாவலருடைய தூய்மையான வாழ்க்கை, யாவராலும் பாராட்டுதற்குரியது. என் கடன் பணி செய்து கிடப்பதே, என்னும் அப்பர் திருவாக்குக்கு இலக்கியமாக அவரைக் கூறலாம். அவர் நிறுவியுள்ள சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையும், யாழ்ப்பாணத்தில் அமைத்துள்ள நிலையங்களும் இதற்குப் போதிய சாக்ஷிகளாகும்.

**மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்**

"....தமிழ் மக்களின் நன்மையின் பொருட்டுத் தம் உடல் பொருளாவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்த பெரியார்."

**திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை**

"....அவர் திருத்தி அச்சிட்ட நூல்களே, பிற்காலத்தில் தமிழ் நூல்களை அச்சிட முன்வந்தோர்க்கு ஓர் வழிகாட்டியாக விருந்தன. இவ்வரிய தொண்டாற்றியதற்குத் தமிழுலகம் அப்பெரியாருக்கு எவ்வளவு கட்டுப்பாடுடைத்தோ !"

**டாக்டர் க. கணபதிப் பிள்ளை பி.ஏ. ஆனர்ஸ், பி.எச். டி.**

His whole life has been spent in preaching and writing and he has a following which cannot be despised."

**Sir. Muttu Kumaraswamy Kt.,**

" வசனநடை கைவந்த வள்ளலார்."

**வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ.**

"தூரமொழிகளில் சிறந்து கிடந்த குறியீட்டிலக்கணத்தையும், அதன் மாத்திரைக் கணக்கினையும் நிருமித்துதவிய நாவலரவர்கள் தமிழுரை நடைகளின் தாதையார்."

**மணி திருநாவுக்கரசு முதலியார்**

" தேனே கனியோ வெனவே சுவைக்குஞ் செழுந்தமிழிற்
றூனே தனக்கிணை யாகி யுதித்துயர் சற்குருவாய்
வானோர் புகழ் நல்லை வந்தரு ணுவலன் வான்புகழை
நானே சொலவலன் சேடனுங் கூறிட நாணுவனே."

**சைவஉதயபானுப் பத்திராதிபர், க. சரவணமுத்துப் பிள்ளை**

"....நாவலர் எழுதிய பெரிய புராண வசனம் இன்னும் ஐந்நூறு வருஷத்துக்குப் பின்னும் நிலவுமெனச் சொல்லலாம்."

**திரு. பிரான்சிஸ் கிங்ஸ்பரி பி. ஏ.**

"சொல்வன்மையில் நாவலரவர்கள் அக்காலத்தில் தமக்குநிகரா வார் எவருமின்றித் திகழ்ந்த வரலாறு எம்மாசிரியர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் நேரே சொல்லக் கேட்டோம்."

**மறைமலை யடிகள்.**

மன்னுமீ ழத்தை யடைந்துதொண் டாற்றி
மாமறைக் காட்டினை மேவித்
தொன்னலத் துறைசை தருமையம் பதியிற்
றெகைவிரி யுரைபல நவிற்றி
முன்னமே றிசையாற் செழுந்தமிழ் வளர்த்த
முதல்வரைப் பயந்தசீ காழி
என்னுமா நகரில் இறைவர்தாள் தொழுதார்
இன்றமிழ் வளர்த்தநா வலனர்.

**விபுலானந்த அடிகள்**

அச்சமுற்று அடிமைகளாய் அயலார்க் கஞ்சி
அன்னியரின் மதம்புகுந்தே அவர்தங்கையால்
பிச்சைபெறும் நிலையடைந்த பேதை மாந்தர்
பிறப்புரிமை சிறப்பாக எடுத்துக் காட்டி
பச்சைமரத் தாணிபோற் பதியுஞ் சொல்லால்
பாதிரிமார் வாயடங்கப் பதிலுங்கூறி
இச்சகத்தில் எம்சைவந் தழைக்கச் செய்த
எழில் நல்லை நாவலன்றாள் வணங்குவோமால்.

**க. இராமச்சந்திரன்**



# நாவலர் வாழ்க !

செந்தமி ழுய்ய, சைவத் திருநெறி விளங்க வந்தோன் !
அந்தமில் கல்வி கேள்வி யாழியைக் கடைந்து, நாளும்
தந்தனன் அமுத நூல்கள் ; சாவிலா வரத்தைப் பெற்றுன்
நந்தமி ழுள்ள மட்டு நாவலன் வாழ்க மாதோ !

அங்கையி னெல்லி போலே யாகமப் பொருளு ணர்ந்தோன்
சங்கரன் அருமைச் செல்வி யாகிய தமிழ ணங்கைத்
தங்கமாம் அரிய ஊணீ தேற்றியே தமிழ ரான
நங்குல முய்யச் செய்த நாவலன் வாழ்க மாதோ !

அருந்தமிழ்க் கலைமகள்கை யாழெனும் யாழ்ப்பா ணத்தின்,
பெருந்தவப் பயனுய்த் தென்னு டிலகிடப் பிறங்குஞ் சைவ
விருந்தளி மணியாய் எங்கள் வீடொளிர் விளக்காய் வந்து
பொருந்திய முருக னன்பார் நாவலன் பொலிக மாதோ !

அச்சத்தைத் துறந்தான்; உள்ளத் தரனையே நினைந்தான் மூவர்
சொற்சுவை அணிந்தான்; ஆன்றோர் தொகுத்தநன் னூல்கள் வாழ
மெச்சுநற் பணிகள் செய்தான்; வியன்றமிழ் வியாசனென்றெம்
உச்சிமேல் வைக்கத் தக்க நாவலன் ஒளிர்க மாதோ !

நற்றமிழ்க் குரிசிலான நாவலன் வாழ்வைப் பாரீர் !
கற்றவன் புரிந்த செஞ்சொற் கனிதமிழ்த் தொண்டைக்காணீர்
பெற்றநந் தாயின் வீரப் பெருமையை நிலை நிறுத்த
முற்றிய காத லோடு முத்தமிழ் முழக்கஞ் செய்வீர் !

அருந்தமிழ் வாழ்க ! நாளும் ! அறவினை பெருகச் செய்யும்
பெருந்தகை யாளர் வாழ்க ! பிறங்குக தவ வொழுக்கம் ;
குருந் (து) அடி வீற்றி ருக்குங் குருமணி யருளி னலே
திருந் (து) அடி யார்கள் வாழ்க, சிவநெறி தழைக்க மாதோ!

**சுத்தானந்த பாரதி**

சிவமயம்

## சுதந்தர இலங்கை வாழ்க !

திரசங்கராபரணம் திஸ்ர ஏகம்

எங்கள் பொன் இலங்கை வாழ்கவே—காலை
இரவி போல் அழகு பொலிகவே !
மங்களச் சுதந்தரக் கதிர்—வீசி
மடமை யடிமை யச்ச மொழிகவே (எங்)

அன்புறுதி யுண்மை வீரமும்—காட்டும்
ஆண்மைச் சிங்கம் இலகு முந்நிறம்
நண்பு மிக்க லங்கையின் கொடி—அதை
ஞால மெல்லாம் புகழ நாட்டுவோம் (எங்)

தென்கடலின் மார்ப கத்திலே—பூத்த
செழுந்திருக் கமலம் போன்றதே—
பொங்கு புத்த சைவ நன்மணம்—வீசிப்
பொலிக நல்ல போக நாடிதே ! (எங்)

முத்தமிழ் முருகன் வீரமும்—சுத்த
மூர்த்தியின் அருட்கனலுடன்,
புத்தரின் கருணை யுள்ளமும்—கொண்ட
புனித மான தரும பீடமாய் (எங்)

ஏசுநாதர் அன்பு வெள்ளமும்—தீன்
இஸ்லாமி யத்தின் பக்தி உள்ளமும்,
தேசுலாவு நாவலர் சொலும்—சைவத்
திருமறையின் பயனு மோங்கவே (எங்)

சித்திர வியற்கை சூழவே—என்றும்
செயமணிக் கொடிகள் ஆடவே
நித்திலக் குவை நிலாவிலே—செல்வி
நிருத்தமிட் டழகு பொங்கவே (எங்)

அலைதரும் அளவில் செல்வமும்—ஓங்கு
மலைதரும் வளங் குலுங்கவே
கலைதரும் அறிவுச் செல்வமும்—மல்கக்
கடவுளின் அருட் செல்வத்திறல் (எங்)

### ஓம் சிவம்

### என்னருமைத் தமிழர்காள் !

விழித்தெழுங்கள் ! ஒன்று சேருங்கள்; வகுப்புப் பகையும், சாதிப் பித்தமும், சமய வாதமும் பழங் குப்பையென ஒதுக்குங்கள் ! ஒன்றே குலம் ; ஒருவனே இறைவன்; ஒன்றே வானம்; ஒன்றே உலகம். இந்த ஒருமை உணர்ச்சியுடன் வாழுங்கள். மேற்கு, அணுவெடிப் புகையால் உயிர் துடிக்கிறது ; வடக்கு வகுப்புக் கலகத்தால் இரத்தக்கண்ணீர் வடிக்கிறது; உலகெங்கும் மனிதனை மனிதன் குத்திக்கொல்லும் கொடுமையும் நாட்டை நாடு அடிமை செய்யும் ஆணவ வெறியும் அழிநடம் புரிகின்றன. நமது தமிழகத் திலேதான் இன்றும் அருளுணர்வும், அன்புள்ளமும், உண்மை யான கலைப்பண்பும் நிலவுகின்றன. தமிழகத்திலிருந்தேஇன்றுல கிற்கு மக்கட் பண்பு பரவ வேண்டும். உலகிற்கு நாகரிகம் இன்ன தென்று விளக்கத்தமிழகத்தில் ஒரு தெய்வத்திருவருள் விளங்கு கிறது. தமிழர்களே ! உங்களை நீங்கள் அறியுங்கள் ; பின்வாங்கா தீர்கள் ; முன் செல்லுங்கள். வள்ளுவர் முதல் வள்ளலார் வரை யில்-நக்கீரர் முதல் நாவலர் வரையில், எத்தனை அருட்பெரியார் இங்கே நிலவினர்,இன்றும் நிலவுகின்றனர்; எத்தனை தெய்விகத் திருவாக்குகள் இங்கே மலைமலையாகக் குவிந்து கிடக்கின்றன— தேவாரம், திருவாசகம், திருக்குறள், திருவாய்மொழி, தாயுமா னூர் பாடல், திருப்புகழ், திருமந்திரம்,அருட்பா...ஆஹா எத்தனை எத்தனை அருள் மாலைகளை நந்தமிழ் அன்னை அணிந்து விளங்கு கிறாள் ! அவற்றின் மணம் உங்கள் வாழ்வில் வீசட்டும். அடிமை இந்தியாவிலேதான் அன்னிய மோக வலையிற் சிக்கி, தாயை மறந் திருந்தோம்—விடுதலை பெற்ற பிறகுமா உறக்கம் ? மயக்கம் ! ! இனி நமது அருள் நூல்களும் அருட் பெரியார் வாழ்வும் உலக வாழ்வில், மனித சமுதாயத்தின் உள்ளத்தில் துடித்து ஜீவசக்தி யாக வளருக ! அதற்கிசைந்த பணிகளைச் செய்ய எழுந்திருங்கள். நாவலர் பெருமான் கொண்ட ஆர்வங்களை நிறைவேற்றுங்கள்:—

1. தமிழ்த் தாய் ஈன்ற அருட் பெரியார் வரலாறுகளை இனிய எளிய நடையில் எழுதி உலகெல்லாம் பரப்புங்கள்.

2. தமிழில் பாடிய அருட் பெரியார் வாக்குகளைப் பாராயணம் செய்து உலகதிர முழக்குங்கள். அருளமுதத்தை அருந்துமின்; அள்ளி வழங்குமின்.

3. ஒவ்வொரு வீட்டிலும் காலை மாலை அருளமுதம் பாடுக ; தெருவெல்லாம் பஜனை நடத்தி ஊரெல்லாம் அருட் பாடல்கள் எதிரொலிக்கச் செய்க. வாரம் ஒரு நாள் பஜனை, ஊர்வலத்துடன் தெருமுனைகளில் நின்று சன்மார்க்க முழக்கம் செய்க.

4. எல்லாரும் காலை ஆடைதுவைத்துக் குளித்து, மனங்குவிந்து அரைமணி நேரமாவது அமைதியாக அமர்ந்து ஜபம், தியானம், பிராணயாமாதி சாதனங்களைச் செய்துவருக. இதனால் வாழ்வு ஒளி பெறும்.

5. ஒவ்வொருவரும் உடலுறுதிக்குத் தேகப்பயிற்சியும், மன வுறுதிக்கு யோகப் பயிற்சியும் செய்து வீர தீரராக விளங்குக.

6. இரவு எட்டு மணி முதல் ஒன்பது மணி வரையில் திண்ணைகளில் நல்ல கதை, வரலாறு, அருட்பாடல்களைப் படித்து எல்லாரும் கேட்டுப் பழகுக. இதனால் சன்மார்க்க உணர்ச்சி வளரும்.

7. காலத்திற் கேற்ற கல்வியும் கலையும் கற்று, புலமையைத் தூண்டிப் பொது நலம் புரிந்து புகழ்பெறுக. உணரத் தெரிந்தால் கடவுளையும் உணரலாம் ; காணத் தெரிந்தால் தன்னைக் காணலாம்; ஆளத் தெரிந்தால், உலகையும் ஆளலாம்.

8. வள்ளுவர் எளிமையும், அப்பரின் அன்புறுதியும், நாவலர் நாவீறும், சம்பந்தரின் செயல் வீறும், திருமாவளவன் ஆட்சித்திறனும், நெடுஞ்செழியன் வீரமும், வள்ளலார் சமரசமும் மகாத்மாவின் மெய்யுணர்வும், மார்க்கோனியின் காண் புலமையும், எடிஸனின் விடா முயற்சியும், பீமனின் பலமும், இயற்கையின் அழகும் சேர்ந்து, உங்கள் வாழ்வு நிறை வெய்துக.

எல்லாரும் இன்புறுக ! அனைத்தும் வாழ்க!

ஓம் சிவம் !

# யோகி சுத்தானந்த பாரதியாரின்

## அரிய புதிய நூல்கள்

| | | ரூ. அ |
|---|---|---|
| 1. | நவரஸ நடனாஞ்ஜலி<br>இந்நூலில் நாட்டிய சாஸ்திர விளக்கத்துடன் 101 நடனக் காட்சிகள் அடங்கியுள்ளன. | 2–0 |
| 2. | கீர்த்தனாஞ்ஜலி (556 இசைப் பாடல்கள்)<br>சிதம்பர கீதம், தேவ கானம், சக்தி பரவசம், முருகோபாசனை, ஹரி பஜனை, சாதன கீதம், சுத்த சன்மார்க்க கீர்த்தனங்கள், ஐக்கிய கீதம், அன்பு மாலை—ஆகிய ஒன்பது நூல்களின் தொகுப்பு—இசைப் புலவர்களின் கலா நிதி. | 3–8 |
| 3. | கவிக் கனவுகள் (திருக் காட்சியுடன்)<br>இந்நூல், உள்ளத்தை அள்ளும் சொற்சிற்பம். வரிக்கு வரி கலைச் சுவையும், கவி யின்பமும், ஆழ்ந்த பொருளும், நிரம்பிய அமர கவி. | 1–8 |
| 4. | புது யுகப் பாட்டு (105 சுதந்தர உலக கீதங்கள்)<br>இந்நூல், கல்வி, தொழில், கலை, வாணிகம், அரசியல், சமுதாயம், முதலிய எல்லாத் துறைகளிலும் புதுமை பொலிய வாழும் வழியை இசைக்கிறது. | |
| 5. | ஏழை படும் பாடு (Les Miserables) | 5–0 |
| 6. | ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம் | 2–8 |
| 7. | ஸ்ரீ அன்னை (The Mother) | 0–8 |
| 8. | பகவத் கீதை (தெளிந்த தமிழுரை) | 1–4 |
| 9. | யோக சித்தி (புதிய விளக்கம்) | 3–0 |
| 10. | திருக்குறள் இன்பம் (அச்சில்) | . . . |
| 11. | The Gospel of perfect Life (Yoga Siddhi) | 3–8 |
| 12. | Sri Aurobindo The Divine Master | 1–8 |
| 13. | Yogi Shuddhananda Bharati (A Study)<br>(K. S. Ramaswamy Sastriar) | 4–0 |

புது யுக நிலையம்

புதுச்சேரி

1. **SRI AUROBINDO, THE DIVINE MASTER**

(*Yogi Shuddhananda Bharati*)

In a dynamic style, the author discusses in this volume the psychic personality of Sri Aurobindo, his new Integral Yoga and Life Divine. There are brilliant chapters on the Vedas, Upanishads, and the Gita. Fine get up.

Rs. 1/8

2. **THE GOSPEL OF PERFECT LIFE**

(*Yogi Shuddhananda Bharati*)

A valuable practical guide to seekers of God and godly perfection in all the details of life—spiritual, moral, economic, industrial, political and cultural. A synthesis of Yogas and philosophies—the Bible of New Humanity.

230 pages Rs. 3/8

3. **YOGI SHUDDHANANDA BHARATI**

(*Dewan Bahadur K. S. Ramaswami Sastriar*)

A comprehensive treatise on the life and works of the Seer-Poet, Shuddhananda Bharati, replete with chosen gems from his works. Contains a luminous treatise on his magnum opus BHARATA SHAKTI. Holds a mirror to the many-sided genius of the born Yogi and inspired poet. 250 pages Rs. 4/

*All the works of Yogi Shuddhananda are available at*

PUDU YUGA NILAYAM
PONDICHERRY

38301

உலகிற்கு நல்ல செய்தி !          தமிழுலகின் அற்புதம் !

# பாரத சக்தி மகா காவியம்

(ஐந்து காண்டங்கள்)

கவியோகிசுத்தானந்தபாரதியார் நீண்டகாலம் மௌன விரதம் பூண்டு இயற்றிய பாரத சக்தி ஐந்து காண்டங்களும் வெளிவந்துவிட்டன. இது கவிக்குக்கவி; கலைக்குக்கலை; தமிழுக்கு வெற்றி மகுடம்; உலக மகான்களின் உள்ளத் துடிப்பு. எல்லாரும் படிக்கும்படியான தெளிந்த ஆவேச அருவி நடை; வரிக்கு வரி புதுப்புது விஷயங்கள்; உலகப் பெரியார் வரலாறுகள், எல்லாச் சமய சன்மார்க்க யோக மார்க்கங்களின் சாதனை முறைகள்; சுத்த யோக சித்தி ரகசியங்கள்; கலை, பொருளாதாரம், சமயம், அரசியல், தொழில் முதலிய எல்லாத் துறைகளிலும் மனிதன் பூரணம் பெற்று அதிமனிதனாக வாழும் வழிகள்—அடங்கிய புதிய காவியச் சோலை. 1000. பக்கங்கள். அழகான அமைப்பு. விலை ரூபா. 15.

> "தமிழில் பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு எழுந்த முதனூல் பாரத சக்தி மஹாகாவியம்; இதில் எல்லா மதத்தினருக்கும், நாட்டினருக்கும், எல்லா ரசிகர்களுக்கும் ஒரு ஸ்வாரஸ்யம் ஏற்படும்படி அவ்வளவு பொருள் அடங்கியிருக்கிறது."
>
> —வ. வே. சு. ஐயர்

**புது யுக நிலையம்**

**புதுச்சேரி**